868

# நவசக்தி

திங்கள் வெளியீடு

ஜனவரி. பிப்ரவரி. மார்ச். - 1933

3-5

JL
2911, N21
N33·13·3-5
162252

# நவசக்தி

திங்கள் வெளியீடு

'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு'　　'என்கடன் பணிசெய்து கிடப்பதே'

சிலம்பு கரு　　1933ஆம் ஜனவரிமீ　　பரல் ரு

உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| நெல்லிடு நாது ... ... | கஅஎ |
| 4-வது சைவ இளைஞர் கூட்டம் ... | ககஉ |
| சமரச சன்மார்க்க போதம் ... | ககூ |
| புதுயுகப் புலர்ச்சி ... ... | உ0க |
| நமது நாட்டில் வழங்கும் பழங் கதைகள் ... | உ0உ |
| தீண்டாமை ஒழித்தல் ... ... | உ0ரு |
| சுந்தர சலோசனு ... ... | உகரு |
| தாவீது மன்னரின் தனிக் கோள் ... | உகஅ |
| இடியேறு ... ... | உஉக |


வருடசந்தா

உள்நாடு ரூபா 3-8-0.　　வெளிநாடு ரூபா 4.

# பெரிய புராணம்

## மூலமும்

## அருஞ்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும்

## வசனமும்

சஞ்சிகை சஞ்சிகையாக வெளிவருகிறது

**ஏழை மக்கட்கு நல்ல சந்தர்ப்பம் !**

சேக்கிழார் பெருமான் திருவாய்மலர்ந்தருளிய திருத்தொண்டர் புராண மென்னும் பெரிய புராணத்தைப் பற்றித் தமிழ்மக்கட்கு விரித்துக் கூற வேண்டுவதில்லை. பெரியபுராண மெங்கும் பத்திச்சுவை நனி சொட்டிக் கொண்டிருத்தல் வெள்ளிடைமலை. தன்னை ஓதுவோரையும் கேட்போரையும் அன்புக்கடலில் திளைப்பிக்கும் போாற்றல் வாய்ந்தது பெரியபுராணம். கடவுள் அன்பு, ஆன்மநேயம், திருத்தொண்டு, சீர்திருத்தம், சொல் நயம், பொருள்நயம், தமிழின்பம் முதலியவற்றிற்குப் பெரியபுராணம் ஒரு வைப்பு என்று கூறல் மிகையாகாது. சிறந்த தமிழ்க் காவியங்களுள் பெரிய புராணமும் ஒன்று என்று சுருங்கச் சொல்லலாம்.

இத்தகைச் சிறந்த தமிழ்நூலை ஏழைமக்களும் எளிதில் வாங்கிப் பயன் பெறும் பொருட்டுப் பெரியபுராண மூலமும்; அதற்குத் திருவாளர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் வரைந்துள்ள அருஞ்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும், வசனமும் சேர்ந்த ஒரு பதிப்பு, டிம்மி ஆறு பாரங்கொண்ட சஞ்சிகை சஞ்சிகையாக மாதந்தோறும் வெளியிடப்பட்டு வருகிறது.

அன்பர்கள் உடனே சந்தாதாரர்களாகச் சேர்வார்களாக.

### சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| புத்தக முழுவதற்கும் முன்பணம்—சென்னை | ரூபா 5 | 0 | 0 |
| வெளியூர்—தபால் செலவுடன் | ,, 6 | 0 | 0 |

5 சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புவோருக்கு ஒரு சஞ்சிகை அதிகமாக அனுப்பப்படும்.

குறிப்பு :—புத்தகம் முழுவதற்கும் 1932-ம் ஞூ ஆகஸ்டுமீ இறுதிக்குள் சென்னை வாசிகள் ரூபா 3½-ம் வெளியூரார் ரூபா 4-ம் முன் பணம் செலுத்த வேண்டுமென முன்னம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது; அந்தக் காலம் கடந்துவிட்டமையான், இப்பொழுது முன்பணக் கட்டணம், சென்னைக்கு 5 ரூபாயாகவும், வெளியூருக்கு 6-ரூபாயாகவும் விதிக்கப் பட்டிருக்கிறது.

காரியஸ்தர் :—முருகவேள் புத்தகசாலை,
12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.



உ

# நவசக்தி

'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு' 'என்கடன் பணிசெய்து கிடப்பதே'

சிலம்பு கரு ஆங்கீரஸஞூ தைமீ பரல் ௬


## நெல்விடுதூது

(தொடர்ச்சி)

ஆகாத சான்வயிற்றால் ஆயுதந்திற் சேவித்துப்
போகா வினைகளைத்திற் போவாரும்—[1]வாகாகக்
கையாடி. வேந்தர்முன்னே கண்ணுறை கட்டியவன்போல்
நெய்யாடும் வாளுருவி நிற்பாரும்—நெய்யென்னத்
தாள மெடுத்துத் தவிலடித்துக் கொம்பூதி
மேள மடித்துமெலிவாரும்—நாள்வழியில்
ஆயங்கள் வாங்கி அலியாயுஞ் செய்வாரும்
பாயும் புலிபோற் பறிப்பாரும்—மாயமாய்ச்
சொக்குப் பொடிதூவித் தூக்கத்தி லேதிருடிப்
பக்கத்தி லேபதுங்கும் பாதகரும்—கைக்குட்
பிடியாளாய் ஆண்பாடும் பெண்பாடும் பட்டுக்
குடியாத கஞ்சிகுடிப் பாரும்—குடிபோலே
கெட்டாளாய்த் தான்திரிந்து நீ அருந்திச் செங்கல்கட்டி
முட்டாளின் வேலை முயல்வாரு—மொட்டாளின்
சம்பளங்கள் வாங்கியுண்டு சாடியொரு கோடிசொல்லி
வம்பளந்த நாழிபோல் வாழ்வாரும்—அன்பறுமெல்
மண்பவளிங் கட்டி வதலால் நகைத்தலைக்குக்
கண்பகர [2]மாகக் கழுப்பேற்றிப்—பெண்பகட்டாய்ப்
பூசிப் புனைந்து பொழுது கருக்கலிலே
காசுக் கடைகாக்குங் கன்னியரும்—வாசமாய்
வெற்றிலைபை விற்பார்போல் மேகலைக்குள் வாழுமொரு
சிற்றிலையின் வாணியமுஞ் செய்வாரும்—கற்றவர்பால்
மெல்லமுதம் விற்பார்போல் மிக்கனி வாயமுதைச்
சொல்லமுதங் கொண்டுவிலை சொல்வாரும்—எல்லாரும்
எண்ணுங் கருமமெல்லா [3]மூண்ணுங் கருமமல்லால்
நண்ணுங் கருமமுண்டோ நாயகமே—புண்ணியத்திற்
பாரம் பரையாய்ப் பழகுதுரை மக்களுக்கெலா
நேரம் நிறைகுடம்போல் நீயிருப்பாய்—சேரவரப்
போக்கிகளுக் கெல்லாம் புதுவாழ்வு வந்தாசற்றே
பாக்கியம்வந் தாற்பிறரைப் பாரானோ—யோக்கியர்க்கும்

(பிரதி)—[1]வாகுதசா. [2]மாசவொரு கழுப்பேற்றிப். [3]மூண்ணுவ.

சாணக் கிடையாதாம் கண்டவுட னேயவர்க்குக்
கோணை வலிப்புவந்து கூடுமாம்—வேனுமென்று
காதல் மனுஷர்வந்தால் கண்டெரியா நோய்வருமாம்
பாதகருக் கிந்தப் பழிவருமோ—நீதமற்ற
ஈனுகி மாந்தர்க் கிடையில்வந்த நோயிதுநீ
போனு லொழிந்தவர்க்குப் போகாதே—ஆன தமிழ்ப்
பாடுவார் பாட்டெல்லாம் பஞ்சரிப்பாங் கோவெனக்கூத்
தாடுவா ராடுவதே யாதரிப்பாம்—சாடிசொல்லு
மெத்தருக்கு நல்ல விரண்டுகையும் போதாதாம்
முத்தமிழோ கேட்டால் முழங்கையாம்—[1]தத்துமொழித்
தாசிசொல்லும் வார்த்தை தனில்விருப்பாம் வேதியர்கள்
ஆசிசொல்லும் வார்த்தை யருவருப்பாம்—பூசை
தருமந்த்ரம் வேசை தலைகாணி மந்த்ரங்
குருமந்த்ர மெல்லாம் [2]குமிந்த்ரம்—வருமந்தப்
பொல்லாதார் தேடுபொருள் புல்லர்க் குதவுமல்லால்
நல்லார்க் குதவாதே நாயகமே—எல்லார்க்குந்
தாயிருந்தா லென்னபெற்ற தந்தையிருந் தாலுமென்ன
நீயிருந்தாற் போல நிறக்குமோ—வாயிருந்துங்
கையிருந்தும் நல்ல கவிபாட வாக்கிருந்தும்
மெய்யிருந்து கல்விகற்ற மேலோரை—ஐயனே
பேயிருந்து கெஞ்சுதல்போல் பேசறியார் வாசலிலே
போயிருந்து கெஞ்சவைத்தாய் போதாதோ—நீயிரங்கி
வாழவைத்தால் ஓர்குடியை வாழவைப்பாய் வாழாமல்
தாழவைத்தால் ஓர்குடியைத் தாழவைப்பாய்—வாழ்வதுவும்
தாழ்வதுவு மாகத் தயக்குவா [யே]புனது
சூழ்வினையை [3]மாற்றத் துலங்காதே—கேள்பருகி
உண்டிருக்கச் சோறுநீ உண்டாக்கு வார்க்குநித்தம்
கண்டிருக்கக் காட்சியுண்டே காவலா—உண்டுடுக்க
ஏங்குவார் ஏக்கமுன தேக்கமே வாசலிற்போய்த்
தூங்குவார் தூக்கமுன தூக்கமே—பாங்கான
சீடான சாதிமணி நெல்லுமணி மற்றதெல்லாம்
கூடாக் கரியமணி குன்றுமணி—வீடான
நெல்லுப்போ ரேபோர் நிலத்தில்மற்றப் போரெல்லாம்
அல்லற்போர் சல்லிப்போ ரக்குப்போர்—வல்லத்துக்
கற்கோட்டை நிற்குமோ காவலரும் நிற்பாரோ
நற்கோட்டை நீபிரிந்த நாழிகையில்—மற்பூட்டும்
வாட்படையும் விற்படையும் வாழ்வு தரும்படையும்
ஆட்படையும் கோடிபடை யானாலும்—கோட்படைசேர்
பாளையப்பட் டெல்லாம் படியொருநாள் முட்டானுற்
சாளையப்பட் டோடாதோ தாடாளா—நாளிலே
மண்ணுசை விட்டு மகவாசை தன்னைவிட்டுப்
பெண்ணுசை விட்டுப் பெரியோராய்க்—கண்ணான
பொன்னுசை தன்னைவிட்டுப் போயொழிந்த யோகியரும்
உன்னுசை விட்டொழிந்தா ருண்டோகாண்—எந்நாளும்

(பிரதி)—[1]தாத்துமொழி. [2]குமிந்த்ரமாம். [3]மாற்றந்.



... OF THE REGISTRAR OF ... 1933

தன்னைமறப் பாருமுண்டு தாயைமறப் பாருமுண்டு
நின்னைமறப் பாருமுண்டோ நீள்புவியில்—மன்னவனே
தானமுநீ நல்ல தவமுநீ தன்மமுநீ
மானமுநீ நீதி வரம்புநீ—யானகுலம்
சாதியுநீ என்று சயத்தம்பம் நாட்டினேன்
வாதிகளுண் டானல் வரச்சொல்லாய்—நீயெல்லா[ம்]
இல்லையென்ற பேரை யிடுப்பிலே பொன்சேர்த்துக்
கல்லறைக்குள் ளேயடைத்துக் கட்டேனு—அல்லாமல்
அன்ன வழியி லான்வந்து சிக்குமென்று
சொன்னதிரு மந்திரத்தைச் சொல்லேனே—முன்னவனே
உன்னையொப்பா ரிந்த வுலகுதனிற் கண்டதில்லை
நின்னையொப்பாய் நீயே நெடியோனே—மன்னர்
அருமையிடுங் கோமான் அனந்தபற்ப நாபன்
பெருகுகிளை வாழப் [1]பிறந்தோய்—உமைசேர்
தயித்திய ஞாத தமிழ்முள்ளி நாடன்
வயித்திய ஞாத மகிபன்—பயிற்சியுப
சாரம்போ லன்புபோற் சந்ததமென் மீதில்வைத்த
வாரம்போல் வந்தாய்நீ வாழிகாண்—பாரெங்கும்
நென்முகமாய்க் காட்சிதந்தாய் நின்முகம்நான் கண்டவுடன்
என்முகமெல் லாங்குளிர்ந்தே னென்கோவே—முன்முகந்த
கேவரகைத் தண்டெடுத்துக் கேப்பையென்று சாப்பினேன்
நீவரகைச் சந்திதொறுஞ் சிந்தினேன்—பேய்வரகைக்
காடுதனில் விட்டெறிந்தேன் கம்புதனைக் கம்பளத்தார்
வீடுகளில் விட்டெறிந்து விட்டேனே—நாடுதனில்
தேடுந் திரவியநீ தெய்வம்வெளி யானபின்பு
பீடந் [2]தொழுவார் பிறருண்டோ—ஈடான
தானிய லட்சுமிநீ சற்றே முகம்பார்த்தால்
மாநிலத்தில் வேணபொருள் வாராதோ—நாலுன்னுற்
பண்ணைகளும் வைத்தேன் [3]பயிர்க்கோவை சேகரித்தேன்
மண்ணுலகில் வேண்டும் வளமைபெற்றேன்—அண்ணேநான்
கூழ்குடித்த வாயாற் குழம்புப்பா லுங்குடித்தேன்
வாழ்குடிக்கும் மேற்குடியாய் வாழ்கின்றேன்—சூழ்பயிரும்
அன்னம் படைப்பதுவும் ஆபரணம் பூண்பதுவும்
சொன்னம் படைத்துச் சுகிப்பதுவும்—இன்ன
மிடுகின்ற பிச்சையு மேத்தும் [4]விளக்குங்
குடி[கை]யர்கோன் புண்ணியங்காண் கோவே—குடிகை
வயித்தியனு தேந்திரன்போல் வாழ்வித்தாய் நீயே
அபிக்கமுனைப் போலெனக்கா ரய்யா—உயிர்த்துணைபோ
லொத்திருந்தா யாகையினல் ஒன்றுங் குறையில்லைகாண்
வித்தகனே யின்னமொரு விண்ணப்பம்—சித்ரசபை
அய்யர்கிரி கூட்டிருக்கு மம்மைகுழல் வாய்மொழிக்கும்
செய்யபுரட் டாதித் திருநாளில்—வையத்
தமரிக்கை பேசிமத [5]ஞாடலுக்குள் வந்து
சமரிக்கை கூட்டுந் தறுவாய்—குமரிப்பெண்

(பிரதி)—[1]பிறந்தோனே. [2]தொழுவார் வேறே. [3]பயிர்க்கோர்வை. [4]திருவிளக்குங்.
[5]ஞாடலுக்குள்.

பட்டுடையை விட்டுமறு பாவாடை சுற்றயிலே
தட்டுடையுஞ் சிற்றுடையுந் தள்ளாடத்—தொட்டொருகை
தாங்கப்போ வென்மனது தள்ளாடிக் கொள்ளாமல்
ஏங்கப்போ னேன்விழித்தே னென்செய்வேன்—தூங்கப்போய்
என்னசளம் வந்ததென்றே யென்னுடைய பாயலெல்லாம்
கன்னிதனைத் தேடினேன் காண்கிலேன்—பின்னையந்தப்
பக்கமெல்லாந் தேடினேன் பாவாங்கிற் றேடினேன்
கைக்கதவுந் தாழ்திறக்கக் காண்கிலேன்—மைக்கண்ணார்
எங்கே யொளித்தாரோ என்னமயக் கிட்டாரோ
சங்கேதம் இன்னம் தவிர்கிலேன்—கொங்கேறிக்
கொங்கைமுகம் வீங்கினார் கூடாம லென்னுடைய
சங்கமுக வீக்கந் தவிராதே—அங்கவர்பால்
ஆர்தூது சொன்னாலும் ஆவதில்லை நீயெனக்கா
[2]யோர்தூது சொல்லிவா வென்றேனே—தாரணியில்
என்னையா ளுந்துரைநீ யென்றாலும் நெல்லரசே
யுன்னைநான் தூதனுப்ப வொண்ணாதே—முன்னமே
வேதமொழி மா[ர்]க்கருக்கும் வேந்தருக்கும் எப்போதும்
தூதுசொல்லச் சாதித்த தொழிகண்டாய்—ஆதிநாள்
தன்னையே [1]பாடினதற்காய்த் தம்பிரான் தூதுசென்றார்
நின்னைநான் பாடினதும் நீயறிவாய்—முன்னைநாட்
சூரனுக்குத் தென்னிலஞ்சிச் சுந்தரவேள் தூதுவிட்ட
வீரனைப்போல் வீரம் விரும்பாதே—பார்வேண்டிக்
காதவுட னேவர்விட்ட கண்ணனையுங் கண்ணன்விட்ட
தூதனையும் போற்றிஇங்கு சொல்லாதே—மாதர்[ப]ால்
மின்காணும் வச்சிரத்தான் விட்டநள ராசனைப்போல்
தன்காரி யப்புலியாய்ச் சாராதே—முன்காதல்
சொல்லிவந்த கிள்ளையைப்போற் சொன்னதையே சொல்லாதே
வல்லிசொன்ன வார்த்தையிற்பின் வாங்காதே—கல்விநளன்
பேராசை தீர்த்தவுந்தன் பேர்க்குடியா மன்னம்போல்
நாராளம் பேசித் தனக்காக்கிக்—காரிகையார்
மாலைப் போலிவ்வளவா [3]மாபோ சனசாலை
சேலைச் செலவு தினச்சலவை—காலையந்தி
மஞ்சட் குளிக்குமவர் மஞ்சனசா லைச்செலவு
கஞ்சக் கலங்களப கஸ்தூரி—பிஞ்சுபுகை
சுற்றிலைகள் [4]திம்பாக்குத் தூய்பசுருள் வெள்ளிமடல்
வெற்றிலை கர்ப்பூர வேதிமுதல்—முற்றுமவர்
பூண்டு பொறுத்திருக்கப் பொன்னுடைமை யத்தனையும்
வேண்டுவது நீகொடுத்து மேல்வாங்கிப்—பூண்டகள்ளச்
சோழியனா மப்பயலைச் சொல்லிவச மாக்கியந்த
ஊழியக்கா ரர்தொழிலை னுள்ளாக்கி—ஏழையேன்
வாசமவர் காமகொலு மண்டபத் துள்ளாக்கி
நேசமெல்லாம் என்மேல் நிலைப்பாக்கித்—தேசமெல்லாம்
விற்றாரை வெம்புருவ வில்லாரை காமகலை
கற்றாரை நெஞ்சகருங் கல்லாரை—பற்றாசை

(பிரதி)—1 பாடினதற்காய்த். 2 யோர்தூது. 3 மகாபோ. 4 தீன்பாக்குத்.



தந்தாரைச் செண்பகப்பூந் தாராரை யன்றெதிரே
வந்தாரைக் கும்பமுலை வாராரைச்—சுந்தரப்பெண்
மையாரைக் கண்ணிலிடு மையாரை வெள்ளிவளைக்
கையாரை வாயிதழ்த்தேன் கையாரை—சையல்பண்ணிப்
போனாரை நெஞ்சைவிட்டுப் போகாரை மின்னுருவ
மானாரைக் கள்ளவிழி மானாரைத்—தேனாரை
[1]மெல்லியா ரைச்சுரத [2]மெல்லியா ரைக்காம
வல்லியா ரைக்கூட்டி வா.

## பதிப்பாளர் குறிப்பு

'நெல்விடுதூது' என்ற இப்பிரபந்தம் 'குடியிருப்பு' என வழங்கும் 'தென்குடிகை' யூரினரும் அனந்தபற்பநாபபிள்ளையின் புத்திரருமான வயித்தியநாதபிள்ளை யென்ற ஓர் பிரபுவின்மீது பாடப்பெற்றது.

இப்பிரபு சுமார்-250 வருடங்கட்கு முன்பு வடகரை ஜமீன்தாராக விளங்கிய 'செம்புலிக் குமாரதுரைத் சின்னனைஞ்சு-பூபதி' யென்னும் பெரியசாமித் துரையின் தானாபதியாக இருந்தவர். இவருடைய கொடிவழி இந்நூலில் 84 முதல் 97 முடியவுள்ள கண்ணிகளில் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றது. இவர் சிறந்த கல்விமானாகவும், தமிழுபகாரியாகவும், வள்ளலாகவும், அரசியல் நிர்வாகியாகவும், பெருமை பெற்ற வீர புருஷராகவும் விளங்கியவரென்பது இந்நூலால் நன்கு புலனாகின்றது. குற்றால நாதர் கோயிலுக்கும் பிற ஆலயங்களுக்கும் இவர் செய்துள்ள திருப்பணிகள் அளப்பில. இவற்றால், இவர் சிறந்த பக்திமான் என்பதும் உணரக்கிடக்கின்றது. இவரது அரிய செயல்களுள் ஒன்றான 'பண்டோர் கலத்திற் பறையனையும் பாலிருத்தி' யுண்டமை (30-ம் கண்ணி) தீண்டாமையை யொழிக்கப் போர்புரிந்து வருந் தேசியத் தொண்டர்கள் அறிந்து இன்புறுதற்குரியது. இப்பெரியாரது வமிசத்தவர்கள் தென்காசியில் அணைக்கரைத் தெருவில் இன்றும் உள்ளார்கள்.

வடகரை ஜமீன்தார்த் துரைகளுடைய வமிச சரித்திரமும் அவர்களிற் பலர்மீது பாடப்பெற்ற பிரபந்தங்களும் ரிட்டையர்ட் டிபுட்டி கலெக்டர் ஸ்ரீமான். P. V. C. பாண்டியனவர்களால் 1916-ல் வெளியிடப்பட்டன. இப்பிரபந்தங்களுள் ஒன்றான 'சவ்வாதுவிடுதூது' என்ற நூலில்,

'........மெய்மணக்குஞ்
சொல்லோன் பெரிய சுவாமிக்கே தூதுசென்ற
நெல்லோ னுயிர்த்துணையாய் நின்றோனே'

என்ற அடிகள் காணப்படுகின்றன. இவ்வடிகளால், இப்போது, வெளியிடப்பெறும் நூலையன்றிப் பிறிதொரு நூல் 'நெல்விடுதூது' என்ற பெயரோடு உளதென்பது வெளியாகின்றது. மகாமகோபாத்தியாய டாக்டர் சாமிநாதையரவர்கள் பிறிதொரு நெல்விடுதூது உளதென்றும் அதனை இயற்றியவர்கள் திருக்குற்றாலப் புராணத்தின் ஆசிரியராகிய திரிகூடராசப்பக்கவிராயரவர்களென்றும் ஒருமுறை பேசக்கேட்டுத் தெரிவித்தார்கள். சவ்வாது விடு தூதிற் குறித்தது ஐயரவர்கள் கூறிய பிரபந்தமாகவே இருத்தல்கூடும்.

வயித்தியநாத பிள்ளை மீது பாடப்பெற்ற இந்நூலை வெளியிடுவதற்கு எனக்குக் கிடைத்த பிரதி ஒன்றே. இது ஆழ்வார்குறிச்சி மேலப்பண்ணை திருவாளர் சிவசயில முதலியாரவர்கள் வீட்டுப் பிரதியாகும். இப்பிரதியையும் பிறநூல்களையும் தந்த அன்போடு எனக்கு உதவிய நண்பர்களுக்கு எனது நன்றியை யுணர்த்தக் கடப்பாடுடையேன்.

(பிரதி)—1 வெல்லியா. 2 வல்லியா.

கிடைத்த பிரதிதானும் பிழைமலிந்திருந்தது; இரண்டிடங்களிற் கண்ணிகள் விடுபட்டுப் போயின. யான் சேர்த்துள்ள எழுத்துக்களை இருதலைப் பகரத்துள் [] அமைத்திருக்கின்றேன். ஏட்டுப் பிரதியிற் கண்ட பாடத்தை அடிக் குறிப்பாகத் தந்திருக்கின்றேன்.

நூலாசிரியரின் பெயர் முதலிய வரலாறு யாதொன்றும் அறியக்கூடவில்லை.

நூலின்கண் வந்துள்ள சரித்திர விஷயங்களை நோக்கியும், இனிமையும் எளிமையும் பொருந்திய இதன் செய்யுள்நடையை நோக்கியும், தமிழ் மக்கள் இதனைக் கற்றுணர்ந்து இன்புறுவார்களென்று எண்ணி இப்போது பிரசுரஞ் செய்யலானேன்.

தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ், சென்னை.
12—1—32.

S. வையாபுரிப் பிள்ளை.

---

சைவசித்தாந்த மகா சமாஜம்

# 4-வது சைவ இளைஞர் கூட்டம்

(திருவிற்கோலம்—31-12-32)

தலைவர் - திருவாளர் - தி. கி. நாராயணசாமி நாயுடு அவர்கள்

திருச்சிற்றம்பலம்

"இளமை கைவிட் டகறலு மூப்பினுர்
வளமை போய்ப்பிணி யோடு வருதலால்
உளமெ லாம்ஒளி யாய்மதி யாயினுன்
இளமை யேறினை யாக நினைப்பனே."—அப்பர்.

திருச்சிற்றம்பலம்

தோழர்களே!

நீண்டுக் குழுமியுள்ள சைவ இளைஞர் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கப் பணித்த வரவேற்புக் கழகத்தார்க்கும், ஏனைய கெழுதகை நண்பர்கட்கும் எனது நன்றி யறிதலான வணக்கம். அடியேன் இளையன்; குணம் பொலேன்; குற்றமே பெரிதுடையேன். குற்றஞ் செய்யினுங் குணமெனக் கருதும் நுங்கள் கொள்கை கண்டு சிறியனேன் இக்கூட்டத்துக்குத் தலைமை பூண இசைந்தேன். ஆகவே என்மாட்டு நிகழும் தூரிசுகளைப் பொறுத்தருளுமாறு வேண்டுகிறேன்.

அறமறக் கிளர்ச்சிகள் விரிட்டு நிலவும் இந்நாளில், இக்கூட்டம் தொண்டைநாட்டு எண்ணுன்கு பதிகளில் பதினன்காம் பதியும், சைவக்கன்றின் கைகண்ட அமிழ் மறையும், சிவப்பிரகாசத் தற்பனையும், விற்கோலம், கூவம் என்னும் வழக்குமுடைய இத்தலத்தில் இம்முறை ஈண்டி யிருக்கிறது. இவண் இறைவன் நல்லதிசயனாய்-உமையொரு பங்கனாய் - மூவருண் முதல்வனாய் - புரங்கள் வெந்தற விற்கோலச் சேவகனாய், செல்வம் அருளி, மறையங்கம் தொகுத்து, ஆகமம் வகுத்து, வீற்றிருப்பதைச் சிந்தித்து வந்தித்து என் பணி மேற் செல்கின்றேன்.

இளைஞர் இயக்கம் சைவ உலகுக்குப் புதியதன்று. பிள்ளை சைவவான் பயிர் ஓம்பினர். நம்பி அதன் ஏனை களைந்தார். இளைஞர் சாத்திரம் வகுத்துச் சைவ நாதரானர். கண்ணப்பர் பணியும் தந்தை நாவற வெறிந்தார் பரிசும் இளைஞர் திறன்களே. அப்பூதியடிகள் தொண்டுக்கும் சிறுத்தொண்டர் தொழிலுக்



கும் துணை செய்தவர் சைவச் செம்மல்களேயாவர். இன்னோரன்ன வரலாறுகளில் சைவம் சாதியாக நிலவாது செந்நெறிச் சமயமாக நாட்டில் நில்லி, மறந்தரு தீநெறி மாற்றி, வாய்மைநெறி அறந்தர விளங்கியது கருதற்பாலது. சோக் கருதிச் சிந்தனையைத் திருந்த வைத்துச் சிந்திமின்! இவ்வியக்கம் சமய இயக்கமென்று தெளிமின்! சாதி யியக்கமென்பதை விடுமின்!

## சிவன் - சைவம் - சைவர்

சிவனெனும் நாமமுடைய செம்மேனியெம்மான் முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருள்; பின்னைப் புதுமைக்கும் போத்துமப் பெற்றியன்; தென்னுடையவன்; எந்நாட்டவர்க்கும் இறைவன்; மனவாசகங் கடந்தவன்; மாதிருக்கும் பாதியன்; குறைவிலா நிறைவன்; கோதிலாவமுதன்; ஈறிலாப்பதங்கள் யாவையுங் கடந்த இன்பன்; அன்பன். இவ்வன்புச் சிவத்தொடு சிவணியது சைவம். இஃது, 'இதுவாகும் அது வல்லவெனும் பிணக்க தின்றி நீதியினல் எல்லாம்' தன்னகத்தே காணும் அழகியது. வாழ்வெனும் மையல் விட்டு, வறுமையாம் சிறுமை தப்பி, தாழ்வெனுந் தன்மையாலே இதில் சார்வார் சைவர். எந்நிலையில் நின்றாலும், எக்கோலம் கொண்டாலும் சங்கரன் தாள் மறவாமை இவர்தம் இயல்; பணி செய்து கிடப்பதே இவர் தம் கடன். இவர்கள் காலைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே, அவன் அருட்பெருங் கடலில் தோய்ந்து திளைத்து, 'இருள் கடிந்துள்ளத் தெழுகின்ற ஞாயிறே! போனந் தம் போராது வைக்கும் பெருமானே!' என்று என்பு நைந்துருகத் தழலது கண்ட மெழுகது போல அன்பாலழுது அரற்றி அர்ச்சனைப் பாட்டேயாகப் பாடிப் பசி தீர்ந்து பரவிப் பிணிகளைந்து எவ்வுயிர்க்கும் அன்பாயிருக்கும் அன்பர்கள்; தங்கள் நிலையினின்றும் கலங்காத் திண்ணியர்கள். இவற்றால் நம்மை அறிந்து நமது கடமைகளை ஆற்றுதற்குரிய துணை நலங்களை மேல் ஆய்வாம்.

## உடலோம்பல்

உறுதுணையாவன உயிரும் உடம்பும். இவற்றுள் உடலை வளர்க்க உயிரும் வளர்தலின், உடல், உயிரின் நிலை காட்டும் ஆடியென்க. உடல் கொண்டு திறம்பட மெய்ஞ்ஞானம் சேர்கின்ற மாண்பை ஓர்ந்து, உடலமைப்பை வியந்து, 'ஊன் உடம்பு ஆலயம்' என்றும், 'மதியின் பெருவலி மானுடர் வாழ்க்கை' என்றும் திருமூலர் சிறப்பித்தனர். அவரே, சிவலிங்கம், சிதம்பரம், சதாசிவம், திருக்கூத்து யாக்கை வடிவென்று அமைப்பழகை வியந்தோதினர். மனத்துயர் ஒழிய ஈகை வினைத்துறை நின்ற துறவினம் குரவர், 'மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே' என்றும், 'வாய்த்தது நந்தமக்கு ஈதோ பிறவி மதித்திடுமின்!' என்றும் அருளியதை ஈண்டு நோக்குங்கள்! தொண்டர்கள் வரலாற்றில் போந்த [illegible]களின் கலைனும், கன்னிமார் வனப்பும் உடற் கட்டழகை அறிவிப்பன வல்லவோ? அதில் காணும் யானையேற்றம், குதிரை யேற்றம், வாட்பயிற்சி, விற்பயிற்சி முதலியன உடலோம்பும் துறைக ளல்லவோ? பூரிக்கும் காற்றை இருகாலும் பிடிக்குங் கணக் கறிவாளர் குறிப்பென்னை? இளமை காத்தலன்றோ? உறுப்புச், சிவக்க, உரோமங் கருக்க, புறப்பட்டுத் திரிகின்ற வாயுவை நெறிப்படவுள்ளே [illegible] உடற்கட்டுக் கன்றோ? உடம்பினுள் உறுபொருள் கண்டு உடம்பினை ஓம்புங்கள்! உடலை இழுக்கென இகழாதீர்கள்! உடலை வளர்க்கும் உபாயமறிந்து உண்பன உண்டு, உடலை வளர்க்கும் முகத்தால் உயிரை வளருங்கள்.

## கல்வி

'துணை யதுவாய் வருவதி தாய நற்கல்வி' யாதலால் கடவுளைக் கல்வியாகவும் அப்பர் அருளினர்.

கல்வி ஞானக் கலைப்பொரு ளாயவன்
செல்வம் மல்கு திருக்கா ஞா ரீசனை
எல்லி யும்பக லும்மிசை வானவா
சொல்லி டீர்நுந் துயரங் கள்தீரவே

இவ்வாறு தயாமூல தன்மவழிநின்ற அப்பர் அருளிய தன் கருத்தென்னை? கல்வி, இறைவன் இலக்கணத்தைப் பயிலநற்றுணைசெய்யுமென்பதேயாகும். இறைவனைக் கல்வி யென்றது முகமன். கற்றறிவாளர் கருதியகாலத்துக்கருத்தினுள்ள கண்கொண்டு எல்லா விடத்துமுள்ள இறையைக் காண்கின்றனர். கல்லாதவர்கள் அவன் கலப்பறிவதில்லை. கல்லாதவரைக் கண்டால் நம்மை அஞ்சுமாறு மணிவாசகரும், கல்லா மனித்தர் கயவருலகினில் பொல்லா வினைத்துயரென்று மந்திரமும் அறிவுறுத்தலை நினைந்து, கற்பன கற்று, அக்கற்றதினுலாய பயனைத் துய்மின்! கற்கின்றவாறு செய்மின்! கழிந்தறும் பாவங்கள்!

## குறிக்கோள்

கல்வியால் அறிவு விளங்கப் பெற்ற ஒருவன் குறிக்கோளை இளமையில் கோலல் நலம். குறியறியாமை பிறவிப் பயனைக் காட்டாமையால், அங்கத்தில் அசைவு காணும் வயதுவரைப் பணி பூண் டொழுகிய அரசர் பெருமான்,

பாலனாய்க் கழிந்த நாளும்
பனிமலர்க் கோதை மார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும்
மெலிவொடு மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்த நாளுங்
குறிக்கோளி லாது கெட்டேன்

என்று இரங்கியது காண்க. இக்கூற்றுக் கொண்டு குறிக்கோள் யாது என்று வினவலாம். அவ் வினவிற்கு அப்பர் அருளுரை கொண்டு விடை இறுப்பல்.

ஊனோக்கும் இன்பம் வேண்டி யுழலாதே
வானோக் கும்வழி யாவது நின்மினே!

இவ் வுரையில் அழிவும் ஆக்கமும் மிளிர்தலைக் கூர்ந்து நோக்கி அவ்வவர்கட்கு ஏற்ற முறையில் குறிக்கோளொன்று கொள்க. ஆனால் மேற்கொள்ளும் எவையும் இவ் வடிப்படையின் மேல் எழுவதாக.

## தமிழ்

திருமுறை ஆசிரியர்கள் தமிழால் இறைவனை 'நன்றாய்த் தமிழ்ச் செய்' தவர்கள்; ழகர இனிமையை நன்கு துய்த்தவர்கள். முத்தமிழ் விரகர் பாடலொன்றில் ழகர இனிமை தருவது காண்க.

பாழியுறை வேழம்நிகர் பாழமணர்
சூழுமுட லாளர் உணரா
ஏழினிசை யாழின்மொழி யேழையவள்
வாழுமிறை தாழு மிடமாம்
கீழிசைகொள் மேலுலகில் வாழரசு
சூழரசு வாழ வரனுக்
காழியசில் காழிசெய வேழுலகில்
ஊழிவளர் காழி நகரே.

திருமுறைகளில் போந்த யாப்பு, சந்தம், சித்திரக் கொழிப்புகளை யென்னென்பேன்? தமிழ்ப் பொழிலென்பனோ! தமிழ் மாருதமென்பனோ! தமிழும் சமயமும் பூமகளும் பொருளுமென விராவி நிற்பதை உன்னுங்கள்! தமிழ் மலரின் மணமன்றோ 'திருமுறைகள்'! அடங்கன் முறை - தமிழிசை நூல். திருவாசகம் - ஒப்புயர்வில்லாத் தமிழ் வாசகம். திருச்சிற்றம்பலக் கோவை - தமிழின் தொன்மைக் கோவை. திருமந்திரம் - அநுபவ மறைமொழித் தமிழாகமம். ஆலவாயுடையார் திருமுகம் - முதல் தமிழ்த் திருமுகம். திருக்கைலாய ஞானவுலா - தமிழின் ஆதியுலா. திருமுருகாற்றுப்படை - தமிழ்ச் சங்க நூல். திருத்தொண்டர்வரலாறு சொல்புராணம் - தமிழ் வரலாற்று நூல்களில் தலை சிறந்தது. இவைகள் நமக்கறிவிப்பதென்னை? நந்தம் சமயம் தமிழ்ச் சமயம் என்பதையும், தமிழ் வளர்ச்சியில் நம் சமயவளர்ச்சி யிருப்பதையும் அறிவிக்கின்றன: தமிழை வளர்க்க, சமயம் வளரும். சமயத்தை வளர்க்க,



தமிழ் வளரும். ஆதலின் தமிழையும் சமயத்தையும் இணைத்து ஓம்புங்கள்!

## நூல்

கல்வி கரையிலாதும் கற்பவர் நாள் எல்லைப்பட்டு மிருத்தலான் தெள்ளிதின் ஆய்ந்து அமைவுடைய நூற்களைக் கலைமாச் செல்வர் கருவூலமாகத் தேடி வைத்தனர். அவையே கற்பனை கடந்த பழம் பாடல்களாம் திருமுறைகள்-சாத்திரங்கள். அவற்றின்பால் நாம் கவலை செலுத்துவதில்லை. அறவோரை - துறவோரை - அடிகண்மாரை - பாவையாய் நிறுத்திப் படமாய்த்தூக்கி வந்தனைவழிபாடு இயற்றுகிறோம். ஆனால் அவர்தம் நூலொன்றுபற்றி உள்ளக்கிடக்கையை அறிய ஒருப்படுகிறோமில்லை. வேட நெறியறியார் வேடம்பூண்டென்பயன்? பிறமொழி சமய நூல்களுக்கு எத்தனை எத்தனை தொகுப்புகள் (Compilations), வகுப்புகள் (Classifications) உரைகள் (Annotations), நுண்மாண்புகள் (Esoterisms), அபிதானங்கள் (Encyclopaedias), அகராதிகள் (Dictionaries), சுருக்கங்கள் (Epitomes), ஆராய்ச்சிகள் (Researches) செவ்விய முறையில் மூலநூலின் கருத்தைப் பலபடியாகப் பரப்புகின்றன. சிறப்பாக விவிலிய நூலுக்கு இதுவரைப் போந்த வழிநூல்களும் சார்புநூல்களும் கணக்கிறந்தன. அந்நூலுக்கு எல்லா மொழிவாணரும் பலவகை நூற்களை யாத்தனர்: அவை பலமுறை அச்சேறிப் பல படிகளை வழங்கி இருக்கின்றன. சுருங்கக் கூறின் பதிப்புகள் வாசகர்களின் கண்ணையுங் கருத்தையுங் கவரும்முறையில் வழங்கப்படுகின்றன. நம்நூல்களின் கதியைச் சிந்திமின்! அன்பர்களே! காலங்கடந்த சமயமெனச் சைவச் சிறப்புச் சாற்றிச் செம்மாந்திருப்பதின் பயன் யாதுகொல்? அன்பாகமமாம் பெரிய புராணத்திற்கு இற்றைநாள்வரை பாட்டு முதற்குறிப்பும் காணவில்லை. பதிப்போ பல. வெட்கம்! வெட்கம்!! சாதிப்பூசல், சமயப்பிணக்கு, இறுகியநெஞ்சு, குறுகிய நோக்கு, இன்னபிற பரந்த கொள்கையும், விரிந்த நோக்குமுடைய சைவத்தைச் சுயநலச்சூழலில் ஆழ்த்திவிட்டன. 'அழுக்கினை யோட்டி அறிவினை நிறை'மின்! 'பனுவல் திறங்கற்று நாடெங்கும் நாட்டு'மின்! அரித்து எரிக்கும் நோய்களை நூலின் நந்தாவொளியால் இரிந்தொழியச் செய்மின்! முடிந்த முடிவாக நம் நூல்களை ஓம்புதலால் மொழியையும் நாட்டையும் நல்லாசிரியன்மார்களையும் ஆதரிக்கும் அறிவறிந்த மக்களாவோம்.

## சமயப் பொறை

பலசமயிகள் நடுவண் வாழுநர்க்கு சமயப் பொறை வேண்டுவதே. எவ்வகைச் சமயத்தையும் சோதிக்கில் தொடர்ச்சியில் ஒன்றே. அங்குக்காணும் யாதொரு தெய்வமும் மாதொருபாகனே. 'ஒருவனே தேவன்' என்றும் 'தெய்வம் ஒன்றென் றிரு' என்றும் ஒருமைகண்ட சமயத்தில் பேதித்துப் பிணங்குதல் எற்றுக்கு? விரிவிலா அறிவினோர்கள் வேறொரு சமயம் செய்து எரிவினாற் சொல்லின் அதுவும் பரனுக்கு ஏற்றதென ஏற்க. இறைவன் 'பரவுவாரையும் உடையார் பழித்திகழ்வாரையும் உடையார்' ஆதலின் நம்மை இகழும் எவரையும் இகழற்க.

## கல்வெட்டுக் கலை

தென்னாடு, சென்ற காலத்தின் பழுதிலாத் திறமுடைய கோயில்கள்மலிந்தவிடம். அக்கோயில்களில் எதிர் காலத்தின் சிறப்புக்குக் கற்பனை கடந்த சரித்திரங்கள் கல்மேல் செதுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் பயனைப்பெறாச் சிறப்பு எய்தாது சிதைத்து வசைகள் பெறுகிறோம். உண்மைகாணும் வேட்கை மிக்கிருக்கும் இந்நாளில் கல்லெழுத்தைப் புறக்கணிக்கும் புன்மை நம்மாட்டுண்டு என்று கூறல் மிகையாகாது. கல்வெட்டுக் கலையின்றேல் திருவிடைவாய்த் தேவாரமேது? சரித்திரக் குறிப்பு ஏது? பொதுவாக இக் கலை தமிழர்க்கும் சிறப்பாகச் சைவர்க்

கும் வேண்டுவதை ஈண்டு எடுத்துக் காட்டுவல்.

க. திருநாவுக்கரசர்சரிதம் கசக-வது செய்யுளில் வரும் குணதர வீச்சரம் - இராஜ ராஜீச்சரம், கங்கை கொண்ட சோளீச்சர மென்றாற்போல, அரசன் பெயரால் அமைந்தது. இவ்விடத்துக் காலக்கணக்கரால் கணிக்கப்படும் மன்னன் முதல் மகேந்திரவர்மன். அவன் விருதுகளில் 'குணபரன்' என்பது ஒன்று. இதனுல் குணதர மென்பது குணபர மென்றிருக்க வேண்டு மென்பர் சரித்திர அறிஞர்.

உ. புகழ்ச்சோழர்தொண்டின் கஉ-ம் செய்யுளிலும், இடங்கழியார் வினையின் ௬-ம் செய்யுளிலும்வரும் துலைப்பொன் துளைப்பொன்னு யிருத்தல் வேண்டும். 'விடேல் விடுகு கல்லால் துளைப் பொன் அறுபதின் கழஞ்சரை' - 'சுட்டு வெட்டிச் சூட்டுக்குத் தந்து காச்சாற்றி கை செய்து கழஞ்சிற்பொத்த துளைப்பொன் உரையும் துளையும் வழுவாது' என்பன போன்றசாசனவரிகளால் இதுதெளிவு. இதன்விரி தமிழ்ப் பொழில் முதல் துணர் ௯௮-ம் பக்கம் பார்க்க.

௩. கோட்புலியார் செயல் கூ-வது பாவில் வரும் திருப்படிமற்று, திருப்படிமாற்று யிருத்தல் வேண்டும். சுளித்துப்படியார் கக-வதுசெய்யுளில் திருப்படிமாற்றென இப்பொருளில் வருதலாலும் பலசாசனங்களிலும்இவ்வாறே காண்பதாலும் திருப்படி மாற்றென வழங்குதலே சாலச் சிறப்புடைத்து. இவை ஓரெழுத்துப் பிழையாதலை ஓர்க. இவையன்ன பலப்பல.

சோழர் இராஜாங்க முறைமையில் ஊர்காக்க வாங்கப்பட்ட வரியின்பெயர் பாடிகாவல் என்பர். ௫-வது திருமுறை எஅ-வது பதிகத்தில் உ, ௬ பாக்களில் பாடிகாவல் வருவது கொண்டு, நாவுக்கரசர் காலமாகிய பல்லவர் காலத்தும் அது நிலவியது அறிகிறோ மல்லவா? இவையன்ன நுணுகிப் பயில அறிவோம்.

பண்

முன்னர்ப் பலர் பல பணிகளை வகுத்தனர். அவற்றைக் கால எல்லை நோக்கி விடுத்து நாட்டின் பொருளாதாரம், நம் சமாஜ நிலை, இளைஞர் நிலை முதலியன கருதி என்னைக் கவர்ந்துள்ள பணிகளை உங்கள் முன் விளக்குகிறேன். அவற்றில் புரிய வல்லவற்றை எடுமாறு ஆற்ற வேண்டுகிறேன். பண்முறைத் தேவார நூல்களின் எழுவாய் இறுவாய் இரண்டிலும் காலத்தால் இயைந்த பதிகங்க ளிருக்கின்றன. இடைப்பட்ட வினைப்பதிகங்களை யாப்பு வகையிலும்; பண் வகையிலும் கூட்டிக் காலம் பற்றி நூல்களை முன்பின் முன்னோர் வைத்தனர். அவைகள் நெறியான சட்டதிட்டங்களின் கீழ் வகுக்கப்பட்டன என்பது தெரியவில்லை. இன்ன பண்ணின் கீழ் இன்ன பண் வர வேண்டியது என்ற நியதியும் காணப்படுவதில்லை. இப்பண்களைப் பற்றிய விவரமும் தெரியவில்லை. இவ்வகை வகுத்த காலம் யாப்பிலும் பண்ணிலும் நாடு தோய்ந்த காலம் போலும்! சேக்கிழாரது நூலுக்குமுன் இவ்வகுப்பு ஏற்பட்டது சிந்திக்க உரியது. மூவர் பாடலை வகுக்கப் பெரிய புராணம் ஒரு கருவி நூலாகும். தல முறைப் பதிப்பு யாத்திரைக்கும் தல சரிதத்துக்கும் துணை செய்வது. இப்பதிப்புகளில் பதிகத்தின் மேல் இட்டியுள்ளபதி, பதிகம் அருளிய இடமா? பாடலில் பயின்ற இடமா? என்பது சிக்கறுக்கப்படவில்லை. கோத்திட்டை - கோவலூர்ப் பதிகம் பரங்குன்றிலும், ஆரூர் ஆதிரைச் சிறப்பான 'முத்துவிதான'ப்பதிகம் புகலூரிலும் அருளியன அல்லவா? நடு நாட்டுத் தலமாகிய இடையாற்றுக்குச் சுந்தரர் பதிகம் ஒன்றே சுட்டப்படுகிறது. இப்பதிகத்தில் இடைமருது விடாது வருகிறது; இது நாட்டுத் தொகை, ஊர்த்தொகை,க்ஷேத்திரக் கோவை போன்று பதிகத் தொகை கூறும் பதிகமாகவும் காணப்படுகிறது. இப்பதிகத்தின் தலைப்பு, சில பிரதிகளில் இடையாற்றுத்



தொகை யென்று காணப்படுவதை ஈண்டுக் கவனிக்க. சேக்கிழார், சுந்தரர் சரித்திரத்தில் இப்பதியைச் சுந்தரர் வணங்கி வழிபட்டதாகக் கூறினரில்லை. இவ்வித ஐயப்பாடுகள் இருந்தும் அது பாடல் பெற்ற தலமாக எண்ணப்பட்டு வருகிறது. சம்பந்தர் சுந்தரர் இருவரும் வேள்விக்குடி, துருத்தி இரண்டையும் சேர்த்துப் பாடி யிருப்பதால் எத்தலத்திற்கு இப்பதிகங்களைக் கொள்வது? இவையோடு ஒத்த பல ஐயப்பாடுகளைப் பெரியபுராணநூலோடு ஒத்திட்டு ஒற்றுமை வேற்றுமை கண்டு சிக்கறுத்து ஒழுங்கு படுத்தல் வேண்டும். திருவாசகச் சிக்கல்களை மறைமலையடிகள் எழுத்திற் காண்க. கால வேட்கை கருதிச் சேக்கிழார் வாக்கை ஆதாரமாக்கொண்டு, மூவர் பதிகங்களைக்காலவரிசையில்(Chronological order) வகுத்துத் தலைப்பில் அருளிய இடம், பண், எண் இட்டுக் குறிப்புடன் கோவை செய்து பண், தல, வரிசைகளை அநுபந்தமாக அமைத்தல் நலம். இவ்வகைப் பதிப்பு மூவரைப் பயிலும் இலக்கிய மாணவர்கட்குப் பெரிதும் பயன்படுவதைச் சமாஜம் கருதி, இம்முறையில் பதிப் பொன்று வெளியிடுமாறு பணிவுடன் விண்ணப்பிக்கிறேன்.

நக்கீரர், கபிலர், பரணர், பட்டினத்தார் இவர்களைப்பற்றிய கருத்து வேறுபாட்டுக் கேள்விகள் வந்தும் வராதனவாக விருக்கின்றன. கோவையார், நம்பியாண்டார் நூல்கள் திருமுறையில் புகுதலைப்பற்றியும் கேள்விகளிருந்து வருகின்றன. திருமுறை கண்ட புராணம், திருப்பதிபதிகக் கோவைகளின் ஆசிரியர் உமாபதியார் என்பது 1911ஆம் வரை நாவலர், பண்டிதர் உள்ளிட்ட பதிப்பாசிரியர்கட்கு ஐயப்பாடே. பெரிய புராணப் பகுதிகளைச் சேக்கிழார் அடிமை, கவின், சரிதம், சரிதை, செய்கை, செயல், நலம், திறம், தொண்டு, தொழில், நலம், நிலைவு, பணி, பரிசு, புகழ், வளம், விளையென நுதலியிருக்கப் புராணமென வழக்கில் அடிபடுமாறு செய்வானேன்? இது

நிற்க. நூல்களைச் செப்பம் செய்யும் போது செய்யுள் நூல் யாவற்றிற்கும் பா எண்ணிட்டு முதற் குறிப்பு முதலியன வகுத்தல் எப்பதிப்புக்கும் எக்காலத்திற்கும் உதவும். பின் வருவோர் மீண்டும் இவ்வேலையில் காலத்தைப் போக்காது பிற பணியில் காலத்தைப் போக்க உதவுவதை நினைந்து யாவரும் இதனைக் கடைப்பிடிக்குமாறு வேண்டுகிறேன்.

மூவர் பாடலில் சமண சமயிகள் ஒழுக்க நிலையைத் தனியே பிரித்து வகுத்துக் காட்டல் அகச்சான்றில்லாச் சமணர் கழுவேற்றத்திற்குச் சிறந்த கழுவாயாகுமென நினைக்கிறேன். அருவுருவமாக வரும் தேவாரப் பாடல்களை வகையாகக் கோவை செய்தல் சமரச சன்மார்க்கம் விரும்புநர்க்கு ஒரு நல் விருந்தாகும். திருமுறைகளில் குறிப்பிட்ட பொருளைக்காண நூல் முற்றும் துழவித் துழவிப் பார்க்கும் அவசியம் நேர்கிறது. இவ்விதம் பார்க்கக்கால எல்லை அதிகம் வேண்டியிருப்பதால் நூலின்சிறப்பு,பயன்படாது போகிறது. இதனைப் போக்க அபிதானமும் அகராதியும் தனியே வேண்டும். ஒவ்வொரு நூல் முடிவிலும் இவ்வகைக் கோவை செய்யின், முயற்சி எளிதாகும். சிறுவர்களுக்கெனப் படிப்படியாகப் பாடல்களைத் தாளக் குறிப்புடன் தருதல் ஆசிரியர்கட்கு வழி காட்டியாக(Guide) இருக்கும். 'ஓவியம் உணர்ந்த அறிவாதலின்' ஓவிய வல்லுநர், வர்ணனைக்குத்தகச் சில ஓவியங்கள் தீட்டலாம். படமெடுக்கும் ஆற்றலுடையார் தாராசுரப் பெரிய புராணப் படிமங்களை எடுத்து வெளியிடின், நம் சமயம் சிற்பங்களில் புகுந்து சிறப்பெய்தியதைப் பிறநாடு அறிய நற்றுணை செய்யும். நூல் முகப்புக்குரிய மூவர் யாத்திரை வழிப் படம் வரைதல் தலைச் செலவின் சிறப்புகளை அறிய உதவும். இறைவன் மாட்டுள்ள சின்னங்களின் கதை, புராதனக் கதை இவைகளைத் தொகுத்தெழுதி அவைகளின் தத்துவக் கருத்தையும் நுண்மாணு

ளைப் புலமைக் கழகத்தார் (Esoteric Section) தனியே வெளியிடுதல் வேண்டும். அறவுரைகளை அகர முறைப் படுத்தல் சொற்பொழிவாளர்க்குத் தகுந்த நூலாகும். சமாஜம் அரசாங்க சாசன சாலை அதிகாரிகள் உத்தரவு பெற்றுத் தந்தால், சிவத்தலங்களில் காணப்படும் கல்வெட்டிலுள்ள சமயக் குறிப்புகளை எழுத நினைத்துள்ளேன்; பெரிய புராணத்திற்குக் கல்வெட்டுச் சான்றுகளைக் குறிப்பெடுத்துச் சேர்க்கவும் எண்ணியுள்ளேன். ஆதலால் சாசன சாலையோடு தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது சமாஜக் கடமைகளில் சிறந்த ஒன்றாகும்.

**செல்வன் கழலேத்தும் செல்வீர் !**

தீண்டாமையைப் பற்றிய கருத்து சமாஜ உரை நிகழ்ச்சிக் காலத்திற்கு வைத்துக்கொண்டு, இக்கூட்டம் இனிது முடியத் தங்கள் ஆதரவு வேண்டி என் சிற்றுரையை முடிக்கின்றேன். இத்துணைக் காலம் என்னுரைக்குச் செவி சாய்த்த உங்கட்கு என் வணக்கம் உரியதாகுக.

செந்நெறிச் சைவம் வாழ்க !
திருநெறித் தமிழ் வாழ்க !!

# சமரச சன்மார்க்க போதம்

(தொடர்ச்சி)

209. தியானம் எனில் எதைத் தியானிப்பது? தியானிக்க மனதுக்கு ஏதாயினுங் குறிவேண்டும். குறியற்ற ஒன்றை மனம் தியானித்தல் அரிது. மனங் கடந்த ஒரு நிலைக்குக் குறி வேண்டுவதில்லை. அந்நிலை கூடுதற்குத் தியானம் இன்றியமையாதது.

210. மனதால் இறைவனைத் தியானித்தல் வேண்டும் என்பது பொது வாக்கு. அது சிந்திக்கத்தக்கது. மனம் எல்லைக்குட்பட்ட ஒன்றைத் தியானிக்க வல்லது. இறையோ நாமரூபமின்றி அகண்டமாயிருப்பது. அகண்டமாயிருக்கும் ஒன்றை மனம் எப்படித் தியானிக்கும்?

211. இறை உயிரென்றும் இயற்கை உடலென்றும் மேலே சொல்லப்பட்டன. இறை அகண்டமாய் மனவுணர்வுக்கு எட்டாததாயிருத்தலான், அதனைத் தனியே மனதால் தியானித்தல் இயலாததாகும். அவ்வியலாமையைப் போக்க இறையுயிர் இயற்கையை உடலாக் கொண்ட ஒரு நிலையைத் தியானிக்க முயல்வது முறைமை.

212. தியானத்துக்குத் துணை புரிய இயற்கை அன்னை பலப் பல கோலந் தாங்கி நிற்கிறாள். ஞாயிறு, திங்கள், வான், மீன், மலை, காடு, அருவி, ஆறு, ஏரி, குளம், பயிர், வெளி, கடல் முதலியன அவள்தன் அழகுக் கோலங்கள்.

213. மலை தியானத்துக்கு மிகச் சிறந்த இடம். மலை மண்ணுக்கும் விண்ணுக்கும் இடையில் நிற்பது; கீழிருந்து மேல் நோக்குவது; கீழ்நோக்குந் துன்பத்தையும் மேல் நோக்கு இன்பத்தையும் வழங்குவது இயல்பு. துன்பம் அறிவுச் சுருக்கம். இன்பம் அறிவு விளக்கம். துன்பம் சூழும்போது மக்கள் கீழ் நோக்குவதும், ஒன்று விளங்காதபோது அதை அறிவால் விளங்கிக் கொள்ள மேல் நோக்குவதும் இயற்கை. மேல் நோக்குடையமலையை உன்ன உன்னத் துக்க நீக்கத்துக்குரிய தியானம் தானே கூடும். மலையே தியான மயமாக விளங்குவது. அது தன்னை அணைவோரையும் தியான மயமாக்கும். ஆதலால் மலை தியானத்துக்குச் சாலச் சிறந்ததாகிறது.



214. ஓய்ந்த நேரங்களில் தியானத்துக்கு மக்கள் மலைக்குச்செல்வது நலம்; (கடலடுத்த மலையை நாடுவது மிகச் சிறப்பு). மலைமீது ஏறி நின்று இயற்கை அன்னை வழங்குங் கோலங்களைக் கண்டு கண்டு உன்னி உன்னி, அவைகளில் ஊன்றி ஊன்றி, ஒன்றப் பயிலல் வேண்டும். காலையில் செங்கதிர் பரப்பி நீலக் கடலில் எழும் இளஞாயிற்றை நோக்குவோம்; உன்னுவோம்; அதில் இரண்டற மூழ்குவோம்; மூழ்கித் தெளிந்தெழுந்து அஞ்ஞாயிறு நினைவுடன், வெயிலை நிலவாக்குமாறு பரந்து விரிந்து நிற்கும் ஒரு பசு மரத்தடியில் சேர்வோம்; சேர்ந்து நாற்பக்கங்களிலும் உலவி உலவி, உதிர்ந்த கனிகளை யுண்டு, அருவி நீர் அருந்தி, ஓரிடத்தில் அமர்வோம். இயற்கை அன்னை புலன்களுக்கு விருந்து அளிக்கிறாள். தென்றலின் வீச்சும், அருவியின் முழவும், மயிலின் ஆட்டமும், குயிலின் கூவலும், வண்டின் பாட்டும், மலரின் மணமும், மானின் துள்ளலும் பிறவும் புலன்களுக்கு விருந்தாகின்றன. அவ்விருந்து நெஞ்சை ஒரு நிலையில் நிறுத்தும். அதனால் அமைதி கூடிக்கிடப்போம். பகல் கழிந்த பின்னை மரத்தடியினின்றும் வெளிப் போந்து இயற்கை அன்னையின் பெருங் கோலத்தை நோக்குவோம். நாற் பக்கங்களிலும் பசுமை உருகி உருகிப் பெருகிப் பெருகிப் பாய்ந்து ஓடி இழிதருங் காட்சி நம்மை வயப்படுத்தும். பசுமைக் கடலில், மூழ்குவோம். அப் பசுமைக் கடல், தன்னில் மூழ்கிய சிந்தையை நீலக்கடலில் புகுத்தும். அதன்கண் தோய்ந்து இன்புறும் வேளையில் தண்ணிலவு பொழிந்து வெண்டிங்கள் காட்சியளிக்க முந்துகிறது. பறவையொலி கேட்கிறது. கால் நடைகளின் மணியோசை கேட்கிறது. அந்திவான் செம்மையில் ஞாயிறு பொலிகிறது. ஒருபால் திங்களும் மற்றொருபால் ஞாயிறும் நேர்பட வழங்குங் காட்சியைக் காணும் கண்ணன்றோ கண்? அக் காட்சியில் படியும் நெஞ்சமன்றோ நெஞ்சம்? வெண்ணிலவு பொழிந்த வண்ணமாயிருக்கிறது. விண் மீன்கள் ஒளிர்கின்றன. நீலவான் அமைதியில் நெஞ்சம் முட்டுகிறது. இவ்வாறு இயற்கை அன்னையின் பலதிறக் கோலங்களில் நெஞ்சம் பதியக் கீழிறங்குவோம். கடலுடுத்துப், பசுமை போர்த்து, வான் முடியணிந்து, இருகதிர் விழித்து நோக்கும் இயற்கை அன்னையின் அழகுவடிவம் மனதில் நின்று நின்று அமைதியூட்டும். அவ்வழகு வடிவைத் தியானிப்போம்; தியானித்த வண்ணமாயிருப்போம்.

215. கீழிறங்கி வாழ்வில் தலைப்படும் வேளைகளிலும் இயற்கைத் தியானத்தை மறத்தலாகாது. இடையிடை மறப்பு நேரினும் நேரும். அம்மறப்புக்கு இரையாகாதவாறு காப்புத் தேடுதல் வேண்டும். இதற்கு என் செய்வது? கருத்தில் நிலவும் இயற்கைக் கோலங்களைப் பாட்டாக எழுதவும் ஓவியமாக வரையவும் பயிலுதல் வேண்டும். இப்பயிற்சி இயற்கைத் தியானத்தை ஓம்பும். இயற்கைத் திருக்கோலங்களை முன்னோர்களும் காவியங்களிலும் ஓவியங்களிலும் இறக்கிவைத்துள்ளார்கள். அவைகளை ஆய்ந்து சிந்தித்து அவைகளில் ஈடுபட்டு ஒன்றுவதும் இயற்கைக் கோலங்களுடன் உறவு கொள்வதாகும். காவிய ஓவியங்கள் இயற்கையின் கூட்டுறவுக்குப் பாலம்போலத் துணை செய்வன. காவிய ஓவியங்களும் இயற்கை வழிபாட்டிற்கென ஏற்பட்டன என்று கூறல் மிகையாகாது.

216. காவிய ஓவியங்களை இயற்கைக் கோலத் தத்துவ நுட்பங்களின் அறிகுறி என்ற உணர்வுடன் கொள்ளுதல் வேண்டும். அன்னதின்றிக் காவியச் சொல்லையும் ஓவியப் பிண்டத்தையும் பொருளாக்கொள்வது தவறு. அது, விக்கிரக ஆராதனையாக முடியும்.

217. எங்கு முள்ள இறையை ஒரு சிறிய செயற்கை உருவாக நினைந்து வழிபடுவது இறையை நிந்தனை செய்வதாகும். இவ்வழிபாடு அறிஞரால் மறுக்

கப்பட்டிருக்கிறது. இம்மறுப்பின் நுட்பம் தேருத சிலர் காவிய ஓவியங்களையே மறுக்கப் புகுகிறுர். இதுவுந் தவறு.

218. இயற்கைத் தியானம் முதிர முதிர நெஞ்சில் இயற்கை இயல்கள் படிகின்றன. இயற்கை இயல்கள் பலப் பல. அவைகளின் உயிர்நாடியாயிருப்பது தனக்கென வாழாமை. இச்சீரிய இயல் நெஞ்சில் படிவதற்கு இயற்கைத் தியானம் இன்றியமையாததாகிறது.

219. இயற்கைத்தியானம் மக்களிடத்துள்ள தன்னலம் என்னும் விலங்கியல்பை வீழ்த்தித்தேய்த்துப் பரநலம் என்னும் தெய்வ இயல்பைப் பெய்து வளர்க்கும். இயற்கைத் தியானத்தின் முன்னர், நாடு மொழி வகுப்பு முதலியவற்ருல் தோன்றும் பிரிவு உணர்வும், அவ்வுணர்வால் எழும் பொருமை பிணக்கு முதலிய இழிவுகளும் பொன்றும். எவ்வுயிரையும் தன்னுயிர்போல் கருதும் அன்புநிலையை இயற்கைத் தியானம் கூட்டும் என்று சுருங்கச் சொல்லலாம். இயற்கைத் தியானத்தில் அமர்ந்து பார்க்கப் பார்க்க அதன் பெற்றி நன்கு புலனுகும்.

220. இயற்கைத் தியானம் அலேயும் மனத்தை அமைதியில் நிறுத்தும். அமைதி, வாழ்விற்கு வேண்டற் பாலது. அமைதி கருவி கரணங்களிலும் நாடி நரம்புகளிலும் புகுந்துள்ள வெம்மையைப் போக்கித் தண்மை வழங்கும் அமிழ்தம். வெம்மை எரி பகை முதலிய தீமைகளை ஈனுவது. தண்மை அவைகளை நீக்கி அன்பு அருள் முதலிய நன்மைகளை நல்குவது. அன்பு அருள் முதலியன உடல் நலனுக்கும், உயிர் நலனுக்கும், பர நலனுக்கும் வேண்டுவன. இயற்கைத் தியானத்தால் அமைதியும் நல்லெண்ணமும் நல்லுடலும் பெறுதல் கைகண்ட பலன்.

221. இயற்கைத் தியானம் உலகில் பெருகப் பெருக மன்பதையே தூய்மையுறும்; சகோதர நேயம் ஆக்கமுறும். பல்லோர் பலகால் முயன்றும் கைகூடாத சீர்திருத்தங்களை எல்லாம் இயற்கைத்தியானம் விரைவில் எளிதில் வாழ்வில் நிலைபெறச் செய்யும். உலகை ஒழுங்குபடுத்தக் கற்றை கற்றை நூல்களும், பெரும் பெரும் மகாநாடுகளும், நீண்ட நீண்ட தீர்மானங்களும், கிளர்ச்சிகளும், புரட்சிகளும் வேண்டுவதில்லை; இயற்கைத் தியானம் ஒன்று சாலும்.

222. நாளடைவில் இயற்கையின் பல கோலங்களைத் தியானிப்பதில் படிப்படியே சிற்சில மாறுதல் நிகழும். இதற்கு இயற்கை அன்னையே துணை செய்வாள். அத்துணையுடன் நமது சிறு முயற்சியும் கூடின் விரைவில் நலன் விளையும். இயற்கையின் பலகோலங்களைப்பற்றிய தியானம் நாளுக்குநாள் படிப்படியாக மாறி மாறி, அது பெரிதும் ஞாயிற்றில் மட்டும் செல்வதாகும். இஃது இயற்கையின் போக்கு. நாமும் தொடக்கத்திலேயே ஞாயிற்றின் மீது சிறப்பாகக் கருத்துச் செலுத்துவோமானுல், இயற்கையின் துணை எளிதில் கூடும்.

223. ஞாயிறு,சிந்தையில் நின்றுநின்று இயற்கையின் வேறு கூறுகளை யெல்லாம் நாளடைவில் தன் மயமாக்கும். இந்நிலையில் எங்கும் பரவியுள்ள இயற்கை ஒலி கேட்கும். அவ்வொலி ஒவ்வொருவர்க்கு ஒவ்வொரு விதமாகக் கேட்கும். ஒலி கேட்கும் நிலைக்கு மேல் இயற்கையின் காரியப் பாடுகளாக உள்ள பன்மைக் கோலங்கள், அவைகளின் காரணமாக உள்ள ஒருமை அழகொளியாகத் தோன்றித் தோன்றி மறைவுறும். அவ்வொளி பெருகி நிலைபேறுக நிற்க நிற்க மன வுணர்வு முறை முறையே மாயும். மனஉணர்வு மாய்ந்ததும் தனித்த இறையின் தொடர்பு கூடும். அதற்குமேல் நேர்வது சொல்லுக்கடங்காதது. அதைச் சொல்லால் விளக்குவது அருமை.

224. இயற்கை அன்னையின் அருளால் மிக மிகச் சிலர்க்கே மன வுணர்வு கடக்கும் நிலை கூடும். பெரும்பான்மையோர்க்கு அந்நிலை எளிதில்கூடுவதில்லை.



அவர்கட்குக் குருமார்களுள் எவரேனும் ஒருவர் துணை செய்வர்.

225. குருநாதன் துணை எளிதில் கிட்டாது. அத்துணைக்கு நிஷ்காமிய நெஞ்சம் தேவை. நிஷ்காமிய நெஞ்சை வழங்கவல்லது இயற்கைத் தியானம். இயற்கைத் தியானத்தால் நிஷ்காமியத்தில் பண்பட்ட நெஞ்சம் உண்டாகும். அதற்கு மேல் குருநாதன் துணை செய்வான். இயற்கைத் தியானத்தால் நெஞ்சைப் பண்படுத்தாது குருநாதன் துணையைத் தேடுவது வீணேயாகும்.

226. சிற்சில காரணம்பற்றி இயற்கைத் தியானத்தில் ஈடுபடும் வாய்ப்புக் கூடப் பெருதார், குருமார்களில் தமது கருத்துக்கு இனிய ஒருவரைத் தியானிக்கலாம். அத்தியானமும் இயற்கை ஒலியையும், ஒலி வழி ஒளியையும் வழங்கி மனவுணர்வை அழிக்கும்.

227. இயற்கை வாயிலாகவும், குரு வாயிலாகவும் உயிர்களின் தியானத்தை ஏற்கும் இறை ஒன்றே.

228. இயற்கைத் தியானத்தின் முதிர்ச்சியால் குருதரிசனம் பெற்று மேல் நிலையடைவது பெரும்பான்மை. குருதரிசனமின்றி அந்நிலை அடைவது சிறு பான்மை.

229. மனவுணர்வு உள்ளவரை இறைவனை இயற்கை வாயிலாகவோ குரு வாயிலாகவோ தியானிப்பது சிறப்பு. மனவுணர்வு கடந்தபின்னை இறையுடன் தனித்த தொடர்பு கொள்ளும், ஒரு பெரும் நிலைகூடும்.

230 மனவுணர்வு கடந்ததும் கூடுவது அமலயோகம். அது குருவருளால் கூடுவது.

231. குருவருள் பெற்றபின்னை உள்ளொளி என்னும் ஆன்மசக்தி எழும் ஒரு நிலை கூடும். அந்நிலை அடைந்தோர்க்கு இயற்கையும் ஏவல் செய்யும்.

232. சக்தியை உணர்த்தற்குரிய மார்க்கமாக நின்று துணைசெய்வது இயற்கை என்பது அறியற்பாலது.

திரு. வி. கலியாணசுந்தரனர்.

(தொடரும்)

## புதுயுகப் புலர்ச்சி.

பொன்னெஞ்சீர் புதுயுகம் பூத்தது வெற்றி!
பொங்கிப் பொலிந்தது மங்கள சக்தி!
மண்ணிடை ரத்தநன் விண்ணொளி சுற்றது!
மாநிலத் தெய்வத்தான் வந்துமின்!
வாழ்வினை யோகத்திற் சேருமின்!

சீர்கெடும் வேற்றுமைப் போர்ஒட் டொழிந்
[தது.
ஜீவனிற் சோதித் திருவருள் பொழிந்தது!
பாழ்வினை யாடலோர் பசுபதி யாடலே
பந்தனை நமக்கில்லை வாரீர்!
பரிசுத வெளியினிற் சேரீர்!

சச்சிதா னந்த வளத்திரு நாட்டினில்
சமரஸ சுத்த சுதந்திர வீட்டினில்
அச்சமிருளின்றி யமரராய் வாழலாம்!
ஆத்மாத்ம நேரே வாருங்கள்!
ஆத்மக் கனல்பெறச் சேருங்கள்!

உண்மைக்கண் டின்மையி லுறங்கிடப் போகு
[மோ?
உய்வழியறிந்தபின் வெய்துற லாகுமோ?
இன்மை யிருந்தால் இசைந்திட லாகுமோ?
தெய்வ மிங்குள்ளது வாரீர்
சிந்தித்தின் னுறவினிற் சேரீர்!

சுத்தானந்தபாரதி.

# நமது நாட்டில் வழங்கும் பழங்கதைகள்

[திரு. சோமசுந்தர தேசிகர்]

நாம் சிறு பிள்ளைகளாக விருக்கும் போது பள்ளியிற் படிக்கையில் யானையைக் கண்ட குருடர் என்றொரு கதை படித்திருக்கிறோம். நான்கு குருடர்கள் சேர்ந்துகொண்டு யானையைப் பார்க்கவேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். அருகிலிருந்த ஒருவர் அவர்கள் மேல் பச்சாதாபங் கொண்டு யானையிருக்கு மிடத்திற்கு அழைத்துப் போய் யானையைக் காட்டினார். குருடர்கள் யானையைத் தொட்டுத் தடவிப் பார்த்தார்கள். குருடர்களுக்குக் கண் இல்லையல்லவா? அவர்கள் ஒரு பொருளைத் தொட்டுத் தடவிப் பார்த்துத் தெரிந்து கொள்வதைத் தவிர வேறு வழியாகத் தெரிந்து கொள்ள முடியாதல்லவா? அதனாலே ஒருவன் காதைத் தடவிப் பார்த்தான். அது முறம்போலப் பெரிதாக இருப்பதாக அவன் அறிந்தான். மற்றொருவன் காலைத் தடவிப் பார்த்து அது வீடுகளில் அரிசி முதலாயின குத்த உதவும் உரல் போலப் பருத்திருக்கக் கண்டான். வேறொருவன் முகத்தைத் தடவிப் பார்க்க அது நீண்டு தொங்கக் கண்டான். இன்னொருவன் யானையினது உடலைத் தடவிப்பார்க்க அது சுரசுரப்பாக விருப்பதாகத் தெரிந்து கொண்டான். இந்த நான்கு குருடர்களும் தனித் தனியே யானையினது உறுப்புக்களைத் தடவிப்பார்த்ததால் யானை அவரவர்கள் நினைத்த உருவத்தையுடையதென நினைத்தார்கள். பிறகு நால்வரும் கூடிப்பேசிக் கொண்டிருக்கையில் அவரவர் எண்ணப்படி யானை யிருப்பதாக வாதாடினர். இவைகளைக் கேட்டுக் கொண்டிருந்த குருடில்லாத பிறிதொருவர் யானை குருடர்கள் கண்ட உருவெல்லாஞ் சேர்ந்து அமைந்தது என்று கூறி அவர்களைச் சமாதானப்படுத்தினர். இதனை யொத்தே புத்த சாதகக் கதைகளில் ஒன்றுண்டு. அதனைக் கீழே எழுதுகிறேன்.

## கிம்சுகோபம ஜாதகம்

காசியம்பதியிலே பிரமதத்தனென்று ஓர் அரசன் உலகை ஆண்டுகொண்டிருந்தான். அவனுக்கு நான்கு பிள்ளைக ளிருந்தார்கள். அவர்கள் சிறுவர்களா யிருந்த போது அசோக மரம் எவ்வாறிருக்கு மென்று பார்க்க விரும்பித் தேர்ப்பாகனிடம் கூறினார்கள். தேர்ப்பாகன் எல்லோரையும் ஒரே காலத்தில் காட்டிற்கு அழைத்துக்கொண்டு போய்க் காட்டாமல் ஒவ்வொரு பிள்ளையாக அழைத்துக்கொண்டு போய்க் காட்டினான். மூத்த பிள்ளையை அழைத்துப்போய் மரம் பூப்பதற்கு முன் அரும்புகளோடு இருக்கும் நிலையில் காட்டினான். இரண்டாவது குமாரனுக்கு மரம் இலைகள் நிறைந்து பச்சைப் பசேலென்று இருக்கும் நிலையிற் காட்டினான். மூன்றாவது குமாரனுக்கு மரம் பூத்திருக்கும்போது காட்டினான். நாலாவது பையனுக்கு மரம் காய்த்துக் குலுங்கியபோது காட்டினான். இவ்வாறாக நான்கு பிள்ளைகளும் நான்கு விதமாக மரமிருக்கக் கண்டார்கள். அரசன் இவர்களை மரம், எவ்வா றிருக்கிறதென்று கேட்டபோது ஒவ்வொருவரும் தாம் தாம் பார்த்த விதமாக இருப்பதாகக் கூறினர். அரசன் பிள்ளைகளைப் பார்த்து 'நீங்கள் மரம் எப்பொழுதும் எவ்வாறிருக்கும் என்று கேட்காததால் வந்த குறைவு; ஆதலால் எதனையும் நன்றாக விசாரணை புரிந்து அறிந்து கொள்ளவேண்டும்' என்று புத்திமதி கூறினான்.

# தீண்டாமை ஒழித்தல்

[சென்னை இராயப்பேட்டை, வேதப்ரவசன மந்திரத்தில் 8-1-33-ல் திரு. நாராயண குறுப், M. A., B. L., அவர்கள் தலைமையில் சிவத்தியானாநந்த மஹர்ஷி அவர்கள் செய்த உபந்யாசம்.]

அவைத் தலைவரே, அன்பர்களே!

தற்காலம் ஹிமஸ்லேஸ்து பரியந்தம் ஹிந்து சமூகத்தைக் கவர்ந்து ஆட்டிவைக்கும் பிரச்னை தீண்டாமை விலக்கு என்பதாகும். பலர் பத்திரிகை மூலமாகவும் துண்டுப் பிரசுரங்களாகவும் இவ்விஷயத்துக்கு அநுகூலமாகவோ பிரதிகூலமாகவோ தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால் எவரும் அவ்விஷயத்தின் உண்மை நிலையை அறிந்து ஒரு முடிவுக்கு வந்துள்ளதாக எனக்குத் தோன்றவில்லை. சாஸ்திரங்கள் எல்லாக்கட்சியார்க்கும் தங்கள் தங்கள் கோட்பாடுகளை வற்புறுத்த வேண்டிய இடந்தந்து நிற்பன. அதனால் இத் தீண்டாமை ஒழித்தல் என்ற பிரச்னையையோ ஆலயப் பிரவேசம் என்ற பிரச்னையையோ சாஸ்திரங்களைமட்டும் ஆதாரமாகக் கொண்டு பரிசீலிப்பது போதாததாகும். ஸ்மிருதிகளில் வெளி முரணுசப் பலகொள்கைகளிருப்பினும் வேதத்திலும் ஆகமங்களிலும் நம்மையெல்லாம் ஒரு சமூகமாகக் கூட்டிவைக்கும் சில பொது தர்மங்கள் கூறப்பட்டுள. அப் பொது தர்மங்கள் எவை? நாம் எப்படி ஹிந்துக்களென்று ஒரு கூட்டத்தினராகச் சேர்த்தழைக்கப்பெற்றோம்? நம்மை ஹிந்துவாக உடனெண்ணி நோக்குதற்கு ஏதாவது கொள்கைகள் நம்மை யாள்கின்றனவா? அல்லது நாம் சதா ஒருவரோடொருவர் போராடிக்கொண் டிருக்கும் பல பிரிவினர்களின் கலப்பா? இப் பிரச்னைகளை ஆழ்ந்து நோக்கி ஆராய்வோமானால், சிலகொள்கைகளை ஆதாரமாகக்கொண்டு ஒற்றுமைப்பட்டு வாழும் சமூகம்தான் நமது சமூகமென்றும், நமக்குள் உள்ள பேதங்களெல்லாம், உண்மையில், தீர்க்க வைஷம்யத்தைத் தரும் பேதங்கள் அல்லவென்றும் தெரியவரும்.

பல்லாயிர வருஷங்களாகப் பிற நாடுகளிலிருந்து வந்து நம்மை எதிர்த்துப் பாழாக்க முயன்ற சத்துருக்களின் வாதைகளையெல்லாம் கடந்து மிளிர்ந்த இவ் விந்து சமூகமானது, வழக்குத் தீர்ப்புகளும் நவீன சட்டங்களுமாகிய அகப்பகையால் தற்காலம் வாதனை பெற்று வருந்துகிறது. சிலசில விசேஷத் திறமைகளை வெளிப்படுத்திய மாந்தர் செய்த சிறப்பு நடத்தைகளைப் பின்வரும் ஸந்ததியார் உணரவேண்டுமென்பதற்கு ஓர் அடையாளமாகக் குறித்து வைக்கப்பட்ட ஸ்மிருதிகளுக்குப் பதிலாக, சமகாலம் பாராட்டும் மாந்தர் சிலருக்கு அவர்களது விஷமச் செய்கைகளுக்கு இடம் கொடுப்பவையும், மனிதனுடைய சுயேச்சா வளர்ச்சிக்குத் தடையானவையுமான இந்தியத் தீர்ப்புகளென்ற நவீன கருவிகள் புற்றீசல்போலப் புறப்பட்டு வளர்ந்து கொண்டு வருகின்றன. இதை நினைக்கும்போது ஒருகதை நினைவுக்கு வருகிறது.

யமன் ஒரு பிரதான மந்திரியை நியமிக்க விரும்பியபோது, அம்மை, கோமாரி, வாந்திபேதி முதலிய கொள்ளை நோய்கள் விண்ணப்பித்துக் கொண்டனவென்றும், ஆனால் ஜனங்கள் அவற்றின் கொடுமையை யுணர்ந்து உடனே தக்க வைத்திய சகாயத்தை நாடி அப் பெரு நோய்களை வர வொட்டாமல் தடுத்துவிடுவார்களாதலின் அவற்றிற்குப் பிரதான மந்திரி உத்தியோகம் கொடுக்க அவன் மறுத்தானென்றும், அமிதம் சென்று, தான் ஒருவனறியாமலே அவனுள்ளத்தில் புகுந்து அவனுக்கு அளவுகடந்த ஆசையை யூட்டி அவனைக்கொல்லும் சக்தியடைத்துள்ள விஷயத்தைத் தெரிவிக்கவே, அவ்வமிதத்தையே பிரதானமந்திரியாகத் தெரிந்

தெடுத்து வைத் ண்டா னென்றும் சொல்லுப.

தற்காலம் இந்து சமூகமானது வைதிக உலகமென்றும் லௌகிக மென்றும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒன்று பண்டைய ஸ்மிருதிகளை ஆதாரமாகத் தேடி நிற்பதும், மற்றொன்று ஹைகோர்ட்டு நியாயத்தீர்ப்பு மூட்டைகளைப் புரட்டிப் பார்ப்பதுமாக விருக்கின்றன. இவ் விரண்டுவகை ஆதாரங்களிலும் இந் நியாயத்தீர்ப்பு மூட்டையே பழைய ஸ்மிருதிகளைக் காட்டிலும் நமது சமூக முன்னேற்றத்துக்குப் பெருந்தடையாக விருக்கின்றது. ஏனெனில் இடைக்காலத்தில் ஏற்பட்ட வித்தியார்த்திகள், பிராஹ்மண ஒழுக்க நிர்ப்பந்தமாகக் குறிக்கப்பட்ட விதி விலக்குகளை அவர்களது ஸமூகச் சிறப்புத் தன்மைகளாக்கித், தங்கள் அறைகுறையான பழைய ஸ்மிருதி உணர்ச்சியாகிய செடியில், புதுக் காலத்துத் தோன்றிய மேனாட்டு நாகரிக மென்னும் ஒட்டினைக் கட்டி, அம்மூட்டையைப் பலப்படுத்தி வைத்துச் சென்றுள்ளார்கள்.

உலகத்து எங்கும் பார்ப்பினும் இத்தகைய ஸ்மிருதிகளும், வழக்குத்தீர்ப்புகளும் ஜனங்கள் தங்கள் காரியங்களைத் தாங்களே பார்க்கமுடியா திருக்கும் வரையில்தான் உபயோகப் படுபவை என்ற உண்மை வெளியாகிறது. இவ்வாதாரங்களின் வலிமையினால் ஒரு ஜாதியாவது ஒரு தேசமாவது வலியிழந்து நொறுங்கி அழிந்துபோதல் என்றநிலை ஏற்பட்டால், அந்தஜாதி அல்லது தேசத்து அங்கத்தினரா யுள்ள மக்கள் அனைவரும் ஒன்று போல எழுந்து, அவ்விதத் தடையை விலக்கி, மாறுபட்ட அற்றைய காலநிலைக்குத் தக்கவண்ணம் புது ஏற்பாடுகளைக் கடவுளைப்போலச் செய்து அமைத்துக் கொள்ளும் சுதந்தரம் உள்ளவர்களா வார்கள். அப்படி மாற்றி அமைத்துக் கொள்வதில் அம் மாற்றமானது ஓர் பெரும் புரட்சியாகத் தோன்றுதபடியும் ஜனசமூகத்தின் சுகவளர்ச்சிக்கு ஏற்றதாக விருக்குமாறும் செய்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

சாஸ்திரமும் ஸ்மிருதிகளும் முரண்பட்டுள்ளன வென்னின் அவை முரண்படாமல் இரா. எவ்வளவோ நீண்ட காலமாக அவ்வக் காலத்துக் கேற்றவாறு தங்களை மாற்றி அபிவிருத்தியையடைந்த ஜனங்களின் சமூகத்திலுள்ள அவை வேறு மாதிரியாக எப்படி இருக்கமுடியும்? அதனால் நான் இப்பொழுது பேசும் விஷயத்துக்கு ஆதாரமாக மேற்கோள் தனித் தனியாகக் கூறப்போவதில்லை. ஆனால் ஒருண்மையை எல்லாரும் ஒப்புக்கொள்ளுவார்கள். வாசாகயிங்கரியமாக ஆயிரம் பிதற்றுவதிலும் ஒரு சாதனத்தை நடக்கையில் காட்டுவது பெரும் பயனளிப்பதென்பது எல்லாருக்கும் தெரியும். இன்று இவ்விஷயமாக நான் பேசுபவை, சென்ற ஐம்பது வருஷகாலமாக நான் இவ்விந்து சமூகத்திலிருந்து, அதிலுள்ள நூல்களைக் கற்றுணர்ந்து, அவ்வுணர்ச்சியிலேற்பட்ட அநுபவ மொழிகள் என்பதை மாத்திரம் எடுத்துரைத்து விஷயத்தைத் தொடங்குகிறேன்.

இப்போது பேசும் விஷயத்தின் தெளிவுணர்ச்சிக்காக அதனை ஐந்து பிரிவுகளாகப் பிரிப்போம்.

1. வேதகாலத்தில் அல்லது நிறுத்துரைக்கின் வேதங்களின் அபிப்பிராயப்படி நமது சமூகத்தை நடத்திவந்த கொள்கைகள்.

2. இப்பொழுது நாம் மறந்துவிட்ட அல்லது மறந்து கொண்டுவரும் ஆகமங்களின் அபிப்பிராயத்தின்படி நம்மை நடத்திவந்த கொள்கைகள்.

3. ஹிந்து சமூக ஒற்றுமைக்காக ஏற்பட்ட கொள்கைகள்.

4. இப்பாரத நாட்டின் கோயில்களின் அமைப்பும் அவற்றை யாளும் விதிகளும்.

5. நமது தற்காலக் கடமை.—எனப் பிரித்துப் பார்ப்போம்.



## முதலாவதாக வேதகாலம் அல்லது வேதக் கொள்கைகள்

வேதக் கொள்கைகள் ஏற்பட்ட காலத்து ஜாதிப் பிரிவினைக ளில்லை. ஆனால் ரிக்வேதத்தில் பஞ்ச ஜனங்கள், பஞ்ச க்ஷிதயர்கள், பஞ்சகர்ஷண்யர்கள், பஞ்சகிருஷ்டயர்கள், பஞ்சவிசர்கள் என்ற பதங்கள், ஐவகை நாகரிகவகுப்பினர் அல்லது மாந்தர், ஐவகை நிலத்தினர், ஐவகைத் தொழிலர், ஐவகை வாழ்க்கையர் என்னும் பொருள்களில் உபயோகிக்கப்பட்டுள. வேதத்தை ஆழ்ந்து படித்து நோக்கின் நாடானது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என வகுக்கப்பட்டிருந்த தென்றும், அவ் வைவகை நிலங்களில் வசித்தவர்களையே (பஞ்ச க்ஷிதயர்கள்) ஐவகை நிலத்தின ரென்று சொன்னார்க ளென்றும், இவ்வகுப்பையே தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்கள் விரித்து விளக்கிப் போந்தன என்றும் வெளியாகும்.

வேதக் கொள்கைகளின்படி அநுஷ்டித்து வந்த ஜனங்களுக்குப் பாதர்கள் என்ற மலை நாட்டினர் உதவி செய்த காரணத்தினால் அப் பாதரை நாகரிகசமூகத்திற் சேர்த்துக் கொண்டதாகக் கூறும் ஒரு பதிகம் ரிக்வேதத்தில் காணப்படுகிறது. அதுபோலவே, யதுக்கள், துர்வசர்கள், துருஹ்யர்கள், அனுக்கள், புருக்கள் என்று ஐந்துவகுப்பினர்நாகரிகம் பெற்று விளங்கின ரென்றும் கூறப்பெற்றுள்ளது. மேற் சொன்ன பஞ்ச ஜனர்கள் முதலிய பதங்கள் வரும்போதெல்லாம் ஸாயணர் என்ற வேதபாஷ்யகர்த்தா நான்கு வருணத்தினரும் நிஷாதர் (வேடர்) ஆகிய ஐந்தாவது வகுப்பினரும் என்று பொருள் கூறுவர். அது அவ்வளவு பொருத்த மானதல்ல; ஏனெனின் வேதகாலத்தில் இப்பொழுது கருதப்பட்டு அநுஷ்டிக்கப்படுவதுபோன்ற ஜாதிப் பாகுபாடு ஏற்படவில்லை.

நான் இவ்விடத்து ஒருவிஷயம் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அது, ராமர் காலத்தில் இச் சாதி வகுப்பு இல்லை என்பது. ஏனெனில் கிருஷ்ணன் கீதையில், "குணத்தையும் கர்மத்தையும் முன்னிட்டு நான்கு வருணங்களும் என்னால் சிருஷ்டிக்கப் பட்டன" என்கிறார். அப் பிரிவினையும், பிறப்புரிமையாக வில்லாமல், குணபேதமாகவும், தொழிற் பிரிவினையாகவும் கற்பிதமாகக் கொள்ளப்பட்டது. தற்காலத்து மேல் நாட்டில் பிரபுக்கள் என்றும் சாதாரணமாந்த ரென்றும் பிரிவுபட்டு ஒருவகுப்பினர் மற்றொரு வகுப்பினராக மாறலாமென்ற நிலையிலிருப்பது போல, நமது சமூகத்தினிடமாக அமைந்து கிடந்தது. ராமர் காலத்து இச் சாதிப்பிரிவினை இல்லை என்பது நிச்சயம். கொல்லையை குகனை ராமனோடு உடன்எண்ணி ஐந்தாவது புதல்வராகக் கொண்டதும், ராமனும் சுக்ரீவன் விபீஷணன் முதலியோரை ஆறாவது ஏழாவது சகோதரர்களாக உடன் கொண்டதும் கருதத்தக்கன. ஜடாயுவுக்குப் பிதிர் கடன் செய்த தொன்றே ஜாதிபேத மில்லையென்பதை விளக்கப்போதுமானது. ஆகவே இச்சாதிவகுப்பு என்பது இற்றைக்கு 5000 வருஷங்களுக்குமுன் நம் சமூகத்தினிடைப் புகுந்ததென்றாகும். அதுவும் பிறப்புரிமையாக விராமல் குணத்தாலும் தொழிலாலும் கொள்ளப்பட்டதென்றாகும்.

ஆனால் ரிக்வேத ஸம்ஹிதையில் (இது இற்றைக்குச் சுமார் ஐயாயிர வருஷங்களுக்கு முன்பு ஜனமேஜயனது காலத்துச் சௌநகரால் தொகுக்கப்பட்டதென அறிக.) பத்தாவது மண்டலம் 90-வது சூக்தமாகப் புருஷஸூக்தம் என்ற பெயரில் ஒரு சூக்தம் ஹிந்து புருஷனது அவயவமாகப் பிராம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள் நாகரிக வாயிலாக அமைக்கப்பட்டுள்ள சங்கதி குறிக்கப்பட்டுளது. 'வேத புருஷனது அச் சரீரத்திற்குப் பிராஹ்மணன் முகமாக நிற்கிறான். க்ஷத்திரியன் பலமாகவும், வைசியன் போஷகனாகவும், சூத்திரன் தொழிலாளியாகவும் தோன்றியுள்ளார்' என்றிருக்கிறது. இச் சூக்தத்தில் பஞ்சமர் என்ற பதமே உபயோகிக்கப்

படவில்லை என்பதறிக. இவ்வேற்பாடு ஆரியன் எங்குச் சென்றாலும் அங்கங்கேயுள்ள ஜன சமூகத்தை நாகரிகப்படுத்துவதற்காகத் தனக்குள் ஏற்படுத்திக்கொண்ட கட்டுப்பாடாகும். கர்க்கர் பாக்ட்ரியாவுக்குச் சென்றபோது ஆயிரம் பிராஹ்மண குடும்பங்களைச் சிருஷ்டித்துக்கொண்டு தமது வைதிக காரியங்களை நடத்தினாரென்று சொல்லப்படுகிறது. தென்னிந்தியாவிலுள்ள பெருங்குடிகள் பிரஹத்சரண மென்ற பிராஹ்மணத் தன்மையைப் பெற்றது அகஸ்திய முனிவராலென்பது யாரும் அறியக் கிடப்பது. தென்னாட்டுத் திருமேனி வைஷ்ணவர்களை அறியாதார் யார்? இரண்டாவது அகஸ்தியர் என்னும்படி தோன்றிய இராமானுஜருடைய சிருஷ்டியன்றோ இவர்கள்? அதனால் எவனும் தன்னுடைய வாழ்நாளின் எந்தப் பகுதியிலும் இந்த நான்கு பாகுபாடுகளுள் ஒன்றாக மாறலாம் என்பதாகிறது.

'ஜன்மனா ஜாயதே சூத்ரஹ, கர்மணா ஜாயதே த்விஜஹ, வேதக்ஞானந்து விப்ராணாம் பிரஹ்மக்ஞானந்து பிராஹ்மணஹ' என்ற சுலோகமானது தற்காலம் பிறழ்வாகப் பொருள் படுத்தப்பட்டு வழங்கப்படுகிறது. அதன் உண்மைப் பொருளைச் சற்றுக் கவனிப்போம்.

இச்சுலோகத்துக்கு அக்காலத்திலேயேஒரு பேருரை விரிக்கப்பட்டுள்ளது. ஆரியத்திலுள்ள பதங்களுக்கும் வாக்கியங்களுக்கும் பின்வருபவர் அறியாமையால் தப்பர்த்தம் செய்து விடப் போகிறார்களென்று பயந்தே, திருவள்ளுவர், 'பிறப் பொக்கும் எல்லாவுயிர்க்கும்; சிறப் பொவ்வா, செய் தொழில்வேற்றுமையான்,' என்று கூறினார். அதாவது, பிறப்பு மட்டிலாக நோக்கும் போது எல்லா உயிர்களும் (மனிதர்களும் என்றபடி) சமானமானவர்களென்றும், ஆனால் அவரவர்கள் செய்யும் தொழில் வேற்றுமையினால் அவரவர்களது விசேஷத் தன்மைகள் ஏற்படுகின்றன வென்றும் கூறினார். இதுவே, மேல்சுலோகத்தின்முற்பாதியின் உண்மைப்பொருளாகும். இச்சந்தர்ப்பத்தில் ஒருவருணாசிரமி, குறளாசிரியர் ஜாதிதர்மம் அல்லது பிறப்பொழுக்கம் என்ற ஒன்றை ஒப்புக் கொண்டிருப்பது தெரியுமாவென்பர்.

'மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப் பொழுக்கம் குன்றக் கெடும்'

என்பதன் பொருளென்ன என்றுகேட்பர்.

ஆனால் இக்குறள் முன் குறளோடு மாறுபட்டதல்ல. பார்ப்பான் பிறப்பொழுக்கம் குன்றக்கெடும் என்பதனால் ஒரு சமூகத்துக்குப் பிறப்புரிமை உண்டென்பது ஏற்பட்டு விடாது. ஈண்டு பார்ப்பான் என்பது திருஷ்டா என்பதன் நேர் தமிழாகும். மண்டல திருஷ்டாக்களாகவும், சூக்த திருஷ்டாக்களாகவும், தனி இருக்கு திருஷ்டாக்களாகவும் இருந்தார் முற்காலத்துப் பலர். ஒரு திருஷ்டாவாகிய ரிஷி தன் புத்திரனுக்கு ஒரு ராஜகன்னிகையைக் கேட்டபோது, அப்பெண்ணின் பிதா தன் மனைவியைக் கேட்க, அவ்விராணி, "பிதா மந்திர திருஷ்டாவாகவிருக்கும்காரணத்தால் நமதுபெண்ணை அவன் பிள்ளைக்குக் கொடுக்கமுடியாது. பிள்ளையும் மந்திர திருஷ்டாவாக வானபின் கொடுக்க நான் இசைவேன்." என்று கூற, அவ்விருடியின் புத்திரன் அப்படியே ஒரு தேவதையைப் பிரார்த்தித்துத் திருஷ்டாவாம் தன்மையைப் பெற்றானென்றும், அதையறிந்த அப்பெண்ணின் தாய்தந்தையர் அவனிடத்துத் தாமே வலுவில் அப்பெண்ணையழைத்துப் போய்க் கன்னிகா தானம் செய்து கொடுத்தனர் என்றும் ரிக்வேதத்தில் கூறப்பட்டுள்ளது. இதனால் ஏற்படுவது என்ன? பார்ப்பானை ஒருவன் தன் மகனும் ஒரு திருஷ்டாவாக வாகப் பார்க்க வேண்டுவது அவசியமென்று ஏற்படுகிறது. தற்காலத்துப் பிராஹ்மணர்கள் தங்கள் பிராஹ்மணீகம் தங்கள் பிறப்பால் வந்ததென்று தருக்கி இழிதொழில்களைச் செய்து நிற்பதற்கு



இக்குறள் இடந்தருவதாகுமா? அல்லது அங்குக் கூறப்பட்ட 'பார்ப்பான்' என்னும் சொல்தான் வருண தருமத்தினரது நான்கு ஜாதிகளில் ஒன்றாகுமா? இப் பார்ப்பானென்ற உயரிய தன்மை, கருடப் பார்வை பார்ப்பதும், தன்மார்பைத் தானே பார்த்துக் கொண்டு கர்வப்படுவதும் ஆகாது. "ஸ்வாத்யாய ப்ரவசனப்யாம்ந ப்ரமதிதவ்யம்" என்ற வாக்கியப்படி, தான் வேதத்தை அல்லதுமுன்னிருந்தமுதல் நூலை ஓதுவதும், பின்னர் அவற்றை மற்றையோருக்கு எடுத்துச் சொல்லுவதுமே திருஷ்டாவென்ற பார்ப்பானது முதற் கடமையாகும். அம்மாதிரி பார்ப்பானை ரிஷியின் குடும்பத்திற் பிறந்த ஒருவன் தானும் ஓத வேண்டும்; பிறருக்கு அதனைச் சொல்வதாகிய ஒழுக்கத்தையும் பிறப்பினாற் பெற்றதாகக் கொண்டு நடக்க வேண்டும். இவ்விஷயத்தில் அசதியாடிவிடுவானாயின், அவன், நிலைகெட்டுப் பிரஷ்டனாவான் என்றார் அக்குறளில். அதனால் ஒவ்வொரு ரிஷியாகிய பார்ப்பானும் தன்மகாரை ஓதுதல் ஓதுவித்தல் என்ற இருதொழிலிலும் பழக்க வேண்டியது கடன் என்பதாயிற்று. அஃதைவிடுத்து ஒருபிதா அந்த திருஷ்டாவென்ற நிலைக்கு வேண்டிய கல்வியைத் தரத் தவறுவானாயின், அப்பிள்ளை நிலைகெட்டுத் தட்டழிந்து போவான் என்பதை நாயனார் தமது வேதவுணர்ச்சி கொண்டு வற்புறுத்தினார். ஆகமங்களும் இம்மாதிரி ஒவ்வொரு தனிமனிதனுக்கும் கூறிற்றேயன்றி ஒரு சமூகத்துக்குப் பிறப்புரிமை என்று தற்காலத்தவர் போராடுவது போல எங்கும் கூறவில்லை. "குலத்துக் கொரு தொழிலும் கூர்பசிக்கு மற்றோர் நலத்த மூரண் நடையும் நண்ணேம்," என்றார் கவி. இதனால் ஏற்பட்டது என்ன? எல்லாரும் பிறப்பினால் ஏவல்தொழில் செய்யக் கூடிய வேலையாளர்களாகவே பிறக்கிறார்கள். சிலர் சிறப்புத்தொழில்களைக் கற்றுச் சிறப்புத் தொழிலாளர்களான துவிஜர்கள் ஆகிறார்கள். பதினெட்டுத் தொழிலாளிகள் என்று நம் சமூகத்தில் வழங்கிவந்த அத்தனைதொழிலாளர்களும் துவிஜர்களே. இந்தத் துவிஜனே வேதமோதின் விப்பிரன் அல்லது மேதாவியாகிறான். அப்பொழுது அவனுக்குத் தொழிலாளி என்ற நாமம் போய் விப்பிரன் என்ற நாமம் ஏற்படுகிறது. இவ் விப்பிரன் சமூக சேவைக்காக அபிச்ரவண மந்திரங்களை மட்டும் படித்து ஒப்புவித்து வந்த துவிஜனைக் காட்டிலும் எவ்வளவோ படி உயர்ந்தவனாகிறான். விப்பிரனை ஒருவன் புரோகிதத் தொழில் அல்லது உபாத்தியாயம் செய்தாலும் சாதாரணச் சிறப்புத் தொழிலாளிகளில் ஒருவனாக மதிக்கப்படமாட்டான். இவ் விப்பிரனென்ற நிலைக்கும் மேற்பட்ட நிலைதான் பிராஹ்மணன் என்ற நிலை. இதனையே நக்கீரர், 'யாவதும் கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்தாம் வரம் பாகிய தலைமையர்' என்றார். இதிலிருந்து பண்டைக் காலத்து ஹிந்து சமூகத்தில் வாழ்ந்த மனிதரது உண்மையான மத வாழ்க்கை இன்னதென்பது வெளியாகும். அதாவது, கேவல உயிர்ப்பிராணியாகப் பிறப்பது, ஒரு சிறப்புத் தொழிலைக் கற்றுக் கொண்டு துவிஜனாவது, வேதங்களைக் கற்று மேதாவி(விப்பிரன்) ஆவது, கடைசியாக, ஸ்வாநுபூதியைப் பெற்றுப் பார்ப்பான் அல்லது தானே திருஷ்டா ஆவது என்பதாம். இந்நெறி எல்லாருக்கும் பொது. இந்நெறியில் ஒழுகிப் பார்ப்பானானவனது மக்கள் இந்நெறியையே பின்பற்றுமாறு பார்க்க வேண்டுவது தந்தையின் கடனாகும். 'தந்தை மகற்காற்றும் உதவி அவையத்தின், முந்தியிருப்பச் செயல்.' அவ்வகைக் குடும்பத்தில் பிறந்த பிள்ளையும் தான் திருஷ்டாவாகி அவ்வகையருளையாளும் தன்மையைப் புதுமாந்தரும் அடையுமாறு பார்க்க வேண்டியது அவனது பிறப்பொழுக்கமாகும். மேற்கூறியவற்றி லிருந்து, வேதகாலத்து அல்லது வேத ஒழுக்கப்படி, ஹிந்து சமூகமானது எப்படி உழைத்து வந்ததென்பதையும், எப்படிப் பார்ப்பான்

சாதாரண மக்கள் தொகுதியில் பரிணாம நிலையில் முன்னேறுகிறா னென்பதையும் காட்டினேன். இனி இந்த ஆதிகால நிலையிலிருந்து புத்தரால் கொண்டுதரப்பட்ட ஆகம காலத்தைப்பற்றிச் சிறிது கூறுவேன். இது, இந்து மதவாழ்க்கையில் ஒரு புதுசகம் என்னலாம்.

## இரண்டாவது ஆகம காலம் அல்லது ஆகமக் கொள்கைகளின்படி மாந்தர் ஒழுக்கம்

ஆதிநூல்கள் அதிகப்படவே சிற்சில காரியங்களைச் சாதிப்பதற்காகக் கடவுளோடு நேரிற்பேசிச் செய்கைகளை யாற்றும் வழக்கம் இக்காலத்து மாறலாயிற்று. யதேஷ்டமான நிலங்கள் தங்கள் கைக்குள் வந்து, ஒழுங்காய்க் கஷ்டப்பட அவசரமில்லாத சமூகவாழ்க்கை ஏற்படவே, இறைவனது அருளில் நேராக நின்ற வாழ்க்கை மாறிப், பழைய ஆதிநூல்களையும் முன்னோரது பாடல்களையும் பரிசீலிப்பதும், அவற்றிலுள்ள சந்தம் பயன் முதலியவற்றை நோக்கி அவற்றையே தங்களுக்கு ஏற்படும் சொற்ப கஷ்டங்களை நிவர்த்திக்கத்தக்க மந்திரங்களாகக் கொள்வதும் பழக்கமாக மாறின. இப் பழக்கமானது யாகம் யக்ஞம் முதலிய கர்மகாண்டச் செயல்களைச் சிருஷ்டிக்க ஏதுவாயிற்று. இச்செய்கையைச் செய்வோரிலும் இரு வகுப்பினர் ஏற்பட்டனர். ஒருவகுப்பினர் அந்நூல்களை யாதாரமாகக் கொண்டு நித்திய நைமித்திக கர்மங்களை விருத்தி செய்ய, மற்றொரு வகுப்பினர் அவற்றிலுள்ள தத்துவங்களைப் பரிசீலித்து எழுதத் தலைப்பட்டனர். அவ்வகைத் தத்துவ பரிசீலனைகளே பிற்காலத்து ஆரண்யகங்க ளென்றும் உபநிஷதங்க ளென்றும் விளங்கலாயின. தற்காலத்துள்ள கிளிப்பிள்ளைப் பாட்டு போதும் வைதிகர்கள் இவ்விரண்டையும் ஒரு சிறிது கற்றே, 'இவ்வளவே போதும். எங்கள் முன்னோர்களாகிய ரிஷிகள் எல்லா வற்றையும் எங்களுக்குத் தேடி வைத்திருக்கப் புதிதாக ஒன்றும் நமக்கு ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதில்லை' என்று கூறித்திரிகிறார்கள். ஆனால் அவர்களது முன்னோர்கள் தெய்வ வாழ்க்கைக்கு வேண்டிய முறைகளைத் தெரிவித்துச் சென்றார்களே யன்றிசமூக நிலையைப் பற்றி ஒன்றும் திட்டமாகச் செய்து போகவில்லை என்பதை இவர்கள் உணரவில்லை.

இக் கர்மகாண்டமும் யாகாதிகர்மங்களென்றும் உபாஸனை யென்றும் இரண்டாகப் பிரித்துக் காட்டலாயிற்று. அக்காலம் இந்து மதத்துக்கு விரோதியாகக் கருதப்படும் புத்தரே யாகாதி கருமங்களின் பயனின்மையை நன்கு விளக்கி மாந்தரது மனநிலையைப் பண்படுத்தி யமைக்கக் கூடிய வேதாந்தக் கருத்துக்களாகிய உபநிஷதங்களுக்கு முக்கியத்தை அளித்தவ ராவார். அவருக்கு ஜனங்கள் கூட்டமாக ஒற்றுமைப்பட்டு வாழவேண்டுமென்ற எண்ணம் அதிகம். அதனால், அன்பையும் பொது ஜன சேவையையும் முக்கிய மென்று வற்புறுத்தி, யாகங்களால் கிடைப்பதாக வைதிகர்கள் கூறும் ஸ்வர்க்கம் மித்தை என்று பலவிதத்திலும் நிரூபித்துக் காட்டி, அறிவு நூல்கள் யாவருக்கும் பொதுவா யிருக்க வேண்டுமென்பதை விளக்கி, அவ்வன்புக்கொள்கையையும் ஜனசேவைக் கொள்கையையும் விளக்கத்தக்க கதைகளையும் உபந்நியாசங்களையும் ஜனங்கள் பேசும் பாஷையிலேயே ஏற்படுத்திச் சென்றனர். ஏற்கனவே பிராஹ்மண்யமானது கர்க்கர், அகஸ்தியர் முதலியோரது முயற்சியால் விஸ்தாரமாகப் பரவிநின்றதென்று முன்பே காட்டினேன். இப்பொழுது புத்தர் உபதேசங்கள் அதை விட அதிகமாகப் பரவுவதற்கு இவை கருவியாயின.

இந்த ஸந்தர்ப்பத்தில் ஆரியர்கள் விக்கிரக ஆராதனை செய்ததுண்டா வென்ற பிரச்னை அடிக்கடி எழுவது வழக்கம். (ரிக்வேதம் 4-வது மண்டலம் 24-வது சூக்தம் 9,10 ரிக்குக்கள்.) (ரி.வே. 8-வது மண், முதல் சூக் 5வது செய்யுள்.) (ரி. வே. 8-100-3)



(ரி.வே. 10-வது மண், 87-வது சூக், 2,14) இவையெல்லாம் இந்திரனது விக்கிரகங்கள் பூஜை செய்வதற்காக விலைக்குக் கிடைத்தன என்பதை விளக்குவனவாம். ஒவ்வொரு கிரஹஸ்தனும் அவ்விந்திரப் பிரதிமையை வாங்கி இஷ்டதேவதாபூஜை செய்து வந்ததாகத் தெரிகிறது. கல்கத்தா ஸர்வ கலாசாலைச் சரித்திர ஆசிரியர் அவிநாச சந்திரதாஸரது "ரிக்வேத நாகரிகம்" என்ற நூலின் 144,145-வது பக்கங்களைப் பார்க்க. இம்மாதிரி வணங்குவது அறிவாளிகளாயிருந்த ஒரு பகுதியாரால் ராக்ஷஸத்தன்மை என்று கடியப்பட்டிருப்பினும், முற்றும் இல்லாமலில்லை என்பது தெரியவரும். தற்காலத்தும் ஒவ்வொரு ஹிந்துவினது கிருஹத்திலும் இஷ்டதேவதா பூஜை என்பது இல்லாமலில்லை. விநாயகனை மிருத்தினால் (புற்று மண்ணினால்) செய்து பூஜை செய்வதென்பது பழையகாலத் திருந்த வழக்கத்தின் மிகுந்ததாம்.

புத்தருக்கும் மகாவீரருக்கும் பிறகு இவ்விக்கிரக வணக்கம் நம் இந்துமதத்தில் ஒரு முக்கிய அம்சமாயிற்று. போதிவிருட்ச மென்ற அரச மரத்தடிகளில் தற்காலம் காணப்படும் விநாயக விக்கிரகங்கள், புத்தமதம் ஒழிந்த போது, அம்மரங்களடியி லிருந்த புத்தவிக்கிரகங்களுக்குப் பதிலாக அமைக்கப் பட்டனவாம். நிற்க :

மாந்தர் வானப்பிரஸ்த நிலையிலிருந்து ஆரண்யகங்களும் உபநிஷத்துக்களும் எழுதிவைத்தது போதாதென்று ஸந்நியாஸம் கொள்ளவும் தலைப்பட்டனர். இச் ஸந்நியாஸிகளைச் சாதாரண மாந்தரைப் போலக் கொளுத்துவது தவறென்ற அபிப்பிராயம் ஜனசமூகத்தில் ஏற்பட்டது. இத்தகைய ஸந்நியாசிகளுக் கெனவே சமாதிகள் கட்டப்பட்டன. இச் சமாதிகளைச் சுற்றித்தான், பெரிய மூர்த்தி, தீர்த்தம், தலம் என்பன ஏற்படலாயின. தற்காலத்து இந்தியாவிலுள்ள பேர்பெற்ற கோவில்களெல்லாம் இவ்வகைப் பெரியாரின் சமாதிகளே என்பதை அறியாதார் யார்? சிதம்பரம் திருமூலர், திருப்பதி கொங்கண சித்தர் சமாதி, இவை போல அநேகம் சொல்ல வருமாயினும் இவற்றோடு நிறுத்துகிறேன்.

உடனே மாந்தர் சரீர தத்துவ பரிசீலனை செய்யத் தொடங்கி அதற்கான உபநிஷத்துக்களை ஏற்படுத்தவே, ஆறாதாரங்களும் அவற்றிற்கு மேற்போந்த ஸஹஸ்ரார துவாதசாந்தங்களும் ஞானிகளின் கண்ணில் தோன்றலாயின. 'திருவளர் ஆரூர்மூலம் திருவானைக் காவே நாபி' என்ற திருவிளையாடல் பாட்டு இதனை நன்கு விளக்கும். இம்மாதிரியான எண்ணவெழுச்சி, தம் முன்னோருக்கென ஸமாதி கட்டிக்கொண்டு பூச்சார்த்திப் பூஜை செய்துவந்த சாதாரண ஜனங்களின் கையிலிருந்து அச்சமாதிகளைப் பறித்து ஆக்கிரமிக்கச் செய்தது. ஆகமம் என்ற பேரிலும், பொதுஜன நன்மை என்ற பேரிலும், வல்லாரா யிருந்த சமூகத்தினர், அச்சமாதிக் கோயில்களை அவற்றின் சொந்தக்காரர்களினின்றும் பிடுங்கி, ஆகம சாஸ்திரமென்ற பெயரைக் கூறி அவர்களை விலக்கலாயினர். என்றாலும் சிற்சில விடங்களில் அச் சுவான்தாரர்களுக்குச் சில மரியாதைகளையும் கௌரவமாக அளித்துச் சென்றனர்.

"லோகாத் ஸமஸ்தாத் ஸுகினோ பவந்து" உலகமெல்லாம் சுகமாக வாழட்டும் என்ற அந்த அபார கருணை நிலைபோய், உலகத்து மாந்தர்களை யெல்லாம் தன்னைப்போல் எண்ணித் தன்னறிவை அவர்களறிவாக்கி அவர்களையும் தன்னொத்த அறிவு விசாலநிலைக்குக்கொண்டுவரும் தன்மைப் பழக்கம் மாறி, ஸநாதன தர்மமென்றும், அத்தர்மம் பரவுவதற்காகத்தான் அப்புண்ணிய க்ஷேத்திரங்களை ஸ்வான்தாரர்களது கையினின்றும் எடுத்ததென்றும், ஒருதேசத்தைக் காப்பாற்ற ஒருஊரையும், ஒரூரைக் காப்பாற்ற ஒரு குடியையும், ஒரு குடியைக் காப்பாற்ற ஒரு மனிதனையும் அப்புறப்படுத்தி விலக்கி வைப்பது தருமந்தானென்றுங் கூறிக்கொண்டே, தங்களது சுயநலத்தைப் பெருக்கிக் கொள்ளவும்

தங்களது ஆசைகளைத் தீர்த்துக்கொள்ளவும் மாந்தர் உண்மையான விக்கிரக ஸ்வான்தாரர்களை ஓட்டாண்டிகளாக்கலாயினர். என்றாலும் இவ்வைதிகர்களால் அழிக்கமுடியாத சிலசின்னங்கள் நாளதுவரை தொடர்ந்து வருகின்றன. விசால மனத்தோடு கட்டப்பட்ட நமது பழைய கட்டடத்தைச் சுயநலங்கருதி வாழ்ந்து, வைதிகத்தோல் போர்த்துச் சுயநலமே கருதிவாழும் இம்மாந்தரால் இடிக்கமுடியுமா? இராமேசுவரம்கோயில் பூஜாரிகளான பாண்டாக்கள் மைசூரிலிருந்துவந்த கன்னட பிராமணப் பூஜாரிகளுக்கும் கீழ்க்கரையிலிருந்த வலைய ஸ்திரிகளுக்கும் வழித்தோன்றல்களாவர். அவர்களே நாளைக்கும்கோயில் பூஜாரிகள். வைதிகக் கோஷ்டியார் அவர்களை விலக்க எவ்வளவோ முயன்றும் பயன்படவில்லை. ஒரு அவர்ணன் என்ற தீண்டாதவன் கங்கைக்குப் போகலாம். காசி விசுவநாதரைத் தானே பூஜிக்கலாம். அவன் யாத்திரி செய்து கொண்டு வந்த தீர்த்தத்தை ராமலிங்கத்திற்கு அபிஷேகம் செய்ய வேண்டியது கட்டாயம். ஒரிஸ்ஸாவிலுள்ள பூரி அல்லது ஜகந்நாதத்துக்குச் செல்வோர் அங்குச் சமையல் செய்யலாகாது. அப்படிச் செய்தால் ஜகந்நாத ஸ்வாமிக்குத் தலைவலி வந்துவிடும். சமைத்தன்பவர்க்கு ஜுரம் வரும். அதனால் அங்குக் கோயிற் பூஜாரிகளா யுள்ள ஒட்டமக்கலிகள் (அம்பட்டர்கள்) தரும் பிரஸாதத்தையே உண்ண வேண்டும். திருவிடைமருதூர் லிங்கம் ஒரு பறையனால் ஸ்தாபனம் செய்யப் பெற்றதானது பற்றி அவன் சந்ததியாரை ஆனைமேலேற்றி ஊர்வலம்வந்த பிறகே அவ்வூரில் உற்சவம் நடைபெறும். மேல்கோட்டை என்ற திருநாராயணபுரத்தில் இரண்டு நாள் அவர்ணர்கள் திருக்குளத்தில் ஸ்நானஞ் செய்து கோயிலுக்குள் சென்று ஸ்வாமி தரிசனம் செய்யலாம். இப்பொழுது விவாதம் நடக்கும் குருவாயூரென்ற க்ஷேத்திரத்திலும் தீயர்கள் ஸ்வர்க்க வாசல் ஏகாதசி யன்று கோயிலுக்குட் சென்று ஸ்வாமி தரிசனம் செய்யலாம். இவை போன்ற திருஷ்டாந்தங்கள் எண்ணிறந்தன எடுத்துரைக்கலாம். காலமும் இடமும் இடந்தாராமையால் இதனோடு நிறுத்துகிறேன்.

சிலவைதிகர்கள், (தற்காலத்துபிராஹ்மணர்களையும் அவர்களது குறுகியநோக்கத்தையுடைய பிராஹ்மணரல்லாதாரையும் இவ் வினத்துச் சேர்த்துக்கொள்க) அவர்ணர்களுக்கு அல்லது தீண்டாதாருக்கெனத் தனிப்பட்ட கோயில்கள் அமைத்துக் கொடுக்கலா மென்றும் அதற்குத் தாங்களும் உதவி செய்வதாகவும் கூறுகிறார்கள். அக்கோயில்களுக்கும் ஆகம ஸம்ஸ்காரங்களையளித்தால் அவ் அவர்ணர்களை உள்ளே நுழையாதபடி அவர்களது ஆகமங்களே தடுத்து விடும். இதனால் என்ன ஏற்படுவது? எந்த வழியிலும் அவர்ணர்களைத் தூர ஒதுக்கி வைக்கவேண்டுமென்பதே இவர்களது அபிப்பிராய மென்று ஏற்படுகிறது. தீண்டாமை என்பது என்ன? அது தோலிலுள்ளதா? மாமிசத்திலுள்ளதா? உடையிலுள்ளதா? அது எங்கே இருக்கிறது?

ஒவ்வொரு பிராணியினிடத்திருந்தும் ஒருவித காற்று வீசுகிறதென்றும், தாழ்ந்த பழக்க வழக்கங்களையும் புலாலுண்ணல்முதலிய தீயவழக்கங்களையுமுடையவர் மேல் நின்று வீசும் காற்றினது அசுசி காரமானதென்றும் சொல்லுவது தனிப்பட்ட மாந்தருக்குப்பொருந்தமாகுமே யன்றி ஜனத்தொகுதிகளுக்குப் பொருத்தமாகாது. அதனாலேயே நம் முன்னோர் ஜாதிப் பாகுபாட்டை ஒரு தர்மமாக அல்லது ஒழுக்க நிலையாக வகுத்தனரே யன்றிச் சமூகத்தின் பிறப் புரிமையாக வகுக்கவில்லை.

''பாதியாய் அழுகிய கால்கையரேனும்'' 'ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்' ஈசுவர பக்தர்களாயின், 'அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே' என்னும் வாசகங்கள் மிளிர்ந்து நிற்கும் இத்தேயத்து, இத் தூர்நாற்றச் சுவாசிகள், அத் தூர்நாற்றம் பிறப்பினும், உணவினாலும் வந்ததென வாதிப்பது ஒரு சிறிதும் பொருந்தாது. ஒருவனிடத்திலிருந்து வெளியேறும் ஆகர்ஷண வித்வேஷண சக்திகள் அவனவனது உள்ளக்கிடையிலிருந்து வெளிப்படுவனவேயன்றி வேறில்லை. அப்படியிருக்க, ஒரு கூட்டத்தினரைப் புலையரென நாமம்சூடி அவரைக் கீழழுத்த முயல்வது ஒப்புக்கொள்ளத் தக்கதல்ல. அம்முயற்சி நிலைத்து நிற்கவும்இல்லாது. ஸ்ரீவசன பூஷணம் என்ற நூல் பிள்ளை லோகாச்சார்யரால் செய்யப்பெற்று மணவாள மாமுனியினால் வியாக்கியானம் செய்யப்பெற்றது. இவர்களே ராமாநுஜருக்குப் பிறகு சுமார் நூறு வருஷ காலம் பிராஹ்மணர்களைச் சிருஷ்டித்த கடைசிப் பெரியார். இக் காலத்தும் ஸௌராஷ்டிர ஸமூகமானது இந்நெறியில் ஈடுபட்டு நிற்பினும், மஹா ராஷ்டிர ஸமூகத்தைக் காப்பாற்றின ஸிவாஜி போன்ற ஓரரசன் அவர்களைக் காப்பாற்ற வில்லாத காரணம் பற்றி, அம்முயற்சி அறை குறைப்பட்டுத் தவிக்கிறது. [அந்நூலை முக்கிய கிரந்தமாக உடைய தென் கலையாரும் இப்பொழுது தங்களையே பின் பற்றத் தொடங்கிவிட்டதாக வடகலையார் பெருமைகூறிக்கொள்கின்றனர். எனினும் அத்தென் கலையார் இன்னும் திரு அத்தியயன தினங்களில் (சிராத்த தினங்களில்) வேத மந்திரங்களை முக்கியமாகக் கருதாமல் நாலாயிரப் பிரபந்த ஸேவையையே முக்கியமாகக் கருதுகிறார்க ளென்று அவர்களுக்குச்சமாதானம் சொல்லுக.] அதில்,

" அதிகாரி நியமமில்லை. ஜன்ம(ம்) விருத்தி (தொழில்) ஆதி நியமமில்லை." " பிராஹ்மண்யம் விலைச்செல்லுகிறது, வேதாத்யயநாதி முகத்தாலே பகவத் லாப ஹேதுவென்று; அதுதானே இழவுக் குறுப்பாகில் த்யாஜ்யமாமிறே! ஜன்ம விருத்தங்களினுடைய உத்கர்ஷமும் அபகர்ஷமும் பேற்றுக்கும் இழவுக்கும் அப்ரயோஜகம்." — (இதன் வியாக்கியானம்)

ஜன்மாதிகளால்வரும் உத்கர்ஷத்தில் பசை யில்லையென்று சொல்லலாமோ, சாஸ்த்ரங்களெல்லாம் ப்ராஹ்மண்யத்தை அத்யாதரம் பண்ணிச் சொல்லா நிற்கச் செய்தே என்ன, அருளிச் செய்கிறார் " ப்ராஹ்மண்யம்" என்று தொடங்கி. ஆராதக ஸ்வரூபத்தையும் ஆராத்ய ஸ்வரூபத்தையும் ப்ரதிபாதியா நின்றுகொண்டு பகவதேக பரமாய் இருக்கிற வேதத்தைப் பாரதந்த்ரனாய் அத்யயனம்பண்ணி, மீமாம்ஸாதிகளாலே ததர்த்தநிர்ணயம் செய்து, பகவதுபாஸநாதிகளிலே இழிந்து பகவத் விஷயத்தைப் பெறுகைக்கு உறுப்பாகாது, அந்த ப்ராஹ்மண்யம் தானே, அஹங்கார ஹேதுவாய்க்கொண்டு பகவத் அத்யந்த நிக்ரஹ ஹேதுவான பாகவதாபசாரத்தைப் பண்ணி பகவத் விஷயத்துக்கு அசலாய்ப் போகைக்கு உறுப்பாகில், த்யாஜ்யமாம்." (207—208.)

" ச்வப(ச்) சோபி மஹீ பால
விஷ்ணு பக்தோ த்விஜாதிகஹ!
விஷ்ணு பக்தி விஹீநஸ்து
யதிச்ச ஸ்வப(ச்)சாதமஹ||."

எத்தனை யேனும் நிகிருஷ்ட ஜன்மாவா யிருந்தானே யாகிலும், பகவத் பக்தனானவன் த்விஜனில்காட்டில் அதிகன். உத்கிருஷ்ட ஜந்மாவானவனன்றிக்கே உத்தம ஆச்ரமியாயிருந்தானே ஆகிலும், பகவத் பக்தி ஹீனனானவன் ச்வப(ச்)சனில் காட்டில் அதமன் என்று வர்ணாச்ரமங்களில் பசக்கறுத்து பகவத் ஸம்பந்தமே உத்கர்ஷ ஹேதுவாகச் சொல்லப்பட்டது. (217).

" பயிலும் சுடரொளி," 'நெடுமாற்கடிமை' 'கண்சோர வெங்குருதி' 'ஒண்ணுத வாளவுணர்' 'நேட்டருந் திறல் தேன்' 'மேம்பொருள்' முதலிய பாசுரங்களில், நம்மாழ்வார், பகவத்குண சேஷ்டிதாதிகளிலே ப்ரவணரான பாகவதர்களை நமக்கு சேஷிகள் என்னும்பிடத்தை ப்ரதிபாதித்தருளுகிற இடத்தில், 'யவரேனு மவர்கண்டீர், கும்பிநரகர்களேனும், எத்தனை நலந்தா னில்

லாத சண்டாலர் சண்டாலர்களாகினும், பாற்கடற் சேர்ந்த பரமனைப் பயிலும் திருவுடையார் யாவரும் பிறப்பினிடை தோறும் எம்மையாளும் பரமரே,' என்னும் வாக்கியங்களினால், ஜன்மாதிகளால் எத்தனையேனும் தண்ணியரேயாகிலும் சேஷத்வ விரோதியான ஜன்மாதி அபிமானம் இல்லாதவர்கள் நமக்கு மிகவும் உத்தேச்ய ரென்றும், பாகவதர்களே நமக்குப் பரம ப்ராப்ய ரென்றும் அருளியிருக்கிறார். ஆழ்வார் அருளிய வார்த்தைகள் கடல் ஓசை ஒபாதியோ வெறுஞ் சொற்களோ?" (226).

மேலும் அதே ஸ்ரீவசன பூஷணத்தில் "பாகவத னன்றிக்கே வேதார்த்த ஜ்ஞானாதிகளையுடையவன் முக்கும் சுமந்த கழுதை போபாதி யென்று சொல்லிற்றிறே." (236) என்றுளது.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது திருவிளையாடற் புராணத்திலுள்ள மாபாதகம் தீர்த்தபடலம் நினைவுக்கு வருகிறது. பெற்றதாயைப் பெண்டாண்டு, தந்தையை வெட்டிக் கொன்று, தாயாகிய மனைவியை அழைத்து வரும் வழியில், அவளையும் மற்றப் பொருள்களையும் திருடர்வாய்ப் பறிகொடுத்துப் பிரம்மஹத்தியால் பீடிக்கப்பட்டுத் தெற்கு நோக்கி மதுரையருகில் வந்த, கலிங்கச் சிறுவனை, மீனாட்சி சுந்தரரிருவரும் சண்டாள தம்பதிகளாக மதுரைக்கு வெளியே சென்று வரவேற்று, அவன் வாய்மொழியைக் கேட்டு, அவனது பாவத்தைக் கழுவாயுரைத்து, அவனை அந்தணப் புனிதனாக்கின கதையை யாராலாவது மறக்கமுடியுமா? அச் சந்தர்ப்பத்திலேயே மீனாட்சி, அவ்வகைச் செய்கை பிராமணர்களுக்குப் பாவஹேதியைப் போதிப்பது போலத் தோன்றுகிறதே யென்று ஆட்சேபிக்க, அச்சொக்கரே 'மதமென்பது கெட்டவர்களைத் திருத்தி மேனிலைக்குக் கொண்டு வருவதற்கேயன்றி, ஸ்வதஸ் ஸித்தமான பெரியாருக்கு மதத்தின் ஆவச்யகம் ஒன்றுமில்லை' என்று சமாதானம் கூறியிருப்பதும் ஈண்டு கவனிக்கத் தக்கது. அதனால் சண்டாளர்களிடத்து அல்லது அவர்ணர்களிடத்து அவலக்காற்று வீசு மென்றும், அவ்வலக்காற்றால் விக்கிரஹங்கள் அபவித்ரமா மென்றும் வாதிப்போரது வாதங்கள் ஒப்புக் கொள்ளத் தக்கனவல்ல. எத்தனை சோமாசிமாற நாயன்மார்கள், எத்தனை அர்ச்சகர்கள், எத்தனை கலிங்கச் சிறுவர்கள் கடவுளைச் சண்டாள தம்பதிகளாகவே கண்டு மோட்சத்தையடைந்திருக்கிறார்கள்! அப்படியிருக்க, எப்போதும் 'குளமெங்கே? கோவிலருகிலுள்ளது. கோவிலெங்கே? குளத்தருகிலுள்ளது.' எனச் சுற்று வட்டமாகவே வாதிக்கிறத்தும்மை இக்கனது உரை விபர்த்தமானதாகும். அதனால் தற்காலம், உலகம் முழுதும் பெரியாரென ஒப்புக்கொள்ளப்பட்டு, தூய்மை யென்பதே ஒருருவெடுத்தது போல நிற்கும் மகாத்மா காந்தியால் துவக்கப்பட்ட "தீண்டாமை யொழித்தல்" என்னும் இவ்வியக்கம் இந்து சமூகத்தின் உண்மையான அபிவிருத்தியைக் கருதும் ஒவ்வொரு ஹிந்துவினாலும் ஆதரிக்கப்பட வேண்டியதாகும். இன்றேல் நம் ஹிந்து சமூகம் வெகுவிரைவில் பலம்குன்றிப் பரகாலர்களால் அதி சீக்கிரத்தில் அழிக்கப்பட்டுப் போகும். அதனால் அறிவாளிகள் யாவரும் தூக்கத்தினின்றும் எழுந்து இவ்வியக்கத்தை ஆதரிக்க முன்வருவார்களாக. இனி, சாஸ்திரிகளென்றும், வைதிகர்களென்றும், பண்டிதர்களென்றும் பலபட விளங்கும் ஒரு கூட்டத்தினரைப் பற்றியும் மடாதிபதிகளைப் பற்றியும் சில முக்கிய கருத்துக்களைக் கூறி இவ்வுரையை முடிப்பல்.

பண்டிதர்கள் புதிய வியக்கங்களைத் தோற்றுபவர்களன்று. அவர்களிடத்து அதற்கு வேண்டிய கிரியாஸித்தியும் இல்லை. 'கிரியாஸித்திஸ் ஸத்வே பவதி மஹதாம் நோபகரணே.' 'கிரியாஸித்தியானது ஸத்வகுண மிகுதியால் உண்டாவது. அது யாதொரு துணைக் கருவியுமின்றிக் காரியத்தை முடிப்



பது' என்று உபநிஷதம் கூறும். அதனால் இப் பண்டிதர்கள் ஏற்கனவே இருந்த ஸத்வகுண ஸித்தர்கள் செய்து வைத்துவிட்டுப் போன தர்மத்தைத் தங்கள் அறிவுகொண்டு கற்று அதனைக் காப்பாற்றுபவர்களே யாவர். புதிதாக ஒரு ஸாத்விகன் ஒருவகைப் புதியக்கத்தைக்கொண்டு வருவானேயானால், அவ்வியக்கம் நிலைத்துநிற்குமா வென்று சோதித்து, அப்படி அது நிலைத்து நிற்குமாயின், அவ்வியக்கத்தா லேற்பட்ட தருமத்தையும் காப்பாற்ற வேண்டியவர்களே யாவர். அதை விடுத்து ஜனசமூகத்தை மாற்றுவதாவது அவர்களது இயக்கங்களைக் கெடுக்கவாவது இவர்களுக்கு அதிகாரமில்லை. அப்படி இவர்கள் செய்வார்களாயின் அநாதியாய் வந்து வளர்ந்து கொண்டிருக்கும் ஸநாதன தர்மம் என்ற விருட்சம் நல்ல பழந்தரும் மரமாக வளர முடியாது. இப் பண்டிதர்களும் அச் சநாதன தர்ம விருட்சத்தை நிறுத்திக் காக்கும் தோட்டக்காரர்கள் போலாகாது, அம்மரத்தின் வேரைக்கொல்லும் வேர்ப்புழுவாக மாறி அவ்விருட்சத்தையே கொன்றவர்களாவார்கள்.

முன் காலத்தில் ஒரு திருஷ்டா அல்லது ரிஷி சில விதிகளை ஏற்படுத்தி அதனை ஓர் அரசனிடத்துக் கொண்டு போய்க் காட்ட, அவ்வரசன் அந்த ஞானியினது நிர்மல ஒழுக்கம் சக்தி இவற்றை அநுபவத் துணர்ந்து அப் பார்ப்பானால் கொண்டுவரப்பெற்ற விதிகளைத் தன் தேயத்து அநுஷ்டான சட்டமாக அமைத்துக் கொள்வ தென்பது நம் நாட்டிலே மட்டுமல்ல எல்லா நாட்டிலும் தொன்று தொட்டு வந்த பழக்கமாகும். தற்காலம் அவ்வகை ஸ்மிருதிக்காரர்கள் போல உள்ளவர்கள் சட்ட நிர்மாண அங்கத்தினர்கள். அவ்வகை அரசர்கள்போல உள்ளது நமது ராஜாங்கம். அதனால் அந் நிர்மாணகர்த்தாக்களால் கொண்டுவரப்படும் சட்டத்தைத் தங்களறிவு கொண்டு பரிசீலனை செய்து தகாதவற்றை விலக்கித் தக்கவற்றைக் கூட்டி ஒரு புதிதொழுங்கை யமைத்துக் கொள்ள வேண்டியது ஜனங்களது கடமையாகும். அப்புதுத் தொழுங்கின்படி குணிலைகளை மாற்றியமைக்கும் விஷயத்தில் ஏற்படும் ஒரு சில அசௌகரியங்களைக் கவனிக்கலாகாது. அதனால் இந்தப் பண்டிதர்களுக்கு அதனை சட்டம் அமைப்பதில் யாதொரு சம்பந்தமுமில்லை யென்றறியவும். இவர்கள், மும்மூர்த்திகளில் ஸம்ஹார கர்த்தாவான ருத்ரனை மீண்டும் சிருஷ்டி கர்த்தாவாகிறான் என்பதை ஒப்புக் கொள்ளுபவர்கள். அதனால் தங்களுக்கென ஒரு செயலுமில்லாதவர்கள். கிரியாஸித்தியும் கிரியா சக்தியும் வாய்ந்த பிறர் அமைப்பதைப் போற்றத் தக்கவர்களே யன்றி வேறல்ல. பாமர ஜனங்கள் இவர்களையே கிரியாவான்களாக வெண்ணி மயங்கி நிற்பது எவ்வளவு பேதைமை! இப்படிக் கிரியா ஸித்தி வாய்ந்தவர்கள் செய்யும் மாறுதல்கள் பெரும் புரட்சியாகவிராது சமூக சுகத்தைத் தரவல்ல சீர்திருத்தமாக விருக்கின்றனவா வென்று பொதுஜனங்கள் பார்க்க வேண்டியதும், அப்படிப்பட்ட மாறுதல்கள் அமைக்கப் படும்போது அவற்றை அநுஷ்டானத்தில் கைக்கொள்ள வேண்டியதும் நம் ஒவ்வொருவருடைய கடமையுமாகும். இனிப் பீடாதிபதிகளை நோக்குவோம்.

ஆதியில் பீடங்களை ஏற்படுத்தின பெரியார், தாங்கள் கண்டறிந்த உண்மைகளைப் பொது ஜனங்களுக்கும் அவர்களின் ஸந்ததியாருக்கும் புகட்ட வேண்டுமென்று அப்பீடங்களை யமைத்தார்களேயன்றித் தம்மைச் சூழ்ந்திருக்கும் பக்தகோடிகளது அபிப்பிராயங்களுக்கெல்லாம் இடம்கொடுத்து அவர்கள் விட்ட வேலையை யெல்லாம் செய்வதற்காகவே அப்பீடங்களை யமைக்கவில்லை. கர்ம மீமாம்ஸையினது வீண் தன்மையை எடுத்துக்காட்டிக் குமாரிலபட்டருக்கு உத்தர மீமாம்ஸையின் பெருமையை விளக்கினவரும், மண்டனமிச்ரரைக் கருமநெறியினின்று திருப்பி, ஸுரேச்வராசார்ய ராக்கி, வேதாந்த

மதத்துக்கு மாற்றினவருமான பெரியாரின் பீடங்கள், தற்காலம், அறைகுறைப் படிப்பாளரும் அநுபூதி யற்றவருமான லௌகிகர்களின் வசப்பட்டு, அவர்கள் இஷ்டப்படி நடக்காவிட்டால் எங்குத் தங்களுக்குப்பட்டம் போய்விடுமோ வெனப் பயந்து, அந்த லௌகிகர்கள் ஆட்டுகிறபடியெல்லாம் ஆடும் மாந்தரைத் தலைமையாளர்களாகக் கொண்டிருப்பதைப் பார்த்தால், அவ் வாதி சங்கரரே நகைப்பா ரென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? பட்டம் போவதற்குப் பயந்தவர்களும், பல்லக்கு விருதுகளுடன் பணம் பறிப்பதே தொழிலாகவுள்ளவர்களுமாகிய இவர்கள் பீடாதிபதிக ளாவார்களா? இவர்களது பிரஸங்கங்கள் அநுபூதி மொழிக ளாகுமா? இத்தகையாரைப் பின்பற்றுபவர்களைப் பார்த்து மலைக்கும் உலகம் பித்துடைத் தென்றே கூறலாகும். ஆகையால், மகாஜனர்களே! இந்தஜம்பதுவருஷகாலமாக யான் வாழ்ந்து வரும் ஹிந்து தர்மச்சார்பான ஆன்மவாழ்க்கையில், தீண்டாமை என்பதை யானெங்கும் காணவேயில்லை. தீண்டாமை என்பது ஒருசமூகத்தைப் பற்றி நிற்பது மில்லை. எல்லாச் சாதியிலும் எல்லா மக்கட்டொகுதியிலும் மாந்தர் அறநெறி பிழைக்கும் காலத்து இத் தீண்டாமை அவர்களை ஒட்டி நிற்பதாகும். அதனால் நம் ஹிந்து சமூகமானது தடையற்றப் பூரண வளர்ச்சியை யடைவதற்கு முட்டுக் கட்டைகளாக நிற்கும் நீதிமன்றத் தீர்ப்புக்களும், சட்டங்களும் சிருஷ்டித்துள்ள சங்கடங்களை அப்புறப் படுத்திப் புதுச்சட்டங்களை அமைக்க வேண்டியது அவசிய மாகும். இவ்விஷய மாக 'ஜாதிக் கொடுங்கோன்மை' என்னும் நூல் ஒன்று சமீபகாலத்தில் வெளியா யிருக்கிறதிலிருந்து சில விஷயங்களைக் கூறி இக்கட்டுரையை முடிப்பேன். அந்நூலுக்கு ஆசிரியர் சென்னை நீதிமன்ற ஊழியத்தைச் (Madras Judicial Service) சேர்ந்த ஸ்ரீமான் எஸ். கே. பார்த்தஸாரதி ஐய்யங்கா ரென்பவ ராவர். அந்நூலுக்கு ரைட் ஆனரபில், வி - எஸ் - ஸ்ரீனிவாஸ சாஸ்திரியார் அவர்கள் முன்னுரை அளித்திருக்கிறார்கள். அந்நூலில் கூறப்பட்டுள்ள விஷயங்களின் சுருக்கம் வருமாறு:—

" மகா ஜனங்களே ! ஆதியில் நமது வேதத்தில் இப்பொழுதுள்ள ஜாதி யேற்பாடு போன்ற ஒழுங்கு ஒன்று இருந்ததாக நமக்குத் தெரிய வில்லை. முதலில் எல்லாரும் பிராஹ்மணர்களாக விருந்தார்கள். ஒரே வருணம் தானிருந்தது. அது பக்தியிற் சிறந்த பிராமண வருணமாம். இது பிரஹதாரண்யஉபநிஷத்திலும்,மகாபாரதசாந்தி பருவத்திலும் சொல்லப் பட்டிருக்கிறது. பின்னர் பக்தியாளர் பக்தியற்றவர் என இரண்டு வகுப்பு ஏற்பட்டது. அதற்குப் பிறகு சமூகத்திறமை ஏற்படுவதற்காக நான்கு வர்ணங்கள் பிரிக்கப் பட்டன. ஆனால் இந்த நான்கு வர்ணங்களும் ஆன்ம விஷயங்களில் ஸமான அந்தஸ்துள்ளவர்க ளென்று விஷ்ணு புராணத்திலும் மகாபாரத வனபருவத்திலும் கூறப்பட்டுள்ளது. சூத்திரர்களுக்குக் கூட ஸோமயாகம் செய்யும் அதிகாரம் உண்டென்று சாந்திபருவம் கூறுகிறது. .............. தனது தொழிலை மாற்றிக்கொண்டு எவனும் தன் ஜாதியை மாற்றிக் கொள்ளலாம் .................. அறியாமையில் ஆழ்ந்து கிடக்கும் மாந்தர்க்கு அறிவூட்டி அவர்களை வேதநாகரிகத்துக்குப் பற்றுள்ளவர்களாகச் செய்தால் அவர்கள் பிராஹ்மணர்களாகிறார்கள். ..................இந்த விஷயம் ஆதி சங்கராசார்யருக்குக் காசி விசுவநாதரே சண்டாள ரூபமாகவந்து போதித்து நினைப்பூட்டினார் .............. காயத்திரி மந்திரத்தைக் கண்ட திருஷ்டாவாகிய விசுவாமித்திரன் சண்டாளனை திரிசங்குவை மார்போடணைத்துத் தழுவிக்கொண்டு அவனுக்காக யாகஞ்செய்து ஸநாதன தர்மத்துக்கு நன்னீதியே முக்கிய ஆதாரமென்று வாக்கினாலும் கிரியையினாலும் நிரூபித்துக்காட்டினார்............... 'ஹிந்துதர்மமென்பது ஒரு நம்பிக்கையல்ல, கிரியையல்ல, சாஸ்திரப்ரகடனமல்ல, மறைமொழுக்க நூலல்ல, புஸ்தகங்களால் வரையறுக்கப்பட்ட நம்பிக்கைகளல்ல. குருக்கண்மார் அல்லது புரோகித உபாத்தியாயர்கள் அதனைச் சிறைப்படுத்திவைக்க முடியாது. அங்ஙனமே புஸ்தக அட்டைகளும் அதனை எல்லைப் படுத்தல் முடியாது.

"நாம் கடூரமாய் நடந்தால் நமக்கு ஹிந்துக்கள் என்ற பேர் நில்லாது. (ஹிம்ஸாயாம் தூயதே) என்றபடி எந்த உயிர்க்கும் இம்சை அல்லது தீங்கிழைப்பதை மனத்தினாலும் நினைக்காம விருப்பவனே ஹிந்துவாவன்........ ...கோயிலுக்குள் நுழையக் கூடாதென்பதற்கு முக்கிய ஆதாரமான நூல் ஆகமங்களாகும். அவை சண்டாளர்கள் (பதிதர்கள்) கோயிலுக்குள் நுழையலாகா தென்கின்றன. சண்டாளர் என்ற பதப்பிரயோகத்தினாலே அது தீண்டாதாரென்ற பஞ்சமரைக் குறிக்கவில்லைஎன்பது போதரும்........ ...'' சண்டாளர்களையும் மீட்பித்து, தூயவர்களாக்கி நான்கு வருணத்தவர்களில் கலந்து போகுமாறு செய்துவிடலாம்'' என்று மனுஸ்மிருதி கூறுகிறபடி செய்வதில் எனக்கு ஆட்சேபனை ஒன்றுமில்லை. ஆனால் பூராவாக இக்கூட்டத்தாருக்கே ஆன்ம உணர்ச்சியாகிய உணவளிக்கப்படா தென்று மறுப்பது ஈசுவர ஸாந்நித்தியத்தில் செய்த பெருங் குற்றமாகும். தனது சிருஷ்டியாகிய மனித அங்கத்தினருள் யாதொரு பேதமும் செய்யாத கருணை வள்ளலாகிய அவ் விசுவரன் முன்னிலையில் இக் குற்றத்துக்கு நாம் உத்தரவாதம் சொல்லவேண்டியவர்க ளாவோம்'' என்று பண்டித ஞானேசுவர சாஸ்திரியார் வாக்கில் வைத்து அங்கு கூறியிருப்பதை எல்லாரும் கவனித்து ஒழுகுவார்களாக !



# சு ந் த ர சு லோ ச னு

[திரு. டி. ஆர். சாரங்கபாணி, எம். ஏ.]

(தொடர்ச்சி)

## இதழ் 3

'கண்ணால் கண்டதும் பொய்,
காதால் கேட்டதும் பொய்,
தீர விசாரித்ததே மெய்'

புறவேடம் பூண்டு அகத்தழுக்கு மூட உலகையே மாற்றி, சாதிப்போரையும் மதப் போரையும் பெருக்கி, மதநூட்பங்களை உற்றறியாப் போலி பக்தர்களின் அகத்தைப் போலும் எங்குங் காரிருள் சூழ்ந்து நின்றது. மிருகநீர்மை மிகுந்த கானுறை விலங்குகள் காரிருளில் களிமிகுந்து இரை தேடக் கானில் பதுங்கிப் பதுங்கிச் சென்றன. பாவ ஒழுக்கத்தால் இருண்ட தங்களுடைய இருதயங்களின் வண்ணத்திற் கிணங்க இயற்கை யிருளும் இயங்குவதைக் கண்ட கள்ளர்கள் உவகை பூப்பக் கொள்ளையிட இடந்தேடி ஒளிந்து நின்றனர். வறுமைப் பிணி மிகுந்த ஏழை மக்கள், ஒருநாள் முழுதும் வயிறு வளர்க்க உழைத்த இளைப்பால் அயர்ந் துறங்கிக்கொண் டிருந்தனர். ஊரும் அடங்கியது. செல்வந்தன் நாகரிகத் தடபுடலின் இறுமாப்பும், தானென்னும் ஆணவமும் மறைய மெய்ம் மறந்து உறங்கிக்கொண் டிருக்கிறான். உண்ண உணவும் நிற்க நிழலும் உடுக்க உடையும் அற்ற ஏழைகள் இறைவனையும் தம் விதியையும் நொந்து, பனியில் நனைந்து பசியா லுலர்ந்து உறங்கவும் இயலாது நாடோடிகளைப் போலும் வீதி யோரங்களில் அயர்ந்து அமர்ந்து நின்றனர். எத்தனை மதங்கள் இருந்தென் ? எண்ணிறந்த மதப் பற்றுடை

யார். திரிந்தேன்? மதப் போர்கள் மலிந்தேன்? எந்தெய்வம் உன் தெய்வமென எதிர் வழக்குகளெழுந்தேன்? மடங்கள் பல இருந்தேன்? சத்திரங்கள் மலிந்து கிடந்தேன்? ஏழைகளின் வாட்டத்தை வாட்டத் துணியும் மெய்யன்பர்கள் எத்தனைப் பேர் முனைந்து வருகிறார்கள்? தற்கால நாகரிகத்தின் பெருமை யென்னே! புறவேடங்கள் மலிய, தன்னலம்சிறக்க, இருமாப்பு இறுமாந்து தலைவிரித்தாட, அடியார்கள் அகம்புழுங்க, ஆண்டவன் அருள் பிறழ, மதநுட்பம் மறைய, மதச் செருக்கே செங்கோலோச்சும் நாகரிக மன்றோ தற்கால நாகரிகம்? ஆன்ம வுணர்ச்சியோ டியைந்த பண்டைத் தமிழகத்தின் நாகரிகத்துடன் ஒப்பிடத் தற்கால நாகரிகம் இருளைப் போலும் இருண் டிருக்கின்றதென்பதை விளக்குவது போலுங் காரிருள் சூழ்ந்து நின்றது.

காலை மணி ஐந்திருக்கும். சென்னை, புரசை, “அரங்க விலாசத்திலிருந்து” ஒரு மோட்டார் வண்டி வெளிப் போந்தது. வண்டியுள் இருவர் அமர்ந்திருந்தனர். காரிருளில் அவர்கள் யாரென விளங்கவில்லை யெனினும் வண்டியின் எண் பின் விளக்கி னொளியால் 5555 என விளங்கினமையை யாம் உணர்ந்தமையானும், அவ்வெண்ணையுடைய வண்டி துப்பறி வீரசிங்கம் ஜயகுமாரனுடைய வண்டி யென்றறிவோ மாதலானும், ஒருகால் வண்டி யுள்ளிருந்த இருவர்களுள் ஜயகுமாரனும் ஒருவனாக இருக்கலாமென ஊகிக்க வேண்டியிருக்கிறது. வெளிப் போந்த அவ்வண்டி மங்கள புரியை நோக்கி வேகமாகச் சென்றது.

“சத்தியநாத!....”

“ஐயா!”

“இப்பொழுது நாம் செல்லும் இடத்தில் நாம் இருவரும் பெயரை மாற்றிக்கொள்ள வேண்டுமென யான் கூறியது உன் நினைவிலிருக்கிறதா?”

“இருக்கின்றது ஐயா!”

“நான் மதனகோபால் என்னும் பெரிய வியாபாரி; நீ முருகன் என்னும் என்னுடைய பணியாளன்; தெரிகிறதா?”

“சரிதான் ஐயா!”

“இந்தக் கேசைப்பற்றி யான் கூறிய விஷயங்களை யெல்லாம் நீ மனதில் வைத்துக்கொண்டிருக்கிறாயா?”

“ஆம், ஐய!”

“சத்தியநாத!”

“ஐய! இப்பொழுதி லிருந்தே நீ ரென்னை முருகனென அழைத்துப் பழகிக்கொள்வது நன்றென நினைக்கிறேன்”

“பேஷ் சத் - முருகா வியந்தேன் உன்னுடைய மதியை. இனிச்சந்திர சேகரப் பிரபு கூறிய விஷயங்களிலிருந்து நீ என்ன உணர்கின்றாய் சொல் பார்ப்போம்.”

“ஐய! சந்திரசேகரப் பிரபு செல்வப் பேறு வாய்க்கப்பட்டும் உலகின்பம் வாய்க்கப்பட்டவரல்ல”

“அடே மடைய! நாம் இப்பொழுது எடுத்துக் கொண்ட கேஸைப் பற்றி யுன்னை வினவினே னல்லாமல் சந்திர சேகரப் பிரபுவைப்பற்றியும் அவருடைய குணதிசியங்களைப் பற்றியும் உன்னை நான் வினவினேன் அல்லே”

“ஐய! என்னுடைய அறிவுக் கெட்டியவரையில்...”

“அடே சத்—முருக! அட்டவணைக ளேன்? நீயென்ன எண்ணுகின்றா யென்று தானே கேட்டேன்.”

“ஆம், ஐய! கண்ணால் கண்டதும் பொய், காதல் கேட்டதும் பொய், தீர விசாரித்ததே மெய். என்றுணர்ந்தேன்”

“அடேட் கேட்ட வினவுக்கு பதிலிறுக் காது வீண் கதைகளேன்”

“ஐய! அந்த சாமர்த்தியந் தானே எனக்கில்லை”

“சத்தியநாத!”

“ஐய! முருகனென்றே என்னை அழைப்பது நலம்.”

“முருக! வீண் வார்த்தைகளாடிப் பயனென்?

“வழிமாள வேண்டுமே ஐய!



“அடே சனியனே உன் கருத்தைக் கூறித்தொலை”

“ஐய, என்னை மங்களபுரியில் முருகனென்று தானே அழைக்கப்போகிறீர்”

“ஆம், அதிலென்ன சந்தேகம்.”

“இல்லை ஐய! இப்பொழுது சனியனென்றழைத்தீர்களே. ஒருகால் மீண்டும் யோசித்து சனியனென எனக்கு மகுடஞ்சூட்ட வெண்ணி னீர்களென உன்னினேன்.”

“முருக! உன்னை யென்ன செய்வதென்று தெரியவில்லை. கூரிய மதியுடன் குறும்பையும் உனக்கு ஆண்டவனளித்திருக்கின்றான்”

“எல்லாம் உங்களுடைய ஆசிர்வாதந் தானே ஐய. ஆற்றுவாறுந் தேற்றுவாறு மற்று, பெற்றோர்களையு மிழந்து, நிற்க நிழலின்றித் தவித்த எனக்கு அபயம் அளித்தவர் நீரேயன்றோ? நீர் என்னைச் சட்டிடினும் நான் உம்மை விட்டுப் பிரிவதில்லை?”

“முருக! இப்பழங்கதைகளேன்”

“ஐய! பெரிய புராணத்தில் தானே மெய்யடியார்களின் பழங்கதைக ளுள்ளன?”

“ஆம், அதைப்பற்றி இப்பொழுதென்ன கவலை?”

“ஐய! அதைப் படிக்கவே யான் நெடுநாளாக ஆவல்கொண்டுள்ளேன்.”

“அடே! அனைவற்றிற்கும் ஓர் அளவுண்டு. அளவு மிஞ்சி நீ விளையாட்டுரைகள் பகருகின்றாய். நான் கேட்ட கேள்விக்கும் பதிலளிக்கவில்லை.”

“ஐய! அப்பொழுதே கூறினேனே. கண்ணால் கண்டதும் பொய்; சந்திர சேகரப்பிரபு அதனைக் காணவில்லை. ஆகையால் அது பொய். காதால் கேட்டதும் பொய், மோகனசுந்தரம் அவைகளைக் களவாடினனென ஒருவரும் அவரிடங் கூறவுமில்லை. ஆகையால் அஃதும் பொய். தீர விசாரித்ததே மெய். சந்திர சேகரப்பிரபு அதைத் தீர விசாரிக்கவுமில்லை. ஆகையால் அங்கும் பொய். எனவே மோகனசுந்தரமே கள்வனெனக் கூற வியலாது. திடீரென மறைந்தது சந்தேகத்தையே யூட்டுகின்றதெனினும், மோகனசுந்தரமே ஒருகால் திருடியுமிருக்கலாம் எனினும், அவனே திருடினவன் என முடிவுகட்டிக் கூறுவது முழுப் பொய்யே யாகும். எனவே....”

“முருக! ஆம். நீ கூறுவதே ஒருவாறு மெய்யாக இருக்கலாம். மோகனசுந்தரமே ஒருவேளைக் கள்வனாக இருப்பினும் இருத்தலாகும். எனினும் தீர விசாரிப்பதன் முன்னர் நாம் ஒன்றும் முடிவு கட்டிக் கூறவியலாது. முருக! இனி நான் கூறுவதை மறவாதே. நான் சென்னையில் ஒரு பெரிய வியாபாரி. சந்திரசேகரப் பிரபுவும், யானும் இளமையிலிருந்து ஒன்றாக வாசித்தவர்கள். உடல் நலனுக்காக சந்திரசேகரப் பிரபுவின் வேண்டுகோளுக்கிணங்க மங்கள புரியில் சில நாட்கள் தங்கிச் செல்ல வந்துள்ளேன். நீ அங்குள்ள பணியாளர்களிடத்திலிருந்து எவ்வளவு சங்கதிகளை வாங்க வியலுமோ அவைகளைச் சந்தேகியாதவாறு வாங்கிவிடல் வேண்டும். ஏனைய விஷயங்களைப்பற்றி நீ யொன்றும் அறியாதவனைப் போலிருந்து விடவேண்டும். ஜாக்கிரதை. தெரியுமா?”

“ஐய நீர் பேசுவதெல்லாம் எனக்குப் பெரும் விந்தையாகவே இருக்கின்றது. இந்தக் கேஸைப்போல் எத்தனை கேஸுகளை நீங்கள் கண்டுபிடித்துள்ளீர்? அவைகளுள் எத்தனைக் கேசுகளில் நானும் உங்களுடன் இருந்து வந்தேன்! இஃதெல்லாம் நானே செய்ய வேண்டியது. தவறின் இதுகாறும் நான் உங்களுடைய பணியாளனாக இருந்ததென்ன பயன்?

“உன்னுடைய திறனை யானறிவேன். எனினும் இவைகளைக் கூறிவைப்பது நன்றன்றோ?”

“ஆம் ஐய!”

“முருக! இப்பொழுது நான் பூண்டிருக்கும் வேடத்தை நீ கவனித்தாயா?

# தாவீது மன்னரின் தனிக் கோள்

[திரு. T. R. சாரங்கபாணி, M. A.,]

(தொடர்ச்சி)

## ii தாவீதின் கடவுளியல்பு

அவருடைய காலத்தில் நிலவி நின்ற மதநெறிகளுக் கிணங்கத் தாவீது முதல் முதலில் கடவுளைக் கோபம் நிறைந்த ஆண்டவராகவே கருதினார்; கோபத்தனல் வீசி அச்சத்தை யூட்டும் ஆண்டவனை அச்சத்துட னணுகினார். "கர்த்தாவே! உம்முடைய கோபத்திலென்னைக் கடிந்து கொள்ளாதேயும்" (6 : 1) என அவர் இறைவனருளை வேட்டல், இவ்வுண்மையை யெடுத்தோதும். கடவுளுக்கு அன்பு மிகுந்த ஆண்டவருக்குக் கோபமெனும் அணிகலனை அணிந்ததுடன் நில்லாது, தமது கால மனித இயற்கை வழக்கங்களுக் கிணங்க இறைவன் பழிக்குப் பழிவாங்கும் பரமனெனவும் எண்ணி "அவரேனக்காகப் பழிக்குப் பழிவாங்கி ஜனங்களை எனக்குக் கீழ்ப்படுத்துவார்" (18 : 47) என்று நம்பிக்கையுடன் அறைவது விந்தையாகவே யிருப்பினும், அவருக்குப் படிப்படியாக அறிவு வளர வளர, மதப்பற்று முதிர முதிர, மெய்ப் பக்தி அரும்ப அரும்ப, உடனிகழ்ந்த உள நிகழ்ச்சிகளுக் கிணங்க, இறைவனுடைய இயல்பை உய்த்துணர்ந்தோதல், அவருடைய கீதங்களைத் தருவித்துருவியாராய நனி விளங்கும்.

உள்ளது சிறத்தல் எனும் நியதிக் கிணங்கக் கோபம் மிகுந்து அரக்கரைப் போலும் பழிக்குப் பழிவாங்கும் இயல்பை ஆண்டவருடையவரென்று முதலில் எண்ணிய தாவீது, காலடைவில் இறைவனை "தேவனே நியாயாதிபதி" (50 :6) "தேவனே நீதியுள்ள நியாயாதிபதி" (7 : 11) "நீதியுள்ள நியாயாதி பதியாக சிங்காசனத்தில் வீற்றிருக்கிறீர்" (9 : 4) என நீதிமிகுந்த நியாயாதிபதியாகக் கொண்டார். "கர்த்தருடைய நியாயங்கள் உண்மையும், அவைகளனைத்தும் நீதியுமாக யிருக்கிறது. அவைகள் பொன்னிலும் மிகுந்த பசும் பொன்னிலும் விரும்பப் படத்தக்கதும் தேனிலும் தேன் கூட்டிலிருந் தெழுந்தெளித் தேனிலும் மதுரமுள்ளதா யிருக்கிறது." (19:9-10) என்றும் "என் நீதியின் தேவனே" (4 : 1) என்றும் இவ்வுண்மையை விரித்தோதுகின்றார்.

"நீதியுள்ளவராக இருக்கிற தேவரீர் இருதயங்களையும் உள்ளிந்திரியங்களையுஞ் சோதித்தறிகின்றவர்" (7 : 9) என்றவரே கூறுமாப்போல், அரியாசனத்தமர்ந்து செங்கோலோச்சி, மனிதனுடைய நன்மை தீமைகளை யாராய்ந்து, பாவ புண்ணியங்களை யோர்ந்து அவைகளுக்கேற்ப மறுமையில் இன்பத்தையோ துன்பத்தையோ நல்கிடுந்தொண்டே தேவனுடைய தொண்டாக தாவீது கருதினார். அக்கருத்திற் கிணங்கவும், உலகிடை மன்னவனே அத்தொண்டையாற்றி வந்தாலும், இறைவனையும் அரசர்களின் அரசனாகக் கருதி தாவீது 'எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே!" (8 : 1) என ஆண்டவரை விளிப்பது இக்கருத்தையே வலியுறுத்துகின்றது.

உலகியல் மன்னவர்களுக்கும் அமலனுக்குமுள்ள பேதத்தை யறிவுறுத்துவான் வேண்டி, "கர்த்தர் பெரியவராகவும் மிகவும் புகழப்படத்தக்கவராகவும் இருக்கிறார்" (145 : 3) எனக் கண்டறிந்ததுடன் நில்லாது "நான் வானத்திலேறினாலும் நீர் அங்கே இருக்கிறீர் நான் பாதாளத்தில் படுக்கைப் போட்டாலும் நீர் அங்கே இருக்கிறீர்" (139:8) என இறைவர் அங்கிங்கெனாதபடி யெங்கும் நிறைந்துள்ளவரெனவும் விளங்குகின்றார்.

நீதி வடிவந் தாங்கிய பரம்பொருளின், எங்கும் நிறைந்த தன்மையை எடுத்தோதியதும் "கர்த்தர் நல்லவரும் உத்தமராயு மிருக்கிறார்" (25 : 8) எனும்



புத்துணர்வு அவர் அகத்திடை யரும்ப இறைவனின் மற்றோரியல்பையும் தாவீது எடுத்துக் காட்டுகின்றார். கோபம் மிகுந்த கடவுளெனவும், வஞ்சந் தீர்க்குந் தெய்வமெனவும் நாம் அச்சுறின் என் செய்வது? இறைவனின் இயல்புக்கே ஓர் இழுக்குண்டாகுமென்றையங் கொண்டு, இறைவன் ஆண்டவனாக விருந்து நீதியைப் பகிர்ந்திடுகின்றானெனினும், அவன் கொடுங்கோல் மன்னனல்லன்; வெருளி விம்மும் வீணனல்லன்; நீதி வழுவும் அரக்கனல்லனென அவர்விரித்தோதுகின்றார் தாவீதின் பக்தியும் ஞானமும் அரும்ப அரும்ப கர்த்தர் - கோபம் நிறைந்தவரென முதலில் தாம் கருதிய கர்த்தர்-வஞ்சகவேந்தனாகப் பழிக்குப் பழிவாங்கும் தெய்வமெனத் தாம் கருதிய ஆண்டவர் - நீதியோடியைந்த புரவலனாகத் தாம் கொண்ட பரமன் - நல்லவராகவும் உத்தமராகவும் அவருக்கு விளங்குகின்றார். எனவே, தாம் உணர்ந்த மெய்ம்மையை யாமும் உணர்ந்திட 'அவர் மிகவும் நல்லவர்; அவரை அரக்கராக மதியாதேயுங்கள்; உத்தம குணங்களில் சிறந்தவர்; ஆதலான், அஞ்சாதேயுங்கள்' எனப்பாமர மக்களுக்கு ஈண்டுப் பக்தியையும் அன்பையும் ஊட்டுவது கவனிக்கப்பாற்று.

மேலும், ஆண்டவர் உத்தமராயிலங்கலான், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசிடும்'பெரியோர்'களை நாடுவதில்லையென்பதையும், உண்மை மிகுந்தவர், உண்மையையே ஓர் உருக்கொண்டவர் ஆதலான் உண்மையை விரும்புகின்றவர் என்பதையும் விளக்குவான் வேண்டி, தாவீது மன்னர் "உள்ளத்தில் உண்மையை விரும்புகிறீர்" 51:6 என ஓதுவது இறைவனின் தூய இயல்பொன்றை ஈண்டு விளக்குகின்றது.

இவ்வாறு படிப்படியாகத் தாவீது ஞானோதயமாகவாக, அறியாமை அருக அருக, அவருடைய மனவெளியில் புலனாகிய உண்மைகளைக் கீதங்களின் வாயிலாகஎடுத்தோத அதனை யாராயுங்கால், தாவீதின் மனோநிலை அங்கைக்கனியென இனிது விளங்குகின்றது. இதுகாலை நாம் ஆராய்ந்துவரும் தாவீதின் கடவுள் இயல்பே இவ்வுண்மையை வலியுறுத்தும். தாவீது பக்தியில் முதிரமுதிர இறைவனின் தூயவியல்புகள் தோன்றத் தோன்ற, கொடிய இயல்புகள் மறைந் தொழிவதுங் காண்க.

அறியாமையென்னும் அந்தகாரத்திலாழ்ந்து மதிமயங்கி நெறிமயங்கி நிற்கையில் நம்முடைய தோன்றாத் துணைவராகவும், பற்றுக் கோடாகவும், அறியாமையின் அந்தகாரத்தை அறவே அழித்திடுந் தூய ஒளியாகவும், ஞானச் சுடராகவும், இறைவர் இருக்கின்றார் என்பதை விளக்க, "கர்த்தர் வெளிச்சமும் நம்முடைய இரக்ஷிப்பு மானவர்" (27 : 1) என நம்முடைய மெய்யடியார் விளக்கியுள்ளார். தாவீது மன்னரின் மெய்யுரைகள் தாம் அநுபவ வாயிலாக அழுதழுதுணர்ந்த மெய்யுரைகளெனவும், பிறர் அறைய செவிமடுத்தும், பிறர் ஓத உணர்ந்தும், அருளிய உரைகளல்லவென்றும் முன்னரேயே குறித்துள்ளோம். எனவே, ஆண்டவரைக் கோபம் நிறைந்த இறைவராகவும், வஞ்சம் மிகுந்த ஆண்டவராகவும், அரசர்களின் அரசராகவும், உத்தம குணங்கள் நிறைந்த உண்மையை நாடும் உத்தமராகவும், முறையே எண்ணிய தாவீது இதுகாலை இறைவரைத் தமக்கு இன்ப வாழ்வையூட்டும் ஞான ஒளியாகக் கொண்டது ஒரு விந்தையன்று.

இந்நிலையில் இன்ப வாழ்வில் இறைவனை வாழ்க்கையின் துணைவனாகவும் இரக்ஷகனாகவுங் கொண்ட தாவீது மன்னர், உண்மையை யோர்ந்தபின், ஆதி தேவனை ஓர் ஆயனாக உருவகப்படுத்தி "கர்த்தர் என் மேய்ப்பராகஇருக்கிறார்" (23 : 1) என்றியம்புவது நமக்கும் அமலனுக்கும் இடையில் மிளிருஞ் சம்பந்தத்தையே எடுத்தோதுகின்றது. ஓர் ஆட்டு மந்தையின் மேய்ப்பன், தன் மந்தையின் மாட்டுச் செலுத்துங் கவலை

யும், காட்டும் அன்பும், கொள்ளும் பொறுப்பும், அமரர் பிரான் ஆறறி வினராகிய நம் மாட்டுச் செலுத்துங் கவலையையும் அன்பையும் பொறுப்பையும் ஒத்து நிற்கின்றன. இரக்ஷகரின் "நல்ல மேய்ப்பன்" இயல்பு இக்கருத்துடன் மிளிரல் கூறுமலே விளங்கும்.

மக்கட் கூட்டத்தின் மேய்ப்பனும் நின்று பெருந் தொண்டாற்றும் மறையவனின் தூய இயல்பை எடுத்தோதுங்கால், தாவீது இதுகாறும் இறைவனுக்கு ஈந்த இயல்புகளை யெல்லாம் புறம்பே வைத்து "கிருபை" என்னும் விலை மதித்தற் கொண்ணாப் பேரணி அணிந்து ஆநக்கித்தல், அவருடைய பக்தித் திறனையே விளக்குகின்றது. உள்ளொழும் பக்தியோடும், அகப்புறத் தூய்மையோடும் தாவீது இறைவனை அண்டிய காலம் இறைவனுடைய முக்கிய இயல்பை உய்த்துணர்ந்தார். தாம் பெற்ற இன்பத்தை நாமும் நுகர்ந்திட அவ்வுண்மையை நமக்கு மெடுத்தோதினர் எனினும் முரணாகாது. "அவருடைய கோபம் ஒரு நிமிஷம்; அவருடைய தயவோ நீடிய வாழ்வு" (30 : 5) என்றும், "உமதுகிருபை வான பரியந்தம் ......எட்டுகிறது" (57 : 10) என்றும், "கர்த்தர் உருக்கமும் நீடியசாந்தமும் மிகுந்த கிருபையு முள்ளவர்" (10 : 8 : 145 : 8) என்றும், இறைவனை அன்புவடிவ மாகவும், அருள்வடிவமாகவும் இரக்ஷிகருக்கு ஆயிரவாண்டுகளுக்கு முன்னரேயே தாவீது எடுத்தோதல் வியக்கத் தக்கதே. தாவீது மன்னர் அநுபவ வாயிலாகக் கண்ட உண்மையையே இரக்ஷகர் "கெட்டகுமாரன்" சரிதையின் வாயிலாக விளக்கினர் எனக் கூறினும் ஒவ்வும். ஆண்டவனை, கோப மிக்க கடவுளாகவும் வஞ்சம் நிறைந்த வஞ்சகராகவும் நீதியருளும் அரசராகவுங் கொண்டு அச்சத்துடன் மனிதர் அவர் நாட்டில், அணுகிய காலத்தில் தேவனை அன்புருவாக விளக்கிய மாண்பு தாவீது மன்னருக்கே உரியதெனினும் முரணாகாது.

அத்தகைய பேரன்பு திளைக்குந் தூயபரன் திக்கற்ற வர்களின் உற்ற துணை யென்னும் மெய்ம்மையைத் தாவீது "தேவன் திக்கற்ற பிள்ளைகளின் தகப்பனும் விதவைகளுக்கு நியாயம்விசாரிக்கிற வருமாயிருக்கிறார்." (68 : 5) என்றும் "சிறுமைப் பட்டவனுக்குக் கர்த்தர் அடைக்கலமானவர்" (9 : 9)என்றும் "திக்கற்றவர் களுக்குச் சகாயர் நீரே" (10 : 14) என்றும் அருளுடை யப்பனை - அமலனை யண்டி உய்த்துணர்த்தல் போற்றற் குரியதே யாம். ஆண்டவனை அன்பு நிறைந்த அப்பனாகப் பின்னர் இரக்ஷகர் "கெட்டகுமாரன்" சரிதையின் வாயிலாக எடுத்தோதலும் இப்பெருண்மையை அடிப் படையாகக் கொண்டேயாகும்.

இதுகாறும் ஆண்டவனுடைய அருமியல்புகளை யெல்லாம் ஓதி இறுதியில் அன்புருக் கொண்ட அப்பனை அமலனை வரித்த தாவீது மன்னர், "கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்" என்னும் மெய்யுரைக்கிணங்க "இரத்தப் பிரியரையும் சூதனையுங் கர்த்தர் அருவருக்கிறார். (5 : 6) என்றும் "அவர் நாள்தோறும் பாவியின் மேல் சினங் கொள்கிறார்." (7 : 11) என்றும் "துன்மார்க்கனையும் கொடுமையில் பிரியமுள்ளவனையும் அவருடைய உள்ளம் வெறுக்கிறது" (11 : 5) என எல்லாம் வல்ல இறைவனை யென்னைப் புல்லியரைவெறுத்திடும் இயல்பைத்தேவனுடையவர் என்று கூறுவது சிறிது முரணாகவே புலனாயினும், சிறிது ஆராய அவ்வுண்மை விளங்கும். இறைவனுடைய இயல்புகளை யெல்லாம் எடுத்தோதிய தாவீதுமன்னர் இறுதியில் இறைவன் அன்பு நிறைந்தவர் என்பதை இனிது விளக்கினும், தன்னடிப் பற்றி அறநெறிபற்றிய மெய்யடியார்களிடமே அன்பு நிறைந்தவரென்பதைக் குறிப்பால் விளக்கல் நோக்கற்குரியது. அமலன் அன்பு நிறைந்தவர் ஆகையால் நான் பாவியென உணர்ந்து பாவஞ் செய்யினும் அவர் என்னைக் கடியார் என்று மிருகநீர்மை மிகுந்த மக்கள்



மதிமோசம் போதல் நன்றன் றென உன்னியும் அறிவிலிகளுக்கு அமலன் மாட்டு அச்சத்தான் அன்பை மூட்ட வெண்ணியும், மறநெறியைப் பற்றியவர்களை ஆண்டவர் வெறுக்கின்றார் என முடிவுகட்டித் தாவீது கூறுகின்றார். தம்மை வெறுப்போரை வெறுக்கும் இயல்பும் ஆண்டவனிடத்தி லுண்டென்பது சிறிதும் முரணாகாது.

எனவே, இறுதியாகத் தாவீது மன்னர் இறைவனைத் தம் மெய்யடியார்களின் அன்பராகக்கொண்டார், கிருபை மிகுந்த கடவுளாக ஓர்ந்தார்; உருக்கமும் இரக்கமும் நிறைந்த இறைவனாக உணர்ந்தார்.

# இ டி யே று

## தீண்டாமையும் சட்டமறுப்பும்

தீண்டாமை விலக்குக்குப் பாடுபடுவதா அல்லது சட்டமறுப்பில் ஈடுபடுவதா என்பதைப் பற்றிச் சிலர் காந்தியடிகளைக் கேட்டனராம். அதற்கு அடிகள், அவரவர் மனச் சான்றைச் சுட்டிவிடை இறுத்திருக்கிறார். காந்தியடிகள் தீண்டாமை விலக்குத் தொண்டில் இறங்கி, டாக்டர் சுப்பராயன் மசோதாவுக்கு ஆக்கந் தேட முயன்று வருவதன் நுட்பத்தை உணர்தல் வேண்டும். அதை உணர்வோர் காந்தியடிகளைக் கேள்விகளால் தொந்தரை செய்யப்புகார். சட்டத்தை எதிர்நோக்குவது சட்ட மறுப்பாகா தென்பது வெள்ளிடை மலை. தீண்டாமை உள்ளவரை சட்டமறுப்புப் பேச்சோ மூச்சோ எற்றுக்கு? தீண்டாமை பாராட்டும் நாடு சுயராஜ்யத்துக்கு உரியதாகாது. இப்பொழுது நாட்டுக்கு வேண்டற்பாலது தீண்டாமை விலக்குத் தொண்டு; சட்ட மறுப்புத் தொண்டன்று. ஆதலால் தேசபக்தர்கள் காந்தியடிகளைக் கேள்விகளால் நெருக்காது, அவர் மேற்கொண்டுள்ள தீண்டாமை விலக்குக்குப் பாடுபடுவார்களாக. இனிக் கூடப்போகும் காங்கிரஸும் சட்டமறுப்பை வலியுறுத்தல் அரிது.

## இந்தியாவின் கல்வி நிலை

1931-ம் ஆண்டின் ஜனத்தொகைக் கணக்கின்படி இந்தியாவில் 1000-ம்பேர்களில் படிக்கவும் எழுதவும் தெரிந்த ஆண்மக்கள் தொகை 156 என்றும், பெண்மக்கள்தொகை 29 என்றும் அறிகிறோம். 1921-ம் ஆண்டுக் கணக்கின்படி ஆண் தொகை 122 ஆகவும், பெண் தொகை 18 ஆகவும் இருந்தன. இப் பத்தாண்டில் கல்லார் தொகை வளர்ந்ததா தேய்ந்ததா என்பது ஆராயற்பாலது. 1931-ம் ஆண்டுக் கணக்கினால் இந்தியாவில் ஆண்களில் 156, 243, 305 பேரும், பெண்களில் 165, 384, 698 பேரும் கல்லாதார் என்பது தெரிய வருகிறது. 1921-ம் ஆண்டுக் கணக்கு, ஆண்களில் கல்லாதார் தொகை 142, 623, 691 என்றும், பெண்களில் கல்லாதார் 150, 807, 889 என்றும் அறிவிக்கிறது. ஆகவே 1921-ம் ஆண்டினும் 1931-ம் ஆண்டில் கல்லாதார் தொகை 28, 196, 423, அளவிலேயே பெருகியிருக்கிறது. இந்தியாவின் ஜனத்தொகை 352, 837, 778. இத்தொகையில் கல்லாதார் தொகை 293, 431, 580. இஃது இந்தியாவின் கல்வி நிலையைக் குறிப்பதாகும். ஜனத்தொகைப் பெருக்களவை நோக்கக் கற்றார் தொகை பெருகவில்லை என்றே கூறுதல் வேண்டும். கிறிஸ்துவ சங்கத்தார்கள் உழைப்பு இல்லாவிடின் இன்னும் கல்விநிலை மோசமாயிருக்கும். கிறிஸ்துவ சங்கத்தார்களைப்போல மற்றவர்களும் முயன்றால் இந்தியக் கல்வி நிலை செம்மைபெறும். இந்தியத் தொழிலாளிகளில் பலர் கல்வி வாசனை பெறாதிருப்பது பெருங் குறைபாடு. கட்டாயக் கல்விமுறை சட்டமாக்கப்பட்டா

லன்றி இந்தியக் கல்வி நிலை சீர்பெறுது. வரப்போகும் சீர்திருத்த அரசியல் முறையில் கட்டாயக் கல்வி இடம் பெறின் நலன் விளையும்.

## இராசராச சோழன்

இப்பெயர்வாய்ந்த நூலொன்று நமது பார்வைக்கு வந்தது. இஃதொரு சரித்திர நூல். நமது நாட்டு மன்னர் களின் வரலாறுகள் பற்பல நூல்களில் பலப் பலவாறு சிதறிக் கிடக்கின்றன. அவை களைத் திரட்டிச் சரித்திர முறையில் ஒழுங்குபடுத்துவது மிகவும் அருமை. இவ்வருமைப் பாட்டில் தலைப்பட்டு உழைத்து வருவோருள் திருவையாறு அரசர் கல்லூரித் தமிழாசிரியர் L. உலகநாதப் பிள்ளையவர்களும் ஒருவ ராவர். இவரால் யாக்கப் பெற்ற நூல்க ளுள் "இராசராச சோழனும்" ஒன்று. இராஜராஜ சோழன், சோழ மன்னருள் சிறந்த ஒருவன். அவன் தன் வரலாறு தமிழ் மாணக்கர்கட்கும், தமிழ் நாட் டவர்க்கும், தமிழ்ச்சரித்திர உலகிற்கும் ஒருவித புத்துயிரளிப்பது என்று கூறு தல்மிகையாகாது. இராஜராஜசோழனது கல்வி, போர், அறம், கொடை, அரசி யல், கடவுள் நேயம் முதலியன இக் காலத் தமிழ் மக்களுக்குப் பயன்படு மாறு அவைகளைச் சரித்திர முறையில் ஒழுங்கு படுத்தித் தந்த திருவாளர் பிள்ளை யவர்கட்கு நமது நன்றியறிதல் உரியதாக. நூல் தெள்ளிய இந்தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது. விலை அணு 12. விலாசம்: L. உலகநாத பிள்ளை, தமிழ் விரிவுரையாளர், அரசர் கல்லூரி, திருவையாறு.

## சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள்

கொட்டையூர் சிவக்கொழுந்து தேசி கர் இயற்றிய பிரபந்தங்கள் என்னுந் தலைப்பிட்ட ஒரு நூல் வரப்பெற் ருேம். அந் நூற்கண், கோடீச்சுரக் கோவை, தஞ்சைப் பெருவுடையா ருலா, சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம் என்ற மூன்று பிரபந்தங்கள் அடங்கி யுள்ளன. இவைகளைச் சீர் செய்து வெளியிட்டவர், டாக்டர். வே. சாமிநாத ஐயர் என்றால், நூற்பதிப் பின் சிறப்பை விரித்துக் கூறவேண்டுவ தில்லை. ஆங்காங்கே ஐயரவர்கள் பொறித்துள்ள குறிப் புரைகளும், எடுத்துக் காட்டிய மேற்கோள்களும், பிற ஆராய்ச்சி மொழிகளும் இந்நூலைப் பயில்வோர்க்குப் பெருந்துணை செய்யு மென்பதில் ஐயமில்லை. நூலாசிரியர் வர லாறும், அரும்பத அகராதியும், பிறவும் நூற்கண் அணியப்பட் டிருக்கின்றன. பிரபந்தங்களில் சொற்சுவையும் பொருட் சுவையுந் தேங்கிக் கிடக்கின்றன. இவ் வெளியீட்டிற்குப் பொருளுதவிய திருப் பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் களாகிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமி நாத சுவாமிகளவர்களுக்குத் தமிழுல கங் கடமைப் படுவதாக. விலை ரூபா 2½. விலாசம்: காசிமடம், திருப்பனந் தாள்.




## ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துப் பிரசுரங்கள்

| | | ரு. | அ. |
|---|---|---|---|
| ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரின் திவ்ய சரிதம் (விரிவானது) | ... | 5 | 0 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம் (சுருக்கம்) | ... | 0 | 8 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண வசனாமிருதம் | ... | 1 | 8 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் 1003 உபதேச மொழி | ... | 1 | 6 |
| குருதேவர் வாக்கியம் ... | ... | 0 | 5 |
| நமது தாய்நாடு ... | ... | 0 | 8 |
| பக்தியோகம் ... | ... | 0 | 10 |
| கர்மயோகம் ... | ... | 0 | 12 |
| சிகாகோ பிரசங்கம் ... | ... | 0 | 5 |
| விவேகானந்தரின் கடிதங்கள் | ... | 0 | 8 |
| எனது போர் முறை ... | ... | 0 | 2 |
| பவாஹாரி பாபா ... | ... | 0 | 3 |
| ஜகஜ்வபா விளக்க வினாவிடை | ... | 0 | 13 |
| பக்தி மார்க்கம் ... | ... | 0 | 2 |
| முத்திநெறி ... | ... | 0 | 5 |
| எல்லாவற்றிலும் இறைவனைக் காணல் | | 0 | 2 |

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,
மயிலாப்பூர், சென்னை.

## கன்றுங் கனியுதவும்

பண்டிதர் - எல். உலகநாத பிள்ளை அவர்கள்

இயற்றியது

விலை அணு. 10.

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

இதற்கு ஒரு
வட்டமேசை
மகாநாடு
வேண்டுமா
?
ஊறறிந்த
உண்மை
யாயிற்றே!

# ருக்மணி குக்கர் அடுக்கு

சமையலுக்கு நிகரற்றது.
1, 2, 4, 6, 8, 12, 14 பேர்
களுக்கு ஏழு அளவுகள்
ரூ. 10-8, 14, 18, 23, 29
35, 41. விபரபுத்தகம் இனாம்.

இன்றே
எழுதுக.

ருக்மணி
குக்கர்
கம்பெனி,
இராயபுரம், (3)
சென்னை.

## வெள்ளி பஸ்பம்

வெள்ளை, வெட்டை, மூலங்கள், எலும்புருக்கி, சீரிழிவு, வெடி சம்பந்தருஷ்மம் பெரும்பாடு எல்லாம் தீரும். தளர்ந்த தாது வலுக்கும். மற்ற நோய்களுக்கும் மருந்துண்டு. வியாதியின் விபரம் எழுதினால் தக்க பரிகாரம் மருந்துடன் தெரிவிக்கப்பெறும். 5 நாளில் நிச்சயம் குணம் தெரியும். 40 நாள் மருந்தின் விலை ரூபா 2-8-0.

விலாசம் :—

சே. விசுவநாத செட்டியார்,

வைத்யம், வாலுகுடி, திருச்சி ஜில்லா.

## பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களாலும், ஆயிரக்கணக்கான பிரபுக்களாலும் தங்கமெடல்களும் நற்சாட்சிப் பத்திரங்களும் அளிக்கப்பெற்றவர். ஒரு ஜாதகம் நேரில் பார்க்க ரூபா 5. 1 வருஷ பலன் எழுத ரூபா 5. எதிர்காலத்தைப்பற்றின 3 கேள்விகளுக்கு ரூபா 1. மேல் கேள்வி 1க்கு அணா 8 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.)

பண்டித காழியூர் :

ம. ஸ்ரீநிவாசாச்சாரியார்,

1/34, லஸ் சர்ச் ரோட்,

மயிலாப்பூர், மதராஸ்.

## கெர்ப்ப எண்ணெய்

பெண்களுக்குண்டான பொறுக்கமுடியாத வயிற்று வலியையும், சூதக சம்பந்தமான கெடுதல்களையும் நீக்கி சந்தான விருத்தியைக் கொடுக்கும். ஒருமுறை பரீட்சியுங்கள். அநுபவத்தில் கைகண்டது.

**புட்டி ஒன்றுக்கு ரூபா 2.**

ஏராளமான நற்சாட்சிகள் பெற்றது

**C. மலையப்பசாமி,**

நித்தியானந்த வைத்தியசாலை,

பழநி S. I.

## வரப்பிர சாதம்

தேக அசதி, மலச்சிக்கல், ஞாபகக் குறைவு, நரம்புகளின் தளர்ச்சி, நபும்ஸத்வம் முதலிய வியாதிகளைப் போக்குவதில் எங்கள்,

ஆதங்கநிக்ரஹ மாத்திரைகள்

வரப்பிரசாதம் போன்றவை. மேலும் தேகத்தை வஜ்ர சரீரமாகச் செய்யும். 32 மாத்திரைகளடங்கிய டப்பி 1க்கு ரூபா 1. 5 டப்பிகள் ரூபா 4.

இனாம்! கேட்லாக் இனாம்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

26, பிராட்வே, மதராஸ்.

"நவசக்தி" ஆசிரியர்

திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

# இயற்றிய நூல்கள்

தமிழ் மணம் வேண்டுமா, விடுதலை வேண்டுமா,
பெண் உரிமை வேண்டுமா,
தீண்டாமை யொழிதல் வேண்டுமா,
சமரசம் வேண்டுமா, சன்மார்க்கம் வேண்டுமா,
இயற்கை யின்பம் வேண்டுமா,
வீரச்சுவை ததும்பப் பேசவும் எழுதவும் வேண்டுமா?

## வேண்டுமானால்

"நவசக்தி" ஆசிரியர் திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார் இயற்றிய நூல்களை வாங்கிப் படித்துப்பாருங்கள். அந்நூல்கள் வருமாறு:—

| | ரூ. | அ. |
|---|---|---|
| பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை .... | 2 | 0 |
| தமிழ்த் தென்றல் .... .... .... | 2 | 0 |
| முருகன் அல்லது அழகு .... .... .... | 1 | 0 |
| இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம் .... .... | 0 | 12 |
| மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் .... .... | 2 | 8 |
| என்கடன் பணிசெய்து கிடப்பதே .... .... | 0 | 8 |
| சைவத்தின் சமரசம் .... .... .... | 0 | 8 |
| சைவத்திறவு .... .... .... .... | 0 | 8 |
| கடவுள் காட்சியும் தாயுமானாரும் .... .... | 0 | 4 |
| தமிழ் நூல்களில் பௌத்தம் ... .... | 0 | 4 |
| சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து .... .... | 0 | 8 |
| நாயன்மார் .... .... .... .... | 0 | 3 |
| சைவ சமய சாரம் .... .... .... | 0 | 1 |
| இமயமலை அல்லது தியானம் .... .... | 0 | 6 |
| தமிழ்நாடும் நம்மாழ்வாரும் .... .... .... | 0 | 4 |
| உரிமைவேட்கை அல்லது நாட்டுப்பாடல்.... .... | 0 | 4 |
| முருகன் அருள் வேட்டல் .... .... .... | 0 | 4 |

இந்நூல்கள் எல்லாவற்றையும் ஒரே காலத்தில் வாங்குவோர்க்குத் தபாற்செலவின்றி மணியார்டர் கமிஷன் கழித்து வி.பி.யில் அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

வித்வான்
தண்முகக் கவிராயரின்

## மகாபாரதம் தமிழ் வசனம்

திருத்தமான உயர்ந்த பதிப்பு. இது சிறந்த பிரௌன் காகிதத்தில் சைகு அச்சிடப்பட்டு சலிகோ பயின்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூபா 3. (2) சபா, ஆரண்ய, விராட பர்வம் அடங்கியது ரூபா 5. மற்றவை அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ்,
323, திருவொற்றியூர் ஹைரோட், வண்ணாரப்பேட்டை, மதராஸ்.



எல்லா பாணிக்குகளுக்கும்
நம்முடைய
பெரிய தலைவன் யார் ?

## மதனமஞ்சரி

மாத்திரையே

பெரிய தலைவன். இது பலஹீனம், வலிச்சிக்கல், ஞாபகக் குறைவு, நரம்புகளின் தளர்ச்சி, இந்திரிய ஸ்கலிதம் முதலிய வியாதிகளைக் கண்டித்து, தேகத்தை வஜ்ர சரீரமாக்கி விடுகின்றது. ஒரு டப்பி விலை ரூபா 1.

இனாம்! வைத்திய வித்தியா இனாம்!!
விபரம் வேண்டுவோர்
எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

மதனமஞ்சரி பார்மசி,
1/94, சைனபஜார் ரோட், மதராஸ்.

ஏஜண்டு :—
M. S. மலீம், K. B. அண்டு கோ.
No. 14, டத்தோக்கிலமட் ரோட்,
பினங்கு S. S.



## காரைக்காலம்மையார்
## திருப்பாடல்கள்

திரு. வி. க. இயற்றிய
அரும்பதவுரையுடன்
விலை அணா 6.

---

ஆனந்தாதி
ஆனந்த அட்சயாந்த
73-வருட
## பஞ்சாங்கம்

விலை ரூபா 7.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதி முதலி தெரு,
இராயப்பேட்டை, சென்னை





## விஜய ரக்ஷித கவசம்

நீங்கள் கவலையற்று அச்சயின்றி வாழ விரும்பினால்—, நற்கியாதியுடனும் தன சம்பத்துடனும் புத்திர சந்தானத்துடனும் ஆரோக்கிய திட சரீரத்துடனும் இருக்க எண்ணினால் இந்த கவசத்தை அணியுங்கள். இது நியாயமான எக்காரியத்திலும் வெற்றியையும், தொழிலில் மேன்மையையும், குடும்ப வாழ்க்கையில் ஒற்றுமையையும் வேறு பல நலன்களையும் உண்டுபண்ணும்.

வெள்ளிக் கவசம் ரூபா 5. தங்கக் கவசம் ரூபா 15.

விலாசம் :—பிரபல் - கா. கோவிந்தாச்சாரி,
1/34, வன் சர்ச் ரோட், மயிலாப்பூர், மதராஸ்.



## அரிய தமிழ் நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| கந்தபுராணச் சுருக்கம் (மூலமும் பொழிப்புரையும் விருத்தியும்).... | 3 | 0 |
| முருகவேள் பதுவல் திரட்டு .... .... .... | 1 | 0 |
| திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் முதல் திருமுறை (அரும்பத வுரையும் சரித்திரக் குறிப்பும்) .... .... | 0 | 12 |
| முருகன் திருவருட்பா .... .... .... .... | 0 | 8 |
| தேவி தோத்திர மஞ்சரி .... .... .... | 0 | 4 |
| குசேலோபாக்கியானம் (மூலமும் அரும்பத உரையும்) .... | 1 | 4 |
| விநாயகர் பதுவல் திரட்டு .... .... .... | 0 | 6 |
| திருப்போரூர்ச் சந்நிதிமுறைத் திரட்டும், அரும்பத உரையும் கிளேஸ் .... .... .... .... | 0 | 5 |
| „ டிமை ஈப் .... .... .... .... | 0 | 3 |
| சிவபுண்ணியத் தெளிவு .... .... .... .... | 0 | 3 |
| காரைக்காலம்மையார் பதிகங்கள் (திரு. வி. க.) அரும்பதக் குறிப்புரையுடன் .... .... .... .... | 0 | 6 |

---

## சாதன சதுட்டயம்

முத்திமார்க்கத்திற்குரிய அருமையான போதனைகள்

மஹாபாரதத்தில் கூறியிருக்கும் பீஷ்மாசாரியாருடைய பெரிய தகப்பனார் தேவாபி எனும் சிவன் முத்தர், இப்போது இமயமலையில் மாஸ்டர் குதூமி என்ற பெயருடன் வீற்றிருக்கின்றார். இம்மகரிஷி ஸ்ரீமான் ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்குச் சிறு வயதில் கனிமொழிகளாகக் கொடுத்த உபதேச போதனைகளுக்கு ஸ்ரீமான் லெட்பீடர் அவர்களும் டாக்டர் அன்னிபெஸண்ட் அம்மையாரும் செய்த வியாக்கியான உரைகள், ஆங்கிலத்தினின்று சாதாரண தமிழ் நடையில் மொழி பெயர்க்கப்பட்டு "சாதன சதுட்டயம்" என்ற பெயருடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இந்நூல் இல்லற வாழ்க்கையிலிருந்து கொண்டே சான்று சாதனங்களைக் கையாள வேண்டிய முறையைக் காட்டுவதோடு தன்னைத் தான் அறியக்கூடிய விசார சாகரமாயுமிருக்கின்றது.

கிரௌன் பக்கம் 520 ; 29 அத்தியாயம் ; உயர்ந்த காகிதம். விலை ரூபா 3.

---

## திவ்ய ஞான தீபம்

இது, பாழ்வெளி - விளக்குமுறை - லோகங்கள் - புனர் ஜன்மவிருத்தி - கர்மவிருத்தி - மரணத்திற்குப்பின் - மார்க்கம் - தியானம் - ஞானசாதனம் - சீவன் முத்தர்கள் - குருநாதனைக் காணும் வழி - சித்தியடையும்படிகள் - ஞானபூமிகள் - முத்தர் நிலைகள் - மாட்சி முதலிய பொருள்களைப்பற்றி எளிய தமிழ் நடையில் எழுதப்பட்ட நூல். 330 - பக்கங்கள் கொண்டது. நல்ல பேதர்வெயிட் காகிதத்தில் அச்சிடப்பட்டது. விலை ரூபா 3.

---

## கந்தர் அநுபூதி

சென்னை, இராயப்பேட்டை வேத ப்ரவசன மந்திரத்து
சிவத்தியானானந்த மஹரிஷி யவர்கள் எழுதிய
கூடார்த்த தீபிகை

என்னும் புத்துரையோடு கூடியது. இதுவரை இவ்வகைத் தெளிவான அநுபூதி உரை வெளிவரவில்லையென்று படித்தோர் பலரும் கொண்டாடிக் கூறியுள்ளார். விலை ரூபா 1.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

Registered No. M. 1500. "NAVASAKTI"


## ஜெகப் பிரசித்திபெற்ற

# காமினியா சோப்புகள்

### காமினியா ஒயிட்ரோஸ் சோப்




உண்மையாக இந்த உயர்ந்த சோப், அதனுடைய ரோஜா புஷ்பங்களின் வசீகரமான வாசனையால் உங்களை ஆச்சரியப்படும்படி செய்யும். 3 கட்டிகள் உள்ள ஒரு பெட்டியின் விலை ரூபா 1.

### காமினியா சந்தன சோப்

சந்தனக் கட்டையைப்போன்ற வாசனையையும், பலரும் விரும்பும் படியான வாசனையையும் கொடுக்கிறது. இது மேனிக்கு சருமத்திற்கு மிகவும் நன்மை பயக்கக் கூடியது. 3 கட்டியுள்ள ஒரு பெட்டியின் விலை ரூபா 1.

### காமினியா லவெண்டர் சோப்

இச்சிறந்த சோப்புகள் உயர்ந்த சாமான்களால் சிறந்த முறையில் தயாரிக்கப்படுவன; மனோரம்மியமான வாசனை வீசுவன; தேகத்திற்கு அழகையும் மனதிற்கு மகிழ்ச்சியையும் அளிப்பன. அழகை விரும்புவோர்க்கு இது ஒரு வரப்பிரஸாதம் போன்றது. 3 கட்டி உள்ள ஒரு பெட்டியின் விலை ரூபா 1.

### டில்பகார் சோப்

சருமத்திற்கு வேண்டிய ரஸாயன முறைப்படி உள்ள வஸ்துக்கள் நிரம்பிய ஒரு மனோஹரமான சோப். இதன் அதிஅற்புத குணத்தை விஸ்தரிக்க முடியாது. இதனுடைய ஏராளமான புஷ்ப வாசனையால் ஸ்நான அறையை நந்தவனம்போல் செய்கிறது. இன்று மாத்திரம் இந்த உயர்ந்த டில்பகார் சோப்பைப் பரீக்ஷியுங்கள். 3 கட்டி உள்ள ஒரு பெட்டியின் விலை ரூபா 1.

வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்

மதராஸ் டிஸ்டிருபியூட்டர்கள் :—

**ஜே. எஸ். சேட் & கோ,**

நெ. 68, பைக்ராப்ட்ஸ் வீதி, திருவல்லிக்கேணி, சென்னை.

தயாரிப்பவர்கள் :—

**The Anglo-Indian Drug & Chemical Co., Bombay, 2.**


Edited & Published by T. V. Kalyanasundaran; Printed by T. V. Volaganathan at the Sadhu Press, 13, Ganapathi Mudali Street, Royapettah, Madras.

# நவசக்தி

திங்கள் வெளியீடு

'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு' 'என்கடன் பணிசெய்து கிடப்பதே'

சிலம்பு ௧௧ 1933ஆ பிப்ரவரி மீ பரல் ௪

உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| பூசோன விலாசம் ... ... | ... ௨௨௫ |
| பொன்னும் பொருளாதார நெருக்கடியும் | ... ௨௨௬ |
| சமரச சன்மார்க்க போதம் ... | ... ௨௩௧ |
| நீபெத்திய இராமாயணம் ... ... | ... ௨௩௪ |
| உடல்நல அறிவு ... | ... ௨௩௭ |
| ஜலம் ... ... | ... ௨௪௦ |
| தீண்டாதார் யார்? ... ... | ... ௨௪௧ |
| நாவீது மன்னரின் தனிக் கோள் ... | ... ௨௪௪ |
| நமது சிந்தனை ... ... | ... ௨௪௬ |
| சமாதியும் வீட்டையும் ... ... | ... ௨௫௨ |
| காதலால் கட்டுண்ட சாவி ... | ... ௨௫௫ |
| இடியேறு ... ... | ... ௨௫௭ |


வருடசந்தா

உள்நாடு ரூபா 3-8-0. வெளிநாடு ரூபா 4.

பாம்பன் ஸ்ரீ

ஸ்ரீமத்-குமரகுருதாச சுவாமிகள்

## இயற்றிய நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| சிவஞானதீபம் 2-ஆம் பதிப்பு | 0 | 8 |
| ஸ்ரீ சுப்பிரமணிய வியாசமும் குருசிட சம்பவ வரலாற்று வியாசமும் 1-ஆம் பதிப்பு. | 1 | 0 |
| வேதவியாசம் | 0 | 10 |
| சிவயாகஞவியாச மூலமும் முறையும் 2-ஆம் பதிப்பு. | 0 | 11 |
| பத்துப் பிரபந்தம் | 0 | 7 |
| தகராலய ரகசியமும், உரையாகிய சதானந்த சாகரமும் | 2 | 8 |
| பரிபூரணானந்த போதமும் உரையாகிய சிவசூரியப் பிரகாசமும் | 2 | 0 |
| சுத்தாத்வைத நிர்ணயம் | 0 | 3 |
| திருப்பாவும், உரையாகிய திட்பமும், குறிப்புரையும் | 10 | 0 |
| ஸ்ரீமத் குமாரசுவாமியம் | 5 | 0 |
| செக்கர்வேள் செம்மாப்பும், செக்கர்வே ளிறுமாப்பும் | 0 | 6 |
| சிறுநூற்றிரட்டு 6-ஆம் பதிப்பு | 0 | 6 |
| குமாரவேள் பதிற்றுப்பத் தந்தாதி 3-ஆம் பதிப்பு | 0 | 2 |
| குமரகுருதாச சுவாமிகள் பாடல் திருவலங்கற்றிரட்டு 1-ஆங்கண்டம் திருவலங்கற்றிரட்டு 2-ஆங் கண்டம் முதலியன அடங்கிய நூல் | 3 | 8 |
| ஆயைத்தி யைம்பதெண்ணூற் சேக்கன் செசகலிழ் | 0 | 2 |
| சண்முக சகச்சிரநாமார்ச்சனை | 0 | 4 |
| செவியறிவுறூஉ | 0 | 1¼ |
| வேத காவிலே வைபவம் | 0 | 2½ |
| பாம்பன்: ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகள் சரித்திரம் | 0 | 8 |
| வேத சரித்திரம் காவிலே | 0 | 12 |

## ஜோதிட நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| சிவ சோதிட சந்திரிகை ... | 1 | 8 |
| திற்பநூற் பொக்கிஷம் ... | 1 | 0 |
| சோதிடப்பாரம் சாரிதம் ... | 0 | 12 |
| உரோகாமிர்தபிகை ... ... | 0 | 12 |
| வீமேச்சர உள்ள முடையான் 2-ம் பாகம் ... ... | 1 | 0 |
| ஞான சோதிட சப்ததீக தீபம் ... | 2 | 0 |
| சோதிடக் கிஞ்சி காண்ட மூலமும் உரையும் ... ... | 0 | 6 |
| ஜோதிட ஆசிரியன் 1, 2, 3, 4 பாகங்கள் தனித்தனி ... | 1 | 0 |
| அந்த பலன் ... | 1 | 0 |

## வைத்திய நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| புலஸ்தியர் கற்பம் 300 ... | 1 | 0 |
| அகஸ்தியர் பன்னிருகாண்ட வைத்தியம் 200 ... ... | 0 | 12 |
| அகஸ்தியர் அமுத கலைஞானம் | 1 | 4 |
| அகஸ்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம் 360 ... ... | 0 | 12 |
| இராம தேவரென்ற யாகோபு சுண்ண சூஸ்திரம் 155 ... | 0 | 12 |
| ,, லோகச் செந்தூரம் 300-க்கு சூஸ்திரம் 150 .. | 0 | 10 |
| ,, லோகச் செந்தூரம் 300 ... | 0 | 12 |
| ,, யந்திர மந்திரம் 300 ... | 0 | 14 |
| ,, வாத வைத்தியம் 300 ... | 0 | 14 |
| ,, வாத சூஸ்திரம் 400 ... | 1 | 4 |
| ,, தண்டகம் 100 ... | 0 | 12 |
| ,, வைத்திய சூஸ்திரம் 150 | 0 | 10 |
| ,, வைத்தியம் 300 (மருந்து சந்திபம் நாடி விவரமும்) | 0 | 14 |
| ,, சுண்ணம் 600 ... | 1 | 8 |
| ,, வைத்திய சிந்தாமணி 700 | 1 | 8 |
| ,, வைத்திய கல்லாடம் ... | 1 | 4 |
| ,, சுண்ணம் 300 ... | 0 | 14 |
| சித்த வைத்திய அகராதி ... | 2 | 8 |
| திருவள்ளுவர் பஞ்சரத்தினம் ... | 2 | 0 |
| பதினெண் சித்தர்கள் வைத்திய வாதயோக ஞான சாஸ்திரத் திரட்டு... ... ... | 1 | 8 |
| அகஸ்திய முனிவர் பூரண சூஸ்திரம் | 0 | 12 |
| இராம தேவர் சிவயோகம் ... | 0 | 8 |
| அகஸ்திய முனிவர் கற்பமுப்புக் குரு நூல் 100-ம் மெஞ்ஞானமணி தீட்சை 100-ம் ... ... | 0 | 12 |
| கருவூரார் வாதகாவியம் 700 ... | 1 | 0 |
| சட்டை முனிவர் ஞானம் ... | 0 | 4 |
| அகஸ்தியர் வைத்திய பூரணம் 205 | 0 | 12 |
| நந்தீஸ்வரர் நிகண்டு ... ... | 0 | 12 |
| விஷ வைத்திய மாந்திரீக ஒன்பது விஷ ஆருடம் ... ... | 2 | 8 |
| அகஸ்தியர் இரண வைத்தியம் 134 முறைப்படி ... ... | 0 | 12 |
| அகஸ்தியர் நயனவிதி 1500 உரை காகமுனிவர் 200 ... ... | 1 | 4 |

முருகவேள் புத்தகசாலை,

இராயப்பேட்டை, சென்னை.


# நவசக்தி

'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு' 'என்கடன் பணிசெய்து கிடப்பதே'

சிலம்பு கங ஆங்கீரஸவருஷ மாசிமீ பரல் ௫


## பூகோள விலாசம்

வணக்கம்

அத்திமுகன் கழல்வணங்கி நாகலிங்கக் கடவுளரு வடிகள் போற்றி
புத்தமியா மறிய நாயகிபாதந் தொழுதேத்தி புவிமீ லாறு
வத்திரன்றன் சரண்பணிந்து சற்குருவி னிணைமலர்த்தாள் மனத்துள்வைத்து
வித்தக வாணிபி னருளால் பூகோள விலாசமதை விளம்ப லுற்றாம்.

தமிழ்மறைக் கழமும் - கமலையம் பதிவாழ்
ஞான சம்பந்தனை வணங்கின் - ஞான சம்பந்த பிள்ளை வீவிடலிதே.

### நூல்

பூரணமா யெங்கும் புணர்ந்துநின்ற மெய்ப்பொருளான்
ஆரணங் காணு மறிவரியான் —நாரணனும்
அன்ன முயர்ந்தே தாளுங் காணாவடி முடியான்
பன்னற் கரிய பசுபதியான் —பொன்னின்
மலையில்லா ரோர்குழையான் மாதவரைக் காக்க
மலையில்லான் வெள்ளி மலையான் —மெய்யதிருக்
கண்டங் கறுத்தான் கருதுமடி யார்வினையைக்
கண்டங் கறுக்குங் கருணையான் —அண்டமதிச்
5 செஞ்சடையான் கஞ்சுகியான் சேருத வஞ்சகர்தந்
நெஞ்சடையா னேகமென நின்றமியான் —பஞ்சமலத்
தன்னை யடைந்துழல்வோர் தங்கள் மலங்கடிந்து
தன்னையடை யப்பணிக்குந் தன்மையான் —பின்னொருவ
ரொப்பிலான் மெய்யடியார்க் கூழின் வினையிரண்டு
மொப்பிலான் மாவினுட னொன்றிடுவான் —செப்பும்
அருவமொரு நான்கா யருவுருவ மொன்று
முருவமொரு நான்கா யொளியாய்ப் —பொருவிலா
வையைந்து மூர்த்திகளா யட்டமா மூர்த்தமுமாய்க்
கையைந்து கொண்டு கொண்ட காரணத்தான் —மையுறுங்
10 கண்டன்மிரு கண்டுருண்மாற் கண்டன் றனக்காகக்
கண்டன்றனை யுதைத்த தாளினான் —கொண்டகதி
ராதவனின் றக்கினியை யாகமாய்க் கொண்டவன்முன்
றாதவருக் கெட்டா வதிதூரன் —போதங்க

மந்திலொன்று கொப்பே யகன்றவிடைத் தானடர்க்கான்
அந்திலொன்றைத் தன்முடிமே லாக்கினன்—மிந்நமத
னங்க மெரித்தா னடுபுலியின் றோல்தரித்தா
னங்கமைந்த மாலையென வேயணிந்தான்—பங்கமிலான்
றுனஞ்சை கொண்டா தரித்தான் கரைமமிழற்
தானஞ்சை கொண்டாடு மாதியான்—றனஞ்சா
வேழ முரித்தான் விறகுவிற்றான் மீனவர்கோன்
வாழமென்று வைகையிலே மண்சுமந்தான்—றுழாத
வாதி யனுதியா யப்பாலைக் கப்பாலாய்ச்
சோதியாய் நின்றருளுந் தொன்மையான்—பூதிதிகழ்
மேனியான் செம்பவள மேனியான் பூவைவள
மேனியாள் செம்பாக மேனியான்—றுறு
யகளமாய் நின்றானிவ் வண்டம் படைத்த
சகளமாய்த் தோன்றியருள் சத்தி—மகிழத்
திருவிளையாட் டாடச் சிருஷ்டித்த வண்டம்
வருமனந்த கோடியதின் மானே—பிருதிவியின்
தத்துவத்துக் குள்ள சகஸ்திரமாங் கோடியண்டம்
அத்திலோ ரண்டத் தளவதுவும்—ருத்திரர்கள்
தங்கும் புவனமொடு சாகரங்க ளோரேழு
மெங்கும் புகழுலக மீரேழுந்—தங்கவு
கண்டத் தியல்புங் களகமலை யின்சிறப்புங்
கொண்டபூ கோளமதைக் கூறக்கேள்—விண்டவனு

### யோசனையின் அளவு

எட்டிணைடை கொண்ட விடைதிரிசே ணுவிது
மட்டிரண்டு கொண்டான் மயிர்நுனியாந்—தொட்ட
மயிர்நுனியெட் டானல்நன் மானே 1இலீக்கை
பெயரும் இலீக்கையெட்டுப் பேனுங்—குயின்மொழியே
பேனெட்டுக் கொண்டாற் பெருநெல்லா மந்நெல்லுத்
தானெட்டோ ரங்குலமாந் தையலே—யானவிரல்
மூவெட்டுக் கொண்டால் முழமாகு மம்முழமு
மேவிட்ட நாலுகொண்டால் விற்கிடையாந்—தேவிட்ட
விற்கிடை யிரண்டுகொண்டா மேவுமிரண் டாயிரந்தெண்
டெற்குங் குரோச மெனவிசைப்பாம்—வற்கமுடன்
சொன்ன குரோசத் தொகைநாலு யோசனையா
மன்னுகின்ற வண்ட வகையினைக்கேள்—மின்னனையீர்

### அண்டத்தின் அளவு

குக்குடத்தி னண்டமெனக் கொண்டே யிருதலைபு
மிக்காய்க் குவிந்துபொன்போல் விட்டொளிருந்—தக்கவத
னெட்டின் கனங்கோடி யோசனையாங் கீழ்மேலி
னீட்டஞ் சதகோடி நிச்சயமாங்—காட்டுங்
குணக்கு முதற்குடக்கின் கூத்தின் குனித
மிணக்குஞ் சதகோடி யென்பர்—மணக்குழலீர்

# பொன்னும் பொருளாதார நெருக்கடியும்

[திரு. B. N. ராஜன் B. A. (Hons.)]

*(Research Scholar, University of Madras)*

இயங்கும் பொருளாதார நெருக்கடிக்கு இசைக்குங் காரணங்கள் எவ்வளவோ! எத்தனை பொருளாதார நூற்புலவோ ரிருப்பாரோ அத்தனையும் அதற்குக் கூடுதலாகவும் காரணங்களுங் கூறப்படுகின்றன. பண்டங்களை அதிகமாகப் பணித்துவிட்டனர் என்பர் சிலர். வேண்டா வொரு சில பண்டங்களைத் தேவைமீறி உற்பத்தி செய்துவிட்டனர் என்பர் என்றிரி கிலே (Henry Clay). உலகப்பெரும்போரால் விளைந்த வினை ஈதென்பர், உலக சமாதானம் உள்ளுவோர். போர்க்கடன் கொண்டு வந்தது இப்போர் அல்லலென்பர் ஜர்மனியிற் சிலர். சுங்கத்தால் வந்த தீங்கிதென்பர் வரியற்ற வாணிப நெறியாளர். பொன்னாசையாற்போந்ததென்பர்சிலர். வெள்ளியை வெறுத்ததால் விளைந்ததென்பர் சிலர். அரசியற் கிளர்ச்சியால் எழுந்ததென்பர் சிலர். அறுபதாண்டுப் பலனும் மாறி மாறிவரும் என விரிப்பர் பஞ்சாங்கப்பண்டிதர். ஏறக்குறைய இவ்வளவிற் சில பொருளாதார நூற் புலவரும் அறைகின்றனர். அரசாங்கத்தால் வந்ததென்பர் காங்கிரசாரிற் சிலர். அன்று இரயிலிற் பிரயாணஞ் செய்து கொண்டிருந்தபோது நாட்டுப் பக்கத்து ஒரு கனவான் - ஒரு வர்த்தகர் போல் காணப்பட்டார் - காந்தியால் வந்த தொல்லை யென்றார். கலியால் வந்ததென்பள் என் பாட்டி.

'காந்தி'யால் வந்ததென்றும், 'அரசாங்கந்'தால் வந்ததென்றும் கூறுங் கனவான்களுக் கெல்லாம் ஒரு விண்ணப்பம். இந்தப் பொருளாதார நெருக்கடி நமக்கு மட்டுஞ் சிறப்பாக வுள்ள ஒரு துன்பமன்று. இஃது உலகத்தையே வாட்டிவரும் ஒன்றாகும். 'தரித்திர நாராயண'னிடத்தில் அது கொஞ்சம் அதிகமாகத் தாண்டவமாடலாம். அதற்குக் காரணங் காந்தியா யிருக்கலாம்; மற்றவரா யிருக்கலாம். அதைப்பற்றி நாம் எடுத்துக்கொண்ட விஷயத்திற்குக் கவலையில்லை.

ஒருகால் காந்தி அடிகளும் திரு. எம். கே. ஆச்சாரியாவுமே இசைந்து விடினும், பொருளாதாரப் புலவர்கள் ஒருவருக்கொருவர் ஒருவரும் இசையப் போவதாகத் தெரியவில்லை. ஒவ்வொருவரும் வீறிட்ட சமய வாதிகளென்ன தாந்தாங் கண்டதே மெய்ந்நெறி, மெய்க்காரணமெனச் சாதித்து நிற்கின்றனர். ஆராரென்னென்ன போதித்தும் நம் நெருக்கடியோ ஒடுங்கியபாடில்லை. ஒன்றன்பின் ஒன்றாக அணியணியாய்க் காரணங்களை யெல்லா மடுக்கிவிட்டால், காரியத்தின் தன்மை தெளிவாய் விடுமா? முதலாவது, இந்த நெருக்கடி இன்ன தன்மையது என்று தெரிந்து கொள்ள வேண்டாமா? நோயின் முதலை நாடுமுன், நோயை அல்லது நோயின் தன்மையை அல்லவோ நாட ஆணையிட்டார் அறிவிற் பெரிய வள்ளுவர்?

உழவன் இந்த நெருக்கடியை எவ்வாறு உணருகிறான்? அவனுடைய விளை பொருள்களின் விற்கும் விலை இறங்கிவிட்டது. தொழிலாளி எவ்வாறு தெரிந்து கொள்கிறான்? அவன் உழைப்பின் விலையாகிற கூலி குறைந்து வருகிறது. வணிகன் எப்படி அறிந்து கொள்கிறான்? அவன் பண்டங்களுக்கு முன்னைத்தனைத் தேவை யில்லாமையாலே, அவைகளின் விலை குறைக்கப்படவேண்டியிருக்கிறது. அவன் முயற்சியின் விலையான இலாபமும் இறங்கிவிடுகிறது. ஆகவே இந்த நெருக்கடியின் அடிப்படையானதும் கண்கூடானதுமான தன்மை என்னவென்றால், எல்லாப் பொருள்களுடையவும், எல்லாப் பண்டங்களுடையவும், எல்லா உழைப்புகளுடையவும் விலை இறங்கிவிட்டது என்

பதேயாகும். இஃது எல்லோருக்கும் உள்ளங்கை நெல்லிக்கனி. இதைநிறுவிக் காட்டப் பல விரித்து நீட்ட முயலுதல் சூரியனைப் பார்க்கத் தீவர்த்தி பிடித்தது போலாகும்.

விலை வீழ்ச்சிதான் இந்த நெருக்கடியின் தெளிவான தன்மை யென்றால், இது பண சம்பந்தமான ஒரு தோற்றமாகவே இருக்கவேண்டும். விலை என்பது என்ன? ஒரு பண்டத்துக்கு இத்தனை பணம் அல்லது ஒரு பணத்துக்கு இவ்வளவு பண்டம் என்பது தானே. பண்டங்களையும் பணத்தையும் பிணைக்கிற ஒரு சொன்முறைதானே விலை என்பது. ஒரு சில பண்டங்களின் விலை மட்டும் இறங்கினால் வேறு ஏதாவது காரணத்தால் ஏற்பட்டது என்று சொல்லி விடலாம். நெல்விலை மட்டும் இறங்கினால் 'நல்ல மழை யடித்தது; பருமாவில் இந்தியரைத் தாக்கிவிட்டார்கள்; அதனால், பண்ணையாட்கள் கூலி குறைந்துவிட்டது' என்றெல்லாம் சொல்லமுடியும். ஆனால் உப்புத்தொட்டுக் கற்பூரம் வரைக்கும், எல்லாப் பொருள்களின் விலையும் ஒருங்கே இறங்கிவிட்டால், அப்பொழுது அது பண சம்பந்தமான ஒரு நிகழ்ச்சியாகத்தானிருக்கவேண்டும். ஆகவே, இந்தப் பண சம்பந்தமான துறையிலேயே நம் கவனத்தைச் செலுத்தவேண்டும்.

தனியனிற் பணத்தாலெந்தப் பயனுமில்லை. நீ யெனக்காயும் ஒரு பாலைவனத்தில் ஒரு கோணிப்பை நிறையப் பொன் வைத்துக்கொண்டிருந்தாலும் ஒரு வேளை உணவுக்கோ அல்லது ஒரு துளி நீருக்கோ அந்தப் பொன் உதவுமா? அந்தப் பொன்னை உடைத்துக் கடித்துச் சுவைக்கலாமா? பதினாயிர ரூபா நோட்டு பற்பொடி மடிக்கவும் பயன்படாதே. ஆகவே பணத்திற்குப் பெருமை யெல்லாம் அது பிறபிற பொருள்களோடு பிணைக்கப்பட்டிருக்கும்பொழுது தான் உண்டு. பணம் பல் வேறு பண்டங்களை யெல்லாம் நாம் பெறுவதற்கு ஒரு கருவியாயிருக்கிறது. ஆனால் அஃது ஒரு கருவியே; காரியமன்று. இதனாற் பணமென்பது வெறும் பொன்னன்று, உலோகமன்று, அண்டுக் கடுதாசியன்று, செக்கன்று, உண்டியன்று, அது பிறபொருள்களை நாம் பெறுவதற்கு உதவியாயிருக்குமொரு சக்தி. அதனுடைய உதவியால்வேறு பொருள்களின் விலைகளை யெல்லாம் அளவிடுகிறோம். அதன் மூலம் பொருள்களின் உண்மையான பெறுமானத்தை நிர்ணயிக்கிறோம். ஐந்து மாங்காய் ஒரு தேங்காய்க்கு நிகர், கல நெல் ஒருநாள் முழுவதும் செய்யப்படும் உழைப்புக்கு நேர், 100 மைல் இரயிற் பிரயாணத்துக்கு நேர் — என்றிவ்வாறு உலகிலுள்ள பொருள்களை யெல்லாம் ஒன்றோடொன்று ஒப்பிட்டுக் கொண்டிருப்பதற்குப் பதிலாக மதிநுட்பமுடைய நம் முன்னோர், அவை எல்லாவற்றிற்கும் பொதுவாகப் பணம் என்றொரு அளவு கோலைக் கண்டு, அதன் வழியாக ஐந்து மாங்காயின் விலை ஓரணா, ஒரு தேங்காயின் விலை ஓரணா என்று எளிதிலமைத்துக்கொண்டனர். ஆனால் இந்தப் பணத்திட்டம் நாடுதோறும், நாகரிகந்தோறும், காலந்தோறும் வேறுபட்டும் வரும்.

பணம் இரு பணிகளைப் புரிய எழுந்தது: ஒன்று; தன்னளவாய் மற்றைப் பொருள்களின் பெறு மதிப்பை யெல்லாந் திட்டஞ் செய்யப் பயன்பட்டு நிற்கிறது. இங்கு அஃது ஓர் அளவு கோலா யுதவுகிறது. அளவு கோலாயமையுங் காலே, பின்னு மொரு தொண்டையும் அது செய்து முடிக்கிறது. அதாவது, பண்ட மாற்றலில் வருந் துன்பங்களையும் அது அகற்றி நிற்கின்றது. பணம் புகாப் பண்டை நாளில், தேங்காயை யுடையவர், மாங்காயை விரும்பினால், தமது தேங்காயை மாங்காய்க்காரரிட மெடுத்துப் போக வேண்டும். மாங்காய்க்காரருக்கு அரிசியே அவசிய மென்றிருந்தால் இருவருக்கும் தத்தம் விளை பொருள்களிலிருந்தும் தம் தேவைகளை வேண்டும்போது பெறமுடிகிறதா? இரயில் ஆபீசிற் போய்க் கல நெல் கொடுத்தால்



இரயில்வே அதிகாரிகள், எங்களுக்கு நெல் வேண்டியதில்லை, சீமைப் பிராந்தி வேண்டுமென்றால், பிராசுதார் பிராந்தி வியாபாரி யிடம் போகவேண்டும். அவரும் எனக்கு நெல் வேண்டியதில்லை, ஊன் வேண்டு மென்றால், பாவம், பிராசுதார் ஊன் கடைக்கு ஓட வேண்டும்! இவ்வாறே போய்க்கொண்டிருந்தால் என்றுதான் நாம் விரும்புவதைப் பெறமுடியும்? இந்த மாதிரி ஒரு நிலையை நினைக்கவும் முடியவில்லையே. காட்டுமிராண்டி நிலையிலிருக்குஞ் சமூகத்துக்கு இந்தப் பழம்பண்ட மாற்றல் முறை போதுமானது. கடல் போல் விரிந்து கனவுபோல் வளருந் தேவைகளையுடைய நாகரிக சமுதாயங்களுக்கு இந்த முறை ஒவ்வுமா?

ஆகவே, பணம் என்பது பொருள்களின் மதிப்பைத் திட்டஞ் செய்தற்கெனப் பயன்படும் ஓர் அளவுகோலாகவும், கொடுக்கல் வாங்கல்களை எளிதாக்கும் ஒரு கருவியாகவுமிருக்கிறது.

பணம் பொருள்களின் மதிப்பை அளவிடுகின்றது. இந்தப் பணத்தின் மதிப்பை எப்படி அளவிடுவது? பொருள்களால். இந்த நியாயம் எப்படி இருக்கிறதென்றால், 'நீ யார்'? 'எங்கப்பா பிள்ளை' 'அவர் யார்'? 'அவர் எங்கப்பா' என்கிற முறையிற் பின்னிப் பின்னி நெய்க்குத் தொன்னை ஆதாரமா தொன்னைக்கு நெய் ஆதாரமா என்று வந்துகொண்டிருக்கிறது. ஆகவே இந்தப் பணத்தின் மதிப்பை யளக்க வேறெதுவுமில்லையா? இருக்கிறது. அந்தப் பணத்தின் மொத்தத் தொகையே பணத்தின் மதிப்பை அளவிடுகின்றது. பணம் அதிகரித்தால் பணத்தின் மதிப்புக் குறைகிறது. பணஞ் சுருங்கினால் அதன் மதிப்பு ஏறுகின்றது. உலகத்திலுள்ள பண்டங்களெல்லாம் ஒரே அளவாக இருந்து கொண்டிருக்கின்றன என்று வைத்துக் கொள்வோம். அவற்றின் தொகை கூடவுமில்லை, குறையவுமில்லை. மக்கள் கைப்புழங்கி வரும் பணம் மட்டும் இருபங்காய் அதிகரிக்கிறது என்றும் வைத்துக் கொள்வோம். கொடுக்கல் வாங்கல்களி லெல்லாம் இப்பொழுது பண்டங்களுக்கு நேராக முன்னிலும் இருபங்கு நாணயம் புகுந்துவிடுகிறது. முன் ஒரு பங்குப் பணம் எவ்வளவு பண்டங்களைப் பெறுமோ, அதே அளவு பண்டங்களைப் பெற இப்பொழுது இரண்டு பங்குப் பணம் வேண்டிவருகிறது. அதனால் பணத்தின் விலை நேர் பாதி குறைந்து விடுகின்றது. இது போலவே, பணத்தின் மொத்த தொகை குறைந்தக்கால், பண்டங்களின் விலை இறங்குகின்றது. பணத்தின் தன் மதிப்பு ஏறுகிறது. இங்குப் பண்டங்களின் அளவு அசையாதிருக்கிறது என்று வைத்துக்கொண்டதையும், கைப்பழகி வரும் நாணயம் மட்டுமே தன் தொகையில் மாறுபட்டதென்பதையும் நன்கு கவனிக்கவேண்டும்.

அப்படியானால், இப்பொழுது கைப்பழகிவரும் பணத்தின்தொகை முன்னிலிருந்து குறைந்துவிட்டதா?

2500 வருஷங்களுக்குமுன், முதன் முதலாக மனிதன் ஓர் உலோகத் துண்டினைக் கண்டித்து அதில் முத்திரையிட்டு நாணய மென்று புகுத்தினான். இந்த அரிய பெரிய புதுமையைக் கண்டுபிடிக்கு முன் மனிதன் என்ன செய்தான்? பண்ட மாற்றல் நிலையிலிருந்து நேராக உலோக நாணய நிலைக்குக் குதித்துவிட்டானா என்ற கேள்விகள் பிறக்கலாம்.

பண்ட மாற்றல் முறை நிலவிய பழம் பண்டைக்காலத்துக்கும், உலோக நாணயம் புகுந்த பழம் புதுக் காலத்துக்கு மிடையே மனிதன் பலவிதமான பொருள்களை நாணயத்திற்குப் பதிலாக வழங்கி வந்தான். அந்த நாளில் நட்கன்று காலிகளும், கடன் முத்தங்களும், பால்களும், வன விலங்கின் தோல், கொம்பு முதலியனவும்—இன்னும் என்னென்ன பொருள்களெல்லாமோ நாணயத்தின் பணியைப் புரிந்துவந்தன. இன்று உபசாரமாக வழங்கப்படும் தாம்பூலத்திற்கோ அல்லது சுருட்டிற்கோ இன்றியமையா உயர்

கூறின நறுமணங்கமழ் புகையிலையும், ஒருநாள் நாணயமாக வழங்கிவந்ததாம்! இந்தப் பண்டை இடைக்காலத்திற்குப் பிறகே உலோக நாணய காலம் புகுந்தது.

பிறகு, 17-ம் நூற்றாண்டில் இன்னும் புதிதாக ஒரு நாணயம் புகுத்தப்பட்டது. இதுவே காகித நாணயம் அல்லது நோட்டு. கடைசியாகச்சென்ற நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வாணிப உலகத்தில் சுதந்திரமுஞ் செல்வமுஞ் செறிந்த நாடுகளெல்லாம் தத்தம் அரசாங்க உதவியால் பொன்நிலை (Gold Standard) நிறுவின. தத்தம் நாணயத் திட்டம்குறித்த ஓரளவு பொன்னுக்கு நிகர் என்று சட்ட மூலம் வகுத்தனர். யார் போய் அந்த நாணயத்தைக் கொடுத்துத் தனக்குப் பொன் வேண்டுமென்று கேட்டாலும் அரசாங்கம் சட்டப்படியான நிரக்கின் படிக்குள்ள பொன்னைக் கொடுக்கவேண்டும். இந்தத் தொழிலை அரசாங்கமே நேராகச் செய்துவரவில்லை. அந்தந்த அரசாங்கம் நிறுவிய மத்திய பாங்கியே இந்த வேலையைச் செய்யக் கடமைப்பட்டது. அதன் அதிகாரிகளே ஒரு நாட்டிற்கு வேண்டும் நாணயத்தை உற்பத்தி செய்து வழக்கில் புகுத்துபவர்கள். அவ்வாறானால் அரசாங்கம் மனம்போல் எவ்வளவு வேண்டுமானாலும் நோட்டு நோட்டாக அடித்துவிடக் கூடாதாவென்று அநேகர் ஒருகேள்வி எழுப்பலாம். அப்படி அளவில்லாமல் அடித்தால் அந்த நோட்டிற்கு நேராய்ப் பொன் கேட்டால் கொடுக்கத் தயாராயிருக்க வேண்டுமே. அப்பொழுது மத்திய பாங்கியில் பொன்னும் அளவற்றிருக்கவேண்டுமே. அப்படி அரசாங்கத்தார் பொன் கொடுக்க மறுத்துவிட்டால், பிறகு அந்த நாணயத்திற்கு மதிப்பு எங்கே? அதுபற்றியே, நாணயம் மிகுந்தால் பணத்தின் மதிப்பு குறையும் என்று முன்பே சொல்லப்பட்டது.

ஆனால் சாதாரண காலத்தில் எல்லா ஜனங்களும் ஒன்றாகப் போய்த் தத்தம் நோட்டு முதலிய நாணயங்களுக்கு நேராக 'எங்களுக்கு உங்கள் சட்டப்படிக்குள்ள பொன்னைக் கொடுங்கள்' என்று கேட்கப் போவதில்லை. ஆகவே அரசாங்கம் உற்பத்தி செய்திருக்கிற நோட்டின் தொகைக்குச் சரிசமான அளவுபொன்னும் ஆதாரமாக வைத்துக் கொள்வதில்லை. ஓரளவு பொன்னையே ஆதாரமாக வைத்துக் கொண்டாற் போதும். இந்த அளவு நாடுதோறும் வேறாயிருக்கின்றது. சில நாடுகளில் 40 சதம் பொன் ஆதாரமாய் வைத்திருக்கிறார்கள். அதாவது, 100 பவுன் நாணயம் வழக்கிலிருந்தால், 40 பவுன் பெறுமான தங்கம் ஆதாரமாக அப்படியே மத்திய பாங்கின் கருவூலத்திற் கிடக்க வேண்டியது. இப்படியே வேறு சிலர் 45 சதமென்று கொண்டிருக்கிறார்கள். பொது ஜனங்களுக்கு 'நாம் கேட்கிற போது பொன் கிடைக்கும்' என்ற நம்பிக்கை யிருந்தால், எவ்வளவு சிறு அம்சம் பொன்னும் ஆதாரமாக விருந்தாற் போதுமானது.

இவ்வாறு தத்தம் நாணயத் தொடரை ஒரு குறித்த அளவு பொன்னோடு பிணைத்துச் சட்டப்படி இரண்டுக்கும் ஒரு நிரக்குக் கண்டபோது, அந்தந்த அரசாங்கங்கள் கருதியதென்னவென்றால், பொன்னின் விலை மாறாத இயல்பினது; ஆதலால் நம் நாணயத்தின் மதிப்பும் மாற்றம் பெறவே செய்யாது என்பதே. இது பெரும் தப்பான எண்ணம். மற்றப் பண்டங்களின் விலை எப்படி மாறுகின்றதோ அதேபோல் பொன்னின் விலையும் மாற்றமடைகின்றது. மக்கட்கு மிகுதியான பொன் வேண்டிவந்தால் பொன்னின் விலை ஏறலாம்; பொன் விளைவு குறைந்தாலும் விலை ஏறலாம்; கூடினால் அதன் விலை குறையலாம்.

உலகப் பெரும்போர் வந்தது. இந்தத் தப்பான அடிப்படைமேல் கட்டப்பட்ட பொன் நிலை என்னும் பெரும் பெரும் அழகிய கட்டடங்களெல்லாம் குலைந்து விட்டன. எல்லா நாடுகளும் பொன் நிலையிலிருந்து காகித



நிலைக்கு வந்து விட்டன. அதாவது, பொன் ஆதார மில்லாமலே காகித நாணயம் அச்சிடப்பட்டு வருவதாயிற்று. ஆனால் இந்தக் காகித நாணயத்தின் மதிப்பை அளந்து வந்தது அதன் மொத்தத் தொகையே யாகும். காகித நாணயங்கள் தொகை அதிகரித்ததினாலே, அவற்றின் பெறுமதிப்பும் குறைந்துபட்டது. போர் கழிந்ததும் மீண்டும் பல நாடுகளும் பொன் நிலையை நிறுவின. ஆனால் இப்பொழுது நிறுவப்பட்ட பொன் நிலைக்கும் போரின் முன் நிலவிய பொன்நிலைக்கும் பெயரளவில் தவிர வேறெதிலும் ஒற்றுமை கிடையாது. உண்மையில் போரின் பின் நிறுவப்பட்ட பொன்நிலை, டாலர் நிலையே. ஏனென்றால், போர்க்காலத்தில் தன்னுடைய தனி நிலையில் அமெரிக்கா அளவில்லாத பொன்னைத் திரட்டிக்கொண்டது. ஆகவே, அமெரிக்கா அரசாங்க அதிகாரிகளுக்குத் தம் நாணயத் தொடரான டாலருக்கு என்ன மதிப்பு கொடுக்கவேண்டுமென்று தேவையோ அதை மற்றவர்கள் கொடுத்து வந்தார்கள். மனம்போல் குறைக்கவும் கூட்டவும் அவர்களுக்குப் போதுமான பொன் சொத்திலிருந்தது. இதனால் என்ன நேர்ந்ததென்றால், டாலர் தகப்பன் சாமியாகிவிட்டது. பொன்னின் விலையைப் பொறுத்து டாலர் மதிப்பு இருக்க வேண்டு மென்பது போக, டாலரின் மதிப்பைப் பொன் பின் பற்ற வேண்டு மென்கிற நிலைக்கு வந்துவிட்டது. மற்றை நாட்டு நாணயத் திட்டங்களெல்லாம், பொன் நிலையில், பொன்னோடு பிணைக்கப்பெற் றிருந்ததால், அவைகளின் விலையும் இறுதியாக டாலரின் விலையைத் தழுவ வேண்டி வந்துவிட்டது. டாலர் பொன்னையாள, பொன் மற்றை நாணயங்களை ஆள, முடிவில் டாலரே எல்லா நாட்டு நாணயங்களுக்கும் வல்லரசாய்த் திகழ்ந்தது.

இந்த டாலர் ஏகாதிபத்தியத்திலிருந்துதான் நம் உலகத்தின் இன்றைய துன்பம் மூண்டது. 1928 ஜூன் முதல் 1929 ஜூன்வரை அமெரிக்கா சமஷ்டி ஆதார மத்திய பாங்கிகள் கடன் கொடுப்பதைச் சுருக்க ஆரம்பித்தன; இதற்காக வட்டி விகிதத்தை 4½ சதத்திலிருந்து 6 சதம்வரை உயர்த்தின. இது வியாபாரிகளையும், பண்டங்கள் தோற்றுவிப்பாரையும் தாக்கியது. ஒவ்வொருவரும் இன்னும் விலை விழுமோ என்று பயந்துகொண்டு தொழிலையும், வர்த்தகத்தையும், முன்னைக் கொள் முதல் பண்ணுவதையும் சுருக்கிவந்தார்கள். இதனால் விலை நிலை இன்னும் அதிகமாக இறங்கியது. இப்படியாக 1929 இலையுதிர் காலமுதல் இன்றைவரை நாளுக்குநாள் நலன் தேய்ந்து பொருள்புரி உலகம் நலிவு பெற்றுக் கொண்டே வருகின்றது. அமெரிக்க மத்திய பாங்கிகள் தம் குற்றத்தை யுணர்ந்து 1930-ம் ஆண்டின் கடைசியில் திரும்பவும் தம் வட்டி விகிதத்தைக் குறைக்க முன் வந்தன. 2 சதம் வரை இறக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது வந்த இந்தத் தாராளச் செய்கை செத்தவன் வாயில் மருந்து கொடுத்தது போலவே ஆயிற்று.

பிரான்சும் அமெரிக்காவைப் பார்த்துக் கற்றுக்கொண்டது. 1928 முதல் 1931 வரைக்கும் சுமார் 3 வருஷகாலத்தில் உலகத்திலுள்ள பொற்கனிகளெல்லாஞ் சேர்த்து எவ்வளவு பொன் விளையுமோ அவ்வளவு பொன்னை இரண்டரை ஆண்டில் அது தனக்கே யாக்கிக் கொண்டது.

இவ்வாறு பொன் இவ்விரு நாடுகளுக்கும் போந்தது எப்படி? அவர்கள் கொள்ளை அடித்துக் கொண்டார்களா? அப்படி ஒன்றுமில்லை. போர்க்காலத்தில் போரில் மும்முரமாய் நின்ற சில அரசாங்கங்களுக்கு இவ்விரு நாடுகளும் கடனளித்திருந்தன. அந்தக் கடனின் வட்டி, முதலில் ஒரு பாகம் முதலியன திருப்பிக் கொடுக்கப்பட்டன. இதனால் தான் இந்த நாடுகளுக்குப் பொன் குவிந்தது. இது நியாய வழியில் வந்த பொன்னே யானாலும், அதை யாருக்கும் உதவாமல் ஈயாதான் தேட்டைப் போல் பூட்டி வைத்திருப்பதால் தமக்

கும் நன்மையில்லை; பிறருக்கும் எவ்வளவோ துன்பம் என்றாயிற்று. இந்தப் பொன் மட்டும் மற்றை நாடுகளிலெல்லாம் நிரந்து அந்தந்த நாட்டின் அவசியத்துக்கு ஏற்பப் பரந்து கிடந்திருக்குமானால் இந்தப்பாழும் விலை வீழ்ச்சி இவ்வளவாய் வந்திருக்குமா? தவிரவும், பிரான்சும் அமெரிக்காவும் - தாம் - கடனாளி நாடுகளிலிருந்து பெற வேண்டும் பொன்னைப் பண்டங்களின் வடிவாய்க் கொள்ளக்கூடாதா? அந்தப் பண்டங்கள் தம் நாட்டுள் வாரவொட்டாமல் எழுப்பியிருக்குஞ் சுங்கச் சுவரினையாவது சிறிது குறைத்திருக்கக் கூடாதா? அல்லது, தாம் பெற்ற பொன்னை மீண்டும் அயல் நாடுகளுக்கு நீண்டகாலக் கடனுக்கு உதவக் கூடாதா? அல்லது, அந்தப் பொன் தான் தனக்குப் பயனில்லையே, அப்பொழுது அதை வேண்டாமென்று சொல்லிவிடக் கூடாதா? உலக க்ஷேமத்தைமட்டும் ஓரளவு பொருட்படுத்தியிருந்தால், எவ்வளவோ எவ்வளவோ செய்திருக்கலாம். மேற்கூறியவாறு, பொன்னெல்லாம் பல பல நாடுகளுக்குப் பயனற்றுப்போனது மன்றி, பொன்னின் மொத்த விளைவும் வரவரக் குறைந்தே வருகின்றது. 1929-ல் அமெரிக்காவும் பிரான்சும் அளவுக்கு மிஞ்சிப் பொன் கொள்ளவே, பொன்னின் விலை ஏறத் தொடங்கியது. விலை நிலை மாறாமல் ஒரே அளவில் இருக்க வேண்டுமென்று விரும்பினால், உலகத்திலிருக்கும் பொன்னின் தொகையில் மூன்று சதம் வருஷா வருஷம் அதிகரித்துக் கொண்டே வரவேண்டுமென்று பெரிய பொருளாதார நூற்புலவரான குஸ்டாவ் காஸல் (Gustav Cassel) என்பவர் கணக்கிட்டிருக்கிறார். ஆனால் உண்மையில் இந்த 3 சதம் ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்படுவதில்லை. 2 சதமே சேர்ந்துகொண்டு வருகிறது. இனி வரும் சுமார் 20 ஆண்டுகட்கெல்லாம் வருஷா வருஷம் உற்பத்தியாகும் பொன்னின் தொகை குறைந்து கொண்டே வருமென்றும், அதற்கு எவ்வழியிலாவது பரிகாரங் கண்டு பிடியாவிட்டால் பொருளாதார நெருக்கடிகள் தோன்றிக் கொண்டே வருமென்றும் அகில உலக சங்கத்திலிருந்து நியமிக்கப்பட்ட ஒரு குழுவினர் கணக்கிட்டிருக்கின்றனர்.

ஆகவே, இதற்கு இனி நாம் செய்ய வேண்டுவதென்ன? எவ்வெவ் வழிகளிலெல்லாம் பொன்னைச் செட்டாக உபயோகிக்கலாமோ அந்தச் செட்டு நெறிகளையெல்லாம் கடைப் பிடிக்க வேண்டும். நகைகள் செய்வதையும், தெய்வங்களுக்குப் பொன்னைப் பூசுவதையுஞ் சிறிது குறைக்க வேண்டும். தங்க நாணயங்கள் எந்தெந்த நாடுகளில் அன்றாடம் காசாய் வழங்கப்படுகின்றனவோ அங்கங்கெல்லாம் அவற்றை வழக்கிலிருந்து ஒழிக்க வேண்டும். நம் நாடும் அண்மைக் காலத்தில் பொன் நிலை நிறுவப்போகிறது; மத்தியபாங்கி காணப் போகிறது. அந்தக் காலத்தில் தங்க நாணயம் வேண்டும் வேண்டுமென்று மயங்கிக் கூக்குரலிடக் கூடாது. நோட்டுகள் முதலிய காகித நாணயங்களை அதிகமாக வழக்கில் கொண்டுவர நம் மக்கள் பழகிக் கொள்ள வேண்டும். 1925 முதல் ஆங்கிலேயர் தங்க நாணயத்தை அன்றாடம் வழக்கிலிருந்து நீக்கி விட்டனர். இப்படியே ஒவ்வொரு நாடுஞ் செய்யவேண்டியது. இப்படிச் செட்டினால் திரளும் பொன்னெல்லாம் மத்திய பாங்கிகளில் அளவற்ற காகித நாணயங்களுக்கு ஆதாரமாயுதவிப் பணவறுமையைப் போக்கக்கூடும்.

பொன்னைப் பொதுவாகச் செட்டு நெறியால் சேர்ப்பது மன்றி, அதைப் பல பல நாடுகளும் சம முறையில் கையாள வேண்டும். இஃது எளிதில் நடவாத காரியமாகவே இருக்கிறது. உலகிலுள்ள எல்லா மத்திய பாங்கிகளும் ஒன்றாய்க் கலந்து தத்தமக்கு ஆதாரமாக வேண்டும் பொன்னினளவு இவ்வளவு என்பதை நுட்பக் கண்டு ஓர் உடன்பாட்டுக்கு வரவேண்டியது. இஃது என்று நடக்கப்போகிறது? பொருள் புரி இயக்கங்களுக்கும், மத்திய பாங்கித் தலைவர்களுக்கும் பின்னே கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டு அரசியல் நிபுணர்கள் நிற்கிறார்களே, அவர்கள் உலக சமாதானமும் க்ஷேமமும் வர விடுவார்களா? அப்படி வந்து விட்டால் அவர்கள் வேலையும் புகழும் அற்பமாய் விடுமல்லவா?



அதனால் நெருக்கடி நீங்கும்வரை இங்கிலாந்து செய்ததுபோல் மற்றை நாடுகளுஞ் செய்வதுதான் மேல். பொன் நிலையை ஒரே அடியாய் உலகெங்குங் குலைத்துவிடுதல், உலக மத்திய பாங்கிகளெல்லாம் ஒன்று சேர்ந்து இவ்வளவு பொன் ஒவ்வொரு பாங்கிக்கும் ஆதாரமாயிருக்கவேண்டுமென்று வரையிட்டாலுங்கூட, ஆதாரம் ஆதாரமாயிருக்க வேண்டியது தானே. அப்பொழுது அந்தப் பொன் சும்மாதானே இருக்கிறது. ஆகவே, இந்த நிலையில் பொன் நிலையை உலகெங்குந் தகர்த்தெறிவதே மேல். வேறு நிலையைப் பிறகு பார்த்துக் கொள்வோம்.

# சமரச சன்மார்க்க போதம்

(தொடர்ச்சி)

## IV. குருமார்கள்

(குறிப்பு: குருமார்களைப்பற்றிய சில குறிப்புகள் முன்னே பொறிக்கப்பட்டன. அவைகளை நேயர்கள் கீழ்வருவனவற்றுடன் சேர்த்துப் படிப்பார்களாக. இப்போதம் நூல் வடிவம்பெறும் போது யாவும் ஒழுங்குமுறையில் செப்பஞ் செய்யப்படும்.)

1. குருமார்கள் சத்தெனும் இறையும் அல்ல; மக்களுமல்லர்.

2. இறை, வடிவம் இல்லாதது; குருமார்கள் வடிவம் உடையவர்கள். இறைக்கு அவதாரமில்லை; குருமார்களுக்கு அவதாரமுண்டு.

3. குருமார்களுக்கு வழங்கப்படும் பெயர்கள் சில, சில இடங்களில் இறைக்கும் வழங்கப்படுகின்றன. அப் பெயர்களைக் கொண்டு கடவுள் அவதாரக் கதைகள் புனையப்பட்டன. நாமரூபமில்லாத பரம்பொருளை எப்பெயரிட்டு அழைத்தாலென்ன? தோற்றக் கேடு இல்லாதது அதன் தன்மை என்பதை மட்டும் மறத்தலாகாது.

4. உலகில் கடவுளைக் கண்ட கதைகள் பல சொல்லப்படுகின்றன. அவைகள் யாவும் குருதரிசனக் கதைகளேயாகும். பரம்பொருள், தனியே ஓர் உருவந் தாங்கி வருவதன்று; அது நாமரூபமின்றி, போக்கு வரவின்றி, அசைவின்றி, எங்கும் நீக்கமற நிறைந்து நிற்பது; அஃது இயற்கையை உடலாக்கொண்டு, குருமார்கள் நெஞ்சத் தாமரையில் ஒளிர்ந்து, மேலுங் கடந்து நிற்பது. அது மனவுணர்வு கடந்த நிலையில் அநுபவ மாத்திரையாய் விளங்குவது.

5. குருமார்களும் பிறக்கிறார்கள்; மக்களும் பிறக்கிறார்கள். ஆனால் அவர்கள் பிறப்புக்கும் இவர்கள் பிறப்புக்கும் வேற்றுமையுண்டு. குருமார்கள் அவசியம் நேரும்போது பிறப்பவர்கள்; மக்கள் பிறப்பு அத்தகையதன்று. குருமார்கள் ஞான உணர்வுடன் பிறப்பார்கள்; மக்கள் அஞ்ஞானத் தொடக்குடன் பிறப்பார்கள். குருமார்கள் உலக நலங்கருதிப் பிறப்பார்கள்; மக்கள் அவ்வுணர்வுடன் பிறப்பவர்களல்ல. குருமார்கள் வழிகாட்டிகள்; மக்கள், அக் குருமார்கள் வழிபற்றி நடப்பவர்கள். குருமார்கள் எல்லாஞ்செய்ய வல்லவர்கள்; மக்கள் எல்லாஞ்செய்ய வல்லவர்களல்ல. இன்னோரன்ன வேற்றுமைகள் பல உண்டு.

6. குருமார்கள் நுண்ணுடலுடையவர்கள். அவ்வுடல் மன உணர்வுடன் வாழும் மக்கட்குப் புலனாகாது. இயற்கைத் தியானத்தில் முதிர்ச்சி பெற்ற

மக்கட்கு அப்பொன்னுடல் புலனாகும்.

7. குருமார்க ளெல்லாரும் ஒரே திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர். அவர்களுக்குள் உயர்வு தாழ்வு கற்பித்தல் கூடாது. குருமார்களில் உயர்வு தாழ்வு கற்பிப்போருக்கு உண்மை ஞானம் விளங்காது.

8. குருமார்கள் வடிவில் வெவ்வேறு பட்டவர்கள் போல் காணப்படுவார்கள். உணர்வில் அவர்களெல்லாரும்ஒருமைப் பாடுடையவர். மனவுணர்வு கடந்த நிலையில் அவ்வொருமைப்பாடு நன்கு புலனாகும்.

9. குருமார்கள் அனைவரும் நுண்ணிய பொன்னுடலுடையவர். அவர்கள் அந்நிலையில் நின்றே உலகுக்கு நலஞ்செய்துவருகிறார்கள். சிலர் அவசியம் நேரும்போது பருவுடல் தாங்கியும் நலஞ்செய்வர். அப்பொழுதும் அவர்கள்பால் நுண்ணுடலுணர்வே நிலைத்து நிற்கும்.

10. நுண்ணுடல் நிலையில் குருமார்கள் மோனத்தால் உண்மையைக் குறிப்பாக உணர்த்துவார்கள். இம் மோனம், இயற்கைத் தியானத்தில் முதிர்ச்சி பெற்றவர்க்குக் காட்சியாகும். அக்காட்சி கண்ட ஞானிகள் அதை உலகுக்கு வெளியிட்டுள்ளார்கள்.

11. பருவுடல் தாங்குங் குருமார்கள் போதனையினுடைய [illegible] அவ்வப்போதைய உலகம் விரும்பும் முறையில் சன்மார்க்கத்தை விளக்கிச் செல்வார்கள். அப்போதனைகளை அவர்களாகக் கொள்ளுதல் ஒழுங்கு.

12. குருமார்கள் நுண்ணுடல் நிலையில் குறிக்கும் மோனம், மனங் கடந்த ஞானிகட்குக் காட்சி யாவதால், அதன்கண் வேற்றுமை தோன்றுவதில்லை. பருவுடல் தாங்கிய நிலையில் குருமார்கள் அருளும் போதனைகளில் வேற்றுமை தோன்றுவதைப் பற்றி உலகம் மலைவதுண்டு.

13. குருமார்கள் போதனைகள், காலதேச வர்த்தமான நிலைமைகட் கேற்ற முறையில் வெளி வருதலால், அவைகளின் தோற்றத்தில் வேற்றுமை காணப்பெறுதல் இயல்பே.

14. மக்கள் பிறப்புவகையில் ஒருமைப்பட்டவர்களா யிருந்தாலும், அவர்கள் சிறப்புவகையில் ஒருமைப்பட்டவர்களாயில்லை. மக்கள் மனோநிலை, வழக்கவொழுக்கம், உடை, உணவு முதலியவற்றில் வேற்றுமைப்பட் டிருத்தல் கண்கூடு. இப்பலபட்ட மக்கட்குப் பலபட்ட போதனைகள் தேவை. பலபட்ட போதனைகளில் அவரவர் தம்தம் இயல்புக் கேற்ற ஒன்றைக் கொண்டொழுகுதல் நலம். பிறவற்றை நிந்தித்தல் கூடாது.

15. குருமார்களின் போதனைகள் தொடக்கத்தில் வேற்றுமை போலத் தோன்றும். முடிவில் அவ்வேற்றுமை உணர்வு இடம் பெறுதொழியும்.

16. வேற்றுமை புறத்தின்பாற்பட்டதென்பதும், அகத்தின்பாற் பட்டதன்று என்பதுங் கவனிக்கத்தக்கன.

17. குருமார்கள், சன்மார்க்கத்தையே காலதேச வர்த்தமானத்துக் கேற்ற முறையில் விளக்கிப் போதித்துச் செல்வது வழக்கம். அப்போதனைகளில் சன்மார்க்க உயிர் நாடி ஓடிக் கொண்டேயிருக்கும்.

18. பொன்னால் பணிகள் செய்யப்படுகின்றன. அப்பணிகள் கால நிலைக்கேற்ற வண்ணம் செய்யப்படுவது வழக்கம். அவைகளின் தோற்றத்தில் எத்துணை மாறுதலிருப்பினும், அவைகள் யாவும் பொன்னால் செய்யப்பட்டவை என்பது உண்மை. புறம், வேற்றுமையுணர்வை நல்கினும், அகம் அவ்வுணர்வை ஒழிக்கும். புறவேற்றுமை யுணர்வு நீண்டநேரம் நிலைத்திருப்ப தில்லை. பொன் போன்றது சன்மார்க்கம்; பணிகள் போன்றவை போதனைகள். சன்மார்க்கமே காலத்துக்கேற்ற முறையில் குருமார்களால் போதிக்கப் படுவது. புறத்தோற்றம், வேற்றுமையுறச் செய்வதற்குக் காரணம், அவ்வப்போது மக்கள் மனோநிலையில் உறும் மாறுதலேயாகும்.



19. பலதிற மனோநிலையுடைய மக்களுக்குப் பயன்படு முறையில் குருமார்களின் போதனைகள் அவ்வப்போது வெளி வருதற்குக் காரணம், அவர்கள் பலதிறப்பட்ட மக்கள்மீதுங் கொண்ட கருணையேயாகும்.

10. ஒருவன் ஒரு குருவின் போதனையில் விருப்பங் கொண்டு, மற்ற குருமார் போதனைகளை நிந்திப்பது, அவன் தன் குருவின் போதனையையே நிந்திப்பதாகமுடியும். நிந்தனையுள்ளவிடத்தில் குரு தரிசனமே அரிதாகும்.

21. சோலை இன்பம் நுகர ஒரு சோலையில் நுழைந்து தனக்கினியதாகத் தோன்றும் ஒரு மரத்தடியில் அமர்ந்த ஒருவன், தான் அமர்ந்த மரத்தின்மீது கொண்ட விருப்பத்தால் மற்ற மரங்களை வெறுத்து அவைகளை அழிக்கப் புகுவானாயின், அவன் சோலை இன்பத்தை எங்ஙனம் நுகர்தல் கூடும்? பிற குருமார் போதனைகளை நிந்திப்பவன் கதையும் இத்தன்மைத்தே.

22. ஒரு குருவின் போதனைவழி ஒருவன் நின்று ஒழுகுவானாயின், அவன்முடிவில் எல்லாக் குருமார்போதனைகளும் தன் குரு போதனையாகவே தோன்றக் காண்பன். ஆகவே குருமார் போதனைக ளெல்லாம் சன்மார்க்கமென்று கொண்டு எக்குருவின் போதனையையும் நிந்தியாது, அவரவர் தத்தம் மனதுக் கியைந்த குருபோதனை வழி நின்றொழுகுவது அறிவுடைமை.

23. குருமார்கள் வழிபாடு மேலே சொல்லப்பட்டது. குரு மார்களின் போதனை வழி நின்று அவர்களை வழிபடுதல் வேண்டும். அவர்கள் போதனை வழி நில்லாது அவர்களைப்போல ஓர் உருவைச்செய்து, அவ்வுருவை மட்டும் வழிபடுவதால் உண்மை விளங்காது. குருமார்கள், போதனைகளாகவே விளங்குகிறார்கள். போதனைகளின் தத்துவ உணர்வற்ற வழிபாடு வெறும் விக்கிரக ஆராதனையாக முடியும்.

24. குருமார்களின் வாய்மொழிகள் தெய்வ மொழிகளாகும். தெய்வ மொழிகளிற் சில வேதமாகவும் சில ஆகமமாகவும் நிலவும்.

25. வேதமும் ஆகமமும் முறையே மந்திரம் தந்திரம் என்று சொல்லப்படும். மந்திரம் என்பது நுண்மை; தந்திரம் என்பது பருமை.

26. வேதம் மனம்; ஆகமம் உடல். வேதம் விதை போன்றது; ஆகமம் மரம் போன்றது. வேதத்தை மூலமென்றும் ஆகமத்தை உரை என்றுஞ் சுருங்கச் சொல்லலாம்.

27. வேதம் சில சமயங்களில் குருமார்கள் வழிப் பிறக்கும்; ஆகமம் சில சமயங்களில் குருமார்கள் வழிப் பிறக்கும்.

28. வேதாகமங்கள் குறிப்பிட்ட மொழியில் பிறக்கும் நூல்களல்ல. வேதாகமங்கள் பல மொழியில் பல விடங்களில் பிறந்திருக்கின்றன. அவைகள் யாவும் சன்மார்க்கத்தையே அறிவுறுத்துவன. வேதம் ஆகமம் என்பவற்றிற்கு அவ்வம் மொழியில் தனித்தனிப் பெயர்கள் உண்டு.

29. குருமார்கள் பெயரால் பிரதிநிதிக் கூட்டமென்றும், சம்பிரதாயங்களென்றும், அவைகட்கெனக் கோயில்களென்றும், மடங்களென்றும், இன்ன பிறவென்றும் பலகட்டுப்பாடுகள் ஆங்காங்கே ஏற்பட்டிருக்கின்றன. அவைகள் பொய்மையின் பரிணாமங்கள். குருமார்களுக்குப் பிரதிநிதிகளோ, சம்பிரதாயங்களோ, அவைகட்கெனக் கோயில்களோ, மடங்களோ, பிறவோ வேண்டுவதில்லை. குருமார்கள் பக்குவர்களுக்குக் காட்சி யளித்து அவர்கட்கு உண்மை ஞானோபதேசஞ் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கட் கிடையில் மற்ற அஞ்ஞானத் தலை எடுப்புகள் எற்றுக்கு?

திரு. வி. கலியாணசுந்தரன்.

(தொடரும்)

# திபேத்திய இராமாயணம்

[இலக்கண விளக்க ஆசிரியர் பரம்புரை திரு. சோமசுந்தர தேசிகர்]

[குறிப்பு:—சீனு தேசத்தை யடுத்து மேற்கிலுள்ள அருக்கி ஸ்தானம் என்ற நாட்டில் நிலத்தை வெட்டிப் பரிசோதனை செய்தபோது மூன்று சுருள்கள் அகப்பட்டன. அவற்றைப் பிரித்துப் பார்த்தபொழுது அவை திபேத்திய மொழியில் எழுதப் பெற்ற இராமாயணமாக இருக்க ஆராய்ச்சியாளர் கண்டனர். இந்த இராமாயணம் நானூற்று முப்பத்தொன்பது வரிகளையுடையது. அச்சுருள்கள், இதுபொழுது இலண்டன்மா நகரத்திலுள்ள இந்தியா ஆபிஸ் புத்தகசாலையில் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த இராமாயணக் கதை பொதுவாக நம் நாட்டுக் கதையோடு ஒற்றுமையுடையதானாலும், பேர் முதலியவற்றில் பல மாறுதல்கள் உடையதாய்க் காணப்படுகின்றது. அதனை ஆராய்ந்த எப். டபிள்யு. தாமஸ் துரை மகனார் (F. W. THŌMAS) அமெரிக்காவில் வெளியான ஒரு பத்திரிகையில் வெளியிட்டிருக்கின்றார். தமிழ் மக்கள் அதனை யறிந்து கொள்ளும்பொருட்டு ஈண்டு அது மொழி பெயர்த்தெழுதப்படுகின்றது. அத்துரை மகனார்க்குத் தமிழகம் பெரிதும் கடப்பாடுடையது.]

## I

ஹைதகலியான மேகலீனு என்ற இயக்கி, விஸ்ரவஸ் என்ற முனிவரால் விரும்பப்பட்டு அவருடன் கூடி, தசக்கிரீவன், அமல கர்ணன், பிரிநஸன் (விபீடணன்) என்ற மூன்று பிள்ளைகளைப் பெற்றாள். பிரமன் தசக்கிரீவனுக்குப் பத்துத் தலைகளும் அதற்குற்ற பலமு மளித்தான். மான்லிய பந்தா (மால்யவந்தன்) தேவ புத்திரர்களை யழைத்து அவர்களை அவர்களுடைய மாமனான வைஸ்ரவணனை ஆளும் இலங்காபுரிக்குச் செல்லத் தூண்டினான். அவன் வைஸ்ரவணனது பெருமையைக் கண்டு அழுதான். அவன் அழுவதன் காரணத்தைக் கேட்டபோது, அவனுடைய தகப்பனான கோரன் (குபேரன்) என்ற இயக்கனது நினைவு வருவதாகவும், அவன் வைஸ்ரவணனால் நாடு கடத்தப்பட்டு நரகில் வீழ்ந்து கிடப்பதைக் கருதினதாகவும் கூறினான். அவன் தேவபுத்திரர்களது உதவியை நாட, அவர்களும் தாங்கள் உதவி செய்யச் சம்மத முடையவர்களாயினும் தங்களால் ஒன்றும் இயலாதென்பதைத் தெரிவித்தார்கள்.

மால்யவந்தனுடைய போதனையின் மேல் தேவ புத்திரர்கள் தேவர்களை வெல்ல ஆயிர மாண்டு பிரமனைக் குறித்துத் தவங்கிடந்தனர். ஆயினும் பிரமன் இவர்களது தீய எண்ணத்தை அறிந்தவனாகையால் இவர்கள் முன் புலப்படவில்லை. பின்னும் கடுந்தவம் புரிந்து (1) அவர்கள் எவர் மேலாவது ஓரம்பு எய்தால் எய்யப்பட்டவர் மரிக்க வேண்டுமென்றும், (2) பிறரால் இவர்கள் கொலையுண்ணாதவாறு ஒரு கவசமும், (3) மூவுலகினும் அரசாளவும் வரம் வேண்டினர். பிரமன் தானே மூவுலகுக்கும் இறைவனென்றும் தன்னை எவ்விதமான அம்பும் கொல்ல மாட்டாதென்றும் கூறினான்.

தேவ புத்திரர் மகாதேவனைத் திருப்தி செய்ய முற்பட்டனர். அவரும் இவர்கள் கெட்ட எண்ணத்தைத் தெரிந்துகொண்டு எதிர்ப்படாதபோது, தசக்கிரீவன் தனது தலைகளிலொன்றை யரிந்து தீயிலிட்டான்.

மகாதேவரின் மனைவியான உபாதே (உமாதேவி) அவன்பால் மனமிரங்கித் தனது கணவனிடம் மன்றாடினாள். அவர் பிடிவாதமாக விருந்ததைக் கருதி அவளே தேவபுத்திரர் முன் தோன்றி, மகாதேவரைக் குறித்து வரங் கிடப்பதை விட்டுத் தன்னை நோக்கி வரங்கிடக்கக் கூறினாள். அவர்கள், அவளை ஒரு பெண்ணென்று இழி



வாகக் கருதவே, அவள் சினந்து, அவர்கள் ஒரு பெண்ணாலேயே அழிவரெனச் சாபமிட்டாள்.

அவ்வாறே மகாதேவரது அமைச்சனான பிரகஸ்தனும் அவனொரு வானரனென்று அவமானப் படுத்தப்பட்டபோது, அவன் வானரராலேயே இவர்கள் அழிவரெனச் சாபமிட்டான்.

அநேக நாள் கழிந்தும் மகாதேவர் தோன்றாமையால் சரஸ்வதி தேவபுத்திரர் நாக்கில் நின்றுகொண்டு (1) தேவர்களுக்கு அரசராகவும், (2) தசக்கிரீவனது குதிரைத் தலையை முதலில் அறுக்காதவரிடமிருந்து சாவின்றி இருக்க இரட்சையும், (3) முதல் முறையாக அம்பு விட்டவுடனே பகைவன் இறக்கவும் வரங்களை மாற்றி வேண்டும்படி செய்தாள்.

இவ்விதமாகத் தேவர்கள் தேவ புத்திரரால் தோற் கடிக்கப்பட்டபோது இலங்காபுரத்திலுள்ள தேவரும் மக்களும் அழிக்கப்பட்டனர்; அத்தீவு முழுவதும் இராக்கதர் நிறைந்து தசக்கிரீவனைத் தங்கட்குத் தலைவனாக்கினர்.

மூவுலகையும் ஆட்சிபுரியும் தேவர்கள் ஒன்றுகூடி ஆலோசனை புரிந்து, இராக்கதரை அழிக்கவல்ல ஒரு மானிடனைத் தசக்கிரீவனுக்குப் பெண்ணாகப் பிறக்க ஏற்பாடு செய்தனர். தசக்கிரீவனது மனைவிமாரில் ஒருத்தி ஒரு பெண்ணைப் பெற்றாள்; உடனே நிமித்திகர் இப்பெண்ணால் அவனது தகப்பனும் மற்றைய இராக்கதரும் அழிவரென்று கூறினர். அதனால் அக்குழந்தையைச் செப்புப் பாத்திர மொன்றில் வைத்துத் தண்ணீரில் விட்டனர். இந்தியக் குடியானவர்கள் (அந்தப் பாத்திரத்தைக்)கண்டெடுத்துத் தங்கள் மகளாகப் பாவித்து, ரோல்-ர்ஞெட்-மா 'லீலாவதி' எனப் பெயரிட்டு வளர்த்துவந்தனர்.

சம்புத் தீவிலுள்ள அரசனான தசரதருக்குப் பிள்ளையின்மையால் அவர் கைலையங்கிரியில் வசிக்கும் ஐந்நூறு இருடியர்பால் பிள்ளைப் பேற்றைக் குறித்துத் தவங்கிடந்தனர்.

அவர்கள் ஒரு பூவைக் கொடுத்து, அதனைத் தசரதரது மூத்த மனைவியிடம் கொடுத்தால் அவளிடம் ஓர் ஆண்மகன் உண்டாவனென்று கூறினர். பட்ட மகிஷி மனமிரங்கி அப்பூவிற் பாதியை இரண்டாவது மனைவிக்குக் கொடுத்தாள். இரண்டு பிள்ளைகள் பிறந்தன. இரண்டாவது மனைவி முதல் மனைவி பிள்ளை பெறுவதற்கு மூன்று நாள் முன்னதாக ஓர் ஆண்பிள்ளையைப் பெற்றாள்; அதற்கு இராமனென்று பெயரிட்டனர். பட்ட மகிஷியின் புத்திரனுக்கு இலக்கனனென்று பேரிட்டனர்.

தேவர்களுக்காகப் பரிந்து போருக்குச் சென்ற தசரதர் போரில் புண்பட்டு ஊர்வந்து சேர்ந்தனர்; இராச்சிய பாரத்தினின்றும் விலக எண்ணி இராச்சியத்தை இராமனிடத்திலோ, இலக்கனனிடத்திலோ ஒப்புவிக்கிறதென்பதைக் குறித்துத் தனது பட்ட மகிஷியோடு ஆலோசனை புரிந்தார். அவர் பட்ட மகிஷியின் மேலுள்ள அன்பால் பட்டங்கட்டுவதைக் குறித்து மயக்கங்கொண்டு நோய்வாய்ப்பட்டார்; அதனை அறிந்த இராமனன் தான் வனவாசஞ் செய்யக் காட்டிற்குப் போவதாகச் சொல்லிக் காடு சென்றான். பின்னர் இலக்கனன் பட்டஞ் சூட்டப்பட்டான்; தசரதரும் உயிர் துறந்தார். இலக்கனன் காட்டிற்குச் சென்று இராமனைக் கண்டு தனக்கு நான்கு லோகங்களையும் ஆளச் சக்தியில்லையென்று சொல்லிச் சக்கரவர்த்தி பதவியை இராமனுக்கு அளிப்பதாகக் கூறினான். இராமனோ அதனை யேற்க மறுக்கவே, இலக்கனன் இராமனது இருபாதுகைகளைக் கொண்டுவந்து சிங்காதனத்தில் வைத்துத் தான் அமைச்சனாக நின்று இராச்சியபாரம் செய்தான்.

ரோல்-ர்ஞெட்-மா (லீலாவதி) என்ற பெண் வளர்ந்து அழகிலும் மேனியிலும் சிறந்தவளாகவே, உழவர்கள்

அவளுக்குத் தகுந்த மணவாளனைத் தேடிச் சென்றனர். சென்ற விடத்தில் இராமனைப் பார்த்து இவன் தகுந்தவனென்று கண்டு அப்பெண்ணை அவனுக்கு மணஞ்செய்விப்பதாகக் கூறினர். அவள் அழகைப் பின் வருமாறு வர்ணித்து அவர்கள் கூறியதாவது :— 'அவளது கரிய கூந்தல் சுருண்டு வலப்பக்கஞ் சாய்கின்றது; அவள் தாமரை போன்ற கண்களையுடையாள்; வேத கோஷத்தைப் போன்ற சொல்லினையுடையாள்; இனிய குரலினையுடையாள்; நல்ல மேனியோடு தக்க அணிகலன்களையுடையவள்; குறையற்ற தாமரையிற் பிறந்தவள்; நிறைந்த உறுப்புக்களையுடையவளானதால் பொன்னிற் குயிற்றிய மணி போன்று உலகைப் பிரகாசிக்கச் செய்கிறாள்; மேனியினின்றும் சாந்தின் நறுமணம் கமழ்கின்றது; உசித வார்த்தைகளைக் கூறுவதோடு பேசும்போது தாமரை மணம் வாயினின்றும் வீசுகிறது; அவளுடைய குரல் கேட்பதற்கு இனிமையைத் தருகின்றது. இவ்வாறு வடிவழகினையுடைய ஒரு பெண்மணியைச் சாதாரண மக்கட்குக் கொடுப்பது நேர்மையாகாது. ஆதலின் உன்னைத் தவிர அவளுக்கு ஏற்ற மணவாளன் இல்லை; நீயோ நல்ல மேனியையுடையை. அதனால் நல்ல உருவான மேனியையுடைய இப் பெண்ணை ஆடையாபரணங்களோடு உனக்குத் தருகின்றோம்; அவளை நீ மணப்பாயாக' என்றனர். அவரும் சன்னியாசத்தைக் கைவிட்டு அப்பெண்ணைச் சீதை யென்ற பேரிட்டு மணந்து கொண்டு அரசளுகை வாழ்ந்து வந்தனர்.

ஐந்நூறு இருடியருடைய எண்ணம் நிறைவேறுங் காலங் கிட்டுவதை யறிந்து குபேரன் தனது அமைச்சனை (மருகே) மாரீசனைக் கூவி அவர்களைத் துன்புறுத்துமாறு அனுப்புகின்றான்; மாரீசன் செம்பட்டை மயிரும் பெருங் கண்ணும் உட்குவிந்த காதும் உடையவனாய் பண்டையோடுகளைத் தலையிலணிந்தும் இரத்தத்தை மேலே தடவிக்கொண்டும் வந்து இருடியரைத் துன்புறுத்தினான். இருடியர் இவ்வியக்களைக் கொல்பவருக்கு நல்லருள் பாலிப்பதாக ஓலை போக்கினர். இராமனன் அவனை வெருட்டினான்; மறுமுறையும் மாரீசன் தோன்றவே, அவனை ஒரு வளை தடியை வீசிக் கண்ணைப்பிடுங்கினான். அவன் கண்ணிழந்து ஓடினான். அப்பொழுது இருடியர் இராமனுக்கு அவன் விட்ட முதலம்பிலேயே எவரும் கொலையுண்ணவும், கொலையுண்டவர் தேவராகப் பிறக்கவும் வரங் கொடுத்தனர்.

தசக்கிரீவனது சகோதரியான பூர்ப்பலை (சூர்ப்பனகை) இராமனன் முன் தோன்றினாள். அவள், தான் மூவுலகினும் போற்றப்படுபவ ளென்றும், தன்னைவிட அழகிற் சிறந்தாளில்லை யென்றுங்கூறி இராமனைத் தன்னோடு மருவும்படி அழைத்தாள். அவன் மறுக்கவே, இலங்கை சென்று தன் சகோதரனிடம் சீதையைச் சிறை பிடிப்பதைப்பற்றிக் கூறினாள்.

தசக்கிரீவன் மாரீசனிடம் சீதையைச் சிறை பிடிப்பதைக் குறித்து ஆலோசனை செய்தபோது, அவன் அவ்வாறு செய்வது பிழையென்று கூறித் தடுத்துங் கேளாமையால், அவன் மானாகச்செல்லும் யுக்தியைக்கூறினான். சீதையால் தூண்டப்பட்ட இராமனன் மானைப் பிடிக்கச் சென்றபோது, மாரீசன் இராமனுக்கும், சீதைக்கும், சகோதரனுக்கும் நடுவில் ஒரு புயற் காற்றை யுண்டாக்கிவிட்டான். உதவி வேண்டுமென அபயக் குரல் கேட்டபோது, லக்கனன் சீதையைத் தனியே விட்டுச் செல்ல மறுத்தும், அவள் கோபித்துக் கொண்டபோது இலக்கனன் இராமனைத் தேடிச் செல்ல, சீதை தனித்து நின்று புலம்பிக்கொண்டிருந்தாள். அக்காலத்தில் தசக்கிரீவன் முதலில் யானையாகவும், பின் குதிரையாகவும் தோன்றினான். இராமனும் இலக்கனனும் திரும்பிவரும் தருவாயில் தசக்கிரீவன் சீதையைத் தொட அஞ்சி, அவள் இருந்த நிலத்தோடுபெயர்த்தெடுத்துச்



சென்றான். இராமனும் இலக்கனனும் திரும்பிவந்தபோது சீதையையும் அவள் இருந்த நிலத்தையும் காணாமற் பரிதவித்தனர். வெகு நேரம் தேடியும் அவளைக் காணாமையால் அந்த இடத்திலேயே அயர்ந்து நித்திரைபோயினர். மறுநாள் மனத்துன்பம் வருத்த அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு எதிர்ப்பட்ட பள்ளத்தாக்கில் ஓடிய ஒரு கரிய ஆற்றருகே சென்றனர். இலக்கனன் அந்தக் கரிய நீரைப் பருகச்சென்றபோது, அந்த நீர் ஓர் இறந்த விலங்கின் நீராகவிருக்கலாமென்று இராமனன் கூறி விலக்கினான். அந்தப் பள்ளத்தாக்கின் வழிச் சென்றபோது; அவர்கள் அருகே ஓடின நீர் உறங்கும்ஒருவானரத்தினுடைய கண், மூக்கு, வாயினின்றும் ஓடிவரும் நீரெனக் கண்டார்கள். அந்த வானரத்தை யெழுப்பிக் கேட்டபோது, அது தான் வானர அரசனது இளைய பிள்ளையென்று கூறியது. அதனுடைய தமையனை வாலி பலவானாகையால் அரசனாகித் தன்னைத் துன்புறுத்திய தாகக் கூறிற்று. சீதையைக் கண்டதுண்டோ வென வினவியபோது, அது தான் நோயுற்றிருப்பதால் தனக்கு ஒன்றும் தெரியாதென்று கூறிற்று. தன்னுடன் மூன்று வானரங்கள் இருக்கின்றன வென்றும்; அவை இவர்கள் வரவை யறிந்து மலைமேற் சென்றனவென்றும், அவற்றை விசாரித்தால் தெரியுமென்றும் கூறிற்று. மலைமேலிருந்த குரங்குகள் மெதுவாக வரவழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டபோது, அவை முதல் நாட் காலையில் ஒரு பத்துத் தலைகளையுடையஓர் அரக்கன் தனது குதிரைமுகத்தில் ஒரு பெண்ணை அவளிருந்த நிலத்தோடு தூக்கிச் சென்றதாகவும், 'அப்பெண், தான் இராமனுடைய மனைவியென்றும், தன்னைக் காப்பாற்றவேண்டுமென்றும் அழுதுகொண்டே சென்றனளென்றும் கூறின. சுக்ரீவன் சீதையிருக்கு மிடத்தைக் கண்டு செல்வானாயின் அவனை வானர அரசனாக்குவதாக இராமனன் கூறினான். மறுநாட் காலையில் வாலியும் சுக்ரீவனும் இராமனுக்கு முன் சண்டையிட ஒருவரும் தோற்கவில்லை. மறுநாள் தானுஞ் சேர்ந்து சண்டையிடுவதாக இராமனன் கூறினான். வாலியின் மனைவி வாலியைச் சண்டைக்குப் போக வேண்டாமென்று தடுத்தும் அவன் கேட்கவில்லை. மறுநாள் சுக்ரீவன் தனது வாலில் ஒரு தண்டையைக்கட்டிக்கொண்டு சண்டையிட இராமனது அம்பால் வாலிகொல்லப்பட்டு தேவனானான்.

# உடல்நல அறிவு

பேரறிஞர் வாசுவானி அவர்கள் பொறித்த ஆங்கிலக் கட்டுரையின் தமிழாக்கம்

[திரு. கி. சுப்பிரமணியனார்]

உடம்பே ஆன்மாவின் உறைவிடம். அதுவே இன்பம் நிலவுங் கோயிலாகும். ஏனெனின், ஆன்மா இன்பமயமானது.

ஆரோக்கிய வாழ்வே இன்பம். வெகு சிலரே அதனை யடையும் பாக்கியம் பெற்றவர். புறவுடலும் அகவுடலும் தம்முள் நெருங்கிய தொடர்புடையன. இருடலும் ஒரே படித்த[illegible]விருத்தல்வேண்டும். உடல்நலப் பிரச்சினையானது, அகவுடல், புறவுடல் ஆகிய இரண்டின் சீரிய நன்னிலையையே பொறுத்திருக்கிறது.

மேனாட்டினர் புறவுடல் பேணும் நற்றுறைகளில் அதிக கவனஞ் செலுத்துகின்றனர்; ஆராய்ச்சி செய்கின்றனர். அதுபற்றிய மருத்துவ அறிவானது ஆண்டுப் பெருவளர்ச்சி எய்தியுள்ளது. ஆனால் நம் நாட்டினரோ கிராமங்களையும் நகரங்களையும் சுகாதார முறைப்படி வைத்திருக்க இன்னும் நன்கு பயில வேண்டியவரா யிருக்கின்ற

னர். மேனாட்டினர்க்கு இதுவரையும் ஆன்ம ஆராய்ச்சிபற்றி ஒன்றும் தெரியவாராது. இந்தியாவிற்றான் பல பெரியோர்கள் இவ்வறிவுத் துறையில் தலைசிறந்திருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் புறவுடல் பற்றிய ஆராய்ச்சிகளில் போதிய கவனஞ் செலுத்தாதிருக்கிறார்கள். எனினும், புறவுடல் மாத்திரம் முக்கியமானதாகாது.

ஆழ்ந்து சிந்திக்குமிடத்து, தனியே ஜடப் பொருள் எதிலும் கலப்பில்லாததன்று. ஜடப் பொருள்கள் மின்சாரத் தொடர்புடையன. அவை அணுக்களால் ஒன்றியவையல்ல. இதுவே தற்கால ஆராய்ச்சியினின்றும் பிறந்த கொள்கையாகும். அணுக்களிலும் அணுக்கள் அடங்கியிருக்கின்றன. அணுக்கள் மின்சாரப் பொருளினாலேயே ஆகியவை. அவற்றில் உடன்பாடான மின்சாரப் பொருளும் மாறுபட்ட மின்சாரப் பொருளும் அடங்கியிருக்கின்றன. மின்சாரத்தை ஆன்மாவின் ஜோதி மயமான ஓர் அறிகுறியாகக் கொள்கிறேன்.

அகவுடலுக்கும் புறவுடலுக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. உடலின் சுகாதார நிலைமை, நம்மனதில் எழும் ஆசைகளையும் நினைப்புகளையும் பொறுத்திருக்கிறது. இதனைப் பலர் அறியாதிருக்கின்றனர். அகவுடலையும் புறவுடலையும் பொறுத்திருக்கிற சீரிய நிலைமையை யடையும் சுகாதாரக் குறிப்புகளில் சிலவற்றை எடுத்துத் தருகிறேன்.

## (க) இயற்கை

இயற்கையினின்றும் எழுகின்ற ஆரோக்கியத்தைத் தரும் உயிர்ப்புச் சலன சக்தியை ஒவ்வொருவரும் பெறுதல் வேண்டும். மருந்துகள் ஒரு சிறிதளவே பயன் தருவன.

தாவரங்கள் இச்சலன சக்தியை நமக்கு அளிக்கின்றன. எனது உடல் நலத்திற்கு முக்கிய காரணம் பனை, தென்னை போன்ற மரங்களே ஆகும். இத்தகைய மரங்கள் சூழ்ந்த இல்லத்திலேயே யான் வசிக்க விரும்புகிறேன். பூந்தோட்டங்களும், சிங்கார வனங்களும், சிறுவர்க்கேற்ற விளையாட்டுப் பொழில்களும், மிகவும் அவசிய மானவை. அவற்றின் சிறப்புக் குணம் அளவிட முடியாததாகும். அவற்றை ஒரு நகரத்தின் சுவாசாசயங்கள் என்னலாம்.

ஞாயிற்றின் செங்கதிர்கள் சிறந்த நன்மை பயப்பனவாம். இதுபற்றியே ஐரோப்பாவில் ஜர்மனி போன்ற நாடுகளில், ஞாயிற்றொளியில் மூழ்கும் வழக்கத்தை மக்கள் பெரிதும் கையாண்டு வருகிறார்கள். அதனை நாட்டில் யாண்டும் பரப்புகின்றனர். ஆனால் நம் நாட்டினர் செய்த தவப்பயனால் நாம் சிறந்த ஞாயிற்றொளியை அடையும் பாக்யம் பெற்றுள்ளோம். தினமும் 15 நிமிடங்களாவது ஞாயிற்றொளியில் படிவோமானால் அது நமக்குச் சீரிய பயன் தரும். இங்கிலாந்தில் அறிவாளிகளால் சூரிய நிலையம் (Solarium) ஒன்று நிறுவப்பெற்று அதினின்றும் அவர்கள் சூரிய கிரணங்களைச் சீசாக்களில் அடைத்துப் பற்பல நோயாளர்களைக் குணப் படுத்துகிறார்கள். நம் தாய்நாட்டிலோ அவ்விதச் செயற்கைமுறைகள் ஒன்றும் வேண்டாம். இயற்கையாகவே அதைவிடப் பல்லாயிர மடங்கு சிறந்த ஞாயிற்றொளியைப் பெற்றுள்ளோம். ஆனால், அதன் சிறந்த குணத்தை நாம் உணர்கிறோமில்லை. பகலவன்றன் சீரிய ஒளி உங்கள் உடலிற் படிவதாக. அதனால் நீங்கள் நோய் நீங்கிப் பலமுடையவர்களாய்த் திகழ்வீர்கள். தூயகாற்று, தூயநீர், கடல் ஆகிய இவை உடம்பிற்கேற்ற ஆரோக்கியத்தைத் தருவனவாம். இயற்கை, அன்பும் கருணையுஞ் செறிந்த அன்னையாவாள். உங்கள் நோய் குணமடையத் தாயிடத்திலேயே செல்லுங்கள். மருத்துவர்கள் தம்மிடம் [illegible] நம் நோயாளரைக் குணப்படுத்த இயற்கை அன்னையின் கூட்டுறவைப் பெரிதும் நாடுவார்களாக.



## (உ) பிராணன்

நினது பிராணனைப் பரிசுத்தமுடையதாக்கு. தற்கால மருத்துவ அறிஞர்கள் ஆன்மாவின் சீரிய தன்மையை விரைவில் உணர்வார்களென நம்புகிறேன். இந்துமதத்திலுள்ள ஆத்ம தத்துவ ஆராய்ச்சியாளர்கள் பிராணமய கோசத்தைப்பற்றிக் கூறுகிறார்கள். ஒவ்வொருவரும் பிராணனைச் சுத்தி செய்தல் வேண்டும். இதுபற்றியே பெரியோர்கள் முறைப்படி செய்யத் தக்க பிராணாயாம முறையைக் கையாண்டார்கள். இது நரம்புக் கட்டுகளைப் பலப்படுத்தி உடலினை உறுதி செய்யும்.

## (ங) உணவு

புலாலுணவு உடலின் கொழுமையை அதிகரிக்கச் செய்கிறது. ஆயினும் அது உடம்பிற்கு ஒளி செய்வதாகாது. இவ்வுணவின் இழிவு கருதியே பண்டை நாளில் தூய்மையையும் அழகையும் பெரிதும் விரும்பிய, நாகரிகம் கைவந்த இந்துக்கள் இதனைப் புறக்கணித்தனர் போலும். புலாலுணவை, ஜீவகாருண்யம், மனோ விகாரம், உடல் நலம், ஆகிய இம்மூன்று நோக்கங்களைக் கொண்டு யான் மறுக்கின்றேன். எளிய உணவே ஏற்ற உணவாகும். இக்காலத்து மக்களுட் பலர் மீதூண் விரும்பலினால் நோய்வாய்ப் படுகிறார்கள். சிற்றின்ப நுகர்ச்சியும் சுகானுபவங்களும் நமது மனோ வளர்ச்சியைப் பெரிதும் தகைந்து உடல் நலனைக் கெடுப்பனவாகும்.

கல்லறை நின்று கடுந்தவம் புரியும் வாழ்வை மேற்கொள்ள ஒருவருந்துணிகிலர். ஆனால் ஆரோக்கியமாயும், அறிவுடனும், ஆற்றலுடனும் வாழவே யாவரும் விழைவர். அவ்விதம் விரும்புவோர் ஒவ்வொருவரும் மிக எளிய வாழ்க்கையையே மேற்கொண்டொழுக வேண்டும். தற்கால நாகரிக உலகு, இளைப்பு—சோர்வு—தளர்வு எனும் கொடிய நோயால் பீடிக்கப்பட்டுள்ளது. அது பல்வித ஆசை நோய்களால் தலைகால் தெரியாது சுழல்வதால், தனது சக்தியை இழந்து வருகிறது.

காய், கனி, கீரை ஆகிய இவற்றில் சிறந்த சத்துப் பொருள்கள் அடங்கியிருக்கின்றன. வாரமொருமுறை உபவாச மிருப்பது உடலுக்கு நலஞ் செய்வதாகும். அது நமது தேகத்திற்கு வேண்டிய புதிய சக்தியையும், புதிய வோர் உணர்ச்சியையும் தருகிறது; தேகத்திலுள்ள ஜீவாதார சக்தியை எல்லாப் பாகங்களிலும் சென்று பரவச் செய்கிறது. சிலர், உபவாசம் மூளையின் சக்தியைக் கெடுக்கிறதெனக் கூறுகிறார். யான் அதனை ஒப்புக்கொள்ளேன். வாரமொருமுறை மேற்கொள்ளும் மௌனமும் உபவாசமும் எனக்குச் சிறந்த நன்மை பயக்கின்றன. அதனால் என்மனம் பரிசுத்தமடைகிறது; வலிமை பெறுகிறது. எனது உடலும் உரம்பெற்றுச் சிறந்திருக்கக் காண்கின்றேன். இதன் காரணம் எனது அகவுடலும் புறவுடலும் நல்ல நிலையிலிருப்பதினாலேயே என நினைக்கிறேன்.

## (ச) அகத்தூய்மையும் பிரார்த்தனையும்

இவை இரண்டும் பிரமசரியம் என்னும் அழகிய சொற்றொடரில் அடங்குவனவாகும். மணம் விரும்பாமையைவிட பிரமசரியமே சிறந்தது. மணவாழ்க்கையிலும் பிரமசரியத்தை அனுட்டிக்கலாம். பிரமசரியம் தவநெறியைக் குறிக்கொண்டதன்று. பிரமசாரி தவநெறி ஓம்புநரைவிடச் சிறந்தவ னென்னலாம். பிரமசரிய மென்பது, சொல்லளவில் இறைவனுடன் இயங்குதலாகும். பிரமத்திலே சென்று பிரமத்தோடு உறைபவரே உண்மைப் பிரமசாரி யாவர். அவர் தூய்மை, பிரார்த்தனையாகிய அருங் குணங்கள் ஒளிர்பவரா யிருத்தல்வேண்டும். இவை இரண்டுமே அகவுறுப்புக்களுக்கு உயிர்நிலையாகும். இவை இரண்டுமே புறவுடலை என்றும் இளமை மாறாதிருக்கச் செய்வன. இவை இரண்டுமே பலவீனமென்னும் சுவரைத் தகர்த்தெறிவன. இவை

இரண்டுமே மனிதனை இறைவனோடு ஒன்றச் செய்வன. இத்தகை மனிதனிடமிருந்தே மாபெருஞ் சக்தி எழுகின்றது. இவனே உலகில் அறிவாகிய ஒளியைப் பரப்புகின்றான்.

"இருளினின்றும் வெளிச்சத்திற்கு எங்களை வழிகாட்டுக" என்றே உபநிடதத்தில் முனிவர் யாவரும் பிரார்த்திக்கின்றனர். இருளென்பது ஆசையாகிய இருளே; வெளிச்சமென்பது மாபெருஞ் சோதிப் பிழம்பின் ஒரு சிறு பொறியே. இச்சோதியினின்றும் யோகியான - பாலப்பிரமசாரியான கிறிஸ்துநாதர் தோன்றினார். அதனால்தான் அவர் பல அற்புதங்களை நிகழ்த்தினார். கிறிஸ்து பெருமான் தூய்மையினாலும் பிரார்த்தனையினாலுமே உலகை இரட்சித்தார் எனலாம்.

# ஜ ல ம்

## அதன் குணங்களும் உபயோகங்களும்

[திரு. வி. எஸ். கிருஷ்ணசாமி, B. A.]

"பாமரஜனங்கள் ஜலத்தைத் தெய்வமாகக் கொண்டாடுபவர்கள்" என்று சொல்லும் அறிவிலிகள் அநேகர் இவ்வுலகில் உளர். அவர்கள் சற்றேனும் ஜலத்தின் குணங்களையும் உபயோகங்களையும் கவனித்திருப்பார்களாயின், இங்ஙனம் உளறாமலிருப்பார் என்பது திண்ணம். ஜலம் உலகில் முதன் முதலில் ஜீவராசிகளை உண்டாக்கினதெனலாம். மலைகளும், மரங்களும், மனிதனும், பிராணிகளும் ஜலத்தின் செயல் என்று சொல்லப் போதுமான ஆதாரங்கள் உள்ளன. ஜலமில்லாத இடம் கிடையாது. ஜலம் இல்லையேல் ஜீவராசிகள் கிடையா. கொஞ்சமேனும் ஓய்வில்லாமல் ஜலம், நீராவியாகவோ, பனிக்கட்டியாகவோ, ஜலமாகவோ மனிதருக்கு உபயோகப்பட்டு வருகிறது. இத்தனை குணங்களும் உபயோகங்களும் கொண்ட இந்த ஜலத்தைத் தெய்வமெனக் கொண்டாடுவதும் மடமையாமோ?

### ஜலம் உண்டானமை

ஜலம் பிராணவாயு (Oxygen) ஜலவாயு (Hydrogen) இவ்விரு வாயுக்கள் கொண்ட ரஸாயனப் பொருளாகும். முதன் முதலில் இப்பூமி இப்பொழுது போலில்லாமல் நெருப்புக் கோளமாயிருந்ததென்று ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகிறார்கள். அப்பொழுதே ஜலத்தின் இருவாயுக்களும் பூமியில் வருவதற்குத் தயாராயிருந்தன. கொஞ்சங்கொஞ்சமாய்ப் பூமியும் குளிர்ச்சி பெற; 700"C. உஷ்ணத்தில் நீராவியிருந்த ஜலமும், சிறுகச் சிறுகக் குளிர்ச்சி பெற்று, பின்னர்ப் பூமியில் ஜலமாய் வந்து சேர்ந்தது. அது பூமியில் அடி எடுத்து வைத்தவுடன், பூமியைத் தன்னிஷ்டம் போல் மாற்ற ஆரம்பித்தது; பூமியில் வந்து சேருமுன் தன்னுடன் கலந்திருந்த மற்ற வாயுக்களையும், ரஸாயனப் பொருள்களையும் கொண்டு வந்து சேர்த்து, பூமியிலுள்ள அரும்பெரும் பாறைகளையும் கரைத்து, அவற்றுள் ஊடுருவிச் சென்றது. பூமியினுட் சென்று, சூடுபட்டு, மறுபடியும் நீராவியாகி, எரிமலைகளின் வழியாய் வெளிவர ஆரம்பித்தது; பெரும் பாறைகளையும் உடைத்துக் குழைத்து சமுத்திரங்களையும் ஏரிகளையும் நீர் நிலைகளையும் ஏற்படுத்திற்று. ஆறுகளாகவும் அருவிகளாகவும் பாய்ந்து பூமியின்மேல் அலைந்து, சமுத்திரங்களையும் உள் நாடுகளையும் சேர்த்து வைத்தது; மணலையும் கல்லையும் கரைத்துப் பொடியாக்கி, பயிர் செய்யக்கூடிய நிலங்களை உண்டாக்கிற்று. இவ்வாறெல்லாம் மனிதர் பிறக்கும்முன்னரே ஜலம்



பூமியில்வேலைசெய்துமனிதர்க்கு வேண்டுவனவற்றைத் தயாரித்து வந்தது. ஜலத்தில்தான் முதன் முதலில் ஜீவவித்துக்கள் ஏற்பட்டனவென்று ஆராய்ச்சிக்காரர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். நாளடைவில் ஜலத்தின் உதவியால் பூமியிலெங்கும் பயிர்களும், செடிகொடி மரங்களும், மற்றும் பிற ஜீவவர்க்கங்களும் ஏற்பட்டனவாம்.

### ஜலத்தின் குணங்கள்

ஜீவராசிகளை உண்டாக்கிப் பின்னரும் அவைகட்கு இடைவிடாது ஜலம் தொண்டுபுரியத் தலைப்பட்டது. ஓயாது வேலைசெய்து வந்தாலும் அது அடிக்கடி தன் நிலையை மாற்றிக்கொள்ளும் இயல்புள்ளது. அது, சில சமயங்களில் கனபதார்த்தமாய் மாறிப் பனிக் கட்டியாகும்; சில சமயங்களில் திரவபதார்த்தமான நீராகவே யிருக்கும்; மற்றும் சில சமயங்களில் வாயு நீராவியாக மாறி நிற்கும். இம்மாறுதல்களெல்லாம் ஜீவராசிகளுக்கு உபயோகமாகவே யிருக்கின்றன. இக்காரணம்பற்றியே சாஸ்திரத்தில் ஜலத்திற்கு விசேஷ மரியாதை காட்டப்பட்டு வருகிறது. பிரகிருதி சாஸ்திர வித்வான்கள் ஜலத்தைப் பற்பல விஷயங்களுக்கு ஆதாரப் பொருளாகக் கொண்டிருக்கிறார்கள். ஜலமில்லாமற்போனால் ரஸாயன சாஸ்திரமே யில்லை யெனலாம். ஜலத்தை உபயோகப்படுத்தாத ரஸாயனப் பரீக்ஷைகள் கிடையா. ஜலம் எல்லா வஸ்துக்களையும் கரைக்கும் தன்மையுள்ளது என்று காணப்பட்டிருக்கிறது. ஜலமில்லாமற்போனால் என்னவாகுமென்று நினைத்தாலும் நடுக்க முண்டாகிறது. அருமையான வாஸனையோடு கூடிய ஸோப்புகளும் பயனற்றவையாம்; ஸ்நானம் முடியாது; குடிப்பதற்கும் ஜலமில்லை. செயற்கையாய்ச் சிருஷ்டித்தாலும் மனிதரின் தாகத்தைத் தணிக்கப் போதுமான ஜலத்தின் கோடியில் ஒருபக்கங்கூட கிடைக்காது. பெரும் ஆலைகளும், இயந்திர சாலைகளும், ரஸாயனப்பொருள் உற்பத்தி ஸ்தாபனங்களும் எல்லாம் மூடப்படவேண்டியது தான். அலக்ஷியமாய்க் குணங்களை அறியாது நாம் கையாண்டு வரும் ஜலம், நாளைக்குத் திடீரென்று மறைந்துவிட்டால் என்னவாகும்!

### ஜலத்தின் உபயோகங்கள்

முதன்முதல் இயந்திரங்களை ஓட்டுவதற்கு ஜலத்தின் சக்திதான் உபயோகப்பட்டு வந்தது. மேனாடுகளில் இங்ஙனம் சிற்றாறுகளில் ஜலத்தால் அநேகம் மாவு அரைக்கும் இயந்திரங்கள் ஓடுகின்றன. தற்காலத்தில் நீர் வீழ்ச்சிகளில் விழும் ஜலம் மின்சார இயந்திரங்களை ஓட்டுவதை எல்லோரும் அறிவர். 'பிரமா பிரஸ்' எனும் இயந்திரத்தில் ஜலத்தின் உதவியால் ஒரு சிறு விசையைக் கொண்டு பெரும் மூட்டைகளையும் நன்றாய் அமுக்கிக் கட்டலாம்.

ஜலத்தின் உதவியால்தான் செடிகளும் மரங்களும் வளர்கின்றன. வாலைப் புஷ்பங்களும், ரம்மியமான வனக் காட்சிகளும், இனிய பழ வகைகளும் ஜலம் மனிதருக்கு வழங்கும் தானங்கள் எனலாம். மரஞ்செடி யில்லாமற் போனால் மனிதர்கட்கு உணவில்லை; வீடு வாசல்களில்லை. ஜலம் இவ்விதம் உண்ணஉணவும் கொடுத்து, இருக்கஇடமும் தந்து உதவுவதோடு, இன்னும் பல்வேறு சிசுருஷைகளும் செய்கின்றது.

பகலில் வெப்பம் தாங்காது, மாலை வேளைகளில், கடற்கரையிற் சென்று குளிர்ந்த காற்று வாங்கலாம் என்று போகிறோம். அப்பொழுது வீசும் குளிர்ந்த காற்றும் ஜலம் மனிதருக்குச் செய்யும் சிசுருஷைகளில் ஒன்று. ஜலம் அநேக உஷ்ண நிலைக்குமாற மற்ற எல்லா பதார்த்தங்களையும் விட, அதிக உஷ்ணம் வேண்டும். ஆகவே சம அளவு உஷ்ணம் ஜலத்தின்மேலும், நிலத்தின் மேலும் விழுந்தால், ஜலத்தின் உஷ்ண நிலை குறைவாகவே யிருக்கும். நிலம் அதிக உஷ்ணப்பட்டு, அதன்மேலுள்ள ஆகாயம் மேல்நோக்கிச் செல்ல, சமுத்திரம்போன்ற நீர் நிலைகளி லிருந்து

குளிர்ந்த காற்று நிலப்பக்கமாய் வீச ஆரம்பிக்கும். இதன்றி ஜலம் சதா நீர் நிலைகளிலிருந்து நீராவியாய் மாறுகின்றது. சூரிய வெப்பம் மிகவும் உஷ்ணம் கொண்டது. காற்றின்வழியே வராமல், நம்மீது அவ்வுஷ்ணம் பட்டால், நம் எலும்புகளும் உருகிவிடும். அவ்வளவு உஷ்ணம் கொண்ட சூரிய வெளிச்சம், காற்றிலுள்ள நீராவியின் சக்தியால் உஷ்ணவேகம் குறைகிறது. இரவில் உஷ்ணக் குறைவால் நிலம் பனியால் மூடப்பட்டு விரைத்துப் போய்விடும். அங்ஙனம் குளிர்ச்சி பெறுது நீராவியானது தன் உஷ்ணத்தைத் தந்து தடுக்கிறது. இப்படி ஜலம் ஸதா மாறிமாறி நீராகவும், நீராவியாகவும் வேறு நிலைகளையடைவதால் பூமி அதிகமாய்ச் சூடுபடாமலும், அதிகமாய்க் குளிர்ச்சி பெறாமலும் ஒரு நிதான நிலையில் வைக்கப்பட்டிருக்கிறது.

### பனிக் கட்டி

ஜலமானது கனபதார்த்தமாய்மாறும் இயல்புள்ளது என்று முன் சொன்னோம். கட்டின ஜலமே பனிக்கட்டியெனப்படும். பனிக்கட்டி மிகவும் குளிர்ச்சி கொண்டது. வெயில் காலங்களில் பானங்களைக் குளிரவைக்க அது உபயோகப்படுகிறது. வைத்தியத்தில் உஷ்ணத்தைக் குறைக்கப்பனிக்கட்டி அதிகம் உதவுகிறது. பனிக்கட்டியிற்குளிர்ச்சி மிகுந்திருப்பதால் அதிற் சின்னஞ்சிறு கிருமிகள் போன்றஜீவராசிகள் வாழ்தல் முடியாது. இதை ஆதாரமாய்க்கொண்டு, மேனாடுகளில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடம் அனுப்பப்படும் இறைச்சி முதலிய உணவுப் பொருள்கள் பனிக்கட்டிப் பெட்டிகளில் மூடி வைக்கப்பட்டு கெடாமல் அனுப்பப்படுகின்றன.

நீரிலிருந்து பனிக்கட்டியாகையில் அதிக குளிர்ச்சி ஏற்பட்டாலும், பனிக்கட்டியானது ஜலத்தைவிட லேசானது. ஆகவே குளிர் நாடுகளில் சமுத்திர ஜலம் உறைந்தால், பனிக்கட்டி மேல் வந்து மிதந்து நிற்கும். மேலே பனிக்கட்டி வந்தவுடன், அது உஷ்ணமும், குளிரும் உள் செல்லாது தடுத்துக் கொள்ளும். பனிக்கட்டிக்கடியில் சமுத்திரத்திலுள்ள ஜீவராசிகள் எப்பொழுதும் போல் இடையூறின்றி வாழ்கின்றன. இப்படியெல்லாம் குண மாறுதல்களில்லாமற் போனால், சமுத்திரத்திலுள்ள பிராணிகள் எல்லாம் எப்பொழுதோ மடிந்து போயிருக்கவேண்டும்.

பனிக்கட்டியாயுறைந்து மலையுச்சிகளில் உலவும் ஜலமே, பெரும் ஆறுகளாய் மாறித்திரிகிறது.

### நீராவி

நீராவியின் உபயோகங்களைச் சற்றுக் கவனிப்போம். ஜலம் ரயில் எஞ்ஜின்களில் நீராவியாக மாறி, பல டன்கள் எடைகொண்ட வண்டித் தொடர்களை அலக்ஷியமாய் இழுத்துச் செல்வது எல்லோரும் அறிந்த விஷயம். 'ஸ்டீமர்' எனப்படும் கப்பல்களும் நீராவியின் உதவியால்தான் ஓடுகின்றன. ரோட் எஞ்ஜின்களும், மாவு, நெல் மில்களும், மற்றும் எவ்வளவோ வகை இயந்திரங்களும் நீராவியால்தான் வேலைசெய்கின்றன. நீராவியாக மாறுகையால் ஒருபங்கு ஜலம், 1732 பங்கு ஆவியாகிறது. ஆகவே நீராவியி னுதவியால் வாஸனைப் புஷ்பங்களை உஷ்ணப்படுத்தினால், நீராவியானது அப்புஷ்பத்திலிருக்கும் வாஸனை எண்ணெய்த் துளிகளை வெளிப்படுத்திக் கொண்டு வருகிறது. பின்னர் அந்த ஆவியைக் குளிர்ச்சியாக்கினால் வாஸனைத் திரவங்கள் கிடைக்கின்றன. பெரும்ஸோப்புத் தொழிற்சாலைகளில் கொழுப்புகளையும் எண்ணெய்களையும் உருக்க, நீராவியே உபயோகப்படுகிறது. பஞ்சு ஆலைகளிலும் சில லாண்டிரிகளிலும், ஈரத் துணிகளை உலரவைக்க நீராவியே உபயோகப்படுகிறது.

இவ்வளவு உஷ்ணம் கொண்ட நீராவியை இன்னும் உஷ்ணப் படுத்தலாம். அவ்விதம் உஷ்ணப்பட்ட நீராவியினுதவியால் உருக்க முடியாத எஃகுகளையும் கடின பதார்த்தங்களையும் எளிதில் உருக்கலாம். உஷ்ணமான எஃகைக் குளிரச் செய்யும் ஜலம், நீராவியாக மாறினால் அதே எஃகை உருக்குவது, வியக்கத் தக்கதே.

### முடிப்புரை

ஜலம் ஸதா மாறுவதால், பூமியிலும் மாறுதல்கள் ஏற்படுகின்றன. இன்றைக்கிருக்கும் ஆறுகள் மறைந்து, சில காலம் கழித்து வேறு இடங்களில் தோன்றும்; சமுத்திரங்கள் மறைந்து, நில கண்டங்கள் உருக் கொள்வதும், அவை மறைந்து நீர் நிலைகள் உண்டாவதும் சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் அறிந்த உண்மைகள். புயல் காற்றடித்தால் கஷ்ட மேற்படுகிறது. வெள்ளங்கள் சொல்லொணாத் துயரம் அளிக்கின்றன. இவ்வளவு மாறுதல்களும், துயரங்களும் ஏற்பட்டாலும், மொத்தத்தில் ஜலம் மனிதர்க்கு உதவியே செய்கிறது. ஜலம், எரி மலைகளில் உள்ளே கொதித்துப் பொங்கினாலும், ஆகாயத்தில் இலேசான மேகமாய்ப் பறந்தாலும், காட்டாறாய் வீறிட்டு ஓடினாலும், நீராவியாய் வண்டித்தொடர்களை இழுத்துச் சென்றாலும், பனிக் கட்டியாய் இறுகிக் கிடந்தாலும், பனித்துளிகளாய்ப் புஷ்பங்களில் நிறைந்து கிடைத்தாலும், நீர் வீழ்ச்சியாய் இயந்திரங்களைச் செலுத்தினாலும், இவையெல்லாம் அவ்வொரே ஜலத்தின் அம்சமேயாம். இதுவன்றி, உயிரை உண்டாக்கி, உணவும் இருப்பிடமும் தந்து, அதைச் சுத்தமாயும் வைத்துக் காப்பாற்றும் இந்த ஜலம் சாதாரணப் பொருளாமோ? மனிதராலும், மற்றெவ்விதப் பொருளாலும் செய்ய முடியாத அரும்பெரும் வேலைகளை ஓயாது செய்யும் இந்த ஜலம் சாமானியப்பொருளாமோ? இவ்வளவு குணங்களையும் அறிந்துதான், வியப்பும் பக்தியும் மிகுந்து உலகின் காலையில் அறிஞர் ஜலத்தைத் தெய்வ மென்றே நினைத்துத் துதிபாடினர். அவர்கள் அறிவிலிகளாவரோ?



# தீண்டாதார் யார்?

[திரு. குமாரதாசன்]

[இது, 'New Times' என்ற பத்திரிகையில் 23-1-33ல் ஆங்கிலத்தில் பிரசுரமான கட்டுரையின் மொழி பெயர்ப்புச் சாரம்.]

மனிதன் படிப்படியாக விகாச முறையால் கடவுளோடு ஒருமைப்படும் பூரணத்துவத்தை அடைகிறான். மனிதன் மண்ணுலகை நீத்துப் பின் ஜீவிக்கிறானா, அல்லது மற்ற உலகங்களிலும் இதே விகாச முறையை மேற்கொண்டு செல்கிறானா என்பது நம் விஷயத்துக்கு அவ்வளவு பிரதானமன்று. நாம் கவனிக்க வேண்டியது, நாம் அறிந்த சாதாரண வாழ்க்கை பரம்பொருளின் விகாசமுறைத் திட்டத்தின் ஓர் அம்சமாகும் என்பதே. மக்கள் செயல், உடல் நெகிழ்ச்சி, மன நெகிழ்ச்சி, உள்ளுணர்வு (emotion) நெகிழ்ச்சி என மூவகைப்படும். மனிதன் இம் மூவகைச் செயல்களில் தன் சக்தியை நிரூபிக்க ஒரு ஸாதனக் கருவியாக நம் கண்ணுக்குப் புலப்படக் கூடிய ஊன் உடல்மட்டுமன்றி அறியக்கூடாத ஜடத்தால் ஆக்கப்பட்ட மன உடல் உள்ளுணர்வு உடல்களும் அமையப்பெற்றிருக்கிறான். ஜடமானது (matter) கண்ணுக்குத் தெரிந்து தடித்திருந்தாலும் சரி, ஸ்தூல பார்வைக் கெட்டாது நுண்ணியதாயிருந்தாலும்சரி அது ஜடபதார்த்தமே. அதுபோல் இவ்விரண்டில் எதனால் ஆக்கப்பட்டதாயினும் ஆத்மா உபயோகிக்கும் போர்வையை உடல் என்றே சொல்ல வேண்டும். ஆத்மாவுக்குப் புறம்பாய் எது இருந்தாலுஞ் சரி அது அடர்ந்த, ஸ்தூலமான ஜடமாகும். மின்சாரம் தன்

சக்தியை நிரூபிக்கத் துணைக் கருவியாக மின்சாரக் கம்பிகளை நாடுகின்றது. அதேபோல் மானிட ஆத்மாவும் தன் சக்தியையும், செயலையும் காட்டுவதற்கு ஜடத்தையும் (Matter) உருவத்தையும் (Form) நாடி நிற்கிறது. நாம் மேற் கூறியவாறு மக்கள் செயல் மூவகைப்படும். ஆத்மா அம்மூவகை உருவங்களையும் தன் சக்தியைக்காட்ட நாடி நிற்கின்றது. ஆகவே, மேற்கூறிய மூவகைச்சரீரங்களையும் மனிதன்தெரிந்தோ தெரியாமலோ உபயோகப்படுத்துகிறான்.

ஒவ்வொருவனும் தன்னருகே யுள்ளவர்களுக்குத் தன் இயற்கையைச் சிறிதளவு பரப்புகிறான். நோயாளி நோயைப் பரப்புகிறான்; ஆரோக்கியவான் ஆரோக்கியத்தைப் பரப்புகிறான். நோயைப்போல் சுகாதாரமும், பரவும் தன்மையுடையது. சில வியாதிகள் மிகவும் கொடூரமா யிருப்பதால் அவைகளைத் தொத்து வியாதி யென்று அழைக்கிறோம். அதனால் மற்ற வியாதிகள் எல்லாம் தொத்துகிறவை அல்ல என்று நாம்கொள்ளுதல்கூடாது. இவ்விரண்டிற்கும் வித்தியாசம், அவைகள் மனிதன்பால் உண்டாக்கும் உக்கிரமான குணத்தைப் பொறுத்திருக்கிறது. ஆரோக்கியத்தின் பரவுதல் அல்லது ஒரு வியாதியின் பரவுதல் நமக்குப் புலப்படாததினால் அந்நிகழ்ச்சி ஏற்படவில்லை என்று நாம் கருதலாகாது. ஒரு குடிகாரன் தான் இருக்கும் இடத்தைத் துர்க்கந்தப் படுத்துகிறான். அவ்வமயம் நிகழும் நெகிழ்ச்சியை யாவரும் உணர்கின்றனர். பிறனொருவன் சிறிதளவே குடிக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். இவனும் முன்னவனைப் போல் அதிகமாகத் துர்க்கந்தப் படுத்தாவிட்டாலும் தன்னை யடுத்தோருக்குத் தெரியாதவாறு சிறிதளவாவது துர்க்கந்தப் படுத்துகின்றான். மற்றோர் உதாரணம்: சுரத்தால் பீடிக்கப்படும் ஒருவன் தன்னைச் சார்ந்தோருக்கு அவர்கள் அறியாதவாறு அச்சுரத்தைப் பரப்புகிறான். ஆகவே இவைகளினால் நாம் அறியக் கிடப்பதென்ன? ஒருவன் தன் பொருட்டன்றிப் பிறர் பொருட்டாலும் ஆரோக்கியமாய் வாழவேண்டும் என்பதே.

உள்ளுணர்வு நெகிழ்ச்சி சம்பந்தமாயும் ஆறறிவுஉள்ள மனிதன் ஒவ்வொருவனும் தான் தவறுதலாய் நடந்தால் பிறருக்கும் அவ்வித உள்ள நெகிழ்ச்சியின் தவறுதலைப் பரப்புகின்றான் என்பதை உணர வேண்டும். உள்ளுணர்வு நெகிழ்ச்சி அன்பு, வெறுப்பு என இருவகைப்படும். பொறாமை, கோபம் பழி வாங்குதல் முதலியன வெறுப்பினத்தைச் சார்ந்தவை. சகோதர வாஞ்சை, காருண்யம், பச்சாத்தாபம், மன்னித்தல் முதலியவை அன்பினத்தைச் சார்ந்தவை. கோபி பிறருக்குக் கோபத்தைப் பரப்புகிறான். ஆனால் கோபியோடு சம்பந்தப்படும் ஒருவன் அக்கோபாக்கினியை அடைகிறானா என்பது, (தொத்து வியாதி உள்ளவனோடு சம்பந்தப்படும் ஒருவன் அத்தொத்து வியாதியை அடைகிறது, அவன் சரீர நிலைமையைப் பொறுத்திருப்பதுபோல்,) ஒருவனுடைய அறிவு, வளர்ச்சியைப் பொறுத்திருக்கிறது. கண்ணுக்குப் புலனாகாத தன்மையால் அதனுடைய பலன் இல்லை என்று நிர்மாலிக்க முடியாது. இவ்வாறு துர்லபமான உணர்ச்சிகளின் பழக்க வழக்கங்களைக் குழந்தைகள், பின் பற்றினாலும் பின்பற்றலாம் என்ற கருத்துடனேயே பெற்றோர்களும், உபாத்தியாயர்களும், பிள்ளைகள் நல்ல துறையில் ஈடுபடுவதற்காக, ஒரு வழிகாட்டியாகத் தாங்கள் நடந்துகொள்ள வேண்டும் என்று பெரியோர்கள் வலியுறுத்துகிறார்கள். இந் நோக்கத்தோடுதான் நம் நாட்டில் பண்டைக் காலத்தில் சன்மார்க்கத்தை அடைய விரும்புவோரின் வாழ்க்கையில் 'சத்சங்கம்' மிகவும் வலியுறுத்தப் பட்டிருக்கிறது.

''ஒரு கருத்தை விதைத்தால், செயலை அறுவடைசெய்வீர்கள், செயலைவிதைத்தால், பழக்கத்தை அறுவடைசெய்வீர்கள், பழக்கத்தை விதைத்தால், குணத்தை அறுவடைசெய்வீர்கள், குணத்தை



விதைத்தால், ஒரு முடிவான அனுபவத்தை அறுவடைசெய்வீர்கள்'' என்பது ஆன்றோர் அமுதவாக்கு. ஆகவே, நல்லெண்ணங்களும் நல்லுணர்ச்சிகளுமே நற்குணத்திற்கும் நல் முடிவிற்கும் அடிப்படை என்பது தெளிவு. உள்ளப் பாகுபாட்டிற்காக (Psychological analysis) எண்ணத்தையும், உள்ளுணர்ச்சியையும் வேறு படுத்தலாமாயினும் அனுபவத்தில் கவனிக்குங் காலை அவ்விரண்டும் ஒன்றோடொன்றுபிணைந்திருப்பதால் அவைகளைத் தனித்தனியே பிரிப்பது சிரமமாகும். ஆகவே மக்களின் சந்தோஷமும் அவர்கள் அனுபவபூர்த்தியும் அவர்கள் எவ்வாறு எண்ணுகின்றார்கள், எவ்வாறு உணர்ந்து நடக்கின்றார்கள் என்பதைப் பொறுத்திருக்கின்றன. ஆகவே நாம் நல்வழியில் எண்ணாமலும், உணராமலும் இருப்போமானால் நமதுமுடிவையே நாம் நாசமாக்குவதுடன் நம்மோடு நம் வாணாட்களிற் சம்பந்தப்படும் பிறரையும் கெடுக்கிறோம்.

மன. உடலிலும் மேற்கண்ட கொள்கையே அடிப்படையாகும். எண்ணத்திற்கும் உள்ளுணர்ச்சிக்கும் உள்ள வித்தியாசத்தை இங்கு எடுத்துக் காட்டுவோம்) உதாரணமாக ஒருவன் கணித சம்பந்தமான கடின ஆலோசனை செய்யும்போது மனம் செயலாற்றுகின்றதே யொழிய உள்ளுணர்ச்சி செயலாற்றவில்லை. மனத்தைப் புறம்பே செலுத்தாது, தான் அறியக் கிடக்கும் ஒரே பொருளில் செலுத்தக்கூடிய ஆற்றலைச் சாதாரண மனிதன் ஒரே நாளில் அடைவது எளிதன்று. நேர்மையான விடா முயற்சியே மக்கள் அறிவை வளர்க்கிறது. அறிவு வளர்ச்சி, உள்ளுணர்ச்சியையும், உள்ளுணர்ச்சி அறிவு வளர்ச்சியையும் பரப்புகின்றன. மக்களிடம் உள்ளக் கொதிப்பு இருக்குமானால் அறிவு திருஷ்டி குறையும் என்பது உறுதி. திடமான, பரிசுத்தமான எண்ணம் குடிகொண்டிருக்குமானால் கொதிப்பான உணர்ச்சியை அதனால் மாற்றலாம். ஆகவே, முன்கூறியவாறு அனுபவத்தில் எண்ணத்தையும் உணர்ச்சியையும் பிரிக்க முடியாதபடி அவ்வளவு பிணைந்திருந்தாலும் உண்மையில் அவை மானிட இயற்கையைச் சார்ந்த இருவகைத் தன்மைகள் என அறிகிறோம்.

அறிவு மிகுந்த ஒருவன் சிக்கலான பிரச்னையைப் பிறருக்கு விளக்குங்காலை அதைக் கேட்போர் அவ்வமயம் மிக்க அறிவுடையோரிடம் நெருங்கிச் சம்பந்தப் படுவதினால் சிறிது அறிவு விகாஸம் அடைகின்றனர். ஆனால் அவன் அகன்றதும் அவர்களின் மனஒளிமங்குகிறது. இது மனிதனோடு மனிதன் நெருங்கிப் பழகும் சம்பந்தத்தால் அறிவின் சக்தி எவ்விதம் பரவுகின்றதென்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இவ்விதமே நல்லறிவு வாய்ந்த பெற்றோர்களோடும், உபாத்தியாயர்களோடும் பிள்ளைகள் சம்பந்தப்படுவார்களானால் அவர்களின் அறிவு மிகநுட்பமாக விருத்தியடையும் என்பது திண்ணம். இதனின்று மனிதன் அறிவைத் தனக்கன்றிப் பிறருக்காகவும் நல்வழியில் வளர்க்க வேண்டுமென்பது விளங்கா நிற்கும்.

ஆரோக்கிய மற்ற முறையால் தொத்து வியாதிகளைப் பரவவொட்டா வண்ணம் மக்கள் நன்மையைக் கருதிச் சட்ட திட்டங்கள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. அறிவு வாய்ந்த மனிதனொருவன் தன் குடும்பத்தையும் தன்னைச் சார்ந்த பிறருடைய சுகாதாரத்தையும் ஒழுங்காக நடத்தப் பிறர் தூண்டுதலை நாடான். அவ்வாறே உள்ளறிவு வளர்ந்த மனிதனொருவன் தண்டனையை விளைக்கக் கூடிய வெறுப்பால் ஏற்படும் காரியத்தைச் செய்யான். மேலும் பிறரும் நிலை தவறு வண்ணம் தானும் நல்லுணர்ச்சியில் ஈடுபடுவான்.

மேற்கூறிய கொள்கைகளின் மூலமாய்த் தீண்டாமையை ஆறறிவு வாய்ந்த மக்கள் ஆராயவேண்டியது அவசியமாகும். முதலில் யார் யாருடைய சம்பந்தத்தால் கெட்டுவிடுகிறார்கள் என்ற சந்தேகம் தோன்றலாம். அதனால் சமூ

கத்திற்கு இன்னல் செய்யும் பெரும் பாவிகள் யார் என்று கவனிப்போம். மேற்குலத்தில் பிறந்து தீய வாழ்க்கையில் ஈடுபட்டுப் பிறரைக் கெடுப்பவனோ? அல்லது தாழ்ந்த குலத்தில் பிறந்து மனதாலும், காயத்தாலும் தூய வாழ்க்கை நடத்துபவனோ? வெறுப்பினால் ஒரு காரியத்தைச் செய்து பின்பு நியாயாதிபதியைத் தனது திறமையால் ஏமாற்றி வெற்றிபெறும் மேற்குலத்தவனோ? அல்லது களங்கமற்ற உண்மை பேசி அதனால் தனது வழக்கை இழக்கும் தாழ்ந்த குலத்தவனோ? 7 அல்லது 8 வயதுடைய பாலகனை, அவனுக்கு யாதொரு கல்விப் பயிற்சியும் அளியாமல் 12 மணி நேரமும் ஓயா வேலை வாங்கும் முதலாளியா? அல்லது நெற்றி வேர்வை நிலத்தில்விழ மனதாலும் காயத்தாலும் தீய வழியில் ஈடுபடாமல் நல்வழியில் சம்பாதிப்பவனோ? குடியை வெறுக்கும் பஞ்சமனோ? அல்லது மதுவிலக்குச் சட்டம் இயற்றி விடுவார்களோ என்ற பீதி யடையும் (இயிர் பிடித்த) ஜாதி இந்துவா? உயர் குலத்தோரே! ஜாதி இந்துக்களே! நீண்டநாள் முன்னேற்ற இயக்கத்திற்கு முட்டுக்கட்டை போடுமுன் நீங்கள் உண்மையாகவே தீண்டாதாரா அல்லது தீண்டப்படும் யோக்கியதை உள்ளவர்களா என்று நெஞ்சில் கையை வைத்துப் பேசுங்கள்.

---

# தாவீது மன்னரின் தனிக் கோள்

[திரு. T. R. சாரங்கபாணி, M. A.]

(தொடர்ச்சி)

## இதழ் 4.

### மெய்யறிவுறுத்தல்

**தா**வீது மன்னரின் சரிதச் சுருக்கத்தையும் அவருடைய கடவுளுணர்வையும், கடவுளியல்பையும் ஆய்ந்தறிந்த நாம் இனி, அவர் மக்கட் கூட்டத்திற்கு அருளிய மெய்யுரைகளை ஆராய்வோம்.

உலகிடை யுதித்த மக்கள் சிற்றின்பக்கேணியில் வீழ்ந்து, பாச பந்தங்களில் சிக்குண்டு, யாக்கையின் இயல்பை உய்த்துணரு மாற்ற லற்று, கடவுளைப் போற்றாது கண்மூடித் திரிவதைக் கண்ணுற்ற தாவீது மன்னர்,

"மனிதனுடைய நாட்கள் புல்லுக்கு ஒப்பாயிருக்கின்றன. வெளியின் புஷ்பத்தைப் போல் பூக்கிறான்—காற்று அதன் மேல் வீசிய உடனே அது இல்லாமல் போயிற்று. அது இருந்த இடமும் இனி அதை யறியாது" (103 : 15-16.)

"வேஷமாகவே மனிதன் திரிகிறான்; விருதாவாகவே சஞ்சலப்படுகிறான். ஆஸ்தியைச் சேர்க்கிறான். யார் அதை வாரிக் கொள்வானென அவன் அறியான் (39:6)

"மனிதன் மாயைக் கொப்பாயிருக்கிறான்" (144 : 4.)

என மனிதனுடைய நிலையாமையை நன்கு வலியுறுத்தி, மாயை யின்பத்தில் மயங்கி நல்வழி மறந்து, நன்னெறி துறந்து, நிலையற்ற வாழ்வில் நிலைத்த இன்பமுண்டென நினைந்து மயங்குபவர்களை யறுத்து அவர்களுக்கு அறவுரை யோதி, வையகத்தே பிறக்கும் பின்னர் இறந்தபோதும் தோன்றி மறையும் உலகியலை முன்னிலையில் எடுத்துரைத்து வலியுறுத்தவது முறையே யாகும். ஆறறிவுடனமைந்த அரிய பிறவியாகிய மானிடப் பிறவி தாங்கிய நாம் நமது உற்றார் இறந்து படுகையில், உறவினர் நிலையின் இறந்து படுகையில், நாமும் நிலையைப் பிறந்தகுறிப்போடும் மறந்தொழிவோமென எண்ணுகின்றோம்,





ஆனால் அடுத்த நிமிடம் நாம் துயரக் கேணியில் ஆழுங்கால், அரும்பிய பேருண்மையும், மாயையால் மறைகின்றது. எனவே, அறியாமையால் நாம் அற்ப சுகத்தை நாடிப் பேரின்ப வாழ்க்கையை மறந்து இறுதியில் அதனைத் துறந்தும் விடுகின்றோம். எவ்வாறு யாக்கையின் நிலையாமை, உண்மையை யோர்ந்து உலகிற்குதவ, தாவீது மன்னருக்கு உதவி யாற்றியதோ அதைப் போலும், மக்கட் கூட்டத்தில் மாரகத்தை மதியாது மாயையுள் மயங்கியவர்களுக்கு உண்மையை யறிவுறுத்துகையில் தாவீது மன்னர் அவர்கள் மறந்த யாக்கையின் நிலையாமையை முதலில் மேலோதிய மெய்யுரைகளால் வலியுறுத்துகின்றார். "மனிதனே! நீ உன்னை யறிந்திடு" என்று சாக்ரேடிஸ் என்னும் பேரறிஞர் பல்லாண்டுகளுக்கு முன்னர் அறைந்ததற் கேற்பத் தாவீது மன்னரும், நம்மையும், நம் நிலையாமையையும், மாயையின் வலிமையையும் அறிந்திடுமாறு - ஆராய்ந்து உணர்ந்திடுமாறு - தூண்டுகின்றார்.

அவ்வாறு இன்பமுந் துன்பமுங் கலந்திடும் உலக வாழ்க்கையினின்றும் உலகபந்தங்களினின்றும் மீண்டு நிரந்தரமாகத் திற்காளாதற்குரிய துணையை-ஏற்றத் துணைவனை - நாட வேண்டுமெனக் குறிக்கையில், தாவீது,

"மனிதனுடைய உதவி விருதா" (108 : 12) என நம்மைப் போலும் அழிந்து படும் மனிதன் நமக்குப் பேரின்பத்தை நல்கிடான் என்ற உண்மையை விளக்குகின்றார்.

மேலும் அழிந்து படும் ஆறறிவினரின் உதவியை நாம் நாடவியலாதெனெடுத்துக் காட்டிய தாவீது மன்னர் நமக்குப் பேரின்பத்தை, மாறில்லா ஆநந்தத்தை, நிலைத்த இன்பத்தை அருளவல்லான், நிலைத்த இயல்பு வாய்க்கப்பட்டவனென்றும், உலகிற்கெலாம் ஆதியாகவும் அந்தமாகவும் இலங்கிடுந் தூயன் என்பதையும் குறிக்க,

"வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகின்றன. ஆகாய விரிவு அவனுடைய கரங்களின் கிரியையை யறிவிக்கிறது" (19:1) என ஆண்டவன்படைத்த இவ்வுலகைக்காணுங்கள், அவன் பெருமையையும் இயல்பையும் அங்கைக்கனியென விளக்கும் இயற்கையின் மாண்பை யுணருங்கள்; அவரே நமக் கேற்ற துணைவர். அவர் தோன்றாத் துணைவரெனினும், அவரருளல்லால் நாம் பேரின்பப் பேறடைய வல்லாது. எனவே,

"கர்த்தர் மேல் நம்பிக்கையாயிருங்கள்" (4 : 5.)

"ஜனங்களே! எக்காலத்திலும் அவரை நம்புங்கள்" (62 : 8.)

எனெனின்,

"ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன்" (50 : 15.)

எனத் தம்மை யண்டினவர்களுக்கு உறுதிவாக்களித்த அவரே மரணத்தினின்றும் நம்மை மீட்டு, மூரிச் செல்வத்தை யருளும் ஆற்றலுடையவர் என மக்களுக்கு இறைவன் மாட்டு மாறா நம்பிக்கையை யூட்டுகின்றார். மரணத்தில் பற்றிய ஒருவனுக்குப் பற்றுக்கோடாக நின்று இன்பவாழ்வை மீட்டுகின்றவர் இறையொருவரே யாவரென்னும் பேருண்மை மீண்டுப் புலனாகின்றது.

மக்களுடைய நிலையாமையை விளக்கி அதற்குத் தோன்றாத் துணைவராக நின்று நமக்குப் பேருதவியாற்ற வல்லவர் ஆண்டவ ரொருவரே யென ஓதிய பின் இறைவன் மாட்டு நாம்கொள்ளும் மாறாநம்பிக்கையால் நாம் பெறற்குரிய நலன்களைத் தாவீது மன்னர்,

"அவர் உன் இருதயத்தைத் திடப்படுத்துவார் (27 : 14)

"கர்த்தரை நம்பி யிருக்கிறவனையே கிருபை சூழ்ந்துகொள்ளும்" (32 : 10)

"நெறுங்குண்ட இருதய முள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கின்றார்" (34 : 18)

"கர்த்தரைத் தேடுகிறவர்கள் அவரைத் துதிப்பார்கள்" (22 : 26)

என ஆண்டவரை நாம் ஆபத்துக் காலம் அண்டுவதாற் பெறும் இன்னலங்களை இனி தோதுகின்றார். உறுதி மனமும், உத்தம குணமும், சூழ்ந்த கிருபையும், உற்ற துணையும், மாறா நம்பிக்கையுமுள்ளவன்-இறைவனிடத்தில் பேரன்பு பூண்டவன் - பெற்றிடுகின்றா னென மேலோதிய தாவீது மன்னரின் மணியுரைகள் விளக்குகின்றன.

இதுகாறும் ஆண்டவனைப் பற்ற வேண்டுமெனவும், அவன் மாட்டு மாறா நம்பிக்கையை வைத்தல் வேண்டுமெனவும், அவனை ஓயாது நினைந்து, தோன்றாத் துணைவனுகக் கொண்டு ஒழுகுபவரை அவர் கைவிடுவதில்லை.

"கர்த்தாவே உம்மைத் தேடுகிறவர்களை நீர் கைவிடுவதில்லை" (22 : 25)

என்றும், அக்கம்புளக, உளம் நெகிழ, ஆவி சோர, இடிப்புண்டவர்களுக்கு அருகில் தோன்றாத்துணையாக நின்று பெருந்தி யாற்றுந் தனி முதல்வன் ஆண்டவனை யெனவும், இனி தோதியபின் இறைவன் மாட்டு அன்பு கொள்ளாக் கயவர்களின் கதியை இனிது விளக்குவது முறையேயாம்.

"தேவனில்லை யென்று மதிகேடன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான் (53 : 1)

"துன்மார்க்கன்...பெருமை பாராட்டிப் பொருளையபகரித்து, தன்னைத் தான் போற்றிக் கர்த்தரை அசட்டை பண்ணுகிறான் - துன்மார்க்கன் தன் கர்வத்தினால் தேவனைத் தேடான் அவன் நினைவுகளெல்லாம் தேவனில்லை யென்பதே. அவன் வழிகள் எப்பொழுதும் கேடுள்ளவைகள்" (10 : 3 - 5)

உண்மையில் தன் நிலையாமையை யுணர்ந்தவன் - இறைவனைத் தன்னுடைய உற்ற துணைவனுகக் கொள்வான். ஆனால் துன்மார்க்கனே மாயையுளாழ்ந்து மதிமயங்கித் தானெனும் ஆணவந் தலை விரித்தாடச், செல்வச் செருக்குப்பிடர்பிடித்துந்த, அந்தக்கால நினைவின்றி, மாணத் திகில் மறைய இறைவனைத் தேடுவதில்லை யென்று தாவீது மன்னர் விளக்கி, இறுதியில்,

"துன்மார்க்கருந் தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும் நரகத்திலே தள்ளப்படுவர்" (9 : 17) என்று துன்மார்க்கருடைய இறுதியையும் இனிது ஓதுகின்றார்.

அஞ்ஞானவிருளி லாழ்ந்து காடுறை விலங்குகளுடன் விலங்குபோலும் மனிதன் - அநாகரிக மிருக்து திரிந்து, ஆண்டுகள் கழிய, அறிவு முதிர, உள்ளொளி விளங்க, ஆறறிவு இயங்க, நாகரிகம் முதிர்ந்து, இயற்கை நெறிகளை யோர்ந்து, செயற்கை எழில் சிறக்க விளங்க, ஆன்ம வுணர்ச்சி யருக, மிருக நீர்மை அலங்க, ஆன்ம வுணர்ச்சியற்ற நாகரிகத் தாழன்றிடுங் கால், எல்லாம் இயற்கையின் செயலென விறுமாந்து, இறைவனொருவனுண்டோ விலையோ - காட்சியளவை யான் காணற்கரிய ஒரு பொருள்மீது நம்பிக்கை கொண்டு மதிமோசம் போதல் நம் போன்ற அறிவாளிகளுக்கு அழகயாதெனை, பக்தர்களையும் மெய்யடியார்களையும் எள்ளி நகையாடும்-தம்மைத் தாமறியாது பேரின்ப வேட்கை எழாது - மீளா நரகில் ஓயாத் துயரை வலிந்தழைத்து மோசம் போகும்-தியருடைய விதியைத் தாவீது விளக்கி, அவருடைய கீதங்களை யோதுவார்க்குத் திநெறி நீக்குநன்னெறிபற்று மாறு தூண்டுகின்றார் எனக் கூறலும் ஒவ்வும்.

மேலும் மாணத் திகில் பிடர்பிடித்துந்த, மாயையு ளாழாது, தீநெறியை நாடாது இருக்க, நமக்கு உதவிபுரிய



இறைவனை அண்மின், நம்முடைய நெறியும்,

"நல்ல மனிதனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும்" (37 : 23)

என தாவீது மன்னர் உரைப்பதற்கேற்ப, நன்னெறியாக, இறைவனுக்குகந்த நெறியாக இறைவனால் அணிவகுக்கப்பட்ட நெறியாக மாறிடும் என்னும் பேருண்மையும் ஈண்டுப் போதருகின்றது. "அவனருளால் அவனடி வணங்கி" என்னும் மற்றோர் அடியாரின் பொன்னுரைகளும் இப்பொய்யா உண்மையுடன் மிளிர்தல் காண்க.

"தேவனுடையவழி உத்தமமானது" (18 : 30) உத்தமராய் இலங்குந் தூயராகிய ஆண்டவருடைய வழி தூய வழியாதலான், இறைவனருளால் அவரால் உறுதி செய்யப்பட்ட வழியைக் கடைப்பிடித்தொழுகுவார் நன்னெறி மறந்தும் பிறழார் எனவும் விளக்குகின்றது. ஆண்டவன் நல்வழியை யோர்ந்து அதற்கிணங்க வாழ்க்கையை நடாத்துகின்றவனே - நீதிமானவன் - மெய்யடியான் - ஆவன்.

# நமது சிந்தனை

[திரு. சி. சதாசிவனுர்]

"தேவனை என்னுள்ளே
தேடிக்கண்டு கொண்டேன்."

I

நாம் விழித்திருக்கும்போது, புலன் வழிச் சென்று இயலும் மனம் ஒன்று நம்மிடம் இருக்கின்றது. இம் மனமெனும் கருவி கொண்டே நாம் பருமை புலகின் உணர்வை யூர்கின்றோம். இம்மனதினாலேயே "இவை தீயன, இவை நல்லன," என்று உணர்ந்து, தேர்ந்து, செய்வன செய்ய முற்படுகின்றோம். நனவில் தொழிற்படும் மனதின் இக்கூற்றைப் புறமனம் என்று கூறலாகும். இப்புற மனதிற்குக் கருவிகள் ஐந்து புலன்களாகும். புலன் பொறி வழி மனம் வெளிப்போந்து உருவெளித் தோற்றத்தின் மாறுபாடுகளையும், அவ்வவற்றின் குணங்களையும், ஒற்றுமை வேற்றுமைகளையும் அறிந்து, நாம் வாழும் பருமை உலகினது அறிவை நமக்கு ஊட்டுகின்றது.

இவ்வறிவை இரசாயனம், வைத்தியம் ஆதிய நூல்கள் எனும் பற்பல வகையாக வகுத்து, நாம் அன்றாடம் இயற்றும் ஒவ்வொரு முயற்சியிலும் அவ்வறிவைப் புகுத்தி, அதனால் வரும் இன்பதுன்பங்களை நாம் நுகர்கின்றோம். பருமையிற் றொழிலாற்றும் புறமனதிற்கு அப்பால் இவ்வண்ணம் அறிவைப் பண்படுத்தவல்ல உள்மனம் ஒன்று நம்முள் மறைந்து கிடக்கின்றது. இதை உள்ளம் என்று சொல்லலாகும். அனுபவ வாயிலாக இவ்வருமையான உள்ளத்தின் இருப்பையும் இயல்பையும் அறியக்கூடும். நாம் துயிலணைந்தபோது, புற மனமுந் தூங்கிச் செயலற்றதாகின்றது. அக்காலத்தும் உள்ளம் கண்துஞ்சாது, உடலோம்பி, உயிர் வாழ இன்றியமையாத, உள்ளுறுப்புகளாகிய இரத்தாசயம், காற்றுசயம், சீரணசயம் இவை போன்றவைகளைச் சரிவர இயக்கா நிற்கின்றது. விழிப்பில் எவ்விதம் உடகருவிகள் தொழிற் படுகின்றனவோ அவ்விதமே நாம் தூங்கும்போதும் அவை உள்ளத்தினது ஆணையால் தந்தம் தொழிலைக் குறைவுபடாது நடாத்துகின்றன. இது போன்ற பல காரணங்களால் மறைந்து கிடக்கும் உள்ளத்தின் பெருமையையும் சட்டத்தையும் நாம் உணரல்கூடும்.

இன்னும் துயிலில் தோற்றும் கனவுகளும் உள்ளத்தின் இயல்பை நமக்கு உணர்த்துவன ஆகின்றன. கனவுகள் மனதின் தொழிலாயிருப்பினும் நனவில் அவை தோற்றுவனவல்ல. ஆகையால் விழிப்பு நிலை புற மனதினின்றும் அவை பிறப்பதில்லை. என்றும், உள்ளத்தின் தோற்றமே அக்கனவுகள் என்றும் அறியக்கிடக்கின்றது. நனவில் ஏற்படும் காட்சிகளிலுள்ள ஒழுங்கு ஒற்றுமை அறிவு ஆகியன, கனவில் வரும் உணர்ச்சிகளில் காணப்படவில்லை. ஆதல் பற்றிக் கனவு புற மனதின் தொழில் அல்ல என்பதையும், இவைகளை உண்டாக்கும் உள் மனம் ஒன்றிருத்தல் வேண்டும் என்றும் நிச்சயிக்கலாம். சிற்சில சமயங்களில் கனவுகள் மிக்க ஒற்றுமையோடும் அதி பலத்தோடும் தோன்றிப் புறமனதையும் கவர்ந்து விடுகின்றன. அக்காலங்களில் தூக்கத்தினின்றும் எழுந்தவுடன் “கண்டது கனவோ, நனவோ” என்று மயங்கிப் பருமையில் ஒரு சிறு செயலாற்றி, பின் “தான் கண்டது கனவே” என்று நாம் தெளிகின்றோம். இத்தகைய நிகழ்ச்சிகளால் புறமனம் வேறு, உள்மனம் வேறு என்று தெளிவடையலாம்.

பழக்கம், வழக்கம் என்பதினாலும் இவ்வுள்ளத்தின் நிலையை அறிதல் கூடும். வழக்கமாயுள்ள தினசரி காரியங்களைப்புரியும்போது நாம் புறமனதை வேறு விஷயங்களில் செலுத்தியிருந்தாலும் அச்செயல்கள் இச்சித்தத்தின் தொழிலால் செவ்வனே நடந்தேறுகின்றன. உதாரணமாக: சந்தியாவந்தனஞ் செய்யும்போது அருகிலிருப்பவர்களோடு பேசிக்கொண்டே இருந்தாலும் கைகள் கால்ந் தவறாது மூக்கைத் தொடுகின்றன; தண்ணீர் இறைக்கின்றன. கைகளுக்கு என்னென்ன வேலைகள் உண்டோ அவைகளை அவை செய்து முடிக்கின்றன. பழக்கமாகிய ஓரிடம் போக வேண்டுமென்று நாம் கிளம்புகின்றோம். பேசிக்கொண்டோ அல்லது யோசித்துக்கொண்டோ புற மனதிற்கு வேலை கொடுத்துக் கொண்டே செல்கின்றோம். நம்மையறியாமலே சரியான பாதைகளில் திரும்பி, சைகில், மோட்டார் இவைகளில் அகப்படாமல் குறித்த இடத்திற்குக் கால்கள் நம்மைக்கொண்டு செல்கின்றன. சிற்சில காலங்களில் “நாம் எப்படி இங்கு வந்தோம்” என்று ஆச்சரியப்படுவது சாதாரணம். இந்நிகழ்ச்சிகள் உள்ளத்தின் இருப்பையும் இயலையும் குறிக்கின்றனவல்லவா?

மனதின் பாகுபாடுகளையும், அதன் இயல்பையும், சட்டங்களையும் நாம் அறிந்துகொள்ளுமுன் நமக்கு உண்மை அறிவு ஏற்படாது. மனதிற்கு உள்ளும், புறமும் எங்கும் நீக்கமறநிறைந்து நின்று மனதின் மூலம் மனிதனை இயக்கும் எல்லாம் வல்ல வன்மையின் இயல்பையும் நாம் அறிதல் இயலாது. மனதின் செயல்களைத் துருவித் துருவிப் பார்த்து அதன் ஒழுங்கை நாம் அறிந்துகொள்வதே ஆன்ம ஞானம் பெற - இறை அறிவுகூட - முதற்படியாகும். இறையே மனதின் பின்னின்று அதை இயக்கு முறைமையான் மனதையும் அதன் கூறுகளையும் அதன் கூற்றுக்களையும் உணராமல் நாம் அதன் பின்னிற்கும் இறையைக் காணமுடியாது.

இறையின் தோற்றமாகிய பருமை உலகைப் புறமனம் அறிகின்றது. உலகின் சாரமாகிய இறையை உள்ளம் தொடுகின்றது. மனதின் உதவியால் இயற்கை வாயிலாகச் சிந்தித்துச் சோதிப்போமானால் தோற்றத்தின் ஊடே நிறைந்து கிடக்கும் ஒழுங்கை, நிறைவை - ஒற்றுமையை, இன்பத்தை, அமைதியை, சுகவாரியை, கருணையை உணரக்கூடும். பருமையில் நாம் பார்க்கும் ஒன்று அகலம், நீளம், கனம் முதலியவைகளோடு கூடிய ஒரு பொருள் மட்டுமல்ல என்றும், அத்திண்மை தெய்வீக சக்தியினது ஒருவித சலனத்தால் உண்டாவதே என்றும், அப் பொருளோடே அதைத் தோன்றச்செய்த ஒரு சக்தி இருக்கின்றதென்றும், நமது மனத்திற்கு எட்டாது நம்



முள் மறைந்து கிடக்கும் சக்திக்கும் நமது உடலுக்கும் உள்ளது எத்தொடர்ந்தமோ அத்தொடர்ந்தமே அச்சக்திக்கும், அப் பொருளுக்கும் இருக்க வேண்டுமென்றும் நமக்குப் புலப்படாமற் போகாது.

அநுபவத்தாலும் காரண காரிய ஆராய்ச்சியாலும் நம் மனதின் ஆழ்ந்தகன்ற கூறாகிய சித்தம் அல்லது உள்ளமே நம்முள் மறைந்து கிடக்கும் சக்தி என்பது தெளிவாகலாம். இதையே மேல்நாட்டார் “நம்முள் இருக்கும் கிறிஸ்து” (Christ in us) என்கின்றார். நூல்கள் கடவுள் ஒரு சக்தி என்கின்றன. ஆகையால் நாம் உள்ளத்தை அச்சக்தியின் ஒரு கூறு என்று சொல்லலாம். மன நூல்கள் உள்ளத்தை, சக்தி அடங்கிய மனம் (Subjective mind) என்று சிறுமையாகக் கூறினும் அது தெய்வீக சக்தியோடு கூடிய தென்பது மறுக்கமுடியாத ஒன்றாகும். அல்லும் பகலும் களையாது நமது உடலை யோம்பி நம்மைக் காப்பாற்றும் ஒன்றை ஏன் நாம் சக்தியென்றும் கடவுளென்றும் சொல்லலாகாது? இவ்வல்லமை பொருந்திய உள்ளமும், நனவு மனத்திற்கு (Concious mind) அடங்கி மறைந்து கிடக்கின்றது. புறமனம் “நான் இதைச் செய்வேன்” என்று முற்படும் பொழுது நமது உள்ளம் அதற்கு அடங்கித் தொழிற்படவேண்டியிருக்கிறது.

நாம் இறை உணர்வுபெற வேண்டில், ஆண்டவன் அருள்கூட வேண்டில், நம்முள் அடங்கி இருக்கும் இச்சக்தியின் வழியால், உள்ளத்தின் வன்மையால் மனநூல் வல்லுநர் கூறும் அடங்கிய (Subjective mind) மனதின் உதவியால், கிறிஸ்துவர்கள் இயம்பும் கிறிஸ்துவின் வழியினால் மட்டுமே கூடும் என்று சொல்லலாகும். புறமனம் வெளித்தோற்றமாகிய பருமை உலகை நமக்கு உணர்த்துகின்றது. உள்ளம் தோற்றத்தில்-இயற்கையில் - ஊடுருவி நீக்கமற நிறைந்து நிற்கும் புலனறிவிற்கு எட்டாத நுண்ணிய சக்தியை - இறையை - நமக்குணர்த்தும் அச்சக்தியின் ஒரு துளியாகின்றது.

இவ்வரிய சக்தியை அறிந்து சரியான துறைகளில் வழிப்படுத்தி, முடிவற்ற இன்பக் கடலில் திளைக்கவோ, அல்லது அதை மறந்து தவறிற்படுத்தி வரையற்ற துன்பப் பெருக்கில் ஆழவோ செய்யும் சுதந்திரம் நமக்கு இருக்கின்றது.

நம் உள்ளம் நமது காரியங்களில் எவ்விதம் தொழிற்படுமென்பது புறமனதையும் அதன் கருவிகளாய புலன் பொறிகளையும் பொருத்து இருக்கின்றதே இச்சா தந்திரத்திற்குக்காரணமாகும்.

சக்தியின் கூறாகிய உள்ளத்திற்கு அச்சக்தியின் வன்மை இருக்கவேண்டுமே? நாம் தவறி நடக்கும்போது என் அது நம்மைத் திருத்தி நல்வழிக்குத் திருப்பக்கூடாது என்ற ஐயம் பிறக்கலாம். ஆண்டவன் அவ்விதம் நம்மைத் திருத்திக்கொண்டே இருந்தால் நாம் எப்போதும் சரியான வழிகளில் நடக்கும் பொறிகளாகி விடுவோமேயன்றி இப்போது நமக்கிருக்கும் பெருமையும் சுய இச்சையும் இல்லாதொழியும். இது ஒன்றே மக்களுக்கும், மாக்களுக்கும் உள்ள வேறுபாடு. நடக்கக் கற்றுக் கொள்ளும் ஒரு குழந்தை, கீழே தவறி விழுந்து விட்டால் என் செய்வது என்று பயந்து, நாம் உதவி செய்து கொண்டே சென்றால், அது ஒருநாளும் தானே நடக்கக் கற்றுக் கொள்ளாது. தானாக நடக்க விட்டுவிட்டால் கீழே விழுந்து விழுந்து பழகிப்பழகி அக்குழவி சீக்கிரம் நடப்பதில் தேர்ச்சியடைந்து விடுவது கண்கூடு. தவறி நடந்து அதனால் வரும் தீமைகளை அனுபவித்து, பின் அவ்வழியை நீத்து, நன்னெறிக்குத் திரும்பினோமானால் நாம் அந்நெறியில் நிலைத்து நிற்போம். நமது அறிவும் பெருகும்.

உள்ளத்தை, உலகம் பலத்த ஓர் இரும்புச் சங்கிலியினால் பிணித்து ஈர்க்கின்றது. ஆண்டவன் நுட்பமான ஒரு நூலினால் உள்ளத்தோடு சேர்ந்து நிற்கின்றான் என்று கூறுதல் பொருந்தும்,

உலக வாய்ப்பட்ட உள்ளம் ஆண்டவனை அதனோடு சேர்க்கும் நட்பத்தை மறந்து விடுகின்றபடியால் ஆண்டவனது வன்மையையும் அருளையும் இழந்து விடுகின்றது. நமது உள்ளம் அநுபவத்தால் உலக இன்பம் "நீர் மேற் குமிழி" என்று தெளிய ஆரம்பித்ததும், உலகத்தோடு பிணித்து நிற்கும் சங்கிலி தேய ஆரம்பிக்கின்றது என்னலாம். உலகத்தினின்றும் திரும்பி உள் நோக்கியதும், நமதுள்ளம் மறைந்து கிடக்கும் ஒரு சக்தி என்றும், நம்மை ஆட்டுவிக்கும் இறையின் ஒருகூறு என்றும், நாம் தெய்விக சக்தியுடையோம் என்றும், ஆண்டவனும், நாமும் வேறல்ல எப்போழ்தும் ஒன்றே என்றும், நாம் தெளிவடையலாம். நாம் இவ்வுள்ளத்தின் வழி இறை உணர்வு பெற்று அறிவுற்று, பேராற்றல் அடைதல் கூடும் என்றும் நினைக்கலாகும். நம்முள் இருக்கும் சக்தியின் தன்மையை அறிந்து கொள்ளாது எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் ஒன்றின் ஒன்று தலை நாடுவது முடவன் கொம்புத்தேனுக்கு விழைவதொக்கும். உள்ளத்தின் அளக்கலாற்று வன்மையை உணர்ந்த நமக்கு உலகத்தின் உண்மை இயற்கையின் இயல்பு வெட்ட வெளிச்சமாகும். இறையும் நாமும், இரண்டல்ல வென்றும், இறையில் நாமும், நம்முள் இறையும், எப்போதும் கலந்த, பிரிக்க இயலாத ஒரே ஒன்று என்றும் தெள்ளிதில் புலப்படலாம். இவ்வறிவுதித்த உடன் நாம், ஒரு நவசக்தி யடைந்த, நூதன உணர்ச்சியோடு கூடியவர்களாய் விளங்கலும் ஆகும். பழய எண்ணங்களும், உணர்ச்சிகளும், செயல்களும், இல்லாதொழிந்து, நமது தோற்றம், நடையாதியன வெல்லாம் அறவே மாறிவிடு மென்பதற்கு ஐயுறவில்லையாகும்.

இதன் பின் யாவற்றினும் சாலச் சிறந்ததொரு நன்மையை, மாறுதலை நாம் காணலாகும். நமது உள்ளம் வெளி மனதில் உலக இன்பத்தில் தோயாது, உள்நோக்கி, அந்தமில்பேரின்பவாழ்வையே ஓயாது விழைந்து நிற்கும். புலன் பொறி வயப்பட்டு அடங்கி ஒழுகாது அவைகளைத் தன்வயமாக்கி இயக்கும் வன்மையை அகண்டத்தி லிருந்து பெற்றுச் சிறக்கலும் ஆகும். ஆக இறையே நம்மை ஆட்டுவிப்பதாக, நம்மைக் காக்கும் ஒன்றாக வந்துமுடியும். அப்போது நம்மை முற்றிலும் அம்முழு முதலுக்கே தஞ்சமாகவிட்டு அது தின்னம் நம்மை நன்னெறியிற் படுத்தும் என்ற திடநம்பிக்கையுடன் நாம் இருக்க இயலும்.

சுட்டுடைய சிற்றறிவால், நாம் சிறு பிழைகள் தவறிச்செய்தாலும் நமக்குள்ளிருந்து நம்மை இயக்கும் கட்டற்ற பேரறிவு அவற்றை அழித்துவிடும். ஒரு நிலையற்ற இவ்வாழ்வின் சுங்கானை நம்முள் இருக்கும் தெய்வத்தினிடம் ஒப்படைத்து, கவலையற் றிருப்போமானால் நடப்பனவெல்லாம் நடப்பது நன்மைக்கே ஆகலாம்.

அனுபவ வாயிலால், புலன்வழி பருமை உலகில் இன்பமாக நுகரப்படுவன உண்மையில் நிலையுற்ற இன்பமல்லவென்று உள்ளம் தெளிந்து, உள் நோக்கி, நமது உண்மையை, நாம் இறையின் சிறு கூறுகள் என்பதை ஆருலகின் தோற்றத்திற்குக்காரணமாய சக்தியானது சிறுதிவலைகள் என்பதை, அவ்வகண்ட ஒன்றின் தியானத்தால் இச்சிறிய துளிகளாகிய நாம் அப்பெருக்கத்தில் ஒன்றியதும் நாம் கால இடவாம் பற்று விடுதலை அடைவோம் என்பதை அக்காலத்தில் "நாம்" என்னும் உணர்ச்சியும் "உலகம்" எனுமறிவும் இருக்குமாகில் நமது உள்ளமும் தன்னை அறியாமலே "விடுதலை"! விடுதலை! விடுதலை! என்று பாடும் என்பதை அறிந்துகொள்வதற்கே—நம்முள்ளிருக்குந்தேவனைத் தேடிக்கண்டு பிடிக்கவே—நாம் பிறந்தோம் என்று எண்ணுதல் வேண்டும்.

"சித்தம் தெளிவீர்கள்! - அத்தன் ஆரூரை
பத்தி மலர்தூவ - முத்தி யாகுமே"

என்று நமது குருநாதன் இட்ட கட்டளையை இன்னும் நன்றாக நாம் சிந்தித்துப் பார்த்தல்வேண்டும்.

# சமாதியும் நிட்டையும்

[நோன்பி]

சமாதி மூவகைப்படும். சவிகற்பசமாதி, நிர்விகற்ப சமாதி, சகச சமாதி. சவிகற்பத்தில் திரிபுடி தோன்றும்; அதாவது ஞானம் (அறிவு), ஞாதிரு (அறிபவன்), ஞேயம் (அறியப்படுவது) வெவ்வேறாக இருக்கும். (ரிபுகீதை 15-ம் பாட்டு). நிர்விகற்பத்தில் திரிபுடி (முப்புடி) தோன்றாது; அதில் 'அவிகத்தின் தோற்றமெல்லாம் அறிவு நீங்கி நிற்கும், (ரிபுகீதை 826-வது பாட்டு). இவை இரண்டும் உள்முகத்தில் நிகழ்வன. சகச சமாதி (அதாவது இயல்பாக நிகழ்வது) பகிர்முக அனுபவத்தைப் பற்றியது; அதில் பார்ப்பதெல்லாம் "அற்பந்த பாவனையாம்" (அதாவது முற்றும் இன்மையாம்). இந்நிலையில் இருப்பார் "பதார்த்தங்கள் பாராபரமே கண்டிருப்பர்"; இந்நிலை நிர்விகற்ப சமாதிக்கு அங்கமாய் நிகழ்வது; குமார தேவர் "சுத்த சாதகம்" என்னும் நூலில் இதை நிர்விகற்பத்திலும் மேலாக நிலாவிக்கிறார்; ஆனால் இது சகச நிட்டையன்று; ஏனெனில் சகச நிட்டை என்பது சதாகால நிட்டை கூடாத சமயங்களில் அனுசரிக்கத்தக்கது.

சிலர் சமாதியே நிட்டை என்பர்; அது தவறு. தியானத்தின் முதிர்ச்சியாம் சமாதி அட்டாங்க யோகத்தின் ஒரு கூறு. அந்த யோகத்தின் முடிந்த நிலை அதன்பின் ஞானத்தில் சரியையாம் கேள்வி, (சிரவணம்) ஞானத்தின் கிரியையாம் சிந்தித்தல்(மனனம்) ஆகிய அபர வித்தை கைவரவேண்டும்; அவைகளின் பின் ஞானத்தின் யோகமாம் தெளிதல், (நிதித்தியாசனம்) ஞானத்தின் ஞானமாம் நிட்டை ஆகிய பர வித்தை கைவரவேண்டும். (பாம்பன் சுவாமி பரிபூரணானந்தபோத உரை 226-ம் பக்கம்). அந்நிட்டையே அபரோக்ஷ ஞானம் (284-ம் பக்கம்), சிவயோகம் (105-பக்கம்), நின்மல துரியாதீதம் (284-பக்கம்), (உபாய நிட்டைக்கு மேற்பட்ட) உண்மை நிட்டை, அத்துவித நிட்டை (அவிதக் கலப்பற்றது); இதன் விவரம் தகராலய ரகசிய உரை 199-பக்கத்திலும், பரிபூரணானந்தபோதம் 218-வது பக்கத்திலும் காணலாம்.

நிட்டைக்கு மேலான நிலை இல்லை என்று சிவஞான சித்தியாரால் அறியலாம்; அதைச் செய்ய இயலாதவர்க்கு அந்நூல் விதிப்பது சாக்கிரத்தே அதீதம் புரிதல் (அதாவது "பார்த்தால் உலகத்தவர்போல்" இருந்து "சித்தம் சிவனோடு ஆடி" க்கொண்டிருக்கும்நிலை). நிட்டைக்குச் சுத்ததேகம், சுகஆசனம், நல்ல நெஞ்சம் அவசியம்; "நன் நெஞ்சோடு அமருநிட்டை" என்று பாம்பன் சுவாமி "குமாரவேள் பதிற்றுப் பத்தந்தாதியில்" கூறுகிறார். அந்த "நல் நெஞ்சு" நிர்விகற்ப சமாதியால் மனவிகற்பங்கள் நீங்குவதால் வரும். (தகராலய ரகசியம் 105-பக்கம்); நிஷ்காமிய கன்மமும் அந்தச் சமாதிக்கு விசாரமே (பரிபூரணானந்தபோதம் 78-பக்கம்). உண்மை நிட்டையால்தான் தற்போதம் ஒழியும் (பரிபூரணானந்த போதம்; 62, 105-பக்கம்; தகராலயம் 159, 241-பக்கம்). அதனால்தான் பிறப்பு இறப்பு நீங்கும் என்று "கேட்டலுடன் சிந்தித்தல் அறுமோ, மெய்ஞ்ஞான நிட்டையினை மேவினர்க்கன்றோதான் போயாம் பிறப்பு இறப்புப்போம்" என்னும் தாயுமானவர் பாட்டால் அறியலாம். (திரு. வடிவேலு செட்டியார் ஞான உவமை வெண்பா 73-பாட்டு இதே கருத்தை வெளியிடுகின்றது).

நிட்டையில் ஆணவ மலம் பற்றறக் கழியும்; ஏனெனில், அது 'மனம் அகங்காரம் வித்தைகளைக்கடந்து, கன்ம மல விருத்தியைக்கெடுத்து, ஆணவமலத்தையும் வெல்லச் செய்வது (பரிபூரணானந்த போதம் 150-பக்கம்; தகராலய ரகசியம் 248, 267-பக்கம்). அது சுத்தாவத்தையில் நிகழ்வது; அதாவது அது விழிப்பு என்னும் சகல நிலையும் உறக்கம் என்னும் கேவலநிலையும் நீத்தநிலை (பரிபூரணானந்தபோதம் 268-பக்கம்). அதனைச் செய்குவோன் சிவலிங்கம்போல் இருப்பன் (இதைப்படம் மூலமாய்ப் பாம்பன்

கவாமியின் திருப்பா 474-வது பக்கத்தில் விளக்குகிருர்கள்; அந்தப்பட்டத்தில் சிவன் தலைக்குமேல் உள்ள பாகம் சுத்த ஆகாயம் சூழ்ந்தது என்று ராம கிருஷ்ண பரமஹம்ஸர் உபதேசத்தால் அறிகிறோம்). "தெள்ளத் தெளிந்தார்க்குச் சிவன் சிவலிங்கம்" என்பர் திருமூலர்.

உண்மை நிட்டையில் சிவபோதம் சிறிதும் இல்லை; தியான யோகத்தில் சிவபோதம் உண்டு (பரிபூரணனந்தம் 63 பக்கம்). ஆகவே, உண்மை நிட்டையால்தான் 'மோக்ஷம் அடையக்கூடும்' என்று முக்திகோப நிஷத் கூறும் (பரிபூரணனந்தபோதம் 62 பக்கம்). (தியானத்தைப்பரையோகம் என்று ஒழிவில் ஒடுக்கம் கூறும்; அதில் கூறிய பரை யோகம் நிர்விகல்ப சமாதி என்றும் சிவபோகம், உண்மை நிட்டை என்றும் சொல்லலாம். சவிகல்ப சமாதிதான் ஆன்ம தரிசனம், நிர்விகற்ப சமாதிதான் சிவதரிசனம் என்று காலம் சென்ற P. ராமநாதன் அவர்கள் கீதையால் அறிகிறோம்).

உண்மை நிட்டையைச் செய்யுங்கால் புண்ணிய தலங்களில் வசிப்பது நலம் (பரிபூரணனந்தம் 64 பக்கம்). அதை "மோனம்" அல்லது "மவுனம்" என்பர். "சொல்லான் மவுனம் மவுனம் என்று சொல்லிக்கொண்டதல்லால் 'மனமறப் பூரண நிட்டையில் இருந்ததுண்டோ' என்று தாயுமானுர் வருந்தியுள்ளார்; தானந்தமான சகச நிருவிகற்ப ஆனந்த நிட்டை அருள் ஐயா பராபரமே" என்றும் அவர் இறைவனை வேண்டியுள்ளார். நிட்டையில் யான் தான் என்னும் துவித நிலை நீங்கும்; "நானென்றும் தான் என்றும் நாடாமல் நடுவே சும்மாதா னமருநிலை" என்று தாயுமானவர் அதைப்பற்றிக் கூறுகிருர். நிட்டையே கற்றவர் அடையும் முடிந்த நிலை. "கற்றதும் கேட்டதும் தான் எதுக்காக? கைகாட்டும் கருத்தைக் கொண்டு குணம் குறியற்று இன்ப நிட்டைகூட அன்றோ" என்பதும் தாயுமானுர் வாக்கு. நிட்டையோ ஆக்காமல் தூங்கு நிலை; "ஆங்காரம் உள் அடக்கி ஐம்புலனைக் சுட்டறுத்து, தூங்காமல் தூங்கிச் சுகம்பெறுவ தெக்காலம்" என்று பத்திரகிரியார் புலம்புவது இதைக் குறித்துதான். "யான் தான் இரண்டும் கெட்டாலன்றி யாவர்க்கும் தோன்றாது" என்றும் கந்தரலங்காரத்தைச்சுட்டி, தாயுமானுர் "யான் தான் அறவே இன்ப நிட்டை என்று அருணகிரி, கோன்தான் உரைத்த மொழிகேட்டிலையோ" என்னும் பாவால் விளக்குகிருர்.

நிட்டை செய்பவர் சதா ஆனந்தத்தில் இருப்பர்; "நிட்டையிலே கிடந்து நிமலன் தாளைக்கிட்டையிலே தொடுத்து முக்தி பெறும் அளவும் பெரும் சுகத்தை அடைவர்" என்று கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. "சத்தமுடம்... நிட்டையைப் பெற்று ஆனந்தமாயிருத்தல்" என்று ஞான உவமை வெண்பா கூறும்.

நிட்டை செய்வோர் தம்மிடத்தில் பிரகாசிக்கும் யதார்த்தத்தை அறிவர். (பரிபூரணனந்தபோதம் 105 பக்கம்). "நிட்டை பண்ணுத சென்மம் நட்டம் (நஷ்டம்)" என்று நந்தனுர் சரித்திரக் கீர்த்தனை கூறும்; "மனித சென்மம் எட்டி வீணுய்ப் போச்சே" என்றும் அதில்நந்தனுர் வருந்தியதாகக் கூறப்பட்டிருக்கிறது. நிட்டை கலந்த பிறகு ஊழ்வலியால் பதார்த்தங்கள் தாக்கிஞல் "விதிப்படி ஐந்தெழுத்தை எண்ணுக" என்று சிவஞான சித்தியார் எச்சரிக்கை செய்கிறது.

மேற் கூறியவைகளை ஆலோசித்து, எல்லோரும் தூங்கி விழித்தபின் காலையில் ஒரு மணி நேரமாவது ஏகாந்தமாகவிருந்து விகல்பம் நீங்க நிர்விகல்ப சமாதி பழகி, பிறகு சங்கல்பமும் நீங்க நிட்டை கூடித் தம் இதயத்தே உள்ள "உள் ஒளி" பரம்பொருளை ஞானக் கண்ணுல்கண்டு ஆனந்தத்தில் மூழ்கிப் பிறவிப் பிணியைப் போக்க முயல்வாராக.

---

# காதலால் கட்டுண்டகாளை

சிறு கதை

[திரு. ஜகதீஸன்]

## I

ஆரண்ணியம் என்னும் ஒரு சிற்றூர் மலைச்சாரலிலுளது. அதனருகில் மலையினின்றிழியும் அருவியின் ஒலி மற்ற ஒலிகளை உள்ளடக்கி எங்கும் 'ஓம்'என்னும் மந்திர ஒலியைத்தந்தது. அதனிடையில் பறவைகளின் கூவுதலும் மயிலாட்டமும் இசைக் கூத்தைத் தந்தன. மாடோட்டும் சிறார் மாடுமீதிவர்ந்து வருவதைக் கண்ட மந்திகளும் மாட்டின் மீதேறிக்கொண்டதால் குரங்குக் குட்டிகள் மயங்கி நிற்பது அறியாமையின் இயல்பை உணர்த்தி நின்றது. இங்ஙனமாக அமைதியை நல்க வல்ல அவ் ஊரிலுள்ள ஒரு காவினருகில் காளை ஒருவன் கவின் பெறு வானத்தை நோக்கிய வண்ணம் புற்றரையில் படுத்திருந்தான். அவனருகில் அழகிய புத்தக மொன்று விரிந்த வண்ணமாய்க் கிடந்தது. அவன் முகத்தில் பெண்மை தவழ்ந்தமை, அவனது அகத்தூய்மையையும்அருளையும் காட்டி நின்றது. வானத்தையே உற்று நோக்கின கண்கள் அவன் ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டிருப்பதைக் காட்டின.

அவ்வமயம் ஆளளவு காட்டும் ஆடை அணிந்துடைய ஆண்டகை ஒருவன் ஆண்டடைந்து "நண்ப! ஆரூர! தன்னந் தனிமையாய்ப் படுத்துத் துயரடைகின்ருய் என்?" காளையான உன்னை வேறு என்ன கவரக்கூடும்! கன்னியன்றி வேறில்லை. உனது உயர் நோக்கங்களும் உணர்ச்சிகளும் காமத்தைக்கடந்தனவா!உனதுபோலி வேடங்களைவிட்டகற்று; உன்னைக் கவர்ந்தவள் உளளெனின் கூறு; கூட்டி வைக்கிறேன். மனிதனை நீ மட்டற்று கற்றுயாயினும் மதனியல்பைக் கடத்தல் யாங்ஙனம்! நீ கற்றது தானென்னை! யான் கலாசாலையின் கடைவரைக் கற்றேன். உன் கலைகளைக் கேட்டிருக்கிறேனே யன்றிக் கண்டிலேன். பட்டிவாசியாகிய நீ பத்திரிகைகளைப் பார்த்துக் கொண்டு பயனற்ற நோக்கங்களைப் பயனுடையன எனக் கொண்டாய். இந் நோக்கங்களும், கருத்துக்களும் எழுதவும் பேசவும் ஒக்குமேயன்றிச் செயற்பாலனவல்ல என்பதை இப்பத்திரிகைகள் புறப்படும் இடமாகிய பட்டினம் பார்த்தால் தெரியும். பத்திரிகைகளில் பத்தி பத்தியாய்ப் பணத்தினுள்ள கேட்டைப்பற்றியும், இயற்கை வாழ்வின் மேன்மையைப் பற்றியும் எழுதுபவர் இல்லம் நண்ணி நோக்கில் பணத்தின் மேன்மையும் செயற்கை வாழ்வின் செம்மையும் செழித்து நிற்கும்.

ஆரூர! பராமுகமாய் இருக்கிருயே, யான் கூறுவதைச் சிறிதேனும் கவனித்தலாகாதா?

ஆரூரன்:—முருகா! நாமிருவரும்நண்பர் என்ற முறையில் எனக்கு இத மொழி கூறுவது உனக்குரியதே எனினும், நான் என்னிலைக்கு உன்னை வா விரும்புவதும் எனக்கு உரிமையானதென்பதை உய்த்துணர்வது நேரிது. யான் சிறிது அமைதியை ஆசித்து இவ்விடம் நண்ணினேன். என்னைத் தயவு கூர்ந்து இடர்ப்படுத்தா திருப்பது உனது கடன்.

முருகன் :—ஆடவரும் மகளிரும் கலந்துறவாடும் இவ்விடம் அமைதியை நல்காதென் செய்யும்! இம்மலைநாட்டுப் பெண்களில் மயங்காதே. பட்டினத்துப் படித்த பெண்ணே உன்னை மகிழ்விக்கத் தக்கவள். ஒருமுறை என்னுடன் பட்டினம் வா.

தற்கால நவீன ஆராய்ச்சியின் பயனுய் மனமாசித்தை தகர்வதற்குரிய சாதனங்கள் பல பட்டினத்திலேயே மலிந்து கிடக்கின்றன. உனக்கிருக்கும் பொருளைக் கொண்டு சாத்தியம் செய்யத் தகாததெது? பொருளிருப்பின் உல

சில் அறிந்தபடி தான் முயிலில்லை. உனது வீட்டுக்குவந்து சின்னாட்களில்பட்டினம் செல்வோம். உனது கொள்கைகளைப் பேசமட்டும் தவறிவிடாதே. ஆனால் நடத்தையில் சாத்தியப்படச் செய்ய வேண்டுமென்று கனவிலும் நினையாதே. பொருளை வளர்ப்பதை மட்டும் பொருளாகக் கொள்ளுதலவசியம்.

ஆரூரன் :—இதுகாறும் சகித்தேன்; எனது பொறுமையைச் சோதிப்பதாய் இருக்கிறது உனதுபேச்சு. நீபட்டதாரி என்பதும் சட்டசபை அங்கத்தினன் என்பதும் யான் அறிந்தனவே. உனது உபதேசங்கள் என்னை வசப்படுத்திக் கொள்ளா. ஆகையால் நீ சிரமப்படுவதை நான் விரும்பவில்லை. நீ கூறியவைகள் கூறக் கூச்சம் வேண்டும்.

"நாண் அகத்தில்லா நியக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி அற்று"

என்னுமியல்பை உனக்குக் கொடுக்கமிக வருந்துகிறேன். எனக்கு ஒன்றும் வேண்டாம்; உன் பேச்சை முடிப்பதைத் தவிர.

முருகன் :— தனக்குள்ளே நினைப்பான் :—"இவனைத் திருத்துவது முடியாத காரியம். இயற்கை இன்பமென்றும் கருத்தழிந்தான். அநுபவத்தில் சாத்தியப்படாதவைகளை எழுதிப் பலரைப் பயித்தியக்காரராக்குவது பத்திரிகையின் பயனாயிற்று. இப்படிப்பட்ட புரட்டுகளைப் பத்திரிகைகளில் எழுதக் கூடாதென்று ஒரு மசோதா கொண்டுவந்தால் உலகிற்குப் பெரும் பயன் உண்டாகும்." என்றிவ்வாறு பலபடச் சிந்தித்துக்கொண்டு "சரி நான் போகிறேன் விடைதா" என்று வினயமாகக் கேட்டான். ஆரூரனும் அக மகிழ்ந்து விடை கொடுத்தனுப்பினான். சில விநாடிகள் கழித்ததும் ஆரூரனின் அத்யந்த நண்பன் சிவநேசன் ஆண்டடையவே ஆரூரன் எழும்பி தனதகம் நோக்கி நடக்கலானான். நடந்துகொண்டே பேசினான் :—

ஆரூரன் :—நண்ப! முருகன் வந்தான். அவன் கண்ட பட்டின மகிமை கூறிக் கஷ்டப்படுத்தினான். நீ தப்பித்துக்கொண்டது சிறிது ஆறுதலே.

சிவநேசன்:—அப்படி என்ன விசேஷமாகக் கஷ்டப்படுத்தினான்?

ஆரூரன்:—செவிச் சுவையைக் கெடுப்பதைவிட வேறு என்ன கஷ்டம் கொடுக்கக்கூடும்?

சிவநேசன் :—அவற்றில் சிறிது கூறலாகாதா?

ஆரூரன் :—நீயும் அதைக் கேட்டு வருந்தமுற வேண்டாம், என்னோடே இருக்கட்டும்.

சிவநேசன் :—உனக்கிருக்கும் சிரமம் எனக்குமுரியதே யாதலால் எனக்குக் கூறுவதில் குற்றமில்லை; சிறிது சுருக்கமாகக் கூறினால் போதும்.

ஆரூரன் :— இயற்கையின் இன்பம் நுகர்தல், காதலின்பம் நுகர்தல் என்பனவெல்லாம் கனவே யன்றிப் பிறிதில்லை. பட்டினத்தாரெலாம் பேசுபவர்களும் எழுதுபவர்களுமேயன்றிச் செய்கையில் எவரும் சாதித்தவரிலர். பொருளன்றிப் பொருளாவது வேறில்லை என்பன.

சிவநேசன் :—அவன் கூறியது சரியன்றாயினும் நீ கூறுவதும் முற்றிலும் சரியாகத் தோன்றவில்லை. மணம் வேண்டு மென்கிறாய். மணம் காமக் கலப்பற்றதாய் இருத்தல்வேண்டுமென்கிறாய். இது எப்படி நிகழக்கூடும்? நீ கூறுவது ஆதாரம், அநுமானம், அநுபவம் மூன்றிற்கும் முரணானதாய் இருக்கிறது. காதல் நாட்டம் இயற்கையோடியைந்த அனுபவ சாத்தியமாகத்தான் இருக்கும். அது நான் அறிவின் திறன். ஒழுக்கத்தோ டியைந்து இயங்கும் காமத்தைக் காதலென்றும் கட்டற்ற காமத்தைக் காமமென்றும் சிறப்பாக உரைப்பதேயன்றிப் பொதுவில் இரண்டும் காமமே. (தொடரும்)

# இடையேறு

## காங்கரஸ்

காங்கரஸ் கல்கத்தாவில் கூடப்போவதாகக் காங்கரஸின் தற்காலிகத் தலைவர் அறிவித்துள்ளார். காங்கரஸை வெற்றிபெற நடாத்த அறிவும் ஆற்றலும் வாய்ந்த பண்டித மதன்மோகன் மாளவியர் முயன்று வருகிறார். சென்ற முறை டெல்லியில் கூடப் பெற்ற காங்கரஸ் குலைக்கப்பட்டது. காலநிலை இப்பொழுது மாறுதல் அடைந்திருக்கிறது. ஒத்துழையாமையில் உழன்று கொண்டிருந்தபலர், இப்பொழுது அதன் மாட்டு அயர்ச்சிகொண்டிருத்தல் வெள்ளிடைமலை. சிறையினின்றும் விடுதலையடைந்த பெருந் தலைவர் பலர் ஒத்துழையாமை மேற்கொண்டு மீண்டுஞ் சிறைபுக விரும்புகிறாரில்லை. ஒத்துழையா இயக்கத்தின் தந்தையாகிய காந்தியடிகள் கோயில் நுழைவு மசோதாக்களைச் சட்டமாக்கும் முயற்சியில் தலைப் பட்டுள்ளார். காந்தியடிகளின் வலதுகையாகிய ஸ்ரீமான் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் சட்டசபை நுழைவுக்குக் குறிப்பாக ஆசி கூறியுள்ளார். அவ்வாசியை ஸ்ரீமான் பிரகாசம் அவர்களால் நடத்தப்படும் "சுயராஜ்யா" பத்திரிகை வரவேற்று விட்டது. இத்தகைய ஒத்துழைப்புக் குறிகள் பல ஆங்காங்கே தோன்றியுள்ளன. இக்குறிகளை அரசாங்கம் கூர்ந்து கவனித்து வருதலால், அது, கல்கத்தா காங்கரஸ் நடைமுறையில் குறுக்கிடா தென்றே கூறலாம். ஆகவே, கல்கத்தா காங்கரஸ், ஒத்துழையாக் கொடியை இறக்கி, ஒத்துழைப்புக் கொடியை ஏற்றுமென்று தேசம் எதிர் பார்க்கலாம். புதுச் சீர்திருத்தம் வரும் வேளையில் காங்கரஸ் ஒத்துழையாமையி லிருத்தல் நலமன்று என்னுங் கருத்து, காங்கரஸ் அரசியல் வாதிகளுக் கிடை உலவி வருவதை உணர்ந்து, காங்கரஸ் தொண்டர்களிற் சிலர் எரிவுகொள்கிறா ரென்று அறிகிறோம். அத்தொண்டர்களின் எரிவுக்குச் சிற்சில காரணங்க ளிருக்கலாம். அவைகளைக் கொண்டு அவர்கள் கல்கத்தா காங்கரஸில் திருவிளையாடல் புரியா திருப்பார்களாக. தலைவர்களுடன் தொண்டர்களுங் கலந்து உழைப்பது நலம்.

## தீண்டாமை

தீண்டாமை யொழிவைப் பற்றியும் கோயில் நுழைவைப்பற்றியும் மசோதாக்கள் இந்திய சட்டசபை வாயிலில் நின்றுகொண்டிருத்தல் நேயர்கட்குத் தெரியும். அம்மசோதாக்களைப் பற்றிப் பலதிறக் கருத்துக்கள் வெளி வந்து கொண் டிருக்கின்றன. அக்கருத்துக்களுள் சிறப்பாகக் கவனிக்கத்தக்கன இரண்டு. ஒன்று டாக்டர் அம்பேத்கரின் கருத்து; மற்றொன்று பண்டித மாளவியரின் கருத்து. இவ்விருவரும் தீண்டாமைக்கு ஆக்கந் தேடுகிறவரல்லர். இருவருவம் தீண்டாமை ஒழிதல் வேண்டுமென்னுங் கருத்துடையவரே. ஆனால் முறைகளில் மட்டும் இவ்விருவரும் காந்தியடிகளுடன் மாறுபடுகிறார். ஆதி இந்துவாகிய டாக்டர் அம்பேத்கர், "வருணாச்சிரமத்தை ஒருகையில் பற்றிக்கொண்டு மற்றொரு கையில் கோயில் நுழைவுக்குச் சட்டஞ் செய்யப் புகுவது" தமக்குப் பிடிக்கவில்லை என்கிறார். வைதிக இந்துவாகிய பண்டித மாளவியர், "மத விஷயத்தில் சட்டத்தை நுழைத்தல் கூடாது" என்கிறார். காந்தியடிகள் இருவர்க்கும் பதிலிறுத்துக் கொண்டே யிருக்கிறார். கோயில் நுழைவுக்கு இப்பொழுது வழி தேடிக்கொண்டு, பின்னை வருணாச்சிரமக் கொடுமை மீது போர் தொடுப்பது நலம் என்று டாக்டர் அம்பேத்கர் உணர்ந்து தங் கருத்தைத் தற்போது வலியுறுத்தா திருப்பது சிறப்பு. மத விஷயத்தில் சட்டத்தை விரும்பாத பண்டித மாளவியர் தீண்டாமை விலக்கும் கோயில் நுழைவும் செய்கையில் வரத்தக்க

முறையொன்றுஞ் சொல்கிறாரில்லை. பிரசாரம் பிரசாரம் என்று அவர் கூறுகிறார். எத்தனை நாள் பாழும் பிரசாரம் என்று கேட்கிறோம். அலை ஓய்ந்த பின் கடலில் மூழ்கக் காத்திருந்தவன் கதையாக வன்றோ முடியும்? பிடிவாத மிகுந்த கூட்டத்தை எளிதில் திருத்த முடியாத நிலையில் என்ன செய்வது? சட்டத்தை நாடுவது தவிர வேறு என்ன வழி இருக்கிறது? சட்டம் நிறை வேறுவதற்குள் கோயில் நுழைவைத் தாங்களே ஆதரிக்க வைதிகர்கள் முன் வருவதாக உறுதிமொழி கூறுவார்களா? சாதிப் பாகுபாடுகளைக் காக்க மூலை முடுக்குகளிலுள்ள வைதிகரெல்லாம் புறப்படுவதைப் பார்க்குஞ் சீர்திருத்தக்காரர்கள் சட்டத்தைநாடாது வேறென் செய்வார்கள்?

## “டொமஸ்டிக்ஸ் மான்யுல்”

இப்பெயர் வாய்ந்த நூல் ஒன்று நமது பார்வைக்கு வந்தது. இந்நூலாசிரியர் திரு - T. ஜான் ரத்தினம் என்பவர். திரு - T. ஜான் ரத்தினம் அவர்களின் வாழ்வு பெரிதும் பரோபகாரத்தில் அரும்பி, மலர்ந்து, காய்த்துக் கனிந்த தென்பதைப் பொதுவாகப் பலரும் சிறப்பாக ஒடுக்கப்பட்டவரும் அறிவர். ஒடுக்கப்பட்டவர்களது கல்வி நலங் கருதியும், பிற நலங் கருதியும் திரு. ஜான்ரத்தினம் அவர்கள் பல பல ஆண்டு உழைத்திருக்கிறார்கள். அவராற்றிய பலதிறத் தொண்டுகளுள் ஒன்று “டொமஸ்டிக்ஸ் மான்யுல்” என்னும் இந்நூலை யாத்து வெளியிட்டதுமாகும். ஐரோப்பியர்கள் வீடுகளில் வேலை பார்ப்பவர்களிற் பெரும்பான்மையார், மூலாதாரக் கல்வி பெற்றவராகவே யிருப்பர். அவர்கள் ஆங்கிலத்தில் கருத்துக்களை எளிதில் வெளியிட இயலாது வருந்துவதை ஈண்டு விளக்க வேண்டுவதில்லை. அவ்வருத்தத்தை நன்கு உணர்ந்து, அதைப் போக்குதல் வேண்டுமென்ற கருணை மேலீட்டான், திரு. ஜான் ரத்தினம் அவர்கள் இந் நூலை யாத்தார்கள். இச்சிறிய நூல் ஐரோப்பிய வீட்டுத் தொழிலாளர்களுக்கு எப்படிப் பயன் படுகிறதென்பதை அத்தொழில் உலகம் செவ்வனே அறிந்திருக்கிறது. “டொமஸ்டிக்ஸ் மான்யுல்” ஒரு நல்லாசிரியன் போன்று அத்தொழிலாளர்க்கு வினைத்துறைநலன்கள் பலப்பல. பொதுவாகப் பள்ளியில் பயிலாது ஆங்கிலம் பேச விரும்புவோர்க்கெல்லாம் “டொமஸ்டிக்ஸ் மான்யுல்” ஒரு கற்பகம் போலத் துணை செய்யும் என்பதில் ஐயமில்லை. “டொமஸ்டிக்ஸ் மான்யுல்” ஐந்து முறை பதிப்புப் பெற்றிருக்கிறதெனில், அதன் மாண்பைப் புலப்படுத்தற்கு வேறு மதிப்புரை எற்றுக்கு? தமிழ் வாக்கியங்களும் அவைகட்கு நேரே பொருந்திய ஆங்கில வாக்கியங்களும் அமைந்துள்ள முறையில் நூல் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. இறுதியில் பல அட்டவணைகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவை யாவும் வீட்டுத் தொழில் முறைகட்கும், கணக்குகட்கும், பிறவற்றிற்கும் இன்றியமையாதன. பதிப்பு முறையும், பிறவும் கண்ணைக் கவர்கின்றன. விலை ரூ. 3-8-0; விலாசம்: T. ஜான் ரத்தினம், 2/146, மவுண்ட்ரோட், கெத்திடிரல் போஸ்ட், சென்னை.

## நன்கொடை

கொச்சின் சைனாவைச் சேர்ந்த பக்லீவல் வசிக்கும் இந்திய மக்கள் “நவசக்தி”யின் நலத்துக்கெனப் பெயர் விழையா ஒரு நண்பர் வாயிலாக அன்புடன் அனுப்பிய ரூ. 190-10-5 வரப் பெற்றோம். அவ்வன்பர்கட்கு நமது நன்றி உரியதாக.


நவசக்தி

# பெரிய புராணம்

## மூலமும்

## அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும்

## வசனமும்

சஞ்சிகை சஞ்சிகையாக வெளிவருகின்றன

**ஏழை மக்கட்கு நல்ல சந்தர்ப்பம்!**

சேக்கிழார் பெருமான் திருவாய்மலர்ந்தருளிய திருத்தொண்டர் புராணமென்னும் பெரிய புராணத்தைப் பற்றித் தமிழ்மக்கட்கு விரித்துக் கூற வேண்டுவதில்லை. பெரியபுராண மெங்கும் பத்திச்சுவை நனி சொட்டிக் கொண்டிருத்தல் வெள்ளிடைமலை. தன்னை ஓதுவோரையும் கேட்போரையும் அன்புக்கடலில் திளைப்பிக்கும் பேராற்றல் வாய்ந்தது பெரியபுராணம். கடவுள் அன்பு, ஆன்மநேயம், திருத்தொண்டு, சீர்திருத்தம், சொல்நயம், பொருள்நயம், தமிழின்பம் முதலியவற்றிற்குப் பெரியபுராணம் ஒரு வைப்பு என்று கூறல் மிகையாகாது. சிறந்த தமிழ்க் காவியங்களுள் பெரிய புராணமும் ஒன்று என்று சுருங்கச் சொல்லலாம்.

அன்பர்கள் எளிதில் வாங்கிப் பயன்பெறும் பொருட்டுப் பெரிய புராண மூலமும், “நவசக்தி” ஆசிரியர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் எழுதிய அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும் வசனமும் சஞ்சிகை உருவில் மாதந்தோறும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

ஓலைப் பிரதிகளைக்கொண்டு மூலம் ஆய்வு நோக்கப்படுகிறது. பொருந்திய பாடபேதங்கள் குறிக்கப்படுகின்றன. 25 ஆண்டுகளுக்குமுன் வெளிவந்த பதிப்புக்கும் இப்பதிப்புக்கும் பலதிற வேற்றுமைகளுண்டு. குறிப்புரை, பதவுரை போலத் துணைசெய்யும். இக்காலத்துக்கு இன்றியமையாத ஆராய்ச்சி விசேடங்களும் பொறிக்கப்படுகின்றன.

சுமார் 25 சஞ்சிகையில் புத்தகம் முடிவு பெறலாம். பின் விலை புத்தகம் ஒன்று 7 ரூபாய்க்கு மேலாகும்.

**அன்பர்கள் உடனே சந்தாதாரர்களாகச் சேர்வார்களாக.**

### சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| புத்தக முழுவதற்கும் முன்பணம்—சென்னை | | ரூபா 5. |
| ,, ,, ,, | வெளியூர்—தபாற் செலவுடன் | ,, 6. |

மாதச் சஞ்சிகை ஒன்றன் விலை அணா 4—சென்னைக்குமட்டும்.

6 சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புவோருக்கு ஒரு சஞ்சிகை அதிகமாக அனுப்பப்படும்.

காரியஸ்தர்:—முருகவேள் புத்தகசாலை,
12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

வித்வான்
த. சண்முகக் கவிராயரின்

## மகாபாரதம் தமிழ் வசனம்

திருத்தமான உயர்ந்த பதிப்பு. இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூபா 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வம் அடங்கியது ரூபா 5. மற்றவை அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ்,
323, திருவொற்றியூர் ஹைரோட், வண்ணாரப்பேட்டை, மதராஸ்.

## வரப்பிர சாதம்

தேக அசதி, மலச்சிக்கல், ஞாபகக் குறைவு, நரம்புகளின் தளர்ச்சி, நபும்ஸத்வம் முதலிய வியாதிகளைப் போக்குவதில் எங்கள்,

ஆதங்கநிக்ரஹ மாத்திரைகள் ;

வரப்பிரசாதம் போன்றவை. மேலும் தேகத்தை வஜ்ர சரீரமாகச் செய்யும். 32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூபா 1. 5 டப்பிகள் ரூபா 4.

இனம்! கேட்லாக் இனம்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

## வெள்ளி பஸ்பம்

வெள்ளை, வெட்டை, மூலங்கள், எலும்புருக்கி, நீரிழிவு, ஷை சம்பந்தகுன்மம் பெரும்பாடு எல்லாந் தீரும். தளர்ந்த தாது வலுக்கும். மற்ற ரோகங்களுக்கும் மருந்துண்டு. வியாதியின் விபரம் எழுதினால் தக்க பரிகாரம் மருந்துடன் தெரிவிக்கப்பெறும். 5 நாளில் நிச்சயம் குணம் தெரியும். 40 நாள் மருந்தின் விலை ரூபா 2-8-0.

விலாசம் :—

சே. விசுவநாத செட்டியார்,
வைத்யம், வாலுகுடி, திருச்சி ஜில்லா.

இதோ! தாது புஷ்டி

## மதன மஞ்சரி

இம் மாத்திரைகள் 35 வருஷங்களாய் உலகமெங்கும் புகழ் பெற்றவை. இது பலவீனம், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு, நரம்புத் தளர்ச்சி முதலிய வியாதிகளைப் போக்கி நல்ல ரத்த விருத்தியும் தாதுபுஷ்டியும் கொடுத்து இல்லற வாழ்க்கையில் இன்பத்தையும் ஊக்கத்தையும் தரும். 40 மாத்திரைகளடங்கிய டப்பி விலை ரூபா 1.

இனம்! வைத்திய வித்தியா இனம்!!
விபரம் வேண்டுவோர் இனாமாய் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

மதன மஞ்சரி பார்மசி
1/94, சைனாபஜார், மதராஸ்.

ஏஜண்டு :—
M. S. மஸீம், K. B. அண்டு கோ.,
No. 14, டத்தோகிரமாட் ரோட்,
பினாங்கு.
T. D. மதுர நாயகர் அண்டு கோ.,
No. 211, செட்டித்தெரு, கொழும்பு.
ஆனந்த மெடிகல் ஹால்.
No. 165, செட்டித்தெரு, கொழும்பு.

## தாதுபுஷ்டிக்கு

### மன்மத குளிகை

வாலிபப் பருவத்தில் முறைதவறிய தீச்செயல்களால் நீங்கள் இழந்த பலம், தாது நஷ்டம், போகசக்திக் குறைவு இவைகளைப்போக்கி மன உற்சாகத்தை திரும்பக் கொடுத்து, இல்லற ஒற்றுமை, வீரிய விருத்தி முதலியவைகளை யுண்டாக்கும். ஒருமுறை உபயோகித்துப் பாருங்கள்.

20 குளிகை ரூபா 2.
வி. பி. செலவு வேறு.

C. மலையப்பசாமி,
நித்தியானந்த வைத்தியசாலை, பழநி. S.I.





"நவசக்தி" ஆசிரியர்
திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

## இயற்றிய நூல்கள்!

தமிழ் மணம் வேண்டுமா, விடுதலை வேண்டுமா,
பெண்ணுரிமை வேண்டுமா,
தீண்டாமை யொழிதல் வேண்டுமா,
சமரசம் வேண்டுமா, சன்மார்க்கம் வேண்டுமா,
இயற்கை யின்பம் வேண்டுமா,
வீரச்சுவை ததும்பப் பேசவும் எழுதவும் வேண்டுமா ?

## வேண்டுமானால்

"நவசக்தி" ஆசிரியர் திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார் இயற்றிய நூல்களை வாங்கிப் படித்துப்பாருங்கள். அந்நூல்கள் வருமாறு:—

| | ரூ. | அ. |
|---|---|---|
| பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை .... | 2 | 0 |
| தமிழ்த் தென்றல் .... .... .... | 2 | 0 |
| முருகன் அல்லது அழகு .... .... .... | 1 | 0 |
| இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம் .... .... | 0 | 12 |
| மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் .... .... | 2 | 8 |
| என்கடன் பணிசெய்து கிடப்பதே .... .... | 0 | 8 |
| சைவத்தின் சமரசம் .... .... .... | 0 | 8 |
| சைவத்திறவு .... .... .... .... | 0 | 8 |
| கடவுள் காட்சியும் தாயுமானாரும் .... .... | 0 | 4 |
| தமிழ் நூல்களில் பௌத்தம் ... .... | 0 | 4 |
| சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து .... .... | 0 | 8 |
| நாயன்மார் .... .... .... .... | 0 | 3 |
| சைவ சமய சாரம் .... .... .... | 0 | 1 |
| இமயமலை அல்லது தியானம் .... .... | 0 | 6 |
| தமிழ்நாடும் நம்மாழ்வாரும் .... .... .... | 0 | 4 |
| உரிமைவேட்கை அல்லது நாட்டுப்பாடல்.... .... | 0 | 4 |
| முருகன் அருள் வேட்டல் .... .... .... | 0 | 4 |

இந்நூல்கள் எல்லாவற்றையும் ஒரே காலத்தில் வாங்குவோர்க்குத் தபாற்செலவின்றி மணியார்டர் கமிஷன் கழித்து வி.பி.யில் அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

## ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துப் பிரசுரங்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரின் திவ்ய சரிதம் (விரிவானது) ... | 5 | 0 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம் (சுருக்கம்) ... | 0 | 8 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண வசனாமிருதம் ... | 1 | 8 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் 1003 உபதேச மொழி ... | 1 | 6 |
| குருதேவர் வாக்கியம் ... ... | 0 | 5 |
| நமது தாய்நாடு ... ... | 0 | 8 |
| பக்தியோகம் ... ... | 0 | 10 |
| கர்மயோகம் ... ... | 0 | 12 |
| சிகாகோ பிரசங்கம் ... ... | 0 | 5 |
| விவேகானந்தரின் கடிதங்கள் ... | 0 | 8 |
| எனது போர் முறை ... ... | 0 | 2 |
| பவாஹாரி பாபா ... ... | 0 | 3 |
| ஜகஜீவபர விளக்க வினாவிடை ... | 0 | 13 |
| பக்தி மார்க்கம் ... ... | 0 | 2 |
| முக்திநெறி ... ... | 0 | 5 |
| எல்லாவற்றிலும் இறைவனைக் காணல் | 0 | 2 |

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,

மயிலாப்பூர், சென்னை.

---

## கன்றுங் கனியுதவும்

பண்டிதர் - எல். உலகநாத பிள்ளை அவர்கள்

இயற்றியது

விலை அணா 10.

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

---

## அரிய தமிழ் நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| கந்தபுராணச் சுருக்கம் (மூலமும் பொழிப்புரையும் விருத்தியும்).... | 3 | 0 |
| முருகவேள் பனுவல் திரட்டு .... .... .... | 1 | 0 |
| திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் முதல் திருமுறை (அரும் பத வுரையும் சரித்திரக் குறிப்பும்) .... .... | 0 | 12 |
| முருகன் திருவருட்பா .... .... .... .... | 0 | 8 |
| தேவி தோத்திர மஞ்சரி .... .... .... | 0 | 4 |
| குசேலோபாக்கியாநம் (மூலமும் அரும்பத உரையும்) .... | 1 | 6 |
| விநாயகர் பனுவல் திரட்டு .... .... .... | 0 | 4 |
| திருப்போரூர்ச் சந்நிதிமுறைத் திரட்டும், அரும்பத உரையும் கிளேஸ் .... .... .... .... | 0 | 5 |
| ஷி ரப் .... .... .... .... | 0 | 3 |
| சிவபுண்ணியத் தெளிவு .... .... .... .... | 0 | 3 |
| காரைக்காலம்மையார் பதிகங்கள் (திரு. வி. க.) அரும்பதக் குறிப்புரையுடன் .... .... .... .... | 0 | 6 |

---

## சாதன சதுட்டயம்

முத்திமார்க்கத்திற்குரிய அருமையான போதனைகள்

மஹாபாரதத்தில் கூறியிருக்கும் பீஷ்மாசாரியாருடைய பெரிய தகப்பனார் தேவாபி எனும் சிவன் முக்தர், இப்போது இமயமலையில் மாஸ்டர் குதூமி என்ற பெயருடன் வீற்றிருக்கின்றார். இம்மகரிஷி ஸ்ரீமான் ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்குச் சிறு வயதில் கனிமொழிகளாகக் கொடுத்த உபதேச போதனைகளுக்கு ஸ்ரீமான் லெட்பீடர் அவர்களும் டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையாரும் செய்த வியாக்கியான உரைகள், ஆங்கிலத்திலிருந்து சாதாரண தமிழ் நடையில் மொழி பெயர்க்கப்பட்டு “ சாதன சதுட்டயம் ” என்ற பெயருடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இந்நூல் இல்லற வாழ்க்கையிலிருந்து கொண்டே நான்கு சாதனங்களைக் கையாள வேண்டிய முறையைக் காட்டுவதோடு தன்னைத் தான் அறியக்கூடிய விசார சாகரமாயுமிருக்கின்றது.

கிரௌன் பக்கம் 520 ; 29 அத்தியாயம் ; உயர்ந்த காகிதம். விலை ரூபா 3.

---

## திவ்ய ஞான தீபம்

இது, பாழ்வெளி - விகாசமுறை - தேகங்கள் - புனர் ஜன்மவியதி - கர்மவியதி - மரணத்திற்குப்பின் - மார்க்கம் - தியானம் - ஞானசாதனம் - சீவன் முக்தர்கள் - குருநாதனைக் காணும் வழி - சிஷ்யத்வப்படிகள் - ஞானபூமிகள் - முக்தர் நிலைகள் - மாட்சி முதலிய பொருள்கள்பற்றி எளிய தமிழ் நடையில் எழுதப்பட்ட நூல். 330 - பக்கங்கள் கொண்டது. நல்ல வெதர்வெயிட் காகிதத்தில் அச்சிடப்பட்டது. விலை ரூபா 3.

---

## கந்தர் அநுபூதி

சென்னை, இராயப்பேட்டை வேத ப்ரவசன மந்திரத்து

சிவத்தியானானந்த மஹரிஷி யவர்கள் எழுதிய

கூடார்த்த தீபிகை

என்னும் புத்துரையோடு கூடியது. இதுவரை இவ்வகைத் தெளிவான அநுபூதி உரை வெளிவரவில்லையென்று படித்தோர் பலரும் கொண்டாடிக் கூறியுள்ளார். விலை ரூபா 1.

முருகவேள் புத்தகசாலை,

12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை,

ஜெகப் பிரசித்திபெற்ற

# காமினியா சோப்புகள்

காமினியா ஒயிட்ரோஸ் சோப்




உண்மையாக இந்த உயர்ந்த சோப் அதனுடைய ரோஜா புஷ்பங்களின் வசிகரமான வாசனையால் உங்களை ஆச்சரியப்படும்படி செய்யும். 3 கட்டிகள் உள்ள ஒரு பெட்டியின் விலை ரூபா 1.

காமினியா சந்தன சோப்

சந்தனக் கட்டையைப்போன்ற வாசனையையும், பலரும் விரும்பும் படியான வாசனையையும் கொடுக்கிறது. இது முரடான சருமத்திற்கு மிகவும் நன்மை பயக்கக் கூடியது. 3 கட்டியுள்ள ஒரு பெட்டியின் விலை ரூபா 1.

காமினியா லவண்டர் சோப்

இச்சிறந்த சோப்புகள் உயர்ந்த சாமான்களால் சிறந்த முறையில் தயாரிக்கப்படுவன; மனோரம்மியமான வாசனை வீசுவன; தேகத்திற்கு அழகையும் மனதிற்கு மகிழ்ச்சியையும் அளிப்பன. அழகை விரும்புவோர்க்கு இது ஒரு வரப்பிரஸாதம் போன்றது. 3 கட்டி உள்ள ஒரு பெட்டியின் விலை ரூபா 1.

டில்பகார் சோப்

சருமத்திற்கு வேண்டிய ரஸாயன முறைப்படி உள்ள வஸ்துக்கள் நிரம்பிய ஒரு மனோஹரமான சோப். இதன் அதியற்புத குணத்தை விஸ்தரிக்க முடியாது. இதனுடைய ஏராளமான புஷ்ப வாசனையால் ஸ்நான அறையை நந்தவனம்போல் செய்கிறது. இன்று மாத்திரம் இந்த உயர்ந்த டில்பகார் சோப்பைப் பரீக்ஷியுங்கள். 3 கட்டி உள்ள ஒரு பெட்டியின் விலை ரூபா 1.

வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்

மதராஸ் டிஸ்டிருபியூட்டர்கள் :—

ஜே. என். சேட் & கோ,

நெ. 68, பைக்ராப்ட்ஸ் வீதி, திருவல்லிக்கேணி, சென்னை.

தயாரிப்பவர்கள் :—

The Anglo-Indian Drug & Chemical Co., Bombay, 2.


ted & Published by T. V. Kalyanasundaran; Printed by T. V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah, Madras.



# நவசக்தி

திங்கள் வெளியீடு

'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு' 'என்கடன் பணிசெய்து கிடப்பதே'

சிலம்பு கக 1933ஆ மார்ச்சு௴ பரல் ௩

உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| பூகோள விலாசம் ... ... | ... உ௫க |
| சமரச சன்மார்க்க போதம் ... | ... உகக |
| நமது சிந்தனை ... ... | ... உகஎ |
| நிபேதிய இராமாயணம் ... ... | ... உகக |
| தாவீது மன்னரின் தனிக் கோள் ... | ... உஎஉ |
| கமலநாதன் ... ... ... | ... உஎ௫ |
| அகமுரை ... ... ... | ... உஅக |
| பிரம்மச்சரியமே புவி வாழ்வின் கால்கோள் | ... உஅஉ |
| ஐக்கியம் ... ... ... | ... உஅச |
| கந்தா கலோசனு ... ... | ... உஅ௬ |
| காதல் அறியுமோ கட்டு ... ... | ... உஅக |
| உடல் நுட்பம் ... ... | ... உகO |
| இடியேறு ... ... | ... உகஉ |


வருடசந்தா

உள்நாடு ரூபா 3-8-0. வெளிநாடு ரூபா 4.

பாம்பன்:

## ஸ்ரீமத்-குமரகுருதாச சுவாமிகள் இயற்றிய நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| சிவஞானதீபம் 2-ஆம் பதிப்பு | 0 | 8 |
| ஸ்ரீ சுப்பிரமணிய வியாசமும் குருசிட சம்பவ வரலாற்று வியாசமும் | 1 | 0 |
| 1-ஆம் பதிப்பு. | 0 | 10 |
| வேதவியாசம் | | |
| சிவயாதஞவியாச மூலமு முரையும் | 0 | 11 |
| 2-ஆம் பதிப்பு. | 0 | 7 |
| பத்துப் பிரபந்தம் | | |
| தகராலய ரகசியமும், உரையாகிய சதானந்த சாகரமும் | 2 | 8 |
| பரிபூரணானந்த போதமும் உரையாகிய சிவசூரியப் பிரகாசமும் | 2 | 0 |
| | 0 | 3 |
| சத்தாத்வைத நிர்ணயம் | | |
| திருப்பாவும், உரையாகிய திட்பமும், குறிப்புரையும் | 10 | 0 |
| | 5 | 0 |
| ஸ்ரீமத் குமாரசுவாமியம் | | |
| செக்கர்வேள் செம்மாப்பும், | 0 | 6 |
| செக்கர்வேள் இறுமாப்பும் | 0 | 6 |
| திருநூற்றிரட்டு 6-ஆம் பதிப்பு | | |
| குமரவேள் பதிற்றுப்பத் தந்தாதி 3-ஆம் பதிப்பு | 0 | 2 |
| குமாரகுருதாச சுவாமிகள் பாடல் திரு வலங்கற்றிரட்டு 1-ஆங்கண்டம் திரு வலங்கற்றிரட்டு 2-ஆங் கண்டம் முதலியன அடங்கிய நூல் | 3 | 8 |
| அமைதி வையம்பெதென்றுஞ் சேந்தன் செந்தமிழ் | 0 | 2 |
| சண்முக சகச்சிரநாமார்ச்சனை. | 0 | 4 |
| செவியறிவுறூஉ | 0 | 1½ |
| ஷை காவிகோ பைண்டு | 0 | 2½ |
| பாம்பன்: ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகள் சரித்திரம் | 0 | 8 |
| ஷை சரித்திரம் காலிகோ | 0 | 12 |

## ஜோதிட நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| சர்வ சோதிட சஞ்சீவி ... | 1 | 8 |
| சிற்பநூற் பொக்கிஷம் ... | 1 | 0 |
| சோதிட பாரா சாரியம் ... | 0 | 12 |
| உடுதசாபிரதீபிகை ... ... | 0 | 12 |
| வீமேசுர உள்ள முடையான் 2-ம் பாகம். ... ... ... | 1 | 0 |
| வான சேகர சப்தகோ தீபம் ... | 2 | 0 |
| சோதிடக் கன்ம காண்ட மூலமும் உரையும் ... ... | 0 | 6 |
| ஜோதிட ஆசிரியன் 1, 2, 3, 4 பாகங்கள் தனித்தனி ... | 1 | 0 |
| அத்தி பலன் ... | 1 | 0 |

## வைத்திய நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| புலஸ்தியர் கற்பம் 300 ... | 1 | 0 |
| அகஸ்தியர் பன்னிருகாண்ட வைத்தியம் 200 ... ... | 0 | 12 |
| அகஸ்தியர் அமுத கலைக்கியானம் | 1 | 4 |
| அகஸ்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம் 360 ... ... | 0 | 12 |
| இராம தேவரென்ற யாகோபு சுன்னை சூஸ்திரம் 155 ... | 0 | 12 |
| ,, லோகச் செந்தூரம் 300-க்கு சூஸ்திரம் 150 .. | 0 | 10 |
| ,, லோகச் செந்தூரம் 300 ... | 0 | 12 |
| ,, பஞ்ச மித்திரம் 300 ... | 0 | 14 |
| ,, வாத வைத்தியம் 300 ... | 0 | 14 |
| ,, வாத சூஸ்திரம் 400 ... | 1 | 4 |
| ,, தண்டகம் 100 ... | 0 | 12 |
| ,, வைத்திய சூஸ்திரம் 150 | 0 | 10 |
| ,, வைத்தியம் 800 (மருந்து சுத்தியும் நாடி விவரமும்) | 0 | 14 |
| ,, சுண்ணம் 600 ... | 1 | 8 |
| ,, வைத்திய சிந்தாமணி 700 | 1 | 8 |
| ,, வைத்திய கல்லாடம் ... | 1 | 4 |
| ,, சுண்ணம் 300 ... | 0 | 14 |
| சித்த வைத்திய அகராதி ... | 2 | 8 |
| திருவள்ளுவர் பஞ்சரத்தினம் ... | 2 | 0 |
| பதினென் சித்தர்கள் வைத்திய வாதயோக ஞான சாஸ்திரத் திரட்டு ... ... ... | 1 | 8 |
| அகஸ்திய முனிவர் பூரண சூஸ்திரம் | 0 | 12 |
| இராம தேவர் சிவயோகம் ... | 0 | 8 |
| அகஸ்திய முனிவர் கற்பமுப்புக் குரு நூல் 100-ம் மந்திரமணி தீட்சை 100-ம் ... ... ... | 0 | 12 |
| கருவூரார் வாதகாவியம் 700 ... | 1 | 0 |
| சட்டை முனிவர் ஞானம் ... | 0 | 4 |
| அகஸ்தியர் வைத்திய பூரணம் 205 | 0 | 12 |
| நந்தீஸ்வரர் நிகண்டு ... ... | 0 | 12 |
| விஷ வைத்திய மாந்திரீக ஒன்பது விஷ ஆரூடம் ... ... | 2 | 8 |
| அகஸ்தியர் இரண வைத்தியம் 134 முறைகள் ... ... | 0 | 12 |
| அகஸ்தியர் நயனவிதி 1500 உரை நாகமுனிவர் 200 ... ... | 1 | 4 |

முருகவேள் புத்தகசாலை,
இராயப்பேட்டை, சென்னை.

# நவசக்தி


' எவ்வுயிர்க்கும் அன்பாயிரு ' — ' என்கடன் பணிசெய்து கிடப்பதே '

சிலம்பு கரு — ஆங்கீரஸஹு பங்குனிமீ — பரல் ரு



12 APR 19..


## பூகோள விலாசம்

(தொடர்ச்சி)

தெற்கு வடக்குத் திரிபுஞ் சதகோடி
நிற்கும் வகையை நிகழ்த்தக்கேள்—பொற்குமிழி
போலுமண்டத் தட்டிற்புப் பொருந்துமொரு பொற்பதிய
மேலும்பால் கோடி யெனவிளம்புந்—சாலைதிற்
சிங்கா சனவுயரஞ் செப்பிற் சுகஸ்த்திரமா
மங்காம் விலாசபிரன் டாயிரமா—மங்காத

### காலாக்கினி ருத்திரர் வரலாறு

35 காலாக் கினியுருத்ரர் கைக்கான்கின் வாளம்பு
மேலான கேடகமும் வில்லும்மழு—போலார்
திருமேனி யோராயுதஞ் சேர்யோ சனையாய்த்
தருமே தசருத்ரர் சார—விருபானுங்
கைகட்டி ருத்ர கணங்கள்சத கோடிசுற்ற
மெய்கிட்டு மாசனத்தில் வீற்றிருப்பர்—கைக்கொட்டும்
அக்கினிபோல் மேனியினின் றக்கரமாய்த் தாமெழும்பு
மக்கினியி ரைங்கோடி யாமுயர—மக்கினியின்
தூமமுமைங் கோடி தூலயா வதன்மீது
பூமியின்கண் பாவபழி புக்கிடுவோர்—தாமுழன்றே
40 அந்தகன் றன் றாதருக்குள் ளாகியவர் தெண்டினையால்
கொந்துகொந்து காயங்க ளாய்தினாய்ப்—பிந்தவர்
கள்மக் தொகையுமட்டும் கண்ணிக்குட் சிக்கிடுஞ்
சென்மப் பறவையெனச் சிவெறிடும்—பின்மயங்கி
வீழ்ந்தழுந்தும் பூதி மிகவிருபத் தெண்கோடி
தாழ்ந்த ததன்பெருமை சாற்றக்கேள்—ஆழ்ந்திருக்கும்

### நரக வரலாறு

அண்ட கடாகத் தளவாய் விருத்தமதா
யெண்டிசையுஞ் சூழிருபத் தெட்டுக்காய்—கண்டசூழி
யொன்றொன் றிலக்க வியோசனையி லுழுமாய்
நின்றமவை மேல்மணியி னீர்மைதாய்த்—தான்று

45 மிருப்புமய மாயிருக்கு மிங்கிவைகண் டோர்க்கு
மெருப்புமய மாயிருக்கு மெஞ்சங்—கருப்புமொழி
மானே யதன்பெயர்கேள் மாயையொடு நீர்க்கவெளி
தானேபின் னட்டபுமை சத்தபுமை—தேனே
பரிவாத் துணைபின் பகருஞ் சுநீர்க்கை
திரபஞ்ச கோணை திரி கோணை—கருதரிய
வச்சிரங் காளமொடு மற்றுங் காளமதின்
மிச்சமெனு மேல்வீம விசனையு—முச்சிதமாம்
வீமம் பதுமபதி மேற்பதும சண்டதர
மாமதன்மேற் சண்டகோ லாகலையுந்—தாமுமகா
50 சண்டமொடு சண்டமுமேற் சாரும்ப யோற்கடமும்
விண்டதன்மேற் கான விராத்திரியுங்—கண்டவிதன்
மேலும் பயானகமு மிக்க தாளதர
மால்கோர ருடை மகாகோரை—மேலுமதி
கோரை சுகோரையொடு கோரையெனக் கூறுகின்ற
பேரிருபத் தெட்டாமிப் போதனை—நாரியரே
கிட்டளத்தி னின்று கிளர்த்து நிரைநிரையா
யிட்டமுடன் மேற்றளம நிருக—நாட்டுங்
தளத்துக் கொருபெயராத் தானிருபத் தெட்டுத்
தளத்தினுக்குத் தானறிநீ தானே—கிளர்த்துமொரு
55 தட்டினுக்குக் கோடி தருநிரைய மாயிருபா
னெட்டினுக்கு மேயிருபத் தெண்கோடி—தட்டதொன்றுக்

## இராச நரகம் : 140

கிராச நிரையமைந்தாய் நாலேழு தட்டினுக்
கிராச நிரையமெழு பானிரட்டி—பேசுபெயர்
மேற்றளத்துக் கைந்துமுதல் விண்டிடக்கேள் மெல்லியரே
சாற்று ரவுரவமுன் றுனதன்பின்—மாற்றரிய
மாரெள ரவமதன்பின் மானே யதிதமமு
மாருமதி சீதமதி வெப்பமைந்தாம்—நேரிரண்டிற்
சேருமதி கோரமிருள் தீக்கணமப் போசமுடன்
சாருஞ்சஞ் சீவமிவை தானைந்தாம்—நாரியரே
60 மூன்றிட் சடபாயி முக்துவிம லோமமழல்
கான்றதொரு வீமங் கடங்கடமுந்—தோன்றுகின்ற
தீவிர வேகமிவை சேர்ந்ததைந்தா நாலினுக்கு
மேவுக ராளம் விகராளங்—தாவுபிர
கம்பமொடு வெண்கமலங் கண்டதொரு வீறுமுக
மிம்பர்புக ழைந்தா மிதனிதன்கீழ்—வெம்புகரும்
பாசமொடு சூசிமுகம் பன்னுபிர கெற்சனமுங்
காசார் புதைகேமி காதகமும்—பேசுமிவை
யைந்தா மிதன்கீ ழமருமுடற் பீடணமுந்
தந்தகும்பி பாகமொடு சங்கிரக—முந்துமதி
65 பாதஞ் சிதாருணைந்தப் பாதன்கீ ழங்காரந்
சீதக் குழியிரத்தஞ் சேர்குழியு—மோதிருப்புத்

(தொடரும்)

# சமரச சன்மார்க்க போதம்

(தொடர்ச்சி)

30. கோயில் மடம் முதலியன தொடக்கத்தில் ஒவிய காவியத் தத்துவ நிலையங்களாகவும், குரு மார்களின் தெய்வ மொழிகளைப் பயிலும் நிலையங் களாகவும் காணப்பட்டன. நாளடை வில் பிரதிநிதிகள் என்ற பெயரால் புரோகிதர்கள் அவைகளில் நுழைந்து அவைகளைத் தங்கட்குரிய வியாபாரக் கடைகளாக மாற்றிக்கொண்டார்கள்.

31. புரோகிதர்கட்குக் காசு கொடுத்து உபதேசம் பெறுவதால் தெய்வநிலை கூடுமென்று கருதுவது அறியாமை.

32. புரோகிதர்கள் உபதேசம் குருடருக்குக் குருடர் வழி காட்டுவதைப் போன்றது.

33. குருமார் கருணை, ஞாயிறொளி போலப் பொழிந்த வண்ணமாயிருக்கிறது. அதற்குக் காசோ கட்டுப்பாடோ வேண்டுவதில்லை. அக்கருணை யொளிபட வாழவேண்டுவது மக்கள் கடமை.

34. குருவுக்குப் பல மொழியில் பல பெயர்கள் வழங்கப்படுகின்றன.

## V. சீர்திருத்தம்

1. உயிர்களின் அறியாமையைப் போக்கி, அவைகளை அறிவு மயமாக்க வேண்டுமென்பது இயற்கை அன்னையின் வேட்கை.

2. இயற்கை அன்னை, தன் வேட்கையை நிறைவேற்ற உயிர்கட்குத் தனு கரண புவன போகங்களாகவும், பிற கூறுகளாகவும் நின்று துணை செய்கிறாள்.

3. இயற்கை அன்னையின் துணை, படிப்படியாக உயிர்களின் அறியாமையைப் போக்கி, அறிவை விளங்கச் செய்வதாகிறது.

4. உயிர்கள், தாவர முதல் விலங்கு உடல் தாங்கும்வரை பகுத்தறிவு விளங்கப் பெறுவதில்லை.

5. உயிர்கள், விலங்குடலைக் கடந்து மக்கள் உடலைத் தாங்கியதும் பகுத்தறிவு அரும்பப்பெறுகின்றன;

6. பகுத்தறிவைப் பெற்ற மக்கள் அறிவுமயம் என்னும் முழுநிலை எய்த முயலுதல் வேண்டும்.

7. விலங்கு முதலிய உயிர்களிடம் பகுத்தறிவு விளங்கப் பெறுமையால்; அவைகளிடஞ் சில குறைபாடுகளுண்டு. ஆனால் அவைகள் பெரிதும் இயற்கை முறைகட்கு மாறுபட்டு நடப்பதில்லை. இஃது இங்கே சிறப்பாகக் குறிக்கத் தக்கது.

8. விலங்கு முதலியன இயற்கை முறைகட்கு மாறுபட்டு நடவாமையால், அவைகள்மாட்டுள்ள குறைபாடுகளைப் போக்க, இயற்கை அன்னை, பகுத்தறிவு விளங்குதற்குரிய நல் லுடலை அவைகட்குக் கருணை செய்கிறாள்.

9. பகுத்தறிவு பெற்ற மக்கட்பிறவி, விலங்குக்கும் தெய்விகத்துக்கும் இடைப்பட்டது.

10. மக்களிடத்தில் பொதுவாக விலங்கியல்பும் தெய்விக இயல்பும் விரவியிருத்தல் கண்கூடு.

11. அழுக்காறு அவா வெகுளி பகை வன்மம் கொலை தன்னலம் முதலியன விலங்கியல்புகள். பொறுமை அன்பு அருள் மன்னிப்பு ஒப்புரவு தியாகம் முதலியன தெய்வ இயல்புகள்.

12. மக்கள் விலங்கியல்பினின்றும் முற்றும் விடுதலை யடைந்து, தெய்வ இயல்பை முற்றும் பெறுதற் பொருட்டு, அவர்கட்கு இயற்கை அன்னை பகுத்தறிவை விளங்கச் செய்கிறாள்.

13. தெய்வ இயல்புகள் முற்றும் விளங்கப் பெறுவதே அறிவுமயம் என்னும் முழுநிலை எய்துவதாகும்.

14. முழுநிலை எப்படிக்கூடும்? மக்கள், தாங்கள் பகுத்தறிவு பெறுதற்

குத் துணை நின்ற இயற்கை வழியே வாழ்வு நடாத்தினால் முழுநிலை தானே கூடும்.

15. மக்கள், பொதுவாகத் தங்கள் பகுத்தறிவை இயற்கை வழியிற் செலுத்துகிறார்களா? தாங்கள் பகுத்தறிவு விளங்கப் பெறுதற்குத் துணை நின்றும், மேலும்முழு நிலை பெறுதற்குத் துணை செய்ய முனைந்தும் நிற்கும் தாயைப் பாவிகள் மறக்கிறார்கள். இது மக்கள்பாலுள்ள குறைபாடு.

16. மக்கள் தாயை மறந்தாலும் தாய் மக்களை மறப்பதில்லை. மக்கள் தங்கள் பகுத்தறிவை இயற்கை வழிச் செலுத்தாமையால், அவர்கள் வாழ்விடை மாசுகள் படிகின்றன. அம்மாசுகளைப் போக்கி மக்கள் வாழ்வைச் சீர் செய்ய இயற்கைத் தாய் அருள் சுரக்கிறாள். அவ்வருட் சுரப்பின் ஆக்கமே சீர்திருத்த மென்பது.

17. சீர்திருத்தம் இயற்கை வழி எழுந்து அமைவதாயிருத்தல் வேண்டும். வேறு வழியில் எழுந்து அமைவது சீர்திருத்தமாகாது. அதனைச் சொன் முறையில் செயற்கைச் சீர்திருத்தமென்று கூறலாம். ஆகவே சீர்திருத்தமென்பது இயற்கை வழிப் பிறப்பதையே குறிப்பிதென்க.

18. இயற்கைச் சீர்திருத்தம் தெய்வ இயல்பினின்றும் எழுவது. செயற்கைச் சீர்திருத்தம் விலங்கியல்பி னின்றும் எழுவது.

19. தெய்வ இயல்பினின்றும் எழுவது ஜீவகாருண்யத்தை அடிப்படையாகக் கொண்டியங்கும். விலங்கியல்பினின்றும் எழுவது ஜீவபோதத்தை அடிப்படையாகக் கொண்டியங்கும்.

20. இயற்கைச் சீர்திருத்தத்தால் சகோதரநேயம் பெருகும். மற்றதால் சகோதரநேயம் அருகும். இவ்விரு நிகழ்ச்சி கொண்டு இயற்கைச் சீர்திருத்தம் எது என்று அளந்து அறிதல் கூடும்.

21. சீர்திருத்தங்களிற் சில மக்களிடைத் தாமே படியும்; சில அறிஞர்களால் அறிவுறுத்தப் பெற்ற பின்னை மன்பதையில் நிலவும்; சில குருமார்கள் வாயிலாக வெளி வந்து உலகுக்கு நலம் புரியும்.

22. எச்சீர்திருத்தத்துக்கும் இடந்தாராத சமூகம் நாடு முதலியன இயற்கை அன்னையின் மறக் கருணைக்கு ஆளாகி அழிந்து படும்.

23. இயற்கை அன்னையின் இயல்பு கருணை. அக்கருணை பெரிதும் அறவழியில் இயங்குவது. சில சமயங்களில் அது மறவழியில் இயங்குவதுமுண்டு.

24. இயற்கை அன்னையின் அறக் கருணையினின்றும் பிறப்பன ஒளி காற்று நீர் நேயம் முதலியன. அவள் மறக் கருணையினின்றும் பிறப்பன பூகம்பம் புயல் கொள்ளை நோய் சீற்றம் முதலியன.

25. மக்கள் பொதுவாக இயற்கை வழி நின்று மேல் நிலை எய்தல் வேண்டுமென்னும் நல்லியல்புடையவர்கள். அந் நல்லியல்புக்குச் சிற்சில சமயங்களில் கேடு நேர்கிறது.

26. மக்களிடம் தெய்வ உணர்வும் விலங்கு உணர்வுமாக இரண்டும் கலந்திருத்தலான், அவ்வவ்வுணர்வினின்றும் கலைகள் பிறக்கின்றன.

27. தெய்வக் கலைகளால் உண்மைக் கல்வி பெருகும். மற்றக் கலைகளால் போலிக் கல்வி பெருகும்.

28. உண்மைக் கல்வி வளர வளரத் தன்னலம் அருகும்; சகோதர நேயம் பெருகும். போலிக் கல்வி வளரவளரத் தன்னலம் தடிக்கும்; சகோதர நேயம் கெடும்.

29. தன்னலம் அற அற இயற்கைச் சீர்திருத்தம் இடம் பெறும்; தன்னலம் மிகமிக அச்சீர்திருத்தம் இடம் பெறாது.

30. இயற்கைச் சீர்திருத்தம் இடம் பெறாத வாழ்வு சிறைநீர் போன்றதாகும்.

31. உண்மைக் கல்விக்கு அழகு மற்றவர்களுக்கு ஊழியஞ் செய்வது.



அக் கல்வியாளர் தம்மை மற்றவர்க்கு ஊழியரென்றே கருதித் தொண்டு செய்வர். போலிக் கல்வி, பேர் புகழ் தலைமை சூழ்ச்சி காவு முதலிய நிலைகளை நாடத் தூண்டும். இக்கல்வியாளர் மற்றவர்க்குத் தம்மை ஊழியரென்று கருதாது தங்கருத்து முற்றுற, நடிப்புத் தொண்டாற்றுவர். இவர்களுக்கு உலகம் எச்சரிக்கையாயிருத்தல் வேண்டும்.

32. போலிக் கல்வியாளர் தன்னல மேலீட்டான் சமூகத்திலும், சமயத்திலும், அரசியலிலும், பிற துறைகளிலும் தாம் விரும்புமாறு பலப்பல கட்டுப்பாடுகளைக் கிளத்துகிறார். அக்கட்டுப்பாடுகளால் மக்களின் நல்லியல்பு கெடுகிறது.

33. உலகில் எழும் வறுமை, போர், கொலைப் புரட்சி முதலிய கொடுமைகட்குக் காரணமாக நிற்பது போலிக் கல்வியாளரின் புன்மைச் செயலே யாகும்.

34. உண்மைக் கல்வியாளர், வறுமை, போர், கொலைப் புரட்சி முதலியவற்றை உண்டு பண்ணுமலே உலகுக்கு நலஞ் செய்வர்.

35. கொலை கொலையைப் பெருக்குமென்பதும், அன்பு அன்பைப் பெருக்குமென்பதும் உண்மைக் கல்வியாளர்கட்குத் தெரியும். அதனால் அவர்கள் கொலைப் புரட்சி முதலிய துறைகளில் தலைப்படாது இயற்கை வழி நின்று அன்புத் தொண்டாற்றுவார்கள்.

36. இவ்விருபதாம் நூற்றாண்டில் கல்வி பெருகுகிறதென்றும், புதுமை (Invention) பெருகுகிறதென்றும் சொல்லப்படுகின்றன. இப்பெருக்கைக் கண்டு மகிழ்வுறுவது அறிவுடைமையாகாது. உலகில் மக்கள் அச்சமின்றி, குறைவின்றி, வறுமையின்றி, உரிமையுடனும், அமைதியுடனும், சகோதர நேய உணர்வுடனும் வாழ்கிறார்களா என்பது கவனிக்கப்படல் வேண்டும்.

37. கல்வியும் புதுமையும் நேரிய முறையில் பெருகின், மன்பதை, அச்சம் குறை வறுமை முதலிய சிறுமைகளின்றி, உரிமையுடனும் அமைதியுடனும் சகோதர நேய உணர்வுடனும் நல்வாழ்வு பெற்று இயற்கை இன்பம் நுகரும்.

38. தற்கால உலகம் எக்காட்சி வழங்குகிறது? தற்கால உலகில் அச்சமும் குறைபாடும் வறுமையும் இன்ன பிறவும் தாண்டவமிடுவதும், உரிமையும் அமைதியும் சகோதர நேயமும் இன்ன பிறவும் ஒடுக்கமுறுவதுங் கண்கூடு. இந்நிலையைக் கூட்டியுள்ள கல்விப் பெருக்கும் புதுமைப் பெருக்கும் எங்ஙனம் நல்லனவாகும்?

39. இலட்சத் தொருவர் வயிறார உண்டு கள்ளாட் டயர்வதைக் கண்டு 'உலகம் நன்னிலையி லிருக்கிறது' என்று கருதுவது மடமை. உலகம் என்பது சிலரன்று.

40. வாழ்விற்குப் பொருள் இன்றியமையாதது. அப்பொருளின்பம் எல்லாரும் நுகர்வதாயிருத்தல் வெண்டும்.

41. பொருள் ஒருபால் திரண்டும் மற்றொரு பால் வறண்டும் பயன்படுமாயின், உலகில் இடர் விளைந்த வண்ணமாயிருக்கும்.

42. இயற்கை, ஒளி காற்று நீர் முதலியவற்றை எல்லார்க்கும் பயனபடு முறையில் வழங்குகிறது. அவ்வியற்கையின் அருளால் விளையும் பொருளும் எல்லார்க்கும் பயன்படுதல் வேண்டும். இஃதே அறம். இவ்வற வாழ்வு சன்மார்க்கத்துக்கு வேண்டற்பாலது.

43. செல்வத்தில் கள்ளாட்டயர்தலும் வறுமையில் சிறுமை யுறுதலும் சத்திய வாழ்வுக்கு இடந்தருதல் அரிது. சத்தியமில்லா விடத்தில் சன்மார்க்கம் ஆக்கமுறாது. சத்தியம் சன்மார்க்கத்தின் அடிப்படை.

44. சன்மார்க்க ஆக்கத்துக்குச் செல்வம் ஒருபால் திரண்டும் மற்றொருபால் வறண்டும் பயன்படும் முறை ஒழிதல் வேண்டும்.

45. உலகில் இன்பதுன்பம் பெருகுதற்குப் பலதிறக் காரணங்கள் சொல்

லப்படுகின்றன. அவைகளுள் தலையாயது ஆட்சிமுறை என்று கூறலாம்.

46. அரசு எவ்வழி அவ்வழி குடிகள். அரசு சன்மார்க்கத்தில் இயங்கின், குடிகளும் சன்மார்க்கர்களாக வாழ்ந்து இன்ப நுகர்வார்கள். அரசு மற்ற மார்க்கத்தில் இயங்கின் குடிகள் நிலை என்னாகும்?

47. மக்கள் அனைவருஞ் சன்மார்க்கர்களாக வாழும் ஒரு நிலை நேருமாயின், அப்பொழுது அரசு வேண்டுவதில்லை. அந்நிலை எய்துதல் ஒருபோது கூடாமற் போகாது. அந்நிலை கூட்ட இயற்கை அன்னை முயன்ற வண்ணமாயிருக்கிறாள். இயற்கை அன்னையின் வழி மன்பதையை நிறுத்துதற்கும் தற்போது நல்லரசு தேவை.

48. மக்களை இயற்கை வழியில் நிறுத்திச் சன்மார்க்கர்களாக்கத் துணைசெய்வதற்கென்று அரசியல் அமைப்பு ஏற்பட்டது. அவ்வமைப்பு, தற்போது சன்மார்க்கத்தினின்றும் பிறழ்ந்து உழன்று வருகிறது. அதனைச் சீர்செய்தல்வேண்டும்.

49. அரசியல் சீர்திருத்தம் என்னும் பெயரால் ஆங்காங்குள்ள அரசியல்வாதிகளால் ஆட்சி முறைகள் கோலப்படுகின்றன. குடியாட்சி கோனாட்சி குடிக்கோனாட்சி முதலியபெயர்கள் முறைகட்குச் சூட்டப்படுகின்றன. பெயர்கள் மாறுகின்றனவே யன்றி, மனநிலை மாறுவதில்லை. பெயர்கள் மாற்றத்தால் மன்பதையின் துயரம் ஒழியுமா? பெயர்கள் மாற்றத்தால் சில அரசியல் வாதிகள் நல முறுகிறார்கள்.

50. ஆட்சி எம்முறையில் இயங்கினும் இயங்க. முறையைப்பற்றியோ பெயரைப் பற்றியோ கவலையுற வேண்டுவதில்லை. மக்கள் அனைவரும் இன்ப வாழ்வு பெறுதற்குரிய நல்லாட்சியே போற்றற்குரியது.

51. பொருளாதாரப் புலவர்களும், அரசியல் ஞானிகளும் கூட்டம் கூட்டமாகப் பெருகாத காலத்தில் மக்கள் நுகர்ந்த இன்பங்கூட இந்நாளில் இல்லை என்று கூறல் மிகையாகாது.

52. தற்காலப் பொருளாதாரப் புலமைக்கும் அரசியல் ஞானத்துக்கும் பிறப்பிடம் மேல் நாடு என்று எவருங் கூறுவர்.

53. எல்லாவற்றிற்கும் உலகம் மேல்நாட்டைப் பார்த்து நடித்து வருங்காலம் இக்காலம்.

54. மேல் நாட்டார் சுறுசுறுப்பும் ஊக்கமும் உடையவர். அவர்தஞ் சுறுசுறுப்பும் ஊக்கமும் அரசியல் துறையில் அளவு மீறிச் சென்றமையான், சாம்ராஜ்யப் பித்து அவர்தந் தலைக்கேறிவிட்டது.

55. சாம்ராஜ்யப்பித்தால் விளைந்ததென்னை? போராட்டமேயாகும்.

56. மேல்நாடுமுழுவதும் தற்போது முதலாளி தொழிலாளி போராட்டத்துக்கு இரையாகி வருதல் கண்கூடு.

57. கீழ்நாட்டின் நிலை எப்படி இருக்கிறது? கீழ்நாட்டின் நிலை இரங்கத் தக்கதாயிருக்கிறது. கீழ்நாடு தற்போது தனக்கென ஒரு கொள்கையின்றிக் கிடக்கிறது. மேல்நாடு ஆட்டும் வழி கீழ்நாடு ஆடிவருகிறது என்று சுருங்கச் சொல்லலாம்.

58. குருமார்கள் போதனைகள் பிறந்த இடம் கீழ்நாடேயாகும். அப்போதனைகள் மத வெறியால் பாழ்பட்டன.

59. மேல்நாடு அரசியல் வெறியால் கெடுகிறது. கீழ்நாடு மத வெறியால் கெட்டது. அங்கே அவ்வெறியும் இங்கே இவ்வெறியும் தணிதல்வேண்டும்.

60. வெறியைத் தணிக்கவல்ல மருந்து சன்மார்க்கமே யாகும்.

61. மேல்நாடு தற்போதைய உலகுக்குத் திறவாயிருத்தலான், அதன்கண் சன்மார்க்கம் ஆக்கம் பெறின், உலகம் நலமுறும்.

62. மேல் நாட்டின் சுறுசுறுப்பும் ஊக்கமும் சன்மார்க்கத்தில் செல்லப்புகின், உலகம் விரைவில் சன்மார்க்கமயமாதல் திண்ணம்.



63. கீழ்நாடு ஒருபோது சன்மார்க்கத்தில் மூழ்கிப் பண்பட்டதாதலின், அது சன்மார்க்கத்தை மிக எளிதில் கடைப்பிடிப்பதாகும்.

64. முதல் தொழில் போராட்டம் உலக முழுவதும் பரவி வருகிறது.

65. முதலாளி, தொழிலாளியை அடக்கியாள முயல்கிறான். தொழிலாளி, வன்மங்கொண்டு உறுத்தெழுந்து முதலாளியை அறவே சாய்த்து, முதல் தொழில் வேற்றுமையில்லாமற்செய்ய முயல்கிறான்.

66. தொழிலாளர் இயக்கம் நல்லதே. ஆனால் அது சன்மார்க்கத்தை (கடவுள் நெறியை) அடிப்படையாகக் கொண்டு நடப்பதாயிருத்தல் வேண்டும்.

67. தொழிலியக்கத்தார் சன்மார்க்கத் தத்துவங்களைத் தம்முடையனவாக் கொண்டொழுகுதல் வேண்டும்.

68. சில விடங்களில் தொழிலியக்கத்தார் சன்மார்க்கத்தை வெறுத்து வருகிறார். அது தவறு.

69. சன்மார்க்கம் இயற்கை நெறியாதலான், அஃதற்ற எவ்வியக்கமும் மன்பதையைத் தூய்மை செய்யாது.

70. சன்மார்க்கம், எல்லாரும் இன்புற்றுவாழ்தல் வேண்டு மென்னும் தத்துவத்தைத் தன்னகத்தே கொண்டது. அதன் தத்துவத்தை யுணராது அதை வெறுப்பது தவறு.

71. சன்மார்க்கம் சில விடங்களில் தொழில் இயக்கத்தாரால் வெறுக்கப்படுதற்குக் காரணம், அது புரோகித மதமெனத் திரிபாகக் கருதப்படுவதே யாகும். புரோகிதம் சன்மார்க்கம் அன்று என்பது மேலே பல விடங்களில் விளக்கப்பட்டது.

72. முதல் தொழில் வேற்றுமையைப் போக்கக் கொலைப்புரட்சி வேண்டுமென்பது சிலரது கருத்து. அக்கருத்துப் பரவுதலாகாது. அது பரவப் பரவத் தீமையே பெருகும்.

73. கொலையை அடிப்படையாகக் கொண்ட எவ்வியக்கமும் ஆக்கம் பெறாது. கொலை, இயற்கைக்கு மாறுபட்டது.

74. போராட்டம் எழுவதன் நோக்கமென்னை? எல்லாரும் இன்புற்று வாழ்ந்து அமைதி பெறுதல் வேண்டுமென்பது. கொலைப்புரட்சி அமைதியை ஒருபோதும் உண்டுபண்ணாது.

75. கொலைப்புரட்சி, கொலைப்புரட்சிகளை அடிக்கடி உயிர்ப்பித்துக்கொண்டேயிருக்கும். கொலைப்புரட்சி பெருகப் பெருக அமைதி ஏது? மனிதனை மனிதன் பிடுங்கித் தின்னும் ஒரு நிலை உலகில் ஓங்கும்.

76. இயற்கையின் உட்கிடக்கை மன்பதையை ஒருமை அன்பில் வளர்க்க வேண்டுமென்பதே யன்றி, மன்பதையைப் பகைமையால் பிரிக்கவேண்டுமென்பதன்று.

77. இயற்கையின் குறிப்புணர்வோர் கொலைப்புரட்சியில் தலைப்படமாட்டார்.

78. இயற்கைக் குறிப்பை யுணர்ந்து நடக்கும் ஆற்றல்வாய்ந்தவர்கள் இயக்கங்களை நடாத்த முன்வருதல் நல்லது.

79. கொலைப் புரட்சியால் ஒன்றை மாய்த்து, ஒன்றை ஆக்குதல் இயலாது. கொலைப் புரட்சி, கொலைப் புரட்சிகளை ஈன்று கொண்டுபோகும் தன்மையதாதலின், அதனால் அமைதி நிலை பெறாது. அமைதி நிலை பெறாதவிடத்தில் எதைச் சாதித்தல் முடியும்?

80. கொலைப் புரட்சி எண்ணமே தீயது.

81. முதலாளி தொழிலாளியை அடக்கி ஆளுதற்குக் காரணம் அவன் இவனைச் சகோதரன் என்று கருதாமையே யாகும். வன்மத்தை வளர்க்கும் கொலைப்புரட்சி சகோதர நேயத்தை எங்ஙனம் உண்டு பண்ணும்?

82. முதலாளி, தொழிலாளியைச் சகோதரன் என்று உணர்வானாயின்,

அவன் இவ்வுலக [illegible] ல் நேசிக்கப் புகுவன். நேசப் பெருக்கத்தால் வேற்றுமைகள் தொலையும்.

83. முதல் தொழில் வேற்றுமையைப் போக்கிச் சகோதர நேயத்தை வளர்த்துச் சமத்துவத்தை விளைக்க வல்லது சன்மார்க்க மொன்றே.

84. மேல் நாட்டில் இப்பொழுது வீறுகொண்டு எழுந்துள்ள முதல் தொழில் போராட்டத்தின் முடிவு அரசியல் வெறியைத் தணிப்பதாகும்.

85. அரசியல் வெறி தணியத் தணியச் சன்மார்க்க நாட்டம் மிகும்.

86. கொலைப் புரட்சிகள் மட்டும் இடை இடை நடமாடாதவாறு ஆங்காங்குள்ள அறிஞர்கள் பாதுகாத்து வருதல் வேண்டும்.

87. கொலைப் புரட்சி நடமாட்டம் சன்மார்க்க உணர்வை விரைவில் நிலை பெறுத்தாது.

88. தொழிலாளர் இயக்கத்தை நடாத்துவோர், இயற்கைத் தத்துவத்தை உணர்ந்து நடப்பவரா யிருத்தல் நலம். அந்நடை கொலைப் புரட்சியை நாடத் தூண்டாது.

89. கொலைப் புரட்சி தற்போது நலஞ் செய்வது போலச் சிலர்க்குத் தோன்றலாம். பின்னே அது பேரிடர் செய்வதாகும்.

90. கொலைப் புரட்சியை நாடுவோரும் நாளடைவில் அதன் கொடுமை கண்டு அதனை வெறுப்பர். பின்னே அதை வெறுப்பதினும் தொடக்கத்திலேயே அதை நாடா திருப்பது சிறப்பு.

91. சன்மார்க்கம் உலகில் பரவி மன்பதையைத் தூய்மை செய்ய நாளாகு மென்றும், கொலைப் புரட்சி விரைவில் ஒன்றை நிகழ்த்துமென்றுஞ் சிலர் கருதுவதுண்டு.

92. கொலைப் புரட்சியால் விழும் தீமை மீண்டும் உயிர்பெற்றுப் பன்முகங் கொண்டு எழும். சன்மார்க்கத்தால் விழும் தீமை மீண்டும் உயிர்பெறுறெழாது. தீமையை மீண்டும் உயிர்ப்பிக்கும் ஒன்றை என் நாடுதல் வேண்டும்?

93. சன்மார்க்கம் இயற்கை நெறியாதலான், அதனால் கழிவன கழியும்; செழிப்பன செழிக்கும். கழிவும் செழிப்பும் இயற்கை வளர்ச்சிக்குத் துணைபுரிவன.

94. உலகில் தீமைகண்டே, போராட்டத்தை இயற்கை அன்னை அவ்வப்பொழுது எழுப்புகிறாள். போராட்டத்தை எழுப்பும் இயற்கை அன்னை அதை நல்ல வழியில் நடாத்தி முடிப்பாள். அவள்வழி நிற்க உலகங்கடமைப்படுதல்வேண்டும். அவள்வழி நில்லாது முனைப்பால் கொலைப் புரட்சி முதலிய தீய வழிகளில் நுழைவது வளர்ச்சிக்குத் தடை புரிவதாகும். இயற்கைப் போக்கில் உறுதி கொள்ளுதல் அறிவுடைமை.

95. போராட்டத்திடைச் சன்மார்க்க வேட்கையை எழுப்புவது அரிது என்பது சிலர்கருத்து. போராட்டத்திடைச் சன்மார்க்கம் எளிதில் புகும். தாகத்தால் வருந்தி வாடிக் களைப் புறுவோனுக்கு நீரின் அருமை நன்கு தெரியும். வெயிலில் திரிந்து எரிந்தவனுக்கு நிழலின் அருமை நன்கு தெரியும். ஆகவே, போராட்டத்தில் ஈடுபட்டுச் சலிப்புறுவோனுக்குச் சன்மார்க்கச் சிறப்பு இனிது விளங்கும்.

96. மேல்நாட்டு அரசியலுக்கு இப்பொழுது சன்மார்க்கத் தேவை.

97. மேல்நாட்டரசியல் சன்மார்க்கத்தில் இயங்குமாயின், உலக முழுவதும் சன்மார்க்க அரசு அரும்பும்.

98. அரசு வாயிலாகச் சன்மார்க்கம் பரவின், சன்மார்க்கம் விரைவில் உலகைச் சீர் செய்யும்.

திரு. வி. கலியாண சுந்தரன்.

(தொடரும்)

# நமது சிந்தனை

[திரு. சி. சதாசிவனார்]

II

“சாத்திர மோதுஞ் சதுர்களை விட்டுநீர் [ன்!”
மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமி

ஓர் உயரிய மலையை நமது மனதிற்கு உவமையாக எடுத்துக் காட்டலாம். அம்மலையினுச்சியே புலன் வழி புறஞ் சென்று திரிந்து விழிப்பு நிலையிற் றொழிலாற்றும் புறமனமாகும். அக்குன்றின் மற்றப் பாகங்களும் புறமனதிற்கு அப்பாற்பட்டு விழிப்பு நிலைக்கு அதீதமான உயரிய நிலைகளிற் றொழிற்படும் உள்ளமாகும். இதை ஆன்றோர் சித்தம், சிந்தை என்று பலவாறு சொல்லிப் போந்தனர். இவ்வுள்ளத்தின் சிறப்பும் வன்மையும் அளவிடற் கரியன.

உள்ளத்தின் சின்னஞ் சிறியதொரு கூறே புறமனம் என்று மனநூல் வல்லுநர் பகர்கின்றனர். இவ்வுள்ளத்தினுள்ளே மிக மிகப் பெரிய சக்திகளும் புலனறிவிற்கு அப்பாலுள்ள நிலைகளை உணரும் ஆற்றலும் மிக நுணுக்கமாக உறைந்து தூங்கிக் கிடக்கின்றன.

இச்சக்திகளை-இவ்விலையற்ற மாணிக்கங்களை-ஆண்டவன் மனிதனுக்கு அருளால் அளித்திருக்கின்றனன் என்பது, உலகில் உலவுகின்ற சமயங்கள் யாவும் ஒப்புக்கொண்ட தொன்று. இவ்வன்மை இறையினது சிறுதிவலை என்றும் நூல்கள் கூறுகின்றன. அணுவிலும் நுண்மையாக - அணுவினுள் அணுவாக - அணுவேயாக - ஆண்டவன் யாண்டும் நீக்கமற விரவி நிறைந்த ஒரு சக்தி - அச்சக்தி வெளியில் மனிதன் வசிக்கின்றான். நமக்குள் அச்சக்தி நுண்மையாக இருக்கின்றது. நமது உடலமானது ஆண்டவன் அமரும் அருங்கோவிலாகும். அவன் எப்பொருள்களிலும் ஊடுருவி நிறைந்து வதிகின்றான். நமது ஆன்மா ஆண்டவனுள்ளே அவனோடு கலந்து கிடக்கின்ற ஒரு சக்தியாகும். நீரினில் உப்பு எப்படி கலந்து நிற்கின்றதோ அவ்வண்ணமே நாம் ஆண்டவனோடு எப்போதும் ஒன்றி இருக்கின்றோம்.

“அப்பினிற்கூர்மை ஆதித்தன் வெம்மையால்
உப்பெனப் பேர்பெற் றுருச்செய்த தவ்வுரு
அப்பினிற் கூடிய தொன்றாகு மாறுபோல்
செப்பினிற் சீவன் சிவத்துள் அடங்குமே”

என்று திருமூலனார் திருவாய் மலர்ந்ததை நாம் உன்ன வேண்டும். சீவன் சிவனிடமிருந்து வேறுபட்ட பொருள் அன்று; ஒன்றே; இரண்டற்குள்ளும் பொருளில் வேற்றுமை இல்லை; தன்மையில் மட்டும் ஏற்றத்தாழ்ச்சி.

ஆயினும் மகன் “தானே அவன்” என்று எண்ணிச் செருக்கல் இழுக்கு. அப்படி எண்ணில் சிறுமையே வந்தெய்தும். இறைவன் வன்மையில் ஒரு சிறிய துளிமட்டுமே - விகாசமாகாத ஒரு சிறிய விதை மட்டுமே - மனிதனகத்தே மறைந்து கிடக்கின்றது. மனிதனுக்கும் ஆண்டவனுக்கும் உள்ள தொடர்பை, ஒரு தருவிற்கும் அதன் இலைக்கும் உள்ள உறவினால் விளக்கலாகும். மரமானது அதை வளர்க்கும் சாரத்தினது பரிணமம். ஒரே இரசமே மரத்திற்கும் அதன் இலைக்கும் உணவளிக்கின்றது. இலை தனக்குள்ளே உன்னி ஊன்றி நோக்குமாகில் தன் தாய் மரத்திற்கு வளர்ச்சி யளிக்கும் இரசமே தனக்கும் உணவளிப்பதாக உணரல் கூடும். இவ்விரசத்தினதுமாறு தலே மரம் என்று அறிந்து கொள்ளும். ஒரேசாரம் எங்கும் ஓடுதல்பற்றி ‘தானே இரசம்’என்றும்,‘தானே மரம்’ என்றும் அஃது எண்ணிக் கொண்டால் அஃது அறியாமையின் பாற்படும். மரத்தின் ஒரு சிறிய கூறுமட்டும் இலை என்று கூறுவதே பொருந்தும். மனிதன் ஒரு முழுமுதற் பொருளிலிருந்தே

உயிரையும் உணர்வையும் உணவையும் பெறுகின்ற காரணத்தான் தானே கடவுள் என்று எண்ணிவிட முடியாது. உன்னி உள்நோக்குங்கால் தன்னகத்தே தனக்கு உயிருணர்வு நல்கிய நலத்தை-தான் தோன்றக் காரணமாயுள்ள முதற் பொருளை-உணர்ந்து அதன் கட்டற்ற வன்மையை அறிகின்றான்; உண்மையில் இறையும் மனிதனும் எப்போதும் இணை பிரியாத ஒன்று என்னும் அறிந்து கொள்கின்றான்.

“ தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமற் றானே கெடுகின்றான். ”

இம்மகத்தான உண்மையை உணராததால் மனிதன் வலியிழந்தவனாகின்றான். தன்னகத்தே மறைந்து கிடக்கும் எல்லாம் செயவல்ல சக்தி நுட்பத்தினது மகிமையை உணர்ந்தால், அதற்குள் நுழைந்து எல்லாம் செயவல்ல சக்தியாகப் பெருக இடமுண்டு என்று மகன் அறியவில்லை. வலியற்ற, ஒரு நிலையற்ற, வரம்புடைய தனது புறமனதையும் அதில் உதித்த சிறு எண்ணத்தின் வலியையுங் கொண்டு ஒரு காரியத்தைச் சாதித்து விடலாம் என்று மனப்பால் குடிக்கின்றான். தன்னகத்தே நோக்கினால் உண்மை வன்மையைப் பெறலாம் என்பதை அவன் நினைக்கவில்லை. தனக்குள் மறைந்து தூங்கும் தூய ஆன்ம சக்தியை உணர்ந்து அதைத் தட்டி எழுப்புங் காலம் வரை அவன் மிக எளியனாய், கால இட வரைக்குட்பட்டு, பிறப்பென்னும் திரைக்கடலில் அகப்பட்டு, துன்பமென்னும் அலைகளால் இங்குமங்கும் எற்றுண்டு, தீக்குணங்களாய மகர வாய்ப்பட்டு, ஒரு பற்றுக்கோடுமற்று அல்லற்படுகின்றான். நவநிதியங்களில் புரண்டு கொண்டிருந்தாலும் உள்ளுணர்விலானது வாழுள் வீணாகவும், அவனது தொழில்கள் யாவும் பயனற்றனவாயும் முடிந்து உணர்வு கெட்டு உலர்ந்து போகும்.

அகத்தே நோக்கி அங்கு மறைந்து தூங்கும் சக்திகளைத் தட்டி எழுப்பி அனுபவத்திற்குக் கொண்டு வந்த அளவில் மனிதன் உண்மையில் மனிதனாகி-நிறைவு, வல்லமை, சுகம், இன்பம், அறிவு ஆதியன நன்கு பெற்று உயிர் நலம் உடல் நலன் செறிந்து இனிதே வாழ்கின்றான். இந்நவ சக்தியை அடைய முயல்வதே மனிதன் தனது நோக்கமாகக் கொள்ளல் வேண்டும்.

தன்னகத்தே விளங்கும் தெய்விக சக்தியை ஒருவன் அறிந்து கொண்டபின் அவன் அடிக்கடி அகக் கண் கொண்டு உள் நோக்கி “வேண்டுவார் வேண்டுவதே ஈயும்” ஒன்றைக் கண்டு தான் வேண்டியவற்றைப் பெறுகின்றான். தனக்குற்ற பிணி களையவல்ல ஒரு பெரு மருந்து, இடர் போக்க வல்ல ஒரு வலி, சாலப் பெரிய காரியங்களைச் செய்து முடிக்க ஓர் ஆற்றல், உலகை வென்று சிறக்க ஒரு திறன், வாழ்வை நலனடையச் செய்யும் ஊக்கம், தனக்கு நன்மை பயக்கும் சமயங்களையும் நிலைமைகளையும் சமைந்துக் கொள்ளும் அறிவு இவையும் பிறவும் ஒருங்கே தன்னகத்தே மிளிர்தலைக் கண்டு பேராச்சரியமடைகின்றான்; புறமனதிற்குள்ளே இவ்வளவையும் அடக்கிக்கொண்டு மிகத் திறமையோடு கூடிய அரிய உள்ளம் ஒன்று இருப்பதாக அறிந்து திடுக்கிடுகின்றான். அக்கரிய வாளால் தனது இழிந்த பழக்கங்களாகிய வல்லரக்கர்களை வாட்டி விட்டு, தான் விரும்பியவற்றைத் திண்ணமாகப் பெறலாம் என்று அவன் அறிந்து கொள்கின்றான்.

இவ்வுள்ளத்தின் வன்மையானது எண்ணங்களாகவெளிப்படுகிறது. இவைகளே உள்ளத்தின் கருவிகளாகும். நாம் அறிந்த பலதிறச் சக்திகளைவிட மிகமிக வலிமை வாய்ந்தனவாக, இவ்வெண்ணங்கள் ஆகின்றன. உலகில் மனிதன் கையாடும் மின்சாரம் போன்ற பல்வேறு சக்திகளை இவ்வெண்ணங்களே ஆட்டி வைக்கின்றன. உள்ளத்தின் வன்மை இத்தகைமைத்து என்று மனிதன் அறிந்த அளவு, அவ்வுள்ளத்தினின்றும் எழும் எண்ணங்களின் வலிமையும் ஆகும். எண்ணங்களின் வன்மை ஏறிய அளவு நன்மைக்கோ தீமைக்கோ அவை தொழிலாற்றும் திறமையும் மிகும்.

இவ்வெண்ணங்களின் வன்மையால் மனிதன் தனது வாழ்வை ஆக்கவும் ஆக்கலாம்; அழிக்கவும் அழிக்கலாம். இவ்வெண்ணங்களின் ஆற்றலால்அவன் தனது உடலை அகமாகத் தாங்கினும் தாங்கலாம்; அல்லது பிணியால் வாட்டினும் வாட்டலாம். வாழ்க்கையின் ஒவ்வொரு துறையினும் வெற்றியும் அடையலாம்; அல்லது பாழையும் தொடரலாம். பெரிய பெரிய காரியங்களை முடித்து உயரலாம்; அல்லது சின்னஞ் சிறு தொழிலையும் செயலாற்றாது படுகுழியிலும் வீழலாம்.

உண்மை யறிய அவாவுடையவர்களுக்கு, உடல் உயிர் நலனை விரும்புவோர்கட்கு, நன்னிலை, உண்மையின்பம் பெற அவாவுடையவர்கட்கு, முதலில் அகக்கண் திறக்க வேண்டும். அகத்தே நோக்கி உண்மை வலிமையை அடைவதே, சக்தியுடன் ஒன்றுபடுவதே உலகில் வெற்றியடைய வழி. இவ்வழி மனிதனை மாறுபடா நிதிக் குவியல்களிலும் கனவிலும் கருதியிராத சக்திப்பெருக்கத்திலும்கொண்டு போகும் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

“ அகத்திற் கண்கொண்டு
பார்ப்பதே ஆனந்தம்.”



# திபேத்திய இராமாயணம்

[இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை திரு. சோமசுந்தர தேசிகர்]

## II

பின்னர் இராமனன் சுக்கிரீவனை ஒரு குறித்த இடத்திற்குச்சேனையோடு வரும்படிசொன்னான்; மூன்றாண்டு ஆகியும் குறித்த இடத்திற்கு அவன் வாராமையால் இராமனன் சுக்கிரீவனுக்கு வாலியினுடைய கதியைச் சுட்டி ஓரம்பிலெழுதி யனுப்பினான். உடனே சுக்கிரீவன் அஞ்சிச் சேனையோடு வந்து சேர்ந்தான்.

பக்லா, லிந்து, அனுமந்தன் என்ற மூன்று வலியுள்ள வானரர்களைச் சுக்கிரீவனழைத்துச் சீதையைத் தேடும்படி யனுப்பினான். இராமனன் அவர்களிடம் ஓலையும் கணையாழியும் கொடுத்தனுப்பினான். அவர்கள் பல நாள் தேடி யிளைத்துப் போனார்கள். அக்காலை இரண்டு அன்னங்கள் ஒரு மலைச் சாரலிலுள்ள குகையில் இறங்குவதைக் கண்டு அங்கு நீருண்டென ஊகித்தார்கள். அவர்களும் அவ்வன்னங்கள் சென்ற வழியேசென்று ஒருவரின் வாலை யொருவர் பற்றிக்கொண்டு அம்முழைவழியே யிறங்கினார்கள். அங்கொரு பெரிய மண்டபமிருந்தது. அது யாருடைய இடமென்று வினவியபோது, அது ஸ்ரீதேவியின் மகளான க்த்ஸெக்-ர்க்யில்-ஸ்கெக்-மோ (Gtseg-rggal-Sgeg-mo) என்ற மாயா தேவியினுறை யென்று அங்கிருந்தோர் கூறினர். அவளைக் கண்டவுடன் பணிந்து தாங்கள் வந்த காரியத்தைப்பற்றி வானரர் விண்ணப்பித்துக்கொண்டனர். மாயாதேவி அவர்கள் கண்ணை மூடிக் கொள்ளச் சொல்லிப்போகச்செய்தாள். அவர்கள் ஏதோ தாங்களறியாத ஒரு திசைக்குக் கொண்டுபோகப்படுவதாகக் கருதினார்கள்; ஆயினும் அவர்கள் ஒரு கடற்கரைப் பக்கம்கொண்டுபோகப்பட்டார்கள். அவ்விடத்தில் ஒருவரையொருவர் பார்த்தபோது கரியமலை யொன்று குறுக்கிட்டதுபோற் காணப்பட்டது. அதனை யுற்றுநோக்குகையில் அது அசையக் கண்டு அதனிடம் சென்றபோது, அது ஒரு கரும் பறவையென்

றும், அதன் சிறகுகள் சிதைக்கப்பட்டனவென்றும் அறிந்தார்கள். அப்பறவையை விசாரித்தபோது, அது கழுகாசனான அகஜயாவின் பிள்ளையென்றும், தன் பெயர் பதாவென்றும், தன் தம்பி பெயர் சம்பந்தாவென்றும், தங்களிருவருக்குள் யார் அரசனாவதென்ற கேள்வி பிறந்தபோது மேருமலையிருந்து வேகமாக எது பறந்து குறித்த இடத்திற்கு முன் செல்லுகின்றதோ அதுவே அரசனாவது என்று தீர்மானஞ் செய்து கொண்டனவென்றும், அவ்வாறே அவை பறந்து வருகையில் வழியில் சம்பந்தாவின் சிறகுகள் கதிரவன் கிரணங்களால் எரிந்துபோயினவென்றும், அதன் உதவிக்குத் தான் வந்தபோது தன் இறக்கைகளும் கரிந்து போனதால் அரசனாகாது கீழே கிடப்பதாகவும் கூறிற்று. சீதையைக் குறித்து வினவியபோது, அரக்கனொருவன் சீதையைத்தூக்கிச் சென்றபோது, புள்ளரசனாகவிருந்த தன் தகப்பன் இரமணனுக்கு உறவினனாகையால், அவர் தனது சிறகிலிருந்து இரு இறகுகளைவிட்டதாகவும், அவற்றின் கூர்மையைத் தாங்க முடியாது அவ்வரக்கன் களைத்துச்சீதையைக் கீழேவிட்டுவிட்டு, அவன் காய்ச்சின இருப்புண்டையொன்றைப் புள்ளரசன் முன் விட்டனனென்றும், அதனை யுணவென்றெண்ணித் தன் தகப்பன் பொறுக்கி விழுங்கவே உடல் வெந்து உயிர் விட்டானென்றும், பின்னர் அரக்கன் சீதையை யெடுத்துக் கொண்டு சென்றனனென்றும்கூறிற்று.

வானரர் யார் இலங்கை செல்வதெனத் தங்களுக்குள் ஆலோசனை புரிந்தனர். லிந்து, தன்னாற் கடலைக் கடக்க முடியாதென்றனன்; பக்ஸா, தான்போகக் கூடுமாயினும் திரும்பிவர இயலாதென்றனன்; தன்னைக் கேட்கும் வரைக் காத்திருந்த அனுமந்தன் உடனே ஓரேபாய்ச்சலாக இலங்கையை நோக்கிப் பாய்ந்து வாசலற்ற ஒன்பது மதிலுக்குள்ளிருந்த சீதையைக் கண்டு ஓலையையும் கணையாழியையும் கொடுத்தான். சீதை ஆனந்த பரவசத்தளாகி ஓலையை வாசித்தாள். அவள் அனுமந்தனை அமைதியாகவிருக்கவேண்டினாள். ஆனால் அவன் இராவணனது உய்யானவனத்திற்சென்று மரங்களைப்பிடுங்கித் தலை கீழாக நட்டு அழித்துவந்தான். அரக்கர், குரங்கைப் பிடிக்க வலை வீசினர். அனுமந்தன் சிந்த தேவர்களை வேண்டினபோது அவர்கள் அனுமனை வலையிற் செல்ல யோசனை கூறினர். அவன் வலையிலகப்படவே, அரக்கர் அவனைக் கொல்ல முயன்றனர். அதுகாலை அவன் தன் தகப்பனைக் கொன்றது போலத் தன்னையுங் கொல்லவேண்டினன். அரக்கர் அவ்வாறே சம்மதித்து அவனது வாலில் துணிகளைச் சுற்றி எண்ணெயை யூற்றிக் கொளுத்திவிட்டனர். அனுமன் வீடுகளிலும் மாளிகைகளிலும் குதித்தோடி ஊரையெரியூட்டி யழித்துச் சீதையிடம் வந்து திரும்பிப்போக விடைகேட்டான். அப்பொழுது அவள் ஓர் அணிகலனும் ஓலையும் கொடுத்தாள். அவற்றையெடுத்துவந்து இரமணனிடம் கொடுக்க அவன் அதிக சந்தோஷமடைந்தான்.

மக்களும் வானர சேனையும் ஒன்று கூடி இலங்கையை நோக்கிப் புறப்பட்டுச் சென்றன. வழியில் கடல் குறுக்கிட்டது. மகு, தமகியென்ற வானரர்களை யழைத்து ஒரு பாலம் கட்டக் கட்டளையிட்டனர். அவர்கள் மலைகளைப் பிடுங்கி யெறிந்து பாலங் கட்டினார்கள். கட்டும்போது அவ்விருதலைவருக்கும் சண்டையுண்டாயிற்று. அதனைக் கண்ட இரமணன் அவர்களைக் கண்டித்துச் சமாதானப்படுத்தினான். சேனை கடலைக் கடந்து இலங்காபுரத்தை அடைந்தது; போருக்கும் நாள் குறிப்பிட்டனர். மிக்க அறிவினையுடைய அமலகர்ணன் தமயனை இராவணனுக்குப் புத்திமதி கூறினான். தசக்கிரீவன் அதற்குச் செவி சாய்க்கவில்லை. ஆகவே, அமலகர்ணன் இரமணனிடம் சரண்புகுந்தான். முதலில் இரமணன் ஐயுற்றனன்; அமலகர்ணன் அவனுக்குத் தக்கமுறையிலெடுத்துக்காட்டவே இரமணன் அங்கீ



காரஞ் செய்பதான். அமலக்கர்ணன் இரமணனுக்கு மந்திரியானான்.

கும்-ர்ண (கும்பகர்ணன்) என்ற அரக்கன் தவங்கிடந்து சரசுவதியின் கோளால் தூங்கும் வரம் பெற்றான். தசக்கிரீவன் முதலாயினர் அவனை உறக்கத்தினின்றும் விழிக்கச் செய்ய, காய்ச்சின ஈயம் முதலியவற்றை அவனுடைய காது நாசி முதலிய உறுப்புக்களில் ஊற்றியும் அவன் எழுந்தபாடில்லை. பின்னர் மிக்க பாடுபட்டு அவனை யெழுப்பிப் போருக்கு அனுப்பினர். அவன் இரமணனைத் தவிர மற்றெல்லோரையும் விழுங்கிவிட்டு மறுபடியும் உறங்கச் சென்றுவிட்டான். அனுமான் அவன் கையிலகப்படவேயில்லை. கைலையங்கிரியிலே ஹ்ப்ரி - த (Hpri-ta) (அமிர்தம்) என்றொரு மூலிகையிருப்பதாகவும் அதனைக் கொணர்ந்தால் சேனைகளின் நோயை நீக்கிவிடலாமென்றும் அமலகர்ணன் சொன்னான். அனுமான் சென்று தேடியபோது அந்த மூலிகையைக் காணாமையால் மலையையே பிடுங்கி வைத்து விட்டு அதனைத் தேடியெடுத்துக்கொண்டு பழையபடி மலையையிருந்த விடத்தில் வைத்து விட்டு வந்து சேனையின் நோயைக் குணப்படுத்தினான்.

மறுமுறை போருக்கு நாள் குறிப்பிடப் பட்டது. தசக்கிரீவன் போர்முனைக்கு வந்து ஆகாயத்திற் பறந்த தனது சகோதரன் பிரிஸிலனை ஓரம்பாற் கொன்றான். இதனைக் கண்ணுற்ற இரமணன் ஆலோசனை செய்து தான் போரில் மடிந்தால் பின்னர் சீதாதேவி காப்பாற்றப் பட்டாலுங் கூட, துணையின்றி வருந்துவாளென்றெண்ணினான். இலக்சனனை முன்னணியில் நிறுத்தினான். இலக்சனன் இராவணன் விட்ட அம்புகளால் அடிபடவே, இரமணன் அதனைப் பொறுக்கமாட்டாமல் போருக்குச்சென்றான். தசக்கிரீவன் மாயத்தால் மறைந்து நின்று அநேக மக்களையும் வானரங்களையுங் கொன்றான். இரமணன் தசக்கிரீவனை விளித்து அவனது காற்பெரு விரலையாவது காட்டலாகாதாவென்று சொல்ல, அவன் தனது காற் கட்டைவிரலைக் காட்டியபோது, அதனைக் கொண்டு அவனது குதிரைமுகம் இருக்குமிடத்தை இலக்கு வைத்து எய்து தலையையறுத்தான். இராவணனது குதிரைத்தலை வானர சேனைக்கு மேற் பறந்தது. அதனைப் பார்த்து இரமணன் அது, இனியும் போர்புரிய வேண்டுமோ? இறக்கலாகாதாவென்று கூறித் தானும் ஆகாயத்திற் கிளம்பி அநேக அரக்கரைக்கொன்றான். இவ்விதமாக அரக்கர் சேனை அழியவே, இரமணன் சீதை சிறையிருந்த ஒன்பது கோட்டை மதில்களையும் அழித்துச் சீதையை வெளிப்படுத்தினான். பின்னர் மருந்தால் இலக்சனன் உயிரை மீட்டான்.

சுக்கிரீவன் தனது வானர சேனையோடு தனது நாட்டுக்குத் திரும்பினான். இரமணன் சம்புத் தீவுக்குச் சென்று விருந்தொன்று நடத்தினான். அங்கே சீதைக்குப் பிள்ளை பிறக்க அதற்கு லவனென்று பேரிட்டனர். அனுமந்தனை சுக்கிரவனுக்கு மந்திரியாக நியமித்தனர். அவர்கள் இரமணனையும் சீதையையும் இலக்சனனையும் அழைத்துப் பெரும் விருந்தொன்று நடத்தினர். அனுமனும் இரமணனும் பெரும் நட்பினராயினர். சுக்ரீவன் இறந்தபொழுது வானரர் அனுமனை அரசனாக்க, அவன் மறுத்தான்; பின்னர் வானரங்களின் வேண்டுகோட்கிணங்கி யொப்புக் கொண்டான்.

இரமணனுடைய குடிகளிலொருவனான பென்பாலனென்பவன் கலகஞ் செய்ய, இரமணன் தன் மனைவியையும் பிள்ளையையும் மலையத்திலுள்ள ஐநூறு இருடியர் புறமாக விட்டுத் தான் சேனையோடு கலகத்தை யடக்கச் சென்றான். அவன் குறித்த காலத்தில் வாராமையால் இராக்கினி கவலைப்பட்டுப்பிள்ளையைஇருடியர்பக்கலிருத்திவிட்டு அரசனைத் தேடிச்சென்றாள். பிள்ளையும் தாயின் பின்னே சென்றது. இதனை யறியாத இருடியர் இரமணன் வந்தால் கவலைப்படுவானென்று கருதி

குச (தர்ப்பை)ப் பில்லினால் ஒரு பிள்ளையை யுண்டாக்கி உயிர் கொடுத்தனர். இந்த பிள்ளை லவனினின்றும் வேறு பிரிக்கப்படாதபடி ஒத்திருந்தது. சீதை திரும்பி வந்தபோது லவனைப்போன்றிருக்கும் இந்தப் பிள்ளையைப் பார்த்தாள். அதன் பெயரைக் கேட்டபோது 'குச'னென்றனர். இரு பிள்ளைகளையும் சேர்த்து வளர்த்துவந்தாள்.

இராமன் பெண்பலனை யழித்து விட்டுத் திரும்பிவந்தான். ஒருநாள் இராமன் வெளியே சுற்றிக்கொண்டிருக்கும்போது ஒரு விச்சவி வண்ணானுக்கும் அவன் மனைவிக்கும் வாக்குவாதம் நடந்தது. அவன் மனைவியைப் பார்த்து, இந்த வேசை மற்றைப் பெண்களைப் போலல்ல. இவள் கணவனோடு இருப்பதுபோதாதென்று கருதி பரபுருடர்களோடும் உறங்குகின்றாளென்றான். அவள் 'பிற பெண்டிரைப்பற்றி நீ ஏதறிவை; இரமண அரசனது உத்தம மனைவி சீதாதேவியைப் பார். 1,00000 ஆண்டு அவள் அரக்கனான தசக்கிரீவனவசமிருந்து வந்தாள். அவ்வாறிருந்தும் அவள் அவனிடமிருந்து மீட்கப்பட்டு இப்பொழுது உத்தம மனைவியாக விளங்குகிறாள். ஆகவே, நீ பெண்டிரின் தன்மையை யறியாய்' என்றனள். இதனைக் கேட்டுவந்த இராமன் மனச்சஞ்சலங்கொண்டு எவ்வாற்றாலாயினும் பெண்டிர் ஆடவரினின்றும் வேறுபடுவது எவ்வாறு என்று அவளிடமிருந்து அறிய ஆவல்கொண்டான். அவளோடு ஒருவருமறியாதபடி மறைவில் சம்பாஷித்தபோது அவள் 'பெண்டிர் ஆசையென்னும் காற்றிலகப்பட்ட போது கண்ணிறைந்த ஆடவனையே சிந்தித்திருப்பாள்; அவள் பிறரால் காப்பாற்றப்படும் வரை குற்ற மொன்றும் நேராது; அங்ஙனமின்றித் தனித்த போது தன்னிச்சையை நிறைவேற்றுவாள்; பிறர் கண்டு கேட்கினும் அதற்கு வெட்கமுறாது இழுமாந்திருப்பாள்' என்றனள். இதனை யுண்மையென்று கருதி இரமணன் சீதையை யழைத்து அவள் இஷ்டப்படி செல்லலாமென்று கூறி வெளியேற்றினான். அவள் மக்களை யழைத்துக்கொண்டு காட்டுக்குச் சென்றாள். இரமணன் தனித்து அரண்மனையில் வாழ்ந்து வந்தான். ஒருகால் வானரனை இரமணன் விருந்துக்கு அழைத்தான். அனுமான் சீதை அவ்விட மிராததைக் கண்டு நடந்த வரலாற்றை யறிந்தான். அப்பொழுது தான் சீதையை இலங்கையிற் கண்ட நிலையைக் கூறினான். அதனை நம்பி இரமணன் தான்செய்த தவறைக் கூறிமன்னிக்கும்படி வேண்டிக்கொண்டு சீதையை அழைத்துக் கொண்டான். பின்னர் பெருவிருந்தொன்று நடந்தது. அனுமன் தனது நாடு திரும்பினான். இரமணன் மக்களோடு சுகமாக வாழ்ந்து வந்தான்.

மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப் பாய்ச்சி
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலி யிட்டுச் [த்
செம்மையுள் நிற்ப ராகில் சிவகதி விளையு மன்றே.

நடலை வாழ்வுகொண் டென்செய்திர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலின் நஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலி னார்கிடந் தூர்முனி பண்டமே.—அப்பர்.

# தாவீது மன்னரின் தனிக் கோள்

[திரு. T. R. சாரங்கபாணி, M. A.]

(தொடர்ச்சி)

"நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு...அவர்களை எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்களாக்கி விடுகிறார்"(34 : 17)

"நான் இளைஞனா யிருந்தேன். முதிர் வயதுள்ளவனு மானேன். ஆனால் நீதிமான் கைவிடப் பட்டதையும் அவன் சந்ததி அப்பத்திற் கிரைஞ்சி திரிகிறதையும் நான் காணவில்லை" (37 : 25)

மேலோதிய உரைகளான் இறைவன் தன் தொண்டர்களின் தொண்டனென்னும் பேருண்மை வெளியுறுகின்றது. தனக்குச் செய்த தீமையை மன்னித்திடும் இயல்பு வாய்ந்த இறைவன் தன் தொண்டர்கள் துயரந் தாள வியலாது, ஆ! ஆ!! எனக்கதறி அவர்களுக் குற்ற துயரை நீத்து, அவர்களுக்குத் தன்னருளைச் சுரந்து,

"கர்த்தராகிய நீர் நீதிமானை ஆசீர்வதித்துக் காருண்யம் என்னுங் கேடகத்தால் அவனைச் சூழ்ந்து கொள்ளுவீர்." (5 : 12)

என்னும் உரைக்கேற்ப, தன்னுடைய கேடகத்தால் அவனைத் துன்பமும் துயரமும் அணுகாதவாறு காத்திடும் இயல்பு வாய்ந்தவன் என்பதையும் விளக்கக் காட்டுகின்றார்.

துன்மார்க்கனுடைய இறுதி நரகமே யென முடிவுகட்டிக் கூறிய தாவீது நீதிமானின் இறுதியையுங்கூற மறந்தாரல்லை.

"நீ உத்தமனை நோக்கிச் செம்மையானவனைப் பார்த்திடு. அந்த மனுஷனுடைய முடிவு சமாதானம்" (37 : 37)

மரணத் திகில் மறைந் தொழிய, இறைவனருள் பெருக, இறைவன் நமக்குத் தோன்றாத் துணைவனாக இருக்கிறான் என்னும் நம்பிக்கைவளர, பேரின்பச் சுவை நுகர, நிலைத்த சமாதானம் நீதிமானின் வாழ்க்கையில்,—இறைவனால் "நிரப் படுத்"தப்பட்ட அவனுடைய வாழ்க்கையில்—மிளிரும் என்பது தேற்றம்.

"கர்த்தாவே யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்? யார் உம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுவான்? உத்தமனாய் நடந்து நீதியை நடப்பித்து, மனதார சத்தியத்தைப் பேசுகிறவன் தானே." (15 : 1-5)

"யார் கர்த்தருடைய பர்வதத்திலேறுவான்? யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்? கைகளில் சுத்த முள்ளவனும், இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து தன் ஆத்துமாவை மாயைக் கோப்புக் கொடாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே" (24 : 3-4)

என இவ்வுரைகளான் தாவீதுமன்னர், பக்தனின் - நீதிமானின் - இறுதியை விளக்குகின்றார். இவ்விரு வுரைகளையும் நாம் ஆழ்ந்து நோக்குழி, நீதிநெறி பற்றி உத்தம வழி நண்ணி, சத்யம் என்னும் கோலூன்றி, அகமும் புறமும் சுத்தமாக இருந்து, போலி வேடம் பூண்டு புறவேடந் தாங்கி அகத் தூய்மை யின்றித் திரியாது நிற்கின்றவனே ஆண்டவன் பேரருளைப் பெறுதற்குரியவன் என்னும் மெய்ம்மையும் இனிது போதருகின்றது. எனவே, அகப்புறத் தூய்மையுடன் சத்ய நெறியில்,உத்தம வழியில், இறைவன் மாட்டு மாறு இல்லா நம்பிக்கை யுடையவனே நீதிமானவன் என்னும் உண்மையும் விளங்குகின்றது. அத்தகைய நீதிமானே மெய்யடியான்; "கர்த்தாவின் கூடாரத்தில் தங்க" அருகனாவன்.

தாவீது மன்னரின் மெய்யறிவுறுத்துங் கீதங்களை ஆராயுங்கால், ஆண்டவ

னுக்கு நாம் அளித்தற்குரிய பலியைப் பற்றியும், அப்பலியின் இயல்பைப்பற்றியும், தாவீது ஓதியுள்ளதற் கேற்ப ஆய்ந் துணர்தல் அறிவுடைமையே யாகும்.

தாவீது மன்னரின் காலத்தில் போலி வேடதாரிகள் நிறைந்திருந்தார்களெனவும், மக்கள் கண்டதை இறைவனுக்குப் பலியாக அளித்தார்களெனவும், மதம் அகத்தூய்மையுடனும், நெறி விளக்கத்துடனும் அமைக்கப்படவில்லையெனவும், ஆராய்ச்சியான் கண்டறிகிறோம். எனவே, தம்முடைய காலத்தில் சமயம் என்ற பெயரால் இயற்றப்பட்ட தீமைகளைக் களைந்து, உண்மையை அறிவுறுத்தி, அறிவு புகட்டுவதையே தம்முடைய கடனாகக் கொண்ட தாவீது மன்னர், எந்நெறி நின்று, தாம் இறைவனருளைப் பெற்றாரோ அவ்வுண்மைகளை, தாம் பெற்ற இன்பம் பிறரும் பெற்றிட அனைவருக்குங் கீதங்கள் வாயிலாக எடுத்துக் காட்டியுள்ளார்.

ஆட்டையும் மாட்டையும் ஆண்டவனுக்கு மூடத்தனமாகப் பலியிட்ட அக்காலத்தில் - ஆண்டவனின் மெய்யியல்பை யோராது புறவேடங்களில் பற்றுமிருந்த அக்காலத்தில்,

"பலியை நீர் விரும்புகிறதில்லை" (51 : 16)

என வீரர்போலும் அஞ்சாது நாட்டின் பழக்க வழக்கங்களுக்கு முற்றும் முரணான உண்மையை உணர்த்திய மாண்பு தாவீது மன்னருக்கே உரியதெனக் கூறினும் முரணாகாது. எண்ணிறைந்த பொன்னைப் பெருமானுக்குக் காணிக்கையாகச் செலுத்திய அக்காலத்தில், அத்தகைய பலியையளித்தலான் பாவ நிவாரணமுண்டெனக் கண்மூடித்தனமாய் நம்பிய அக்காலத்தில்,

"பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பாமல் என் செவிகளைத் திறந்தீர். சர்வாங்க தகன பலியையும், பாவ நிவாரண பலியையும் நீர்கேட்கவில்லை" (40 : 6)

எனத் தீரமாய் உண்மையை அறிவுறுத்தியவர் தாவீது மன்னரே யாவர். இதே முறையில் மன்னருக்கு ஆயிரவாண்டுகளுக்கப்பால் தோன்றிய இரக்ஷகரும் "என் ஆண்டவன் உறையுங் கோயிலைக் கள்ளர் குகைகளாக மாற்றினீர்" எனக் கடிவதையும் நோக்குக.

இவ்வாறு அக்கால வழக்கத்திற்கேற்ப, அளிக்கப்படும் பலியை ஆண்டவர் வேண்டவுமில்லை; விரும்பவுமில்லையென முடிவு கட்டி உறுதி கூறிய தாவீது,

"தேவனுக் கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்" (51 : 17)

என அகத்தூய்மையையே வலியுறுத்துகின்றார். "ஒவ்வொரு இருதயத்தையும், தலைசாய்க்க இடமற்றயான், என்னுடைய உறையுளாக்கிடத் தட்டுகின்றேன். ஆனால் பெரும்பாலும் அவைகள் திறக்கப்படுவதில்லை" யென இயேசுபிரான் வருந்துவதும் இக்கருத்தையே வலியுறுத்துகின்றது. ஆண்டவன் வேண்டும் பலியாது? அகத்தூய்மை - அகத்தூய்மை - அகத்தூய்மையேயாகும். அத்தகைய தூய்மையிருந்த அகமே ஆண்டவன் உறையுங் கோயிலாகும். உலகிற்கு ஆதியாயிலங்குந் தனிமுதல்வன், ஆடுகளையும் மாடுகளையும் பொருளையும் வேண்டுகின்றார் இல்லை. பாவ வுணர்வாலும் தன்னருளாலும், தன்னை யுணர்ந்து பரிசுத்தமாகிய அகத்தையே அவர் வேண்டுகின்றார்.

அத்தகைய தூய அகமுடையான் ஆண்டவர் தன் மேல் காட்டிய அன்பை ஆண்டவரால் படைக்கப்பட்ட பொருள்களின் மேல் காட்டுகின்றான்; என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்னும் பேருண்மையை உணர்கின்றான். இவ்வுண்மையே,

"சிறுமைப்பட்டவன் மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்" (41 : 11) என்று தாவீது மன்னரை இயம்புமாறு தூண்டியது.



## இதழ் 5.

### முடிவுரை

இதுகாறும் அளித்த மருட்டத்திற் கிணங்க, தாவீது மன்னரின் கீதங்களையே அடிப்படையாகக் கொண்டு, தாவீது மன்னரின் கடவுளுணர்வையும், கடவுளியல்பையும், அவர் நமக் கறிவுறுத்திய அறவுரைகளையும் ஆய்ந்தறிந்தோம். இயன்றவரையில் ஆங்காங்குத் தாவீது மன்னரின் சமயக் கொள்கைகளையே இரக்ஷகரின் மெய்யுரைகள் வலியுறுத்துகின்றன எனவுங் கண்டோம்.

இனி, சென்ற சில மாதங்களாய் மாதமொரு கட்டுரையாக வரைந்தோதிய ஆராய்ச்சி யுண்மைகளை இறுதியுரையுள் சுருங்கக் கூறிமுடித்தல் சாலவும் நன்றாகும்.

மரணத்திகில் நம்மைத் தோன்றாத் துணைவ னொருவனை நாடுமாறு உந்துகின்றது; இறைவனிடத்தில் நம்பிக்கையுண்டாக்கின்றது; அத்தகைய நம்பிக்கை இறைவனை நமக்கருள்புரியுமாறு தூண்டுகின்றது; இறைவனருளால் மெய்யுணர்வை நாம் பெறுகின்றோம். அம் மெய்யுணர்வு பாவ வுணர்வாகி, புறவேடத்தை வாட்டி அகத் தூய்மையை நாட்டுகின்றது; அன்புருவாய் இலங்கும் இறைவனுக்கு நம்முடைய அகமே ஏற்ற பலியாகும்; அன்பு நெறியே இன்ப வாழ்வைக் கூட்டும்.

இதுகாறும் நாம் ஆராய்ந்ததிலிருந்து, தாவீது மன்னருக்குப் பக்கத் துணையாக விருந்து பேரின்பத்தை நல்கிய முறைகள் மேலோதிய மெய்யுரைகளில் பதிந்து கிடத்தல் தெற்றென விளங்குகின்றது. அஃதல்லான் தாவீதுமன்னர் மதப் பற்றுடையா ரல்லான் மதச் செருக்கு நிறைந்தவரல்லை யென்பதை ஒருவாறு குறித்திருக்கிறோம். அவர் பற்றிய சமயம் அன்பாயிலங்கும் ஆண்டவனுடைய சமயம். அவர் பற்றிய நெறி அன்பு நெறி. அவர் நாட்டிய வழி இன்ப வழியே யாம்.

தளராத சமயமெலாம் எந்தெய்வம் உந்தெய்வமென எதிர்வழக்கிடுந் தற்காலத்தில், தாவீது மன்னரின் கீதங்கள் சமய பேதங்களுக் கப்பால் தனித்தியங்கும் ஆண்டவனருளைப் பெற்றிடற்குரிய எளிய வழியை விளக்குகின்றன வென்பது தேற்றம்.

மதச் செருக்கொழிக, மத பேதம் அழிக, அன்பு நெறி ஓங்குக, இன்ப வாழ்வு செழிக்க, இறைவன் அருள் புரிக.

# க ம ல நா த ன்

[திரு. எஸ். ருத்ரபதி, B. A.]

I

அமிழ்தினுமினிய தமிழ்மொழிவழங்குந் தென்னாடாமிந் நன்னாடதனில் தமிழரசு நடாத்திவரும் புதுக்கோட்டையில் கமலநாதன் என்பான், அந்தணர் மரபில் சுமார் முப்பதாண்டுகட்கு முன்தோன்றினான். அவன் இளம் பருவத்தே பல கலைகளிற் பயின்று தேர்ச்சியுற்றான்; ஆங்கிலத்தில் பீ. ஏ. பட்டம் பீடுறப் பெற்றான்; நற்குணங்கள் எல்லாந் திரண்டோருருவெடுத்தாற் போன்றவன்; ஆடவர்க்குரிய இலக்கணம் ஒருங்கமையப் பெற்றவன். அவன் தன் இளமைப் பருவத்தைக் கல்வியிலேயேகழித்து வந்தானாதலால் அவன் தோழர்கள் அவனை "அருங்கலை வினோதன்" என்ற பெயரிட்டழைத்து வந்தார்கள். அவன் கல்வியிலேயே காலத்தை யெல்லாங் கழித்து வந்தமையால், கன்னியர் இன்பவாழ் வின்னதென் றறியாதிருந்தான்.

இங்ஙனமாகக் கமலநாதன் இருந்து வருநாளில், ஓரிரவு அவன் அயர்ந்து தூங்குங்கால் நீண்டதொரு கனவு கண்டெழுந்தான்; அக்கனவில் எழில் மிகுந்த ஒருகன்னி, தன்னெதிரே வார்துகில் சோர நின்றுரையாடக் கண்டான்; அக் கனவு கண்ட நாள் முதல் கன்னி எந்நாட்டாள் கொல்லோ, யார்மகள் கொல்லோ வென்று அறிதற் பொருட்டுப் பெரு முயற்சி கொண்டு தான் செல்லுமிடங்களிலெல்லாம் கன்னியர்களைக் காணநேரின் அவர்களை யுற்று நோக்கி வந்தான். இவ்வண்ணம் நாட்கள் பல கடந்தன. தான் கனவில் கண்ட கன்னியை அவன் கண்டா னில்லை. நாட்கள் கடந்து வாரங்களாயின.

ஒருநாள் மாலையில் ஓர் அழைப்பிதழ் கமலநாதனுக்கு வந்தது. புதுக்கோட்டைக்குச் சமீபமாகவுள்ள ஒருகிராமத்தில் நிலாச்சோற்று விழா அன்றிரவு நடைபெறுமென்றும், அதற்கு அவசியம் வருதல்வேண்டுமென்றும் எழுதப்பட்டிருந்ததைக் கமலநாதன் கண்டான். தன்னுடைய மனம் சற்று சஞ்சல மடைந்திருப்பதைப் போக்கிக்கொள்ள அது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்று கருதி அந்தக் கிராமத்தை நோக்கி அவன் புறப்பட்டான்.

அவ்வூரருகே யோடிக் கொண்டிருக்கும் வெள்ளாற்று மணற் பரப்பில் நிலாச் சோற்று விழாவைச் சிறப்புற நடத்தக் கல்வியறிவு நிறைந்த இளங் கன்னிமார்களும் காளையனைய வாலிபர்கள் பலரும் வந்து குழுமியிருந்தனர். கமலநாதனும் குறிப்பிட்ட நேரத்தே போய்ச் சேர்ந்தான். காலமோ வசந்த காலம். தூயவானில் முழுமதி தோன்றித் தன் அமுத கிரணங்களால் வந்திருந்தோர்க்கு இன்பமூட்டிற்று. 'மங்கல மங்கையராய் மன்னவர் கன்னியராய் திங்கள் நிறைந்து வருஞ் சேயிழையார்' நடைபோல் தென்றல் அசைந்து வந்து அங்குக் குழுமியுள்ளார்க்கு இன்னும் மிகுந்த களிப்பையூட்டியது. அங்கு வந்திருந்தோரில் பலருக்கு மணம் ஆகவில்லை. இவ்விரு பாலாரும் ஒருங்கே யுட்கார்ந்து கொண்டு அங்கே கொணரப்பெற்ற சித்திரான்னங்களைச் சில கன்னியர்கள் எடுத்துக்கொண்டு வழங்க, அனைவரும் உண்ணத் தொடங்கினர். அங்ஙனம் வழங்கி வருங்கால் கமலநாதன் அவர்களை மிகவும் உற்றுக் கவனித்துக் கொண்டே யிருந்தான். அவன் எண்ணம் சித்திரான்னங்களில் அல்ல; தன் கனவில் தோன்றிய கன்னி யார் என்பதை அறிவதிலேயே சென்றது.

அக்கூட்டத்தில் உள்ள மரகதவல்லி யென்பாள் கமலநாதனைப் போலவே சின்னாட்களுக்கு முன்பு ஓர் இளங்காளையைத் தன்கனவில் கண்டு 'அது முதல் அத்தகைய பேரழகுடைய ஆடவனைக் காண விரும்பியிருந்தாளாதலால், இருவரும் அங்கு ஊழ்வினை கூட்டிவைக்க ஒருவரை யொருவர் நன்றாகக் கவனித்தார்கள்; முன்னைத்தவினை குறுகினதால் அவர்கள் அளவிலாக் காதல் கொண்டவர்களாய்ப் பரவச மடைந்தார்கள்.

நிலாச்சோற்று விழாவில் சித்திரான்னங்கள் வழங்கின பின்னர் யாரேனும் ஒரு கன்னியோ அல்லது இளைஞனோ பாடும் வழக்கமுண்டு. அவ்வழக்கத்தை யொட்டி மரகதவல்லி யென்பாளைப் பாடுமாறு ஏனையர் வேண்டிக் கொண்டனர். அகப்பொருட் சுவை ததும்பக் கூடிய ஓர் அழகிய பாட்டை அவள் தனது இனிய குரலில் இசைத்துப் பாடினள். அவள் அழகில் ஈடுபட்டு நின்ற கமலநாதன், பைங்கிளியின் இனியகீதங் கேட்டு நெஞ்சுருகி நெடுமரம்போல் நின்றான். அங்கு வந்திருந்தோர்களில் பலர் தேசியப் பாட்டொன்று பாட வேண்டுமென்று வேண்டினர். மரகதவல்லி "காந்தியோ பரம ஏழை சந்நியாசி" என்னும் பாட்டைப் பாடி முடித்தாள். கதரைப் பற்றியொரு பாட்டுப்பாட வேண்டுமென்றனர். அங்ஙனமே அவளும் பாடினாள். ஆனால் அங்கு வந்திருந்தோரில் ஒருவரும் கதர் அணிந்தவரில்லை. மரகதவல்லியும் அயல் நாட்டுடை யுடுத்தி



யவளே. காதிற்கின்பமான பாட்டுக்களைக்கேட்க அவர்கள் விரும்பினார்களே தவிர அவைகளின்படி நடப்பதற்காக அப்பாட்டைக் கேட்கவில்லை. இத்தகைய வழக்கம் நமது நாட்டில் அநேகமாய் எல்லாஇடங்களிலும் காணப்படுகின்றது.

அங்கு வந்திருந்த மடவார்களும் ஆடவர்களும் ஆங்கிலப் பயிற்சிமிக்குடையவர்களாதலால், இருவரும் அளவளாவி சமத்துவம் பாராட்டிக் கைகுலுக்கிக் கொண்டு நீண்டநேரம் பேசிக் கொண்டிருந்தனர். ஆங்கில மாதர்க்கு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களும் இல்லையென்றே கூறலாம். தற்காலம் இந்நாட்டிலும் அவர்களைப் போல நடையுடை பாவனைகளைப் பின்பற்றுகின்றவர்கள் பெரும்பாலும் ஆங்கிலக் கல்வி பயின்றவர்களே யாதலால் இவ்விழாவிற்கு வந்திருந்தவர்கள் ஒருவரை யொருவர் கைகுலுக்கித் தனித்தனியேயிருந்து நீண்டநேரம் உரையாடினார்கள் என்று கூறுவதில் ஆச்சரியமில்லை. மரகதவல்லியும் கமலநாதனும் தங்கள் தங்கள் மனத்திருந்த காதலைத் தெரிவித்துக்கொண்டனர். பிரிந்தவர்கூடினால் பேசவும் வேண்டுமோ என்பதுபோலப் பழம்பிறப்பில் இருவரும் காதலன் காதலியா யிருந்திருப்பார்களோ வென்றையுறும் வண்ணம் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தனர். இன்றேல் கனவிடைத் தோன்றியிரார். இருவரும் நெடுநேரம்வரை பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனரே தவிர அவர்கள் தாங்க ளிருவரும் எக் குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பன முதலிய விபரங்களை யறிந்து கொள்ள மறந்துவிட்டார்கள், அதுதான் அன்பின் தன்மை.

அன்பு அதிகமானால், அது சாதி குலம் பிறப்பு எல்லாவற்றையுங் கடந்துநிற்கும். கடைசியாக விடைபெற்றுக்கொள்ளுங்கால் கமலநாதன் மரகதவல்லியைப் பார்த்து, "நீயார் மகள்" என்று கேட்டான். அதற்கவள், 'இராமசாமிப்பிள்ளையின் மகள்'' என்று பதிலிறுத்தாள். இச்சொல் கேட்டதும் இடியேறுண்ட நாகம்போல் அப்படியே மயங்கித் தரையில் வீழ்ந்தான். மரகதவல்லி திடுக்கிட்டு ஒன்றுந் தோன்றாதவளாய் அவனை வாரியெடுத்து மடிமீது வைத்துக்கொண்டு பக்கத்திருந்த கூஜாவில் உள்ள நீரையெடுத்து முகத்தில் தெளித்துத் தன் முன்தானையால் வீசினாள். கமலநாதன் சிறிது மயக்கந் தெளிந்தெழுந் துட்கார்ந்தான். மரகதவல்லி "என் அரும்பெறல் காதல! என்ன காரணம் இங்ஙனம் அடியற்றமரம் போல் தரைமீது சாய்ந்தனை! அதைக் கூறவேண்டு கின்றேன்" என்றாள். கமலநாதன் அதன்காரணத்தை யுரைப்பதற்குச் சற்றுத் தயங்கினான் எனினும் கூறவிடில் தன்காதலிமனம் நோகுமென் றஞ்சிக் கூறலுற்றான் :—

"பைங்கிளியே! ஊழ்வினை வயத்தால் நாம் ஒருவரையொருவர் நேரில் காணாத காலத்தே கனவிடைக் கண்டு காதல் கொண்டோம். அக்கனவு கண்ட நாள் முதல்நான் உன்னைத்தேடித்திரிந்தேன்; இன்றிரவுதான் கனவிடைத் தோன்றியவுன்னைக் காணும் பேறுபெற்றேன்; உறுதியாக வுன்னை மணம் புரிந்து கொள்ள முடியுமென் றெண்ணினேன். ஆனால் நீ இராமசாமிப்பிள்ளையின் மகள் என்று கூறுகின்றாயே! இதற்கென் செய்வேன்! அவர் என் தந்தையின் பகைவராயிற்றே! அத்துடன் அவர் வேளாண் மரபினராயிற்றே! கலப்பு மணத்திற் குடன்பட மாட்டாரே! உன்னை எனக்குக் கொடுக்கச் சம்மதியாரே! என் செய்வேன்! அதைக்கருதியே மயங்க முற்றேன்" என்று கூறலும், மரகதவல்லி "இன்புறு காதல! நீ அஞ்சற்க! எந்தை என்னை உன்னையன்றி வேறு யாருக்கேனும் மணம் புரிவிப்பதாய்க் கூறினும் உயிர்விட்டு விடுவேன்; உன்னையல்லாது வேறு யாரையும் மணம்புரிவ தில்லை யென்பது எனது உறுதி. அதற்கெனக் கவலவேண்டாம்'' என்று கூறித்தேற்றினாள். இரவுசுமார் 2மணியிருக்கும். யாவரும் தங்கள் தங்களிருப்பிடங்கட்குத் திரும்பிச் சென்றனர். விருந்தினராய்

வெளியூர்களிலிருந்து வந்தவர்கள் அவ்வூரிலுள்ள பொதுமன்றம் போய்ச் சேர்ந்தார்கள்.

பொதுமன்றம் அவ்வூரின் வடதிசைக்கண் அமைந்திருந்தது. அதன் எதிரில் வானளாவிய தென்னைகள் நிறைந்த அழகிய சோலையிருந்தது. வேனிற் காலமாதலால் இளந்தென்றல் வீசிக் கொண்டிருந்தது. தென்றற் காற்று வீசுதலும் பூர்ணசந்திரன் தன் குளிர்ந்த கிரணமாகிய கரங்களால் மிகுந்த மகிழ்ச்சி யூட்டலும் அவ்வேனிலுக்குரிய மன்மதன் தன் கணைதொடுக்க ஆரம்பித்தான். கமலநாதன் காதலி தன்னைக் கருத்தினில் நினைத்த வண்ணமாகவே அன்றிரவைக் கழித்தான். பொழுது புலர்ந்தது. கதிரவனும் பல்லாயிரக் கதிர்களைப் பரப்பிக் கொண்டு குணதிசைத் தோன்றினன். கமலநாதனும் ஏனையரும் தங்கள் ஊர்களுக்குச் சென்றனர்.

நள்ளிரவில் தன் உயிர்க்காதலனைப் பிரிந்த மரகதவல்லியும் "இன்னுயிர்க் காதலனை யினி யென்று காண்பேன்" என்ற ஏக்கத்துடன் தன் வீடு போய்ச் சேர்ந்தாள். ஏனைப் பெண்களும் தங்கள் இல்லங்களுக்குச் சென்றார்கள். மரகதவல்லி தன் காதலனை நினைந்த வண்ணமாகவே அன்றிரவைக் கழித்தாள்; மறுநாட் காலையில் படுக்கையைவிட்டு எழுந்தாள். தோழியர்கள் வந்து சூழ்ந்து கொண்டு தங்கள் தலைவியின் முகவேறுபாட்டிற்குக் காரணம் வினவினார்கள். மரகதவல்லி யொன்றுங் கூறாது வாளாவிருந்தாள்; ஆனால் தன் னுற்ற தோழியொருத்திக்கு மாத்திரம் உண்மையைக் கூறியிருந்தாள்.

சிலநாட்கள் இருவருக்கும் கடிதப் போக்கு வரத்து நடந்து வந்தது. ஒருநாள் கீழ்க் கண்டவாறு ஒருகடிதம் மரகத வல்லிக்கு எட்டிற்று.

**இளங் கரும்பே!**

நலம். யான் முன்னர் விடுத்த முடங்கலுக்கு நீ இதுகாறும் பதில் எழுதா திருந்தமைக்குப் பெரிதும் வருந்துகிறேன். சென்ற சின்னாட்களாக உன் மெய்த் திருமுகம் காணப்பெறுதலனே யெனினும் உன்னைத் திருமுகமாவது கண்டு களிக்கலாம் என்ற எண்ணத்தால் எழுதினேன். பதில் கடிதம் பெறும் பாக்கியம் பெற்றேனில்லை. ஆருயிர்க் காதலி! உன் பிரிவால் என் நெஞ்சம் நெருப்பிடை யிட்ட மெழுகென உருகுதே; ஒருநாள் கழிதல் ஓர்ஊழி கழிதல்போ லிருக்கிறதே. உன்னைப் பார்த்தாலும் கண் குளிரும்; நினைத்தாலும் மனங் குளிரும். உன்னைப் பிரிந்து உலகில் உயிர் வாழ்தல் முடியாத காரியமே. இன்றிரவு சுமார் 12 மணிக்கு உன் தோட்டத்தின் பின்புறத்தில் வந்து சந்திக்கிறேன். நீ அவசியம் வந்திருப்பா யென்று நினைக்கிறேன்.

இங்ஙனம்:

உன்னுயிர்க் காதலன்,

**கமலநாதன்.**

இக்கடிதத்தைப் பார்த்ததும் இன்னுயிர்க்காதலனைக் காணலாம் என்னு மாசையால் ஆனந்த சாகரத்தில் மரகதவல்லி மூழ்கினாள். அன்றையபொழுதைத் தோழியர்கள் கூட்டத்திலிருந்து கழித்து அவர்களுடன் அளாவளாவினாள் எனினும் அவள் சிந்தையெல்லாம் கமலநாதனைப் பற்றியே நின்றது. இப்பாவையின் நெஞ்சம் ஓராத தோழியர்களிற் சிலர், "என்ன ஒருநாளு மில்லாது நம் தலைவி இங்ஙனம் பெருமூச்சு விடுகிறாள். ஆழ்ந்த சிந்தையளாயிருக்கிறாள்" என்று தங்களுக்குள்ளே பேசிக் கொண்டனர். இங்ஙனம் தன் தோழியருடன் பகற்பொழுதைப்போக்கினாள் மரகதவல்லி. கதிரவன் குடகடல் வீழ்ந்தான். புன்மாலை யந்தியும் வந்துற்றது. அந்தக் காலத்தில் பிரிந்தவர்கள் துயருழத்தல் இயல்பன்றோ! மாரகதவல்லி நெஞ்சம் நெக்குருகி நெடுமாய்ச்சிறல் வீழ்ப்பாள்; சிறிது நேரத்திற்கு ஒருமுறை பெருமூச்சு விடுவாள். இரவு சுமார் 9 மணிக்கு இராப்போஜனம் ஆயிற்று. போஜனமான பிறகு யாவரும் சேர்ந்து சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தனர். பின்னர் அவர்கள் தங்கள் படுக்கையறை புகுந்து படுத்துறங்கினார்கள்.



மரகதவல்லி மாத்திரம் தன் படுக்கையறை சென்று இரவு சுமார் 11மணி வரை விழித்துக் கொண்டிருந்து விட்டு யாவரும் உறங்கியதும் தான்மாத்திரம் தனியே புறப்பட்டுத் தன் வீட்டின் பின்புறஞ் சென்று தன் கொல்லையில் தன் இன்னுயிர்க் காதலன் வரும்வழி மேல் விழிவைத்த வண்ணமே காத்துக் கொண்டிருந்தாள். ஒரு நிமிஷம் கழிவது ஒருயுகம்போ லிருந்தது. சரியாக 12 மணிக்குக் கொல்லைக்குள் ஒருருவந் தோன்றிற்று; நெருங்கி மரகதவல்லி நின்றதிசை நோக்கி வந்தது. சிறிது நேரத்திற் கெல்லாம் ஒருவரை யொருவர் உணர்ந்துகொண்டனர். உடனே மரகதவல்லி தன் காதலனை நோக்கி "ஏன் இவ்வளவு நேரம்" என்று கேட்டாள். கமலநாதன் தான் சரியாகத்தான் வந்ததாகக் கூறினான். காதலர்கள் பிரிந்திருக்குங்கால் நேரம் மிகவும் மெதுவாகச் செல்வது போல் தெரியும் ஆகையால் ஒருமணி நேரம் தனியே காத்துக் கொண்டிருந்தாளாதலால் அதிக நேரங் கழிந்து விட்டதுபோல் தோன்றிற்று. ஒருவரை யொருவர் கட்டித்தழுவிக் கொண்டு தங்கள் மணவாழ்க்கையைப் பற்றிச் சிந்தித்தார்கள். மரகதவல்லி பெருமூச்சு விடுத்து கண்ணில் நீர் பெருக்கினாள். கமலநாதன் காரணம் வினவ, மரகதவல்லி தன்னைத் தன் தந்தை வேறொருமணமகனுக்கு மணஞ் செய்து கொடுத்துவிட நிச்சயித்திருத்தலையும் அங்ஙனம் கொடுத்து விட்டால் உயிர் விட்டு விடுவதாகவும் புகன்றாள். இச் சொல் தன் செவியில் எறிவேல் பாய்ந்த புண்ணிலாம் பெரும் புழையில் கனல் நுழைந்தாலெனப் புகுந்தது. "இறைவன் திருவுள்ளம் எப்படியோ அப்படியே யெல்லாம் நடக்கும். அதற்கென வருந்த வேண்டாம்" என்று மரகதவல்லி தேறுதல் கூறச் சற்று ஆறுதல் உற்றான். அளவிலாக் காதல் கொண்டவர்களாதலால் நெடுநேரம் ஒருவரை யொருவர் பிரிய மனமிலராய் உரையாடியவண்ணம் நின்றார்கள். கமலநாதன் பின்னர் ஒருமுறை சந்திப்பதாகக் கூறி விட்டுச் சென்றான்.

மரகதவல்லி பெரு மூச்சுடன் தன் வீடுபோய்ச்சேர்ந்தாள். சுமார் 1 மணிக்கு அவள் தன் படுக்கையிற் சென்று ஒருவரும் அறியாதவாறு படுத்துக்கொண்டாளேனும் கண்ணுறக்கங் கொள்ளவில்லை. போது புலர்ந்தது. மரகதவல்லி ஆழ்ந்த சிந்தையளாய்த் தன் இல்லில் உள்ள நூல் நிலையத்தினின்றும் ஒரு நூலையெடுத்து வாசிப்பவள் போன்று தன் எண்ணமெல்லாம் இன்னுயிர்க் காதலன்பால் விடுத்து மரப்பாவைபோ லிருந்தாள்.

மரகதவல்லியின் தந்தை இராமசாமிப்பிள்ளை யென்பாரும் கல்வி கேள்விகளில் சிறந்தவரே. அவர் தம் பெறலரும் மகளை, தம் குலத்திடைத் தோன்றிய கந்தசாமி என்னும் மாணவனுக்குக் கொடுக்கத் தம்மனதுள்ளேயே நிச்சயித்திருந்தார். கந்தசாமி யென்பார் பீ. ஏ. வகுப்பில் படித்து வந்தார்; மிகவும்கூர்த்தமதியுடையார்; அந்த ஆண்டுப் பரீட்சைக்குப் போகவேண்டியவர். ஆதலால் அவரது தாய்தந்தையர் பரீட்சை முடிந்ததும் மணம்புரியலாமென்று நினைத்திருந்தனர். ஏனெனில் "விவாஹோ வித்யநாச" என்று முதுமொழி கூறுவதால் கல்வி பயின்று வரும் மாணவர்களுக்கு மணம் புரிந்தால் அவர்கள் மனம் கல்வியினின்றும் வேறுபட்டுக் கலவியில் சென்று வீணே கெட்டுவிடுகிறார்கள் என்பது கண்கூடு. அதனால் அந்தஆண்டுப் பரீட்சைகாலத்தை எதிர் பார்த்திருந்தார்கள். தவிர இராமசாமிப் பிள்ளைக்குத் தம் மகளை மற்றொரு குலத்தில் உதித்தவனுக்குக் கொடுப்ப தென்பது பொருந்த மற்ற விஷயமாகும். கமலநாதன் நாட்டுப் பற்று மொழிப்பற்று மிக்குடையவன். அடிக்கடி நாட்டின் விடுதலை கருதிச் சொற்பொழிவுகள் பல ஆற்றி யிருக்கின்றான்; பல கட்டுரைகளும் வரைந்துளான்.

உலகம் போற்றும் உத்தம அடிகளாகிய காந்தியடிகள் ஒத்துழையா

இயக்கம் ஆரம்பித்த காலத்தில் "அன்னிய நாட்டுத் துணி விலக்கு" என்னும் பொருள் பற்றிக் கமலநாதன் ஒரு பொதுக் கூட்டத்தில் மிக அழகாகப் பேசினான். அந்தச் சொற்பெருக்கில் தற்போதுள்ள ஆங்கில ஆட்சி முறையைப்பற்றித் தாக்கிப் பேசிய காரணத்தால் இவ்வரசாட்சியில் உட்பட்டிருக்கும் புதுக்கோட்டை யரசாங்கமுடனே கமலநாதனை நாட்டை விடுத்துச் செல்லக் கட்டளையிட்டது.

கமலநாதன் தனது நாட்டை விடுத்தேகும்படி பிறந்த கட்டளைக்கு மனம் வருந்தினானில்லை; தன் இன்னுயிர்க்காதலி மரகதவல்லியைப் பிரிவதைக் கருதியே மனம்நொந்தான். இச்செய்தி அவள் கேட்டால் ஒருகால் உயிர் விடினும் விடுவாளேயென்று நினைத்தான்; அங்ஙனே ஆலோசித்த வண்ணம் தரைமீது வீழ்ந்து கிடந்தான். ஒரு வண்ணம் ஆயாசம் நீங்கி எழுந்து நெஞ்சைத் திடப்படுத்திக் கொண்டு ஒரு முடங்கல் எழுதித் தன் தோழன் ஒருவன் மூலம் மரகதவல்லிக்கு அனுப்பினான்.

அன்றிரவெல்லாம் தன் பிறந்த நாட்டை விட்டுப் போவதால் தன் காதலி முதலானவரைப் பிரிய நேரிடும் என்பதைக் கருதி நெஞ்சம் புண்ணாகி உறக்கமின்றிப் படுக்கையில் கிடந்தான். பலப்பல எண்ணங்கள் தோன்றின. தற்கொலை செய்து கொள்ளலாமா வென்றும் நினைந்தான். ஆனால் அவன் தாயுமானார் முதலிய பெரியார்கள் பாடல்களும் பயின்றவனாதலால் "என்னரிய பிறவிதனில் மானுடப் பிறவிதான் யாதினும் அரிதரிது காண், இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ, ஏது வருமோ அறிகிலேன்" என்ற இவண் பாடல் நினைவுக்கு வந்தன. உடனே அந்த எண்ணத்தை அடியோடு விடுத்தான். அன்றிரவை இம்மாதிரி பல்வேறு எண்ணங்களை எண்ணிய வண்ணமே கழித்தான்.

மறுநாட் காலையில் கமலநாதன் தன் படுக்கையை விடுத்து வெளியில் வந்தான். வந்ததும் எதிரில் நின்ற போலீஸ் கமிஷனரையும் மோட்டாரையும் பார்த்தான். கமிஷனர் உடனே கமலநாதனை மோட்டாரில் ஏறச் சொன்னார். கமலநாதனும், 'கமலநாதன் விதித்த விதி' என்று ஒன்றும் கூறாது மோட்டாரில் ஏறினான். உடனே வாகனம் வடதிசை நோக்கி விரைந்து புறப்பட்டது. "என்றினி புதுவை காண்பன்: எப்பகல் மரகதவல்லி தன் திருமுகச் செவ்வி காண்பேன்" என்று நினைத்த வண்ணமாய்ச் சென்றான். புதுக்கோட்டையின் எல்லை வந்ததும் கமலநாதனை இறக்கி விட்டு அவர்கள் திரும்பினார்கள். அவ்விடத்துள்ள கந்தர்வ கோட்டை என்னும் ஊரில் அன்று முழுதும் கமலநாதன் தங்கியிருந்தான். தன் காதலியை அந்த ஊரில் வந்து சந்திக்குமாறு கடிதத்தில் அவன் எழுதியிருந்தான்.

இஃதிங்ஙனமாக, கமலநாதனைப் புதுக்கோட்டையை விடுத்தனுப்புஞ் செய்தி காட்டுத் தீ போல் எங்கும் பரவிற்று. மரகதவல்லி இச் செய்தியைக் கேட்டாள். இடியேறுண்ட நாகம் போல் படிமிசை வீழ்ந்து புரண்டாள். சற்று நேரத்திற் கெல்லாம் ஒரு சிறுவன் ஒரு கடிதத்தைக் கொணர்ந்து அவள் கையில் கொடுத்தான். அதை வாங்கிப் பிரித்துப் பார்த்தாள். அதில் பின் வருமாறு வரையப்பட்டிருந்தது:—

"இன்னுயிர்க் காதலியே! இறைவனருள் புரிவானாக! முன் செய்த தீவினைப் பயனால் யான் இன்று தேசப் பிரஷ்டஞ் செய்யப் பெற்றேன். என்னை நாளைக்காலையில் புதுக்கோட்டையினின்றும் சேர்த்துச் சென்று கந்தர்வ கோட்டையருகே யிறக்கி விட்டு விடுவார்கள் என்று நினைக்கின்றேன். ஏனெனின் அத்துடன் நாது சமஸ்தானத்தின் எல்லை முடிவடைகின்றது. இதைப்பற்றி நீ ஒரு சிறிதுங் கவலற்க. "பெறுதலும் இழத்தலும் இடையூ றுறுதலும் உறவுடைத் தெய்தலும் துக்கசுக முறுதலும் பெரியவை நீங்கலும் பிறத்தலும் சாதலும் கருவிற் பட்ட பொழுதே கலக்கும்" என்பதை நீ நன்குணர்ந்தா யாதலால் இதன் பொருட்டு ஒரு சிறிதும் வருந்த மாட்டாய் என்று நினைக்கின்றேன். நான் என்தாய்



தந்தையரைப் பிரிதலில் வருந்தவில்லை; ஏனெனின் என் இளஞ் சோதரர்கள் இவர்களைப் புரந்து வருவார்கள் என்பதறிவேன். புதுவையை விடுத்துப் போகின்றேனே என் பதிலும் வருத்தமில்லை. ஏனெனின் "யாதும் ஊரே" என்ற பெரியார் வாக்கிற் கிணங்க எங்கிருந்தாலும் கவலையில்லை. ஆனால் என் மனமுழுதுங் கொள்ளைகொண்ட உன்னைப் பிரிவதற்குத்தான் மனந் துடிக்கின்றது. ஆகையால் நீ எப்படியேனும் புறப்பட்டு வந்து கந்தர்வ கோட்டையில் சந்திப்பாயாக. ஏனையவற்றைப்பற்றி யாம் நேரில் பேசிக் கொள்வோம். இறைவன் திருவருளால் மீண்டுஞ் சந்திக்கலாமென்று நினைக்கிறேன்.

இங்ஙனம்:

காதலன்,

கமலநாதன்.

இதை வாசித்தாள். ஒன்றுந் தோன்றாது திகைத்தாள். பார்த்த விடமெல்லாம் பாழிடமாய்த் தோன்றிற்று. உலக வாழ்க்கையை வெறுத்து விடுவாள்போல் தோன்றிற்று. மயங்கிய வண்ணமாய்த் தரைமீது சாய்ந்தாள்.

# அ க மூ ரை

## ஊரடக்கம்

[கோல்ட் ஸ்மித் (Gold Smith) என்னும் ஆங்கிலப் புலவரின் கட்டுரையைத் தழுவி எழுதியது]

மணியும் இரண்டடித்தது; காவற்காரனும் உறக்கத்தில் நேரத்தையும் மறந்தொழிந்தான். அதிக துன்ப வாழ்க்கையினரும், இன்ப வாழ்க்கையினரும் இளைப்பாறிக்கொண் டிருக்கின்றனர். அத்தகைய அழகிய உறக்கத்தைத் தியானமும், குற்றமும், மனோ வியாதியும் அழிக்கின்றன. குடியனே தன் குடியைக் கெடுக்குங் குடியைப் பாத்திரத்தில் மீண்டும் நிரப்புகின்றான்; கள்ளனோ அந்நள்ளிருளில் தன் தொழிலை நாடிப் பதுங்கிப் பதுங்கி நடந்து செல்கின்றான். தற்கொலையெனும் பேய் தன் கரத்தையே தன் மெய்யுயிர் முடிக்க எழுப்புகின்றது.

பண்டை நூற்களை யோதியும், தற்காலப் பெரியார்களின் மெய்யுரைகளை யோர்ந்தும் இவ்வாறைக் கழியாது, சில மணி நேரங்களுக்கு முன்னர், தாண்டவமாடி மறைந்த உலக வாழ்க்கையின் இறுமாப்பு இலங்கிய வீதிகளின் வழியே தனியே உலவச் செல்வதே நன்றாகும்.

எத்தகைய அந்தகாரம் எங்ஙனுஞ் சூழ்ந்து நிற்கின்றது? அணையுந் தருணத்தில் இமைக்கும் விளக்கும், மெல்லிய மஞ்சள் ஒளியை வீசுகின்றது. பெரிய கடிகாரத்தின் ஓசையும், அவ்வப்பொழுது செவிபடும் நாயின் குரைவோசையு மல்லால், எங்கும் நிசப்தமே குடிகொண்டிருக்கின்றது. இத்தகைய நேரம் உலகின் இறுமாப்பின் நிலையாமையையே எடுத்தோதுகின்றது.

இதுபோழ்து சில மணி நேரம் இலங்குகின்ற அமைதியே சதா காலமும் உறையும் நாளும் வந்திடும்; அது காலை, இந்நகரமும் இது சமயம் இலங்கும் அதனுடைய மக்கள்போலும் மறைந்தொழியும். ஈண்டு ஓர் ஊருக்குப் பதிலாக மானிடர்வதியா ஒரு வனமுந் தோன்றும்.

இதைப்போலும் எத்தனை ஊர்கள் பெருமையுடன் உலகிடை ஒரு காலத்தில் உலவியுள்ளன? ஈட்டெடுப்பற்ற வெற்றிகளையும் அவைகள் தாங்கவில்லையா? ஒப்பிலா இன்ப வாழ்வை அவைகள் எய்திடவில்லையா? என்றும் இதே நிலையில் நிலைத்திருப்போமென்றும் அவைகள் மூடத்தனமாக நம்பவில்லையா? தற்காலம் அத்தகைய நல்லிடங்களுனுற் சில இருந்த இடத்தையும் அறி

வது கடினமாக இருக்கின்றதே! பண்டை விஷயங்களைக் கண்ணால் கண்டறியச் செல்லும் பாதசாரி அவைகளுடன் கூலமாக இலங்கும் சில நகரங்களின் மேல் வருத்தத்துடன் நடந்து செல்கின்றான். அவைகளை அவன் கண்ணுறுந்தோறும் அறிவாளியாகின்றான்: உலகிடையுள்ள பொருள்களின் நிலையாமையை உணர்கின்றான்.

“இதுகாலை புற்கள் நிறைந்திருக்கும் இடத்திலேயே அவர்களுடைய கோட்டை யிருந்தது; விடப் பூச்சிகளின் உறையுளாக இதுகாலை புலனாகும் இவ்விடத்திலேயே அவர்களுடைய பரிபாலனசபை இலங்கியது; அடையாளந் தெரியாது ஒரே கூலமாக விளங்கும் இப்பக்கத்திலேயே அவர்களுடைய ஆலயங்களுங் காட்சிச்சாலைகளும் இருந்தன. பேராசையும் வீண் செலவும் அவர்களைச் சிறுமைப்படுத்தின; அதன் பயனால் அன்னார் அழிந்தனர். முகஸ்துதி செய்பவர்களுக்கல்லால் உண்மையில் சமூகத்திற்கு உதவியாற்ற வல்லவர்களுக்கு அரசாங்கப் பரிசு அளிக்கப்படவில்லை. அவர்களுடைய செல்வமுஞ் செருக்கும் விரோதிகளைக் கொள்ளையடிக்குமாறு தூண்டின. முதலில் அவர்கள் தோல்வியடைந்தோடினும், இறுதியில் விடாமுயற்சியால் இந்நகரம் அழிக்கப்பட்டது” என்று அவன் கதறுகின்றான்.

சில மணி நேரங்களுக்கு முன்னர் திரள்திரளாக ஜனங்கள் நடமாடிய இப்பாதையில் இப்பொழுது எத்தனை பேர் நடமாடுகின்றனர்? இது காலை இங்குத் தோன்றுகின்றவர்கள் தங்களுடைய தினசரி வேடத்தை யணியவில்லை; தங்களுடைய வறுமையையுந் தாழ்மையையும் அவர்கள் மறைக்க முயலவில்லை.

வீதியோரங்களையே தங்களுடைய படுக்கையிடமாகவும், செல்வந்தர்களின் மாளிகையின் வாயில் படிகளையே, சிறிது நேரம், தங்களுடைய கொடிய வறுமைப் பிணியும் வியாகுலங்களும் மறைய அமைதியுடன் இருக்கும் இடமாகவுங் கொள்ளும் இவர்கள், யார்? இவர்கள் அந்நியர்கள்! நாடோடிகள்!! திக்கற்றவர்கள்!!! இவர்களுடைய நிலைமை மாற்ற வியலா நிலைமை; கருணையுந் தாங்க வியலாத் துயரங்களை இவர்கள் உடையவர்கள். இவர்களுடைய பரிதாப நிலை கருணையைவிட பயத்தையே பெரிதும் ஊட்டுகின்றது. இவர்களுட் சிலர் அரையிலணிய ஆடையுமின்றி அல்லலுறுகின்றனர்; மற்றவர்களோ கொடிய வியாதியால் பீடிக்கப்பட்டிருக்கின்றனர். உலகம் இவர்களை உதறித் தள்ளிவிட்டது; சமூகமும் இவர்களுடைய துயரங்களை மதியாது, நிர்வாணத்திற்கும் வியாதிகளுக்கும் இவர்களை ஒதுக்கிவிட்டது.

இவ்வேழை மக்களின் துயரங்களை யுணர்ந்து இவர்களுக்கு உதவியாற்ற இயலாதயான் உலகில் என் மனிதனாகப் பிறந்தேன்! நிற்க நிழலற்ற நண்பீர்! உலகம் உங்களுக்கு ஏசலையே உதவுகின்றது; உங்களுக்கு உதவியை ஆற்றவில்லை. பெரியோர்களின் சிறு கஷ்டங்களும், செல்வந்தர்களுடைய சிறு இடுக்கண்களும், அதிகமாகப் பேசப்பட்டும் உணர்த்தப்பட்டும் எங்களுடைய கருத்தையுங் கருணையையுங் கொள்ளை கொள்கின்றனவே! ஏழைமக்களுடைய கண்ணீர் பொருள் செய்யப்படவில்லையே! கொடுமை அவர்களை அழிக்கின்றதே! மற்றவர்களுக்கு உரிமையை வழங்கும் நியதியும் அவர்களுக்கு விரோதமாகத் தோன்றுகின்றதே.

இத்தகைய இளவுணர்டன் என் மனம் என் அமைக்கப்பட்டிருக்கின்றது? இன்றேல் என் மனதிற் கிசைந்தவாறு இப்பேதை மக்களுக்கு உதவியாற்றப் போதிய செல்வமும் எனக்கு வாய்க்கப் பெறுகதேன்? மற்றவர்களுடைய துயரங்களைக் கண்டும் அத்துயரங்களை யாற்ற முடியாத இளகிய நெஞ்சம், நம்முடைய உதவியை நாடுகின்றவர்களுடைய துயரத்தை விட அதிக துன்பத்தையே நமக்களிக்கின்றது.

“சா.”



# பிரம்மச்சரியமே புவிவாழ்வின் கால்கோள்

(பேரறிஞர் வாசுவானி அவர்கள் ‘பிரமச்சரிய’ மாசிகையில் பொறித்த ஆங்கிலக் கட்டுரையின் தமிழாக்கம்)

[திரு. கி. சுப்பிரமணியனார்]

பிரம்மச்சரியத்திற்கும் ஆத்மாவிற்கும் மிக நெருங்கிய தொடர்புளது. அதன் விளக்கம் ஈண்டுக் காண்க. இவை இரண்டின் கூட்டுறவினாலேயே, உடல் நலமும், மனோ நலமும் அமைவதாகும். தூய உடலினூடே மாபெரும் ஆன்ம சக்தி இடையறாது கசியும். ஒரு கோதுமைத் தானியம் உடலிற் புக்கதும் குருதியாக மாறிப் பின்னர், ஜீரிய சிந்தனையாகத் திகழ்வதை நோக்குவாயாக. அவ்வாறே புனிதயாக்கையும் ஒரு தெய்வீக சக்தியால் ஆன்மாவின் உறுப்பாய் மாறுகிறது.

உடலின் அகவனலை எழுப்புவது பிரமச்சரியமே. இதனை மேற்கொள்ளாத மனிதனால் யோக நெறியில் முன்னேற இயலாது. இவ்வகக் கனலை—இவ்வரிய ஆற்றலை—தன்னடக்கத்தினாலன்றி வெளிப்படுத்தல் முடியாததாகும். பிரமச்சரியமே மறவினைக்கு ஆணியடிக்கும் சிலுவை. இப்பலியீட்டிலேயே ஆன்மாவின் விடுதலை அடங்கியிருக்கிறது.

உணவு, பொருள், சுற்றுப்புறம், ஒளி, நிறம், ஒலி, உறையுள் ஆகிய இவை உடல் நலனைப் பெரிதும் பாதிப்பனவாம். இவற்றால், யாக்கையின் உறுப்புக்கள் யாவும் உரம் பெற்று நன்னிலையில் அமையக் காணலாம். இத்தகைய நல்லுடலையே கட்புலனுக்கு அரிதான ஆன்மா ஊர்தியாய்க் கொண்டுள்ளது.

நினது வீடு ஆடம்பர மற்றதாய், தூய்மை ஆனதாய், அழகுடன் பொலிவதாக.

நினதுஉணவு எளியதாயும் சாத்வீகமுடையதாயும் அமைவதாக.

நினது அவா சிறிதாயும் தன்னல மற்றதாயும் இருப்பதாக.

நினது நாட்டம் என்றும் தூய பிரார்த்தனையிலேயே பதிவதாக.

“நினைவு ஒன்று உடலிற் புகுந்திடுக. அதனைத் தாங்கள் உரிமையாக்கிடுக. அஃது ஆன்மாவின் சிறிய கோயிலாகத் திகழ்வதாக.”

பிரம்மச்சரிய நெறி, புதிய கல்விக்கும், வாழ்விற்கும் கால் கொள்வதாகும். புராதன இந்தியாவில் ஒவ்வொரு மாணவனும் பிரம்மச் சாரியாகவே திகழ்ந்தனன். அக்காலத்துக் கல்வித் தேர்ச்சி, தன்னறிவிலும், தன்னடக்கத்திலும், தன் மதிப்பிலுமே பொலிந்து விளங்கிற்று.

பண்டைக்காலத்து எளிய இயற்கை வாழ்வின் சிறப்பினை ஒவ்வொருவரும் படித்துணர்ந்து அதனைப் பின்பற்ற வேண்டுகிறேன். எளிய வாழ்க்கையிலேயே ஒரு சமூகத்தாரின் ஆற்றல் அமைந்துள்ளது; தூய்மையினால் அதன் நற்பண்பு விளங்கும்; தன்னடக்கத்தால் அதன் திறன் சிறந்தொளிர்வதாகும்.

நம் நாட்டிடைப் பரவியுள்ள கல்வியானது நீண்ட நாளாக நமக்கு உண்மை அறிவைப் போதிப்பதில்லை. கல்வி பயிலும் வாலிபருட் பலரும், பொருளீட்டும் முயற்சிகளில் வெற்றிபெற விழைகின்றார்களே ஒழிய, உண்மையில் வாழ்க்கை இன்பம் நுகர விரும்புகிறார்களில்லை. கல்வி அறிவிற் சிறந்த போராசிரியர் கெம்ருக் என்பார் குறித்தபடி ஒருவனது கல்வித் தேர்ச்சியைப் பொருட்டுறை பற்றி அளவிடுவது திமையையே விளைவிக்கும். நம் நாடு, எளிய வாழ்வை, தூய நெறியை, உயர்ந்த நோக்கம் படைத்த மக்களைப் பெரிதும் அவாவுகின்றது. இவர்களே ஒரு சமூகமாம் நிலையத்தை நிலைபெற நிறுவும் சிற்பிகளாவர். சன்மார்க்கம், ஆத்மீகம் என்னும் தளைகளைத் தகர்த்

தெறிந்து, யாண்டும் சுதந்திர தாகத்தால் மாறுதல் ஏற்பட்டுள்ள இந்நாளில் கல்விச் சீர்திருத்தத்திற்கும், சமூக நிர்மாணத்திற்கும், பிரம்மச்சரியமே சிறந்தமேதார் நற்றுறை என்பதை இது போது, தீவிரமாய்ப் பிரசாரம் செய்ய இயலாததாகும்.

ஆன்ம வளர்ச்சியிலும், பொது மக்களிடத்திலும், அளவு கடந்த பக்தி மீதுரப்பெற்ற, பிரமச்சாரிக ளிடத்தில் எனக்குத் தலை சிறந்த நம்பிக்கை உண்டு. சுதந்திரம் பெறும் இந்தியாவில் இளஞாயிறுகளாம் பிரம்மச்சாரிகள் யாண்டும் ஒளிர்வார்களாக. இதுவே எனது வேணவாவாகும். அந்நாள் அடுத்து வருவதாக. தற்கால நாகரிகம் சிற்றின்பங்களால் பெரிதும் கேடடைந்துள்ளது. இப்போலி நாகரிகமானது யாண்டும் பரவி, இந்தியாவிலும் பிரவேசித்துள்ளது. இப்போக நெறி, உயிர் போக்கும் மறலியாகும். இத்தீநெறியையா நம் தாய்நாட்டு வாலிபர்கள் விழைதல்வேண்டும்? ஒரு காலும் விரும்பவொண்ணுது. எனின், அவர்கள் விழையும் நெறி யாது? அதுவே சங்கங்கட்கும், சமூகத்திற்கும், போதிய சக்தியை - ஆற்றலை - வலிமையை - ஆண்மையை அளிக்கவல்ல தூய நன்னெறியாகும்.

# ஐ க் கி ய ம்

[நோன்பி]

"கடவுளுடன் ஒன்று படுதல்" (Oneness with God) என்னும் விஷயத்தைப்பற்றி Rev. லார்சன் எழுதியதில், கடவுளுடன் ஒன்று படுதல் என்பது நம் தகப்பனர் ஆகிய அவருடன் அவர் குழந்தைகளாகிய நாம் மனதில் ஒன்றும் ஒளியாமல் ஒழுகி அன்பினல் கட்டுப்பட்டிருத்தல் என்று குறிக்கிறர். ஆகவே, கிறிஸ்து மதப்படி ஜீவ பிரம ஐக்கியம் என்பது ஜீவன் கடவுளைத் துதித்து வணங்குவதுதான்.

புத்தர்கள் மனிதனுடைய முடிந்த நிலை நிர்வாணம் அடைவது என்பர்; அதாவது, மீண்டும் பிறப்பு வாராவண்ணம் நம் தூல சூக்குமஉடம்புகள் அழிவுறுதலே என்பர்; அவர்கள் ஜீவான்மா என்றும், பரமான்மா என்றும் இருப்பதாக எண்ணுவதில்லை. இந்துக்களில் வைணவர்களோ விஷ்ணு லோகத்தில் விஷ்ணு முன்பாக இருக்கும் நித்திய சூரிகள் நிலைதான் முடிந்த நிலை என்பர்; சைவசமயிகளில் சிவ சமத்துவ வாதிகள், ஆன்மா சிவனுக்கு சமானமாக எண் குணங்களை அடைவதே முடிந்த நிலை என்பர்; மாயா வாதிகளோ பொய்யான உடலையும் உலகையும் நாம் மெய் என்று எண்ணும்படி மாயை நம்மை மயக்குவதாக அறிவதே முடிந்த நிலை என்பர்; "ஒரும் வேதாந்தத்து உச்சியில் பழுத்த சைவ சித்தாந்தத் தேன் அமுது அருந்தினர்" தான் சீவன் சிவனுடன் ஐக்கியமாகும், அதாவது இரண்டறக் கலக்கும் என்பர். அவர்கள் கொள்கையைக் கீழே ஆராய்வாம்.

"காகமான துகோடி"—என்னும்பாட்டில் தாயுமானர் "ஏகமாய்நின்னேடிருக்கு நாள் எந்த நாள்" என்று கதறுகிறர். அவரே, "ஆணவத்தோடு அத்துவிதம் ஆனபடி மெய்ஞ்ஞானத் தாணுவினேடு அத்துவிதம் ஆகும்நாள் எந்நாளோ" என்றும் வருந்துகிறர். திருப்புகழில், "அறுகுநுனி பனிஅனைய....நீயும் நானுமாய் ஏகபோகமாய் இருகும் வகை பரமசுகம், அதனை அருள்" என்று அருணகிரியார் விண்ணப்பிக்கிறர். சிவஞான போதம் 10-வது சூத்திரம் "அவனே தானே ஆகிய அந்நெறி ஏகனுகி" என்று கூறுகிறது. ஆகவே, ஜீவன் கடவுளுடன் ஏகனுவது ஐக்ய நிலை என்று அறிகிறேம். அதைத்தான் தட்சணு மூர்த்தியின் சின்முத்திரை குறிக்கிறது; கடவுளைக் காட்டும் பெருவிரலும் சீவனைக் காட்டும் சுட்டுவிரலும் சேர்ந்து ஓர் உருண்டை உருவமாக இருக்கும்போது இரண்டும் வேறுக இருப்பதாகவும் சொல்ல முடியாமலும், இரண்டும் மீண்டும் பிரிக்க முடியாதபடி ஒன்றுய் விட்டது என்றும் சொல்லமுடியாமலும் இருப்பதால், இந்நிலை அத்துவிதநிலை (இரண்டு அற்ற நிலை) என்பர். அதனல் தான், சுவாமி மலை திருப்புகழ் "நாவேறு பாமணத்த பாதாரமே நினைத்து....நீ வேறெனுதிருக்க நான் வேறெனுதிருக்க நேராக வாழ்வதற்கு உன் அருள் கூர" என்று கூறுகிறது, சிவ வாக்கியரும் "அவனும் நானும் மெய்கலந்து அனுபவிக்கும் அளவிலே, அவனுமில்லை நானுமில்லை" என்கிறர். இராமலிங்க சுவாமிகள், "ஓங்கார அணைமீதே நான் இருந்த தருணம்....ஆங்காரம் ஒழி என்றர்....அப்போது அவர்தானே நான் அவரோ அறிந்திலன்........உறைந்த அனுபவம் தோழி நிறைந்த பரவெளியே" என்று கூறுகிறர். ஆகவே, பரவெளியில் நம் மனம் கலப்பதுதான் ஐக்கியநிலை. அந்த பரவெளியைத்தான் நாம் கடவுள் என்கிறேம். "பெருவெளியைத் தியானி" என்று பாம்பன் சுவாமிகள் தகராலய ரகசியத்தில் (175-வதுபக்கம்) கூறியிருப்பதும் நோக்கத் தக்கது. "வெட்ட வெளிப் பெரும்பாழில் வீற்றிருக்கும் பரம்பொருள் நீ" என்று சிவஞானவள்ளலார் கூறுகிறர். கிறிஸ்துவரோ அவர் சுவர்க்கத்தில் (Heaven) இருப்பார் என்பர். "வானத்தான் என்பார் என்க, மேல் தானத்தான் என்பார் என்க, என் இதயத்தான் என்பேன் யான்" என்று காரைக்கால் அம்மையார் "அற்புதத்திருவந்தாதி" யில் கூறுகிறர். கடவுள் அண்டத்தில் இருப்பது பொய், பிண்டத்தில் உள்ள இதய தகராலயத்தில் பிரணவ ஆகாரமான ஒளி ரூபமாக இருப்பதாக யோகிகள் அறிந்திருக்கிறர்கள்; அதனல்தான் திருவாசகத்தில் "உய்யஎன் உள்ளத்தில் ஓங்காரமாய் நின்ற மெய்யா" என்றும், பாம்பன் சுவாமிகள் செய்த குமார சுவாமியத்தில் "ஓங்காரக் காமர் மெய்யா" என்றும் கூறப்பட்டிருக்கின்றன. கடவுள்நம் முள்ளே 'நீவார தான்யத்தின் (காட்டு நெல்) நுனைபோல் நுண்ணிதும் பொன் போன்றதுமான ஒளி ஒன்றுண்டு; அவ்வொளி சிகை மத்தியில் பரமான்மா உளன்' (தகராலய ரகசியம் 105-வது பக்கம்); அணுவாய ஆன்மா இதயத்தே தங்கியிருக்கிறன் (தகராலய ரகசியம் 103, 150-வது பக்கம்). கடவுள் தன் தூல தேகமாகிய அண்டத்திலும் அகண்ட ஞானகாசம் ஆக இருக்கிறர். (பரிபூரணனந்த போதம் 18-வது பக்கம்) ஆகவே கடவுளைச் சேர்வதற்கு வழி "இதய நடுவில் சோதி மயலிங்கத்தைத் தியானிப்பது" என்று ஓர் ரிக் வேத உபநிஷத் கூறுகிறது (தகராலய ரகசியம் 215-ம் பக்கம்). இந்த லிங்கத்தைதான் சைவர்கள் தம் கோயில்களில் பிரதிட்டை செய்துள்ளார்கள். திருஅண்ணுமலை குறிப்பதும் இந்த லிங்க வடிவைத்தான். இப்படிக் கடவுள் சொரூபத் தன்மையை அறிபவர் அவருக்கு உருவம், அருஉருவம் இருப்பதாகச் சொல்லமாட்டார் (தகராலயரகசியம் 246-ம் பக்கம்). முத்தியில் ஜீவனைச் சேர்ந்திருந்த பாசம் ஆனந்த மயமாய் விடும் (பரிபூரணனந்தபோதம் 124-ம் பக்கம்). அப்போது ஜீவன் சிவனுடன் ஐக்கியமாவது என்னவென்றல், அது தன் அகங்காரம் ஆகிய கண்டிப்பு நீங்கி அருளில் அழுந்தி ஒன்று இரண்டு என இயையா(து) சுத்தாத்துவித சித்தியில் நிற்றல் (பரிபூரணனந்தபோதம் 139). அப்போது காந்தத்தில் ஊசி ஒன்றியிருப்பதுபோல், ஜீவன் சிவனைச் சேர்ந்திருப்பன்; அதனல்தான் "என் பெலாம்நெக்குருக....ஊசிகாந்தத்தினைக் கண்டு அணுகல் போலவே ஓர் உறவை உன்னி உன்னி" என்று தாயுமானர் கூறுகிறர். இது சீவன் முத்திநிலை. இதிலிருந்து முதிர்ந்து ஜீவன் பரமுத்தியை அடைந்து அருவ மனமும் நீங்

கும் நிலையில் ஏற்படும் ஐக்யம் நான்கு வகைப்படும்:—சிவபோக ஐக்யம் (பெற்முன் சாம்பான் அடைந்தது), சிவலிங்கஐக்யம் (அப்பர்அடைந்தது), ஞான ஆகாச ஐக்யம் (வாதவூரர் அடைந்தது) (தகாலய ரகசியம் 249-வது பக்கம்). இவ்வித ஐக்யங்களில் ஒன்றை அடைவதே மனிதப்பிறவியின் மேலான பயன் என்பதை உணர்ந்து "சேரக் கருதிசிந்தனையைத்திருந்தவைத்து சிந்திமின்" (திருவாசகம்-யாத்திரைப்பத்து) என்ற அருமை வாக்குக்கிணங்கநடந்து, முதலில் உருவமனம் நீங்கிச் சீவன் முத்திநிலையை அடைந்து, பிறகு அருவ மனமும் நீங்கும் பரமுத்தித் தலைப்படும் நிலையையும் அடைய நாம் திருவருளை இடையறாது உருகி நாடி அறிவாகி நிற்க முயன்று உய்வோமாக.

# சு ந் த ர சு லோ ச ன ா

[திரு. டி. ஆர். சாரங்கபாணி, எம். ஏ.]

(தொடர்ச்சி)

"ஐயா! மன்னிக்கவேண்டும். நீர் மாத்திரம் திருடுந்தொழிலைக் கைக்கொண்டால், இவ்வாறு மாறு வேடம் பூண்டிடின், எந்தத் துப்பறிபவனாலும் உம்மைக் கண்டறிதல் ஒல்லாது. நீர் எனக்குக் கற்பித்த முறையிலேயே யானும் மாறு வேடம் பூண்டுள்ளேன். எனினும், உம்மைப்போல் வேடங் கொள்ள என்னாலியலவில்லை."

"முருக! நீ என்ன வேடம் பூண்டாலும் நான் உன்னைக் கண்டுபிடித்து விடுகிறேன் என்று நீ சஞ்சலமடைகிறாய். வேடம் பூண்டிருப்பினும் அதனைக் கண்டறியும் ஆற்றலை இறைவன் எனக்கு வழங்கியுள்ளான். ஆனால், நீ வேடமணியின் ஒருவரும் உன்னைக் கண்டறிதல் இயலாது."

"ஐய! இல்லத்தில் நீர் வேடம் பூண்டு வந்து நின்றதும், நானே அசந்து போய் விட்டேனே. வேடத்திற் கேற்றவாறு முகத்தையும் நடையையும் குரலோசையையும் நீர் மாற்றிக் கொள்கிறீர்."

"முருக! எத்தனைக் காதங்கள் வந்துள்ளோம்."

"அறுபது காதங்கள். இன்னும் பதினைந்து நிமிடங்களில் மங்களபுரியை அணுகி விடுவோம்."

"சரி முருக! நான் சில விஷயங்களைப்பற்றி யோசிக்க வேண்டும். நீ வேகமாக வண்டியை யோட்டு. சரியாக ஆறு மணிக்கு நாம் மங்களபுரியிலிருக்க வேண்டும்."

"அப்படியே ஆகட்டும் ஐய!"

மீண்டும் நிர்சப்தமே எங்ஙனுஞ் சூழ்ந்தது. காரின் ஓடும் ஓசையல்லால் வேறோசை அவ்விருளைக்கலக்கிற்றில்லை. இருள் ஒழியுஞ் சமயமும் நெருங்கி விட்டது. ஜயகுமாரன் காரில் பித்தேறியவனைப் போலும் விழித்துக் கொண்டு ஏதோ யோசித்துக்கொண்டிருந்தான். சத்திய நாதன் மிகவும் வேகமாக வண்டியை ஓட்டினான்.

## இதழ் 4.

### காரிருளில் கரிய உருவம்

சிற்றறிவைப் பேரறிவினிடத்து நின்றும் மறைத்து நின்றிடும் அறியாமையைப் போலும் காரிருள் உலகைச் சூழ்ந்து நின்றது. அதுகாலை "உரிமையுறையு"ளுள் நிர்சப்தமே குடிகொண்டிருந்தது. சுமார் மணி பன்னிரண்டிருக்கும். கீழ்க்கட்டிலுள்ள ஓர் அறையின் கதவு மெதுவாகத் திறக்கப்பட்டது. ஒரு கரிய உருவம் அக் கதவின் வாயிலாக மெதுவாக எட்டி இருபுறமும் நோக்கியது. சில விநாடிகளுங் கழிந்தன. உடனே அவ்வுருவம் அவ்வறையை விட்டு வெளிப்போந்து அவ்வறையின் கதவைச் சிறிதும் சந்தடி செய்யாது தாளிட்டுவிட்டுத் தன்னறைக்கு எதிர்ப்புறமாகப் பூட்டப்பட்டிருந்த ஓர் அறையை மெதுவாக அணுகியது. அணுகியதும் சிறிது நேரம் தயங்கி நின்றது. அரவம் ஒன்றுங் கேளாமையால், தன்னுடைய இடையிலிருந்து ஓர் ஆயுதத்தை யெடுத்துச் சிறிது நேரம் அவ்வறையின் கதவைத் திறக்கமுயன்றது. ஹாலில் மாட்டப்பட்டிருந்த கடியாரத்தின், ஓசை யல்லால் எங்கும் நிர்சப்தமே குடிகொண்டிருந்தது. மணியும் "டிங் - டாங் - டங் - டாங்" எனப் பன்னிரண்டரையைக் குறித்தது. மணியரவங் கேட்டவுடன் நமது கரிய உருவம் சிறிது திகைத்து வாளா நின்றது. சில நிமிடங்கள் கழிந்ததும்—"கிளிக்" என்ற சிறு சப்தங் கேட்டது. மீண்டும் அக்கரிய உருவஞ் சிறிது தயங்கியது. அடுத்த நிமிடம் அவ்வறையின் கதவு மெதுவாகத் திறக்கப்பட்டது. கரிய உருவமும் அவ்வறையுள் நுழைந்தது. நுழைந்தவுடன் அவ்வறையின் கதவு மீண்டும் உட்புறந்தாளிடப்பட்டது. உடனே கரிய உருவின் கரத்திலங்கிய ஒரு சிறு மின்சார விளக்கின் ஒளி அறையுள் பாய்ந்தது. அவ்வறையின் சாளரங்கள் மூடி உட்புறந்தாளிடப்பட்டிருந்தன. அச்சாளரங்களுக்கருகில் ஒரு மேஜையும் அவ்வறையில் நான்கு அழகிய நாற்காலிகளும் இருந்தன. மேஜைக்கெதிரில் இரண்டு அழகிய அலமாரிகள் விளங்கின. ஒரு சிறு மின்சார விசிறியும் இரண்டு அழகிய மின்சார விளக்குகளும் மேற்றலத்தில் இலங்கின. இயற்கை விநோதங்களை எடுத்தோதும் அழகிய சித்திரங்கள் ஆங்காங்குப் பொலிந்தன. இவைகளையெல்லாங் குறிப்பாலுணர்ந்த கரியவுருவம் முதன் முதலில் மேஜையை அணுகியது. அணுகியதும் மேஜையின் அறைகளை ஒவ்வொன்றாகத் திறக்க முயன்றது. ஆனால், அவைகள் எல்லாம் பூட்டப்பட்டிருப்பது கண்டு, மறுபடியும் தன் கரத்திருந்த ஆயுதத் தால் அவ்வறைகளைத் திறந்து மின்சார விளக்கினொளியால் ஆராய்ந்தது. அவ்வறைகளுள் எண்ணிறந்த புத்தகங்கள் அணியணியாக வைக்கப்பட்டிருந்தன. நம்முடைய உருவம் சிறிதும் சலியாது ஒரு நாற்காலியை அருகில் போட்டமர்ந்து அவைகளை யெல்லாந் துருவித் துருவி ஆராய்ந்தது; இறுதி அறையையும் அணுகியது. அவ்வறையிலிருந்த கடிதங்களையெல்லாம் ஆராய்ந்து முடிந்ததும், அக்கரிய உருவம் சிறிது நேரம் ஆழ்ந்த சிந்தனையிலிருப்பது போலும் வாளா நின்றது. உடனே இறுதி அறையிலிருந்த கடிதங்களையெல்லாம் எடுத்து மேஜையின்மீது வைத்துவிட்டு மீண்டும் அம்மேஜை அறையுள் நோக்கியது. அறையுள் ஒரு பெரிய கடிதம் இடப்பட்டு அக்கடிதத்தின்மீதே மேலோதிய கடிதங்கள் வைக்கப்பட்டிருந்தன. அக்கடிதத்தைக் கண்டவுடன் நமது கரிய உருவம் அக்கடிதத்தையும் வெளியிலெடுத்தது. அப்பெரிய கடிதத்திற்கடியில் ஒரு சிறு உறையிருந்தது. அவ்வுறையை ஆவலுடன் நமது உருவம் வெளி யெடுத்துப் பிரித்து நோக்கியது. அதில் சில கடிதங்களிருந்தன. கரிய உருவத்தின் தலையும் ஆநந்தத்தால் ஆடியது. கைவிளக்கினொளியால் ஒரு கடிதத்தைப் பிரித்துப் பார்த்தது. அதில் பின் வருமாறு வரையப்பட்டிருந்தது:—

ஒ ச் வீ 2 பு டி உ ம் ட் 2 த சே தி.
"10"

மற்றொரு கடிதத்தையும் பிரிக்க, அதில்,

ன் யா ட கி வி பொ ல் ன் ன் யா ரு
வா வா றே தி ளு டு ச. "5"

எழுதப்பட்டிருப்பது கண்டு மீண்டுமொரு கடிதத்தைப் பிரிக்க, அதில்,

ன் து ரு றி ளி பொ றே கி ந் வ ன் ரு
ன் ச. "6"

எனவும், எஞ்சிய கடிதத்தில்,

சு மே மா அ ந் க ரு த ன ம மை ர ா
தி லா நீ க் ச உ க த்
ட வு தி னே ம ல் கீ த ள ழ் வ ன் க்
ற னே க வே ச் ண் ண் ச ட டா ங் வி ம்
ண்கசமும்.

ரியு 6 மைள் 0 யுசா உறைலே. "3" எனவும் வரையப் பட்டிருப்பது கண்டு அக் கடிதங்களை யெல்லாம் மடித்து உறையில் வைத்துத் தன்னுடைய சட்டைப் பையிலிட்டுக் கொண்டு, தான் திறந்த அறைகளை யெல்லாம் மீண்டும் பூட்டி விட்டு அறையை நீத்து வெளிப் போந்து அறையின் கதவையும் முன்போல் பூட்டித் தன்னறை அடைந்து உட்புறந் தாளிட்டு நமது கரிய உருவம், அறையின் சாளரங்களை யெல்லாம் மூடிவிட்டு அறையுள்ளிருந்த மின்சார விளக்கை விசை யமுத்தியேற்றியது. அவ்விளக் கொளியால் நமது கரிய உருவின் திருக்கோலம் இனிது விளங்கியது. உச்சி முதல் உள்ளங்கால் வரை கருநிறமே இலங்கியது. முகமும் கருவுறையால் மூடப்பட்டே கிடந்தது. கண்களுக் கெதிரில் இரு பெருந் துவாரங்கள் தோன்றின. விளக்கை யேற்றியதும் நமது கரிய உருவம் தன் உண்மை உருவைத் தன்னுடைய கரிய அங்கியைக் கழற்றி எறிந்து விளக்கியது. மதனகோபால் என்னும் பெயருடன், சந்திர சேகரப் பிரபுவின் பழைய நண்பராக "உரிமையுறையு"ளில் அன்று காலை வந்திறங்கிய ஜய குமாரனே அக் கரிய உருவமென அன்பர்கள் அறிவார்கள். மோகனசுந்தரம் திடீரென மறைந்ததும், வீரத்தின் சின்னங்களாக அளிக்கப்பட்ட வாளும் மாலையும் களவு போனதும், சந்திர சேகரப் பிரபுவின் வேண்டுகோளால் ஜயகுமாரன் மிதுன புரி போந்ததும் வாசகர்கள் மறந்திரார்கள். "மோகன சுந்தரனே திருடன்" எனச் சந்திர சேகரப் பிரபு எண்ண, உண்மையைக் கண்டறிய மாறு வேடம் பூண்டு அங்குப்போந்த ஜயகுமாரன் அன்றிரவே தன்னுடைய துப்பறி தொழிலைத் தொடங்கி விட்டான். தன்னைக் குறிப்பறியாக் கரிய உருவமாக மாற்றிய கரிய அங்கியை வீசியெறிந்ததும் ஜயகுமாரன் அறையிலிருந்து தான் எடுத்து வந்த கடிதங்களை மறுபடியும் நோக்கினான். முதன் முதலில் அவனுக்கொன்றும் விளங்கவில்லை. அதுகாறும் கள்ளனைப்போலுங் கள்ளவேடம்பூண்டு இரவிலாராய்ந்து இறுதியில் கண்டெடுத்த கடிதங்கள் தமிழெழுத்துகளில் எழுதப்பட்டிருப்பினும் அவைகள் இரகசியக் கடிதங்களேயா மென்னும் பேருண்மை அவனுக் கதுகாலை புலனாகியது. தன்னுடைய துப்பறிதொழிலின் முறையில் இத்தகைய இரகசியக் கடிதங்களைக் கண்டு உள்ளுறையை யோர்ந்து வெற்றியுடன் போந்த ஜயகுமாரன் இக்கடிதங்களைக் கரங்களில் தாங்கி ஆழ்ந்த யோசனையுடன் கடிதங்களை ஆராயலானான். சில நிமிடங்கள் கடந்ததும் ஒவ்வொரு கடிதத்திலும் இருகால்களுக் கிடையில் "10" "5" "6" "3" என்னும் எண்கள் பொலிவுறு கண்டான். ஒரு கால் அவ்வெண்கள் இரகசியக் கடிதத்தை வகுத்தறியும் வழியாக விருக்குமோ வென்றும் எண்ணினான். "10" என்பது பத்தாவது எழுத்தைக் குறிக்கும்போலும் என்றுன்னினான். முதல் கடிதத்தை முதலிலிருந்து பத்துப் பத்தெழுத்தாக எண்ணிவர, ஒரு கால் கடிதத்தின் இரகசியத்தையுணர நல்லுமோவென நினைந்தான். முதல் கடிதத்தின் எழுத்துக்களைப் பத்துப்பத்தாக எண்ணிவந்தான். அப்படி எண்ணி வந்த எழுத்துக்களை யெல்லாம் ஒரு கடிதத்தி லெழுதிய போது "2220 தம்புசெட்டிவீதி" எனும் உண்மை விளங்க, ஜயகுமாரனின் முகம் மலர்ந்தது. அடுத்த கடிதத்தை நோக்கினான். "5" என்னும் எழுத்தைக் கண்டவுடன அக்கடிதத்தில் வரையப் பட்டிருந்த எழுத்துக்களை யெல்லாம் ஐந்தைந்தாக எண்ணி வரைய "வியாதியால் வருந்துகின்றேன், பொருளுடன் வா ச" என்ற உண்மை யறிந்ததும் ஆநந்தக் கடலிலாட, ஜயகுமாரன் அதே முறையில் ஒவ்வொரு கடிதத்தையும், அவ்வக் கடிதத்தில் குறிக்கப்பட்டுள்ள எண்களின் உதவியால், இரண்டு இரகசியக் கடிதங்களை யோர்ந்து அவை முறையே "பொருளின்றி வருந்துகின்றேன்." எனவும், "அருமை மோகனசுந்தர! நீ உடனே கீழ்க்கண்ட விலாசத்தில் என்னைச் சந்திக்கவும்; தவற வேண்டாம். சண்முகம்,



60, உரிமையுறையுள் சாலை" எனவும் வரையப்பட்டிருப்பதைக்கண்டதும் ஜயகுமாரனுடைய முகம் மலர்ந்தது. உண்மையை உய்த்துணர ஏற்ற ஏதுக்கள் தனக்குக் கிடைத்தமையைக் கருதி மனமகிழ்ந்தான். இக்கடிதங்களை யோர்ந்ததும் மோகனசுந்தரம் திடீரென மறைந்த தன் காரணத்தை யுணர்ந்தானெனினும், அவன் உண்மையில் களவாடியிருப்பனோ வெனவும் சிறிதெண்ணினான். இனி அவனுடைய இருப்பிடத்தைக்கண்டறிதல்வேண்டுமெனவும், கள்ளனைக் கண்டதற்குரிய முறைகளை உடனே கையாளவேண்டுமெனவும் உன்னினான். கடிதங்களில் "சண்முகம்" என்ற பெயரை யறிந்ததும், சண்முகசுந்தரம், காந்தாவின் முதற் கண்மணியாகிய சண்முகம், சுமார் ஓராண்டிற்கு முன்னர், தூர்த்தருடன் சேர்ந்து தூர்த்தனாக மாறிய சண்முகசுந்தரம், சந்திரசேகரப் பிரபுவின் பல் வேறு முயற்சிகளாலும் காணற்கியலாத சண்முகசுந்தரம், உயிருட னிருக்கின்றானென ஜயகுமாரன் உணர்ந்ததும் புன் முறுவல் கொண்டான். கடிதங்களின் போக்கையும் மோகனசுந்தரத்தின் செயலையுங் கருதி ஜயகுமாரன், மோகனசுந்தரமாயினும், இன்றேல் சண்முகசுந்தரமாயினும், விலை மதித்தற்கரிய வாளையும் வைர மாலையையுங் களவாடியிருத்தல் வேண்டுமெனக் கருதினான். மணியும் இரண்டடித்தது. உடனே ஜயகுமாரன் அக்கடிதங்களை யெல்லாம் மடித்துத் தன்னுடைய மேஜையில் வைத்துப் பூட்டிவிட்டு, அறையுள் எரிந்து நின்ற விளக்கை அணைத்து விட்டு உறங்கச் சென்றான். எங்கணும் காரிருள் சூழ்ந்தது.

---

## காதல் அறியுமோ கட்டு

[திரு. B. C. லிங்கம்]

ஆயமொடும் திரியும் அகன்ற பூமி
அயல்மனை யில்லா அறல்மனைக் காடே
டாலே வனமதில் பாப்புறு மனையில்
காலை நேரம் கதிர்படு முகத்தோன்
ஓர்சிறை ஒதுங்கி ஒடுங்கா மனமொடு
காதலற் பிரிந்த கன்னிகை பொப்பச்
சீதமில் மனைவிற் சிற்சில பொறிப்போன்
"வாளென விதிர்க்கும் வளிவழங் காரிடைப்
பாழாய் எழுதுவோய்! பாய்களே! தானென"
என்றனை நோக்கி "என்கா தலியென"
உன்கா தலியின் ஓர்பெயர் தானும்
சென்மமுள் ளளவும் செருக்கின் றுயா
"அதைநீ அறிந்திலை" அம்மணி யாட்டியின்
உயர்வா யுள்ள ஒருபெயர் தானும்
நயப்புடைத் தான நால்மூன் பிறவியும்
பொறித்தே னெயினும் பொறுக்கும் தகையதோ
விருப்பிலா விருப்புடன் விளம்பிய காதலின்
வரம்பில் முறையினை வியந்திற் சென்றனன்.

[சுத்தானந்த பாரதியார்]

I

இவ்வுடல் ஓர் உலகம்; இது ஐம்பூத மாளிகை; நடமாடுங் கோயில். இதன் உள்ளத்தில் சிற்சபையும், உச்சியில் கைலையும் உள்விழிக்குத் தெரியும். உள்ளத்தில் தகராகாயம், சிதம்பரம் உள்ளது; அதில் அம்பலவாணன் இன்ப நடம் புரிகின்றான். இதில் மூலாதார சக்தி கனலுகின்றாள். உச்சித் தாமரையில் சிவசக்தி யொளிர்கின்றது. இதன் நாடிகளை மாசகற்றினால் என்றும் இளமையும், பொலிவும், ஆயுளும், வலிமையும் வளர்கின்றன. சூடு, ஒளி, காந்தம், மின்சாரம் எல்லாம் இவ்வுடலிலுள்ளன. இவ்வுடற் கோயிலின் வியன் காட்சிகளும் நுட்பங்களும் எண்ணிறந்தன.

## உ. ஐஞ்சுவர் மாளிகை

இக் கோயிலுக்கு ஐந்து மதிற்புறங்கள் உள்ளன. அதாவது நாம் உடலென்று கூறுவது ஊனுடல் மட்டுமன்று. உடலுக் குள்ளிட்டு ஐந்து உடல்கள் உள்ளன. (க) ஊனுடல் (உ) உயிருடல் (ங) நுண்ணுடல், மனோமய சரீரம் (ச) அறிவுடல் (ரு) இன்பவுடல். இவ்வைந்துஞ் சேர்ந்த வுடலையே கோயில் கொண்டு இறைவன் சக்தி, உயிருக்குயிராக எங்கும் உலவுகின்றாள். இறைவன் சக்தி (சிவசக்தி)யின் ஆடரங்கமே இவ்வுடல். உலகு அனைத்தும் சக்தி, அருள்; அருள் மயமாகவே இறைவன் எங்கும் பரவி அளவிலா விளையாட்டயருகின்றான். உணர்ந்தோ, உணரா மலோ ஒவ்வோருயிரும் இறைவனுடலாக இணைந்துள்ளது. இவ் விணைப்பின்றி எதற்கும் இருப்பில்லை; அனைத்தும் சிவசக்தியால், சிவசக்தியில் இயங்கும் உண்மையைக் காணவே நீண்ட காலமாக அறிவுநூல் (Science) ஆராய்ச்சிக் கோல்பிடித்து எங்கெங்கோ தட்டுத் தடுமாறிச் சென்றுகொண் டிருக்கிறது. இதுகாறும் உடற் கோயிலின் புற மதிலையே அது எட்டிப் பார்த்துள்ளது. மனத்தை உள்முகப் படுத்தி, யோகவிழியாற் காணும் உத்தமர்க்கே உடல் மாளிகையின் ஐம் புறங்களும் அதன் நடுவே சிவசத்திக் காட்சியும் புலனாகும்.

## ங. சரீர யோகம்

உடலறிவும்,உடலுறுதியும்ஒவ்வோர் ஆணும் பெண்ணும் எய்த வேண்டிய உரிமையும் கடனமயு மாகும். உடலை ஏற்ற முறையில் போற்றுதல் ஒரு யோகமாகும். இந்தச் சரீரத்தின் நுட்பத்தையே இக் கட்டுரையில் ஆராய்வாம். மூலாதாரமே உயிர்மாளிகையின் அடிப்படை. உடலுறுதி உயிரின்பந் தரும்; உடல் நலிவு உயிருக் கின்னலாகும். "காயம்பொய், காற்றுப்பை," என்று எவரும் இதைப் பேணாது விட்டுவிடக் கூடாது. அப்படித் தற்போத மிழந்து, உடலை முற்றும் மறந்த நிலை எளிதில் எல்லாருக்கும் எய்தாது. ஆதலின் பெரும்பாலோர் உடலைப் பேணி உறுதியாக்கவே விரும்புவர்; இதைப்பற்றி விரிவு வேண்டுவதில்லை. ஆதலின் இவ்வூனுடல் எப்படிக் கட்டப் பட்டுள்ள தென்று முதலில் ஆராய்வாம்.

## ச. ஊனுட லமைப்பு

ஊனுடல் பலகோடி கண்ணறைகளால் (Cells) அமைந்தது. ஒவ்வொரு கண்ணறையிலும் வெண் கரு போன்ற உயிர்த்துளி (Proto plasm) நிரம்பியுள்ளது. இவ்வுயிர்த்துளி 1/500'' அங்குலத்தினும் நுண்ணியது. இது கரிக் காற்று (Carbon dioxide), நீர்க்காற்று (Hydrogen), உயிர்க் காற்று (Oxygen), உப்புக் காற்று (Nitrogen) முதலியவற்றால் ஆனது. ஐம் பூதங்கள் சேர்ந்து உடல் உருவாகிறது; ஐம்பூதப் பிரிவால் உடல் குலைகிறது. எதுவும் அழிவதில்லை. ஒன்றிய பூதங்கள் பிரிந்து அதது அதனதன் இனத்தொடு கலக்கிறது. அழிவது வடிவு; வடிவு பொருளன்று.



எலும்பு, தசை, உணவுறுப்புகள் (Alimentary canal) குருதிக் குழாய்கள் (Blood vessels), காற்றுக் கருவிகள் (Respiratory organs), நரம்புக் கருவிகள் (Nerves) புலன்கள் (Senses) இவை உடலின் கூறுபாடாகும். இவையமைந்த ஒரு நீராவி யந்திரம்போன்றதுஉடல். இந்தயந்திரம் வேலைசெய்ய, நல்ல காற்று, நீர், உணவு, உட்புறத் தூய்மை வேண்டும். இந்த அற்புத யந்திரத்தின் கூறுகளைப் பகுத்துப் பகுத்து ஆராய்வாம்.

## ரு. எலும்புகள்

நம்முடலுக்கு வடிவைத் தருவது எலும்புகள். எலும்புகளில் சுண்ணம் (Calcium), ஒளிக்கட்டி (பாஸ்வரம், Phosphorous) ஆகிய மண்வகைப் பொருளும், ஒரு பசைப் பொருளும் (Geletine) உள்ளன. எலும்பில் 2/3 சுண்ணம். ஒரு மஞ்சளை எலும்பில் தடவினால் செந்நிறங் காட்டும். இது சுண்ணம் இருப்பதற்கு அறிகுறி. தலை, முண்டம், கைகால் என உடல் முப்பிரிவானது; இம் முப்பிரிவுகளிலும் 208 எலும்புகள் உள்ளன; பற்களைச் சேர்த்து 240. எலும்புகள் தசை நார்களால் (Ligaments) பிணைக்கப்பட்டுள்ளன. முதுகெலும்புத் தொடர்பே அனைத்திற்கும் ஆதாரம். பூச்சி, புழு, நத்தை முதலியவற்றிற்கு முதுகெலும்பில்லை. எலும்பின் வகை தொகை, விவரங்களை யறிக:—

எலும்பு வகை தொகை

| உறுப்பு | வகை | | தொகை |
|---|---|---|---|
| 1 தலை ... | மண்டை (Cranium) | ... | 8 |
| | முகம் (Facial) | ... | 14 |
| | பல் | ... | 32 |
| 2. முண்டம் ... | முதுகெலும்பு (Vertebral Column) | ... | 33 |
| | மார்பெலும்பு (Sternum) | ... | 1 |
| | விலாக்கூடு (Ribs) | ... | 24 |
| | தோள்பட்டை (Scapula) | ... | 2 |
| | இடுப்பு (Pelvis) | ... | 2 |
| | இருப்பிடத்தெலும்பு | ... | 2 |
| 3. கை ... | முண்டா எலும்பு (Humerus) | ... | 1 |
| | முழங்கையெலும்பு (Radius, Ulna) | ... | 2 |
| | மணிக்கட்டு | ... | 8 |
| | புறங்கை | ... | 5 |
| | விரல் எலும்பு | ... | 14 |
| மற்றொரு கை... | | | 30 |
| 4. கால் | தொடை யெலும்பு (Femer) | ... | 1 |
| | முழங்கால் | ... | 2 |
| | சிப்பி (Patella) | ... | 1 |
| | கால் மணிக்கட்டு | ... | 8 |
| | குதிக்கால் (Tarsals) | ... | 5 |
| | விரல்கள் | ... | 14 |
| 5. மற்றொரு கால்... | | | 31 |
| | ஆகமொத்தம் | ... | 240 |

### ௬. தசை (Muscle)

அசைவெல்லாம் தசை வலிவால். தசை, எலும்பின்மேல் மூடிக்கொண்டிருக்கிறது. உறுப்பின் உழைப்பிற்கேற்றபடியே தசையின் தடிப்பும் இயல்பில் அமைந்துள்ளது. (உதாரணம் கைகால்கள்). நமது உடலில் 555 தசைகள் உள்ளன. உடலில் 41% தசை. தசையில் 1/4 குருதி; 3/4 நீர்ப் பண்டம். கைகால் தசைபோன்றன நமக்கு உட்பட்டவை (Voluntary muscles). நெஞ்சு, ஈரல் இறைப்பைத் தசைகள் தாமாகவே வேலை செய்வன; இவை நமக்கு உட்படாத் தசைகள் (Involuntary muscles). தலையில் 82, கழுத்தில் 71, முண்டத்தில் 174, கைகளில் 112, கால்களில் 116 தசைகள் உள்ளன. தசை வலிவு உடற்பயிற்சியால் பெருகும்; தசை வலுக்கக் குருதி விரைந்து பாயும்; சூடுபிறக்கும். கருமான், உழவன்முதலிய உடலுழைப்பாளிகள் தசைகள் பிடிப் பிடியாக உருதியுற் றிருப்பதைக் காணுங்கள். தருநக்கு மினுக்குடன் பேனி வாடாமல் திரியும் நாகரிக உடல்கள் தொய்ந்தும் தொப்பையுமாகத் தொங்கித் தொள தொளவென் றிருப்பதைப் பாருங்கள். ஒழுக்கம், உழைப்பு, போதிய உணவு நல்ல உறக்கம், நல்ல சிந்தனை, தூய வாழ்வு இவையே உடலுறுதியும், தசை வலிவும் பயக்கும். கசரத்து, ஓட்டம், விறகு வெட்டல், ஏற்ற மிறைத்தல், நீச்சடித்தல், குஸ்தி, தோட்ட வேலை, பந்து விளையாட்டு, நடனங்கள் முதலியவை தசைவலிவு தருவன.

### ௭. தோல்

நமது தசையைக் கொழுப்பும், கொழுப்பைத் தொய்யலாகத் தோலும் மூடிக்கொண் டிருக்கின்றன. தோல் மூன்றடுக்குக ளுள்ளது. (1) அடித்தோல் (Dermis) இதுவே உண்மைத்தோல். (2) நிறத்தோல் (Basement membrane) இதுவே தோலுக்கு நிறஞ் சேர்ப்பது. (3) உரிதோல் (Epidermis). உடல் நலமுள்ளவன் தோல் வழுவழுப்பும், ஈரப் பசையுங் கொண்டு, பருசிரங் கற்றதாயிருக்கும். அடித்தோல் மயிர்வேர், நரம்பு, நாடி நாளங்கள் நிறைந்து அண்ணிய வலை போன்றது. சிறிது காயம்பட்டாலும் இதினின்று குருதி கசியும். இதில் வேர்வை யுருண்டைகளும் (Sweat glands), நிணவுருண்டைகளும் (fat glands) உள்ளன. இந்த நிண வுருண்டையினின்று ஒரு கொழுப்புப் பண்டம் தோலை வறண்டுபோகாது பசப்புறச் செய்கிறது. நிணவுருண்டையில் கொழுப்பு மிகுந்தால் மேலே பருக்கள் வெடிக்கும். அவற்றைப் பிதுக்கினால் கொழுப்பாணி வெளிவரும். தலை, காது, கன்னம் மூக்கு இவ்விடங்களில் நிண வுருண்டைகள் மிகுதி. தோலில் பல குழல்களுள்ளன. நாம் தடவிக்கொள்ளும்எண்ணெய் அதன்மூலமாகவே குருதியிற் கலக்கிறது. அடித் தோலிலுள்ள சிறுசிறு பைகளினின்று மயிர் உண்டாகிறது. நிறத்தோல் மிக மெலிதானது; அதன்மேல் பல நிறமான ஒரு பொருள் படிந்துள்ளது. இது அமெரிக்கருக்கு சிவப்பாகவும், ஐரோப்பியருக்கு வெண்மையாகவும், சீனருக்கு மஞ்சளாகவும், ஆப்பிரிக்கருக்குக் கருமையாகவும் இருப்பதால் அவர்கள் தோல் வருணமும் அதற்கேற்றபடியுள்ளது. சோற்றுக் கற்றாழைமேல் உரிக்கத் தக்க மெல்லிய காகிதத்தகடு போன்றது மேல்தோல். சிரங்குகள் ஆறிய பிறகு உரிவது மேல்தோல். இதில் நாடி நாளம், உணர்வு முதலியன இல்லை. இது அடித்தோலுக்குக் காவல். நரம்புகளாற் பின்னலா யிருப்பதால் தோல் குளிர் வெப்ப முணர்கிறது. குருதியினின்று வேர்வை முதலிய கழிவுகளை வெளியேற்றி, சிறிய மயிர்க்காலின் வழியே உயிர்க் காற்றை வாங்கி இரத்தத்திற் கலக்கச் செய்வதே தோலின் வேலை. ஆதலின் தோலைத் தூய்மையாகவும், காற்றோட்டமாகவும் வைத்துக்கொள்ளுதல் இன்றியமையாதது. வேர்வை செந்நீர்க்கழிவு. வேர்வை யுருண்டை ¼" நீளமுள்ளது. ஓர் அங்குலத்திற்கு 500 முதல் 1500வரை வேர்வைத் துளைகள் உள்ளன. உடல் முழுதும் 2500000 வேர்வை யுருண்டைகளுள்ளன. அதன் வேர்வைக் குழாய்களை நீட்டினால் சுமார் 10 மைல்களை எட்டும். வேர்வை கசியச் சூடு தணியும். இல்லையேல் மூத்திர கோளங்களுக்கு அதிக வேலை தரும். வெளிவந்த வேர்வை தூசி படர்ந்து உடலில் அழுக்குப் படிகிறது. இதை நன்றாகத் தேய்த்து நீராடி நாள்தோறும் தோலை மாசகற்ற வேண்டும். இல்லையேல் வேர்வைக் கண்கள் அடைபட்டு, சூடேறி, சொறி சிரங்குகள் வெடிக்கும். களிமண், பிர்க்கைப்பிற்றி, கடலைமா, நெய்க் கொட்டாங்காய், மஞ்சள், சண்பகப்பூ சேர்த்த தூள், தேங்காய்ப் பால், வில்வப்பழம், அரைத்த ஆவாரை இலை முதலியவை மிகவும் நல்ல (சோப்பினும் பன்மடங்கு உயர்ந்த) அழுக்கு நீக்கிகளாகும். தேங்காயெண்ணெய், காஸ்டிக் ஸோடா! (Caustic Soda), சோடா உப்பு, சுண்ணாம்புத் தண்ணீர் இவற்றைக் காய்ச்சிப் பாகு பதத்தில் மணங்கள் கூட்டி அச்சுகளில் வார்க்கப்பட்டதே சோப்பு. மிக உயர்ந்த சோப்புகள் கடலைப்பிண்ணாக்கு கலந்தவை. இரண்டு வேளை தேய்த்துக் குளித்தால், தோல் அழகுறும். பரு, சிரங்கு, இரத்தக் கட்டி, தேமல் எல்லாம் தோலை அழுக்குறுத்துவதால் வரும்பிணிகள்.



---

# இ டி யே று

### காங்கரஸ்

காங்கரஸைக் கல்கத்தாவில் கூட்டு தற்குப்பண்டித மாளவியர் உள்ளிட்டார் செய்த முயற்சி பாழ்படுமென்று நாம் எதிர்பார்க்கவில்லை. அரசாங்கத்தின் ஐயம் இன்னும் நீங்கவில்லைபோலும்! சட்டமறுப்பு இயக்கத்தின் செல்வாக்கு இன்னும் நாட்டில் உண்டு என்று அரசாங்கம் கருதுவது தவறு. சட்ட மறுப்பை வெறுப்போர் தொகை நாளுக்குநாள் பெருகி வருதலை அரசாங்கம் உணர்ந்து நடத்தல் முறைமை. கல்கத்தாவில் காங்கரஸ் நடைபெற அரசாங்கம் இணங்குமாயின், அதன் கண் சட்ட மறுப்பு நிறுத்தத் தீர்மானம் நிறைவேறு மென்பதில் சிறிதும் ஐயமில்லை. லார்ட் லிட்டன் கூறியவாறு சட்ட மறுப்பில் மக்களிடை ஒருவித சோர்வு ஏற்பட்டிருத்தல் உண்மை. அவ்வுண்மையை வெளியிடச் சிலர் அஞ்சுகிறார். காந்தியடிகள் இப்பொழுது விடுதலை அடைந்தாலும், சட்ட மறுப்பில் தலைப்படார் என்பதற்குப் பல அறிகுறிகள் தோன்றியுள்ளன. அவைகளை அரசாங்கத்தார் கவனிக்கவே வருவார் என்று நம்புகிறோம். உள்ள நிலையை அரசாங்கத்தார் நன்கு உணர்ந்து கல்கத்தா காங்கரஸ் நடைபெற இடந் தருவது நலம். காங்கரஸ் ஒத்துழையாமையை விடுத்து ஒத்துழைப்பில் தலைப்படுமென்பது உறுதி.

### தலைவர்கள் கடமை

காங்கரஸ் தலைவர்களில் சிலர் சிறைக்கோட்டத்திலிருக்கிறார்; சிலர் வெளியிலிருக்கிறார். வெளியிலுள்ள தலைவர்கள் நெஞ்சம் ஒத்துழைப்பு வழியே நடந்து கொண்டிருக்கிறது. அவர்கள் தங்கள் கருத்தை அந்தரங்க சம்பாஷணையில் வெளியிட்டே வருகிறார்கள். அந்தரங்கமாக வெளியிடுங் கருத்துக்களைப் பகிரங்கமாக வெளியிடுவதால் என்ன முழுகிப் போய்விடும்? தற்போது நாடு சட்ட மறுப்புக்குச் சித்தமாயில்லை என்பது வெள்ளிடைமலை. நாட்டின் வழி நிற்கவேண்டுவது தலைவர்கள் கடமை. தலைவர்கள் தங்கள் ஒத்துழைப்பு நாட்டத்தைப் பகிரங்கமாக வெளியிட்டால் அரசாங்கம் காங்கரஸ் நடைபெற இடந் தருமென்று நம்புகிறோம்.

### வெள்ளைக் காகிதம்

வெள்ளைக் காகிதம் வெளி வந்துவிட்டது. அதைப்பற்றி அறிஞர்கள்

கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்கள். கவர்னர் ஜெனரலுக்கும் கவர்னர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் ஜன நாயக முறைக்குத் துணை செய்வன அல்ல என்றும், பாதுகாப்புகள் ஏராளமாக அமைக்கப்பட்டிருக்கின்றன என்றும் எங்கணும் பேசப்படுகின்றன. வெள்ளைக் காகிதம் வெளி வந்த பின்னைப் பேசுவதால் என்ன பயன்? அக்காகிதம் வெளி வருதற்கு முன்னரே ஒற்றுமைக் குறிகளைத் தேசத்தார் காட்டியிருத்தல்வேண்டும். வகுப்புப் போர்களும், தலைவர் போர்களும், பொறுப்பற்ற செயல்களும், பிறவும் நடமாடும் தேசம் இந்தியா என்பதைப் பிரிட்டிஷ் இராஜதந்திரிகள் நன்கு உணர்ந்து நடக்கிறார்கள். தேசத்தில் வகுப்பு வாதம் உள்ளவரை ஜன நாயகம் தாண்டவம் புரிதல் அரிது. பல நிறக் குறைகளுடன் வெள்ளைக் காகிதம் வெளிவந்துள்ள இந்த நேரத்திலாதல் வகுப்புவாதம் ஒடுங்குகிறதா என்பது கவனிக்கத்தக்கது. வகுப்புவாதம் உள்ளவரை பொறுப்பாட்சி பெறுதல் அருமை என்பதை உணர்ந்து தேசத்தார் இனி யாதல் நடப்பாராக.

## "சுந்தர காந்தம்"

இப்பெயர்வாய்ந்த நூலொன்று நமது பார்வைக்கு வந்தது. இதுவொரு பெண் மணியால் எழுதப் பெற்றதைக்குறித்து மகிழ் வெய்துகிறோம். பெண்மணிகளால் எழுதப் பெறும் நூல்கள் பல நாட்டிடைப் பெருகுதல் வேண்டும். 'சுந்தர காந்த'த்தின் கதைப் போக்கு நன்று யிருக்கிறது. சம்பாஷணைகள் நன் முறையில் அமைந்திருக்கின்றன. மக்கள் இயல்புகள் சில விடங்களில் இயற்கையாகவே உருப் பெற்றிருக்கின்றன. காதல், வெற்றியுடன் முடிந்திருப்பது போற்றற்குரியது. நூல் எளிய நடையில் எழுதப் பட்டிருக்கிறது. தாய் மொழிப் பற்று மேலிட்டான் இந்நூலை எழுதி உபகரித்த ஸ்ரீமதி ஞா. ப. சதானந்தம் அம்மாள் அவர்கட்கு நமது நன்றி உரியதாக. விலை: ரூபா. 1-8-0. விலாசம்: ஞா. ப. சதானந்தம் அம்மாள், காட்டிலாக்கா ரேஞ்சாபிசர் பங்களா, கிருஷ்ணகிரி, சேலம் ஜில்லா.

## ஜெர்மெனி நிலை

ஜெர்மெனியில் தோன்றிய கலைகளும், தொழில் முறைகளும், வேறு அதிசயங்களும் உலகத்துக்குப் பயன் பட்டு வந்தன. அத்தகைய ஜெர்மெனி ஐரோப்பாப் போருக்குப் பின்னைத் தன் னிலையி னின்றும் குலையலாயிற்று. ஐரோப்பாப் போருக்கு முன்னே ஜெர்மெனி முடியரசைப் பெற்றிருந்தது. அப்போருக்குப் பின்னே அது குடியரசை ஏற்றது. இப்பொழுது ஜெர்மெனி உள்நாட்டுக் குழப்பங்கட்கு இரையாகி வருதல் கண்கூடு. ஹெர் ஹெட்லர் என்பவர் பிரதம மந்திரியாக அமர்ந்து சர்வாதிகாரஞ் செலுத்தி வருகிறார். பொது வுடைமைக் கட்சிக்காரர்கள் ஜெர்மெனியில் வேட்டையாடப் படுகிறார்கள் என்று சுருங்கச் சொல்லலாம். பொது உடைமைக் கூட்டத்தாரிடைச் சில நலங்க ளிருப்பினும் பல தீங்குக ளுண்டு. அவர்கள் கடவு ளுண்மையை மறுக்கிறார்கள்; மூர்க்கத்தில் உறைந்து நிற்கிறார்கள்; கருத்து வேற்றுமை யுடையவர்களைச் சுட்டுக் கொல்கிறார்கள். இக்கொடுஞ் செயல்களைப் பொது உடைமைக் கூட்டத்தார் முற்றுந் தொலைத்தாலன்றி அவர்கள் முன்னேற்றம் அடைதல் அரிது. பொது வுடைமைக்காரர்கள் ஜெர்மெனி பார்லிமெண்டைக் கொளுத்தியதன் பயனை இப்பொழுது அனுபவித்து வருகிறார்கள். மூர்க்கத்தில் உறுதியுடைய கூட்டத்தாரை அடக்க ஹெர் ஹெட்டலரும் அவரைச் சேர்ந்தாரும் மூர்க்கத்தையே கையாள்கிறார். அது தவறு. "கொலைகொலையையே பெருக்கும்; அன்பு அன்பையே பெருக்கும்" என்பதை உணர்ந்து ஹெர்ஹெட்லர் அன்பு வழியில் நடந்து ஜெர்மெனியின் பண்டைப் பெருமையைக் காப்பாராக.

112252

"நவசக்தி" ஆசிரியர்

திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

# இயற்றிய நூல்கள்

தமிழ் மணம் வேண்டுமா, விடுதலை வேண்டுமா,
பெண் ணுரிமை வேண்டுமா,
தீண்டாமை யொழிதல் வேண்டுமா,
சமரசம் வேண்டுமா, சன்மார்க்கம் வேண்டுமா,
இயற்கை யின்பம் வேண்டுமா,
வீரச்சுவை ததும்பப் பேசவும் எழுதவும் வேண்டுமா?

## வேண்டுமானால்

"நவசக்தி" ஆசிரியர் திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார் இயற்றிய நூல்களை வாங்கிப் படித்துப்பாருங்கள். அந்நூல்கள் வருமாறு:—

| | ரூ. | அ. |
|---|---|---|
| பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை .... | 2 | 0 |
| தமிழ்த் தென்றல் .... .... .... | 2 | 0 |
| முருகன் அல்லது அழகு .... .... .... | 1 | 0 |
| இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம் .... .... | 0 | 12 |
| மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் .... .... | 2 | 8 |
| என்கடன் பணிசெய்து கிடப்பதே .... .... | 0 | 8 |
| சைவத்தின் சமரசம் .... .... .... | 0 | 8 |
| சைவத்திறவு .... .... .... .... | 0 | 8 |
| கடவுள் காட்சியும் தாயுமானாரும் .... .... | 0 | 4 |
| தமிழ் நூல்களில் பௌத்தம் ... .... | 0 | 4 |
| சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து ... .... | 0 | 8 |
| நாயன்மார் .... .... .... .... | 0 | 3 |
| சைவ சமய சாரம் .... .... .... | 0 | 1 |
| இமயமலை அல்லது தியானம் .... .... | 0 | 6 |
| தமிழ்நாடும் நம்மாழ்வாரும் .... .... .... | 0 | 4 |
| உரிமைவேட்கை அல்லது நாட்டுப்பாடல்.... .... | 0 | 4 |
| முருகன் அருள் வேட்டல் .... .... .... | 0 | 4 |

இந்நூல்கள் எல்லாவற்றையும் ஒரே காலத்தில் வாங்குவோர்க்குத் தபாற்செலவின்றி மணி யார்டர் கமிஷன் கழித்து வி.பி.யில் அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

## ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துப் பிரசுரங்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரின் திவ்ய சரிதம் (விரிவானது) ... | 5 | 0 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம் (சுருக்கம்) ... | 0 | 8 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண வசனாமிருதம் ... | 1 | 8 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் 1003 உபதேச மொழி ... | 1 | 6 |
| குருதேவர் வாக்கியம் ... ... | 0 | 5 |
| நமது தாய்நாடு ... ... | 0 | 8 |
| பக்தியோகம் ... ... | 0 | 10 |
| கர்மயோகம் ... ... | 0 | 12 |
| சிகாகோ பிரசங்கம் ... ... | 0 | 5 |
| விவேகானந்தரின் கடிதங்கள் ... | 0 | 8 |
| எனது போர் முறை ... ... | 0 | 2 |
| பவாஹாரி பாபா ... ... | 0 | 3 |
| ஜகஜீவபர விளக்க வினாவிடை ... | 0 | 13 |
| பக்தி மார்க்கம் ... ... | 0 | 2 |
| முத்திநெறி ... ... | 0 | 5 |
| எல்லாவற்றிலும் இறைவனைக் காணல் | 0 | 2 |

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,

மயிலாப்பூர், சென்னை.

## கன்றுங் கனியுதவும்

பண்டிதர் - எல். உலகநாத பிள்ளை அவர்கள்

இயற்றியது

விலை அணா. 10.

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.





# பெரிய புராணம்

மூலமும்

அருஞ்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும்

வசனமும்

சஞ்சிகை சஞ்சிகையாக வெளிவருகின்றன

**ஏழை மக்கட்கு நல்ல சந்தர்ப்பம் !**

சேக்கிழார் பெருமான் திருவாய்மலர்ந்தருளிய திருத்தொண்டர் புராண மென்னும் பெரிய புராணத்தைப் பற்றித் தமிழ்மக்கட்கு விரித்துக் கூற வேண்டுவதில்லை. பெரியபுராண மெங்கும் பத்திச்சுவை நனி சொட்டிக் கொண்டிருத்தல் வெள்ளிடைமலை. தன்னை ஓதுவோரையும் கேட்போரையும் அன்புக்கடலில் திளைப்பிக்கும் பேராற்றல் வாய்ந்தது பெரியபுராணம். கடவுள் அன்பு, ஆன்மநேயம், திருத்தொண்டு, சீர்திருத்தம், சொல்நயம், பொருள்நயம், தமிழின்பம் முதலியவற்றிற்குப் பெரியபுராணம் ஒரு வைப்பு என்று கூறல் மிகையாகாது. சிறந்த தமிழ்க் காவியங்களுள் பெரிய புராணமும் ஒன்று என்று சுருக்கச் சொல்லலாம்.

அன்பர்கள் எளிதில் வாங்கிப் பயன்பெறும்பொருட்டுப் பெரிய புராண மூலமும், "நவசக்தி" ஆசிரியர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் எழுதிய அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும் வசனமும் சஞ்சிகை உருவில் மாதந்தோறும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

ஓலைப் பிரதிகளைக்கொண்டு மூலம் ஒப்பு நோக்கப்படுகிறது. பொருந்திய பாடபேதங்கள் குறிக்கப்படுகின்றன. 25 ஆண்டுகளுக்குமுன் வெளிவந்த பதிப்புக்கும் இப்பதிப்புக்கும் பலதிற வேற்றுமைகளுண்டு. குறிப்புரை, பதவுரை போலத் துணைசெய்யும். இக்காலத்துக்கு இன்றியமையாத ஆராய்ச்சி விசேடங்களும் பொறிக்கப்படுகின்றன.

சுமார் 25 சஞ்சிகையில் புத்தகம் முடிவு பெறலாம். பின் விலை புத்தகம் ஒன்று 7 ரூபாய்க்கு மேலாகும்.

அன்பர்கள் உடனே சந்தாதாரர்களாகச் சேர்வார்களாக.

சந்தா விவரம்

புத்தக முழுவதற்கும் முன்பணம்—சென்னை ரூபா 5.

,, ,, ,, வெளியூர்—தபாற் செலவுடன் ,, 6.

மாதச் சஞ்சிகை ஒன்றன் விலை அணா 4—சென்னைக்குமட்டும்.

6 சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புவோருக்கு ஒரு சஞ்சிகை அதிகமாக அனுப்பப்படும்.

காரியஸ்தர் :—முருகவேள் புத்தகசாலை,

12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

வித்வான்
த. சண்முகக் கவிராயரின்

## மகாபாரதம் தமிழ் வசனம்

திருத்தமான உயர்ந்த பதிப்பு. இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூபா 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வம் அடங்கியது ரூபா 5. மற்றவை அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ்,
323, திருவொற்றியூர் ஹைரோட், வண்ணாரப்பேட்டை, மதராஸ்.

## வரப்பிரசாதம்

தேக அசதி, மலச்சிக்கல், ஞாபகக் குறைவு, நரம்புகளின் தளர்ச்சி, சுயம் ஸத்வம் முதலிய வியாதிகளைப் போக்குவதில் எங்கள்,

ஆதங்கநிக்ரஹ மாத்திரைகள்

வரப்பிரசாதம் போன்றவை. மேலும் தேகத்தை வஜ்ர சரீரமாகச் செய்யும். 32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூபா 1. 5 டப்பிகள் ரூபா 4.

இன்றும்! கேட்லாக் இன்றும்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

## கெர்ப்ப எண்ணெய்

பெண்களுக்குண்டான பொறுக்கமுடியாத வயிற்று வலியையும், ருதுக சம்பந்தமான கெடுதல்களையும் நீக்கி சந்தான விருத்தியைக் கொடுக்கும். ஒருமுறை பரீட்சியுங்கள். அநுபவத்தில் கைகண்டது.

புட்டி ஒன்றுக்கு ரூபா 2.

ஏராளமான நற்சாட்சிகள் பெற்றது

C. மலையப்பசாமி,
நித்தியானந்த வைத்தியசாலை,
பழநி S. I.

ஆனந்நாதி ஆனந்த அட்சயாத்த

## 73-வருட பஞ்சாங்கம்

விலை ரூபா 7.

முருகவேள் புத்தகசாலை,
இராயப்பேட்டை, சென்னை.

## வெள்ளி பஸ்பம்

வெள்ளை, வெட்டை, மூலங்கள், எலும்புருக்கி, சீரழிவு, ஷை சம்பந்தகுன்மம் பெரும்பாடு எல்லாம் தீரும். தளர்ந்த தாது வலுக்கும். மற்ற நோய்களுக்கும் மருந்துண்டு. வியாதியின் விபரம் எழுதினால் தக்க பரிகாரம் மருந்துடன் தெரிவிக்கப்பெறும். 5 நாளில் நிச்சயம் குணம் தெரியும். 40 நாள் மருந்தின் விலை ரூபா 2-8-0.

விலாசம் :—

சே. விசுவநாத செட்டியார்,
வைத்தியம், லாலுகுடி, திருச்சி ஜில்லா.

இதோ! தாது புஷ்டி.

## மதன மஞ்சரி

இம் மாத்திரைகள் 35 வருஷங்களாய் உலகமெங்கும் புகழ் பெற்றவை. இது பலவீனம், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு, நரம்புத் தளர்ச்சி முதலிய வியாதிகளைப் போக்கி நல்ல ரத்த விருத்தியா தாதுபுஷ்டியும் கொடுத்து இல்லற வாழ்க்கையில் இன்பத்தையும் வாக்கத்தையும் தரும். 40 மாத்திரை அடங்கிய டப்பி விலை ரூபா 1.

இன்றும்! வைத்திய விந்தியா இன்றும்!!

விபரம் வேண்டுவோர் இலவசமாய் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

மதன மஞ்சரி பார்மசி
1/94, சைனாபஜார், மதராஸ்.

ஏஜண்டு :—

M. S. மவீம், K. B. அண்டு கோ.
No. 14, டக்கோஸ்டாட் ரோட்,
பினாங்கு.

T. D. மதுர நாயகர் அண்டு கோ.,
No. 211, செட்டித்தெரு, கொழும்பு.

ஆனந்த மெடிகல் ஹால்.
No. 165, செட்டித்தெரு, கொழும்பு.





## அரிய தமிழ் நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| கந்தபுராணச் சுருக்கம் (மூலமும் பொழிப்புரையும் விருத்தியும்).... | 3 | 0 |
| முருகவேள் பணுவல் திரட்டு .... .... .... | 1 | 0 |
| திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் முதல் திருமுறை (அரும் பத வுரையும் சரித்திரக் குறிப்பும்) .... .... | 0 | 12 |
| முருகன் திருவருட்பா .... .... .... .... | 0 | 8 |
| தேவி தோத்திர மஞ்சரி .... .... .... | 0 | 4 |
| குசேலோபாக்கியானம் (மூலமும் அரும்பத உரையும்) .... | 1 | 6 |
| விநாயகர் பணுவல் திரட்டு .... .... .... | 0 | 4 |
| திருப்போரூர்ச் சந்நிதிமுறைத் திரட்டும், அரும்பத உரையும் | | |
| கிளேஸ் .... .... .... .... | 0 | 5 |
| ஷை ராப் .... .... .... .... | 0 | 3 |
| சிவபுண்ணியத் தெளிவு.... .... .... .... | 0 | 3 |
| காரைக்காலம்மையார் பதிகங்கள் (திரு. வி. க.) அரும்பதக் குறிப்புரையுடன் .... .... .... .... | 0 | 6 |

## சாதன சதுட்டயம்

முத்திமார்க்கத்திற்குரிய அருமையான போதனைகள்

மஹாபாரதத்தில் கூறியிருக்கும் பீஷ்மாசாரியாருடைய பெரிய தகப்பனார் **தேவாபி** என்னும் சீவன் முத்தர், இப்போது இமயமலையில் **மாஸ்டர் குதூமி** என்ற பெயருடன் வீற்றிருக்கின்றார். இம்மகரிஷி **ஸ்ரீமான் ஜி. கிருஷ்ணமூர்த்தி** அவர்களுக்குச் சிறு வயதில் கனிமொழிகளாகக் கொடுத்த உபதேச போதனைகளுக்கு ஸ்ரீமான் **லெட்பீடர்** அவர்களும் **டாக்டர் அன்னிபெசன்ட்** அம்மையாரும் செய்த வியாக்கியான உரைகள், ஆங்கிலத்தினின்று சாதாரண தமிழ் நடையில் மொழி பெயர்க்கப்பட்டு "சாதன சதுட்டயம்" என்ற பெயருடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இந்நூல் இல்லற வாழ்க்கையிலிருந்து கொண்டே நான்கு சாதனங்களைக் கையாள வேண்டிய முறையைக் காட்டுவதோடு தன்னைத் தான் அறியக்கூடிய விசார சாகரமாயுமிருக்கின்றது.

கிரௌன் பக்கம் 520 ; 29 அத்தியாயம் ; உயர்ந்த காகிதம். விலை ரூபா 3.

## திவ்ய ஞான தீபம்

இது, பாழ்வெளி - விகாசமுறை - தேகங்கள் - புனர் ஜன்மநியதி - கர்மநியதி - மரணத்திற்குப்பின் - மார்க்கம் - தியானம் - ஞானசாதனம் - சீவன் முத்தர்கள் - குருநாதனைக் காணும் வழி - சிஷ்யத்வப்படிகள் - ஞானபூமிகள் - முத்தர் நிலைகள் - மாட்சி முதலிய பொருள்கள்பற்றி எளிய தமிழ் நடையில் எழுதப்பட்ட நூல். 330 - பக்கங்கள் கொண்டது. நல்ல பெதர்வெயிட் காகிதத்தில் அச்சிடப்பட்டது. விலை ரூபா 3.

## திருவாசகம் மூலமும் உரையும்

விலை ரூபா 3.

## திரு அருட்பா 6-வது தனிப்பாசுரப் பகுதி

விலை அணா 4.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

ஜெகப் பிரசித்திபெற்ற

# காமினியா சோப்புகள்

## காமினியா ஒயிட்ரோஸ் சோப்




உண்மையாக இந்த உயர்ந்த சோப், அதனுடைய ரோஜா புஷ்பங்களின் வசீகரமான வாசனையால் உங்களை ஆச்சரியப்படும்படி செய்யும். 3 கட்டிகள் உள்ள ஒரு பெட்டியின் விலை ரூபா 1.

## காமினியா சந்தண சோப்

சந்தணக் கட்டையைப்போன்ற வாசனையையும், பலரும் விரும்பும் படியான வாசனையையும் கொடுக்கிறது. இது முரடான சருமத்திற்கு மிகவும் நன்மை பயக்கக் கூடியது. 3 கட்டியுள்ள ஒரு பெட்டியின் விலை ரூபா 1.

## காமினியா லவண்டர் சோப்

இச்சிறந்த சோப்புகள் உயர்ந்த சாமான்களால் சிறந்த முறையில் தயாரிக்கப்படுவன; மனோரம்மியமான வாசனை வீசுவன; தேகத்திற்கு அழகையும் மனதிற்கு மகிழ்ச்சியையும் அளிப்பன. அழகை விரும்புவோர்க்கு இது ஒரு வரப்பிரஸாதம் போன்றது. 3 கட்டி உள்ள ஒரு பெட்டியின் விலை ரூபா 1.

## டில்பகார் சோப்

சருமத்திற்கு வேண்டிய ரஸாயன முறைப்படி உள்ள வஸ்துக்கள் நிரம்பிய ஒரு மனோஹரமான சோப். இதன் அதிசயற்புத குணத்தை விஸ்தரிக்க முடியாது. இதனுடைய ஏராளமான புஷ்ப வாசனையால் ஸ்நான அறையை நந்தவனம்போல் செய்கிறது. இன்று மாத்திரம் இந்த உயர்ந்த டில்பகார் சோப்பைப் பரீக்ஷியுங்கள். 3 கட்டி உள்ள ஒரு பெட்டியின் விலை ரூபா 1.

வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்

மதராஸ் டிஸ்டிருபியூட்டர்கள் :—

**ஜே. எஸ். சேட் & கோ,**

நெ. 68, பைக்ராப்ட்ஸ் வீதி, திருவல்லிக்கேணி, சென்னை.

தயாரிப்பவர்கள் :—

**The Anglo—Indian Drug & Chemical Co., Bombay, 2.**


Edited & Published by T. V. Kalyanasundaran; Printed by T. V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah, Madras.